2968

T.N.L.A. Debates

Official Report

Vol 37 No 3

7th April, 1987

D1
1211;31 N87
N87.37.3
136515

D
V211, 31 N87
N87. 37. 3

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136515
சென்னை-600 008.

## உள்ளடக்கம்.

7—4—1987.


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 427—469 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) உறுப்பினர் கொடுத்த ஓர் அறிக்கை குறித்து | 469 |
| (ஆ) முந்தைய நாள் நடைபெற்ற அலுவல் குறித்து | 469—473 |
| **3. கவன ஈர்ப்பு—** | |
| (அ) குடியாத்தம் இராஜேஸ்வரி மில்ஸ் மற்றும் சுலோசனா டெக்ஸ்டைல் மில் தொழிலாளரின் இன்னல்கள். | 473—478 |
| (ஆ) தக்காளி விரிய ஒட்டு விதைகள் சரியாக முளைக்காததால் விவசாயிகளுக்குப் பாதிப்பு. | 478—481 |
| (இ) கும்பகோணம் அருகிலுள்ள திருப்புவனம் தொழிற்பேட்டையிலிருந்து வெளியேறும் புகையால் பாதிப்பு. | 481—485 |
| (ஈ) கன்னியாகுமரி மாவட்டத்தில் யானைக்கால் நோய் பரவுதல். | 485—490 |
| (உ) முதுமலை சரணாலயம் மூடப்பட்டுள்ளது. | 490—492 |
| **4. அறிக்கைகள் அளித்தல்—** | |
| பொதுக் கணக்குக் குழு. | 492 |
| **5. அறிவிப்பு—** | |
| கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1987 (அ.இ.). | 493 |
| **6. அரசினர் சட்ட முன்வடிவு—** | |
| கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1987. | 493 |

7. வரவு-செலவுத் திட்டம், 1987-88 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.


| | |
|---|---|
| கோரிக்கை எண் 31—பழங்குடியினர் ஆதிதிராவிடர் திராவிடர் முதலியோர் நலன். | 493—494 |
| *மாண்புமிகு திரு. எ. அருணாசலம் | 493 |
| *திரு. சா. ஜெயச்சந்திரன் | 495—503 |
| *திரு. தமிழ்மணி | 504—511 |
| *திரு. மா. மணிமாறன் | 511—525 |
| *திரு. ம. நா. ராமஜெயம் | 525—531 |
| திரு. கு. தமிழரசன் | 531—541 |
| *திரு. கோ. வீரய்யன் | 541—551 |
| திரு. சோ. கலிதீர்த்தான் | 551—560 |
| *திரு. எ. எஸ். எ. ஆறுமுகம் | 560—566 |
| *திரு. க. பாலசுப்பிரமணியன் | 566—576 |
| *திரு. பி. ஆர். திருஞானம் | 576—582 |
| திரு. தா. சாமிக்கண்ணு | 582—583 |
| டாக்டர் க. நல்லமுத்து | 583—601 |
| திரு. கே. பாலாஜி | 601—613 |
| *திரு. க. பாரமலை | 614—623 |
| திரு. த. பழனி | 623—633 |
| திருமதி எ. எஸ். பொன்னம்மாள் | 633—644 |
| *திரு. அ. ஆறுமுகம் | 644—659 |
| *திருமதி டி. யசோதா | 659—684 |
| 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 595—596 |


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987 ஏப்ரல் 7, செவ்வாய்க்கிழமை.

பங்குனி 24, அட்சய—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"குழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு".

தம் குடி உயர்வதற்கான செயலை விரைந்து முயன்று செய்பவர்க்கு அவர் ஆராயமாலேயே அச் செயல் தானே நிறைவேறும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**சைதை மாநகராட்சி மாந்தோப்பு மேல்நிலைப் பள்ளியில் கூடைப்பந்து விளையாட்டு மைதானம்.**

44—(*வினா எண் 8970) திரு. **சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சைதை மாநகராட்சி மாந்தோப்பு மேல்நிலைப் பள்ளியில் கூடைப்பந்து விளையாட்டு மைதானம் அமைக்கும பணிகளை விரைவில் முடிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதை மாநகராட்சி மாந்தோப்பு மேல்நிலைப் பள்ளியில் கூடைப்பந்து விளையாட்டு மைதானம் அமைக்கும் பணியை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இப்பணி 31—8—1986 அன்று முடிவடைந்துள்ளது.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடைப் பந்து விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டிருப்பது உண்மை. ஆனால், அந்த மைதானம் அமைக்கும்போதே அதற்கு மின் விளக்குகள் பொருத்திய நிலை வேண்டுமென்று ஏற்கனவே கேட்கப்பட்டது. மாலை நேரத்தில் தான் விளையாட முடியும். ஆகவே, மின் விளக்கு வசதிகள் வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். இன்னும் அந்தப் பணி நடைபெறவில்லை. எனவே, மின் விளக்கு பொருத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, ரூ. 89,005 மதிப்பீட்டுச் செலவில் ஒளி விளக்கு பொருத்துவதற்காக சென்னை மாநகராட்சி மின்சாரத் துறையினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு நன்றி. அந்த விளையாட்டுக் குழு நண்பர்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே கைப்பந்து விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டுமென்று ஏற்கனவே கேட்கப்பட்டது. எனவே அந்தக் கைப்பந்து விளையாட்டு மைதானத்தையும் அமைக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, நன்றிக்கு நன்றி. இது கூடைப் பந்து பற்றிய கேள்வி. கைப் பந்து பற்றி தனியாகக் கேள்வி போடவும்.

### இராமநாதபுரம் ஏர்வாடி தர்கா.

45—(*வினா எண் 9101)—**டாக்டர் த. முகமது சலீம் மற்றும் திரு. கே. முத்துவேல்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடி கிராமத்தில் பல மதத்தினரும் வணங்கும் ஏர்வாடி தர்கா இருப்பதால், ஏர்வாடியை நகரியமாக எடுத்து சீர்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (அ) இல்லை

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**டாக்டர் த. முகம்மது சலீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏர்வாடி தர்காவானது பல மதங்களிலிருந்து, பல மாநிலங்களிலிருந்தும் அங்கு வந்து பிரார்த்தனை நடத்துவதற்குரிய இடமாக இருப்பதால் அங்கு சுகாதாரக் கேடும், மக்கள் தங்குவதற்கு இடையூறும் இருப்பதால் அந்த ஏர்வாடியை ஒரு நகரியமாக்க இனியாவது அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, ஏர்வாடி ஊராட்சியை நகரியமாக மாற்றுவது சம்பந்தமாக பிரேரணை ஏதும் இதுவரையில் வரப் பெறவில்லை. அப்படி வந்தால் அரசு ஆராயும்.

### பெரியார் மாவட்டம். உக்கரம் ஊராட்சியை பிரித்தல்.

46—(*வினா எண் 9160) **திரு. வே. கு. சின்னசாமி:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட உக்கரம் ஊராட்சியை, வண்டிபாளையம் ஊராட்சி, உக்கரம் ஊராட்சி என இரண்டாகப் பிரிக்க நடவடிக்கை எடுத்து முடிக்கப்பட்டும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப் படுத்தப் படும்?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) பிரிப்பதற்கு முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. வே. கு. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு நீண்ட நாளைய கோரிக்கையாக இருந்து வருகிறது. ஆகவே, அப்படிப்பட்ட பெரிய ஊராட்சி மன்றங்கள் இருப்பதைக் கருத்தில் கொண்டு, பொதுமக்கள் நலம் கருதி, அவற்றை இரண்டாகப் பிரிக்க அரசு நடவடிக்கை ஏதாவது மேற்கொள்ள இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அண்மையில் ஊராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடைபெற்றதால் அரசு ஒரு தடை உத்தரவு பிறப்பித்திருந்தது, ஊராட்சி மன்றங்களைப் பிரிப்பதோ மாற்றுவதோ கூடாது என்று. இந்தத தடை உத்தரவு இன்னும் இருக்கிறது. பொதுவாக, ஊராட்சிகளின் மக்கள் தொகை, வருவாய், அவற்றைப் பிரிப்பதால் இரண்டு ஊராட்சிகளும் தனித்து இயங்குமா என்பன போன்றவற்றை மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்தாலோசித்துதான் முடிவெடுக்க வேண்டும்.

**திரு. வே. கு. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல் ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு இரண்டுமூன்று ஊராட்சி மன்றங்களை, கோவையிலிருந்து பெரியார் மாவட்டத்திற்கு மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதுபற்றியும் அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்து அவற்றை இணைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இது ஊராட்சி மன்றங்களைப் பற்றிய கேள்வி. ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்குப் போக வேண்டுமென்றால், 'ரெவின்யூ' கூட அதிலே வரும். ஆகையினாலே, இதையெல்லாம் பார்த்து பரிசீலித்து, முடிவெடுக்க வேண்டி வரும்.

**திரு. கு. அ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களைப் பிரிப்பதற்கு, உள்ளாட்சித் தேர்தல் நடந்த காரணத்தினால், தடை இருந்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிக விரைவில் அரசு அதைப் பரிசீலித்து, அந்தத் தடையை நீக்கி, பெரிய ஊராட்சி மன்றங்களைப் பிரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் தடை நீக்க உத்திரவு பிறப்பிக்கப் படும்.

**திரு. வி. பி. சிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரியத்தில் தேர்தல் நடத்த அரசுக்கு ஏதேனும் திட்டம் உண்டா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சத்தியமங்கலம் ஒன்றியத்திலுள்ள உக்கரம் ஊராட்சி பற்றிய கேள்வி.

**திரு. ச. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய் குறைவாக உள்ள உள்ளாட்சிகளுக்கு ஹவுசிங் டாக்ஸ் மேச்சிங் கிராண்ட் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்காது.

**திரு. ச. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல பகுதிகளிலே பேரூராட்சிகள் வருமானம் இல்லாமலே இருக்கின்றன. அதற்கு அருகிலே மிகச் சிறிய ஊராட்சிகள் கூட 5, 6 லட்சம் ரூபாய் வருவாய் உள்ளவையாக இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில் அந்த ஊராட்சி மன்றங்களையும் பேரூராட்சி மன்றங்களையும் இணைத்து அந்தப் பேரூராட்சிகளுக்கு வருவாய் கிடைக்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய எல்லா ஆலோசனைகளையும் அரசு விதித்த தடையை நீக்கியதற்குப் பிறகு ஆங்காங்கே உள்ளவர்கள் அதற்கென மனுச் செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

## வேதாரணியம் பேரூராட்சிக்கு உப்பிலாக்கா நிதி

47—(*வினா எண் 9408) **திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரணியம் பேரூராட்சி 6-வது பாதைத்திற்கு உப்பிலாக்கா நிதியுதவ முன்வந்தது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை பயன்படுத்திக்கொள்ள எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) வேதாரணியம் பேரூராட்சியில் நிதி வசதி இன்மையால் நடைப்பாலம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படவில்லை.

### மாநிலத்தில் கூடுதல் நியாய விலைக் கடைகள்.

141—(*வினா எண் 11573) **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் கூடுதலாக நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஏதுமில்லை.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடும்பக் கார்டுகள் கணக்கெடுக்கிற பணி 4, 5 ஆண்டுகளுக்கு முன்பாக தொடங்கப்பட்டு அப்போது குடும்பக் கார்டுகள் கொடுக்கப்பட்டன. இப்போது கொடுத்த ஆண்டுகள் முடிந்துவிட்டன. எனவே புதிய கார்டுகள் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறதா? குடும்பக் கார்டுகள் சம்பந்தமான கணக்கை எடுக்கிறபோது மாநிலம் முழுவதும் இருக்கின்ற நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கையும் உயர வேண்டும். அந்தச் சமயத்தில் அந்த நியாய விலைக் கடைகளைக் கூட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு குடும்பக் கார்டு வழங்குகிற முறை அமல்படுத்தப்படும். அதற்கு என்யுமெரேஷன் செய்யப்படும். அதற்குப் பிறகு கார்டுகள் அதிகமாகிறதாவென்று பார்த்து அதற்கேற்ப நியாய விலைக் கடைகள் திறக்கப்படும்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** கூட்டுறவுத் துறையின் மூலமாக நடைபெறுகிற நியாயவிலைக் கடைகள், அதேபோல் சிவில் சப்ளைஸ் மூலமாக நடைபெறுகிற கடைகள் இவைகளிலே ஒரு பிரச்சினை, அளவுகள் குறைவாக இருக்கின்றன என்ற பிரச்சினை உருவாகியிருக்கிறது. அளவுகள் குறைவாக இருக்கின்றன என்ற பெரிய பிரச்சினை கிராம அங்காடிகளிலும் சிவில் சப்ளைஸ் கடைகளிலும் இருக்கின்றது. அரசே பல கோடி ரூபாய்க்கு மேலாக மானியம் கொடுத்து, மத்திய அரசிலிருந்து வாங்குகிற விலையைவிடக் குறைவான விலையில் அரிசி போன்ற பண்டங்களை மாநிலம் முழுவதும் விநியோகம் செய்தும் கூட சில இடங்களிலே எடை குறைவாக இருக்கிறது.. அதிலே இரண்டு ரக அரிசி இருக்கிறது. 1.85 அரிசியை 2.50 அரிசி என்று விற்பதாக புகார்கள் வருகின்றன. அந்தப் புகார்களை எல்லாம் பொதுமக்களே புகார் செய்து அதை விசாரிப்பது என்பதும் மிகச் சிரமமாக இருக்கும். அதற்கான வாய்ப்பும் குறைவாக இருக்கிறது. எனவே குறைந்த பட்சம் அரிசி போன்ற பண்டங்களையாவது பாலித்தின் பைகளிலே அடைத்து அதற்கு மேல் விலைகளைக் குறியிட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய அரசு விரைவாக நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசி போன்ற பண்டங்கள் என்று இல்லாவிட்டாலும் அரிசியையாவது பாலித்தின் பைகளிலே அடைத்துக் கொடுக்கலாமா என்பதைப் பற்றி செலவையும் கருத்தில் கொண்டு அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

**திரு. தி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதலாக நியாயவிலைக் கடைகளை ஆரம்பிப்பதில் சில இடங்களில் சிக்கல் ஏற்பட்டாலும்கூட வாரத்திற்கு எத்தனை நாள் அந்தந்தப் பகுதிகளிலே போடலாம் என்று, அதே செலவிலே அதே பணியாளர்களைக் கொண்டு துணைக்கடைகளை ஏற்படுத்திக் கொள்ள அரசு அனுமதி வழங்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைக் கடைகளை நாமே ஆரம்பிப்பதற்குப் பதிலாக, ஆந்திராவிலே ஒரு முறை வைத்திருக்கிறார்கள், வேலையற்றவர்கள் வங்கிகள் மூலம் கடன் பெற்று சிறுகடைகளை வைத்து, அதாவது செல்ப் எம்ப்ளாய்மென்ட் என்ற முறையிலே தாங்களே அந்தக் கடைகளை வைத்து வேலை தேடிக் கொள்கிற திட்டத்தை வைத்திருக்கிறார்கள், அதைப் போல் வேலையற்றவர்கள் ஆங்காங்கே அந்தந்தப் பகுதிகளிலே இருக்கிறவர்கள் துணைக் கடைகளை வைத்து, அவர்கள் வங்கிகள் மூலம் நிதியாதாரங்களைப் பெற்று வேலை தேடிக் கொள்ள முன்வருவார் களானால் நாம் நிச்சயமாகப் பரிசீலிக்கலாம்.

(முற்பகல் 10-10)

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பொது விநியோக முறை என்பது எல்லா மாநிலங்களையும்விட தமிழ்நாட்டில்தான் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது என்பதை அனைவரும் இன்றைக்குப் பாராட்டி வருகிறார்கள். இதிலே ஒரு சமூக நீதியேகூட கிடைத்து வருகிறது. இந்தப் பொது விநியோக முறையைப் பொறுத்தவரையில் 1973 ஆம் ஆண்டு என்று நான் கருதுகிறேன்--மோகன் தாரியா தலைமையிலே—அமைக்கப்பட்ட கமிட்டி, பொதுமக்களுக்குத் தேவையான 10 அத்தியாவசியப் பண்டங்களைக் குறிப்பிட்டு, அத்தனைப் பண்டங்களும் இப்படிப்பட்டப் பொது விநியோக முறையின்கீழ் வழங்கப்பட வேண்டுமென்ற ஒரு பரிந்துரையை வழங்கியிருக்கிறது. எனவே, இப்பொழுது வழங்கப்பட்டு வருகிற இந்த அத்தியாவசியப் பண்டங்கள், நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் சொன்னது போல், அரிசி, மண்ணெண்ணெய் போன்ற சில பொருள்கள்தான்--அவை மூலம் கொடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, மோகன் தாரியா கமிட்டி பரிந்துரை செய்த அந்த 10 அத்தியாவசியப் பண்டங்களையும் நம்முடைய பங்கீட்டு முறையிலே வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன மோகன் தாரியாகமிட்டி பற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை. ஆனால், நியாய விலைக் கடைகளைப் பொறுத்தவரையில் நாம் ஏற்கனவே சில பொருள்களை, குறிப்பாக அரிசி, சர்க்கரை, கோதுமை, மைதா, ரவை பாமாலின் எண்ணெய், மண்ணெண்ணெய், கட்டுப்பாட்டுத் துணி (Controlled C'oth) போன்றவற்றை வழங்கி வருகிறோம்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, 700 கார்டுகளிலிருந்து 1,000 கார்டுகளுக்கு மேல் இப்பொழுது கடைகளில் பதிவு செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இதனால் அநேக பேர்களுக்கு மாதக் கடைசி ஆகும்போதுதான் பல பொருள்கள் கிடைக்கின்றன. அல்லது கிடைக்காமல் போகின்றன. காரணம், கடைகளில் உடனுக்குடன் பொருள்கள் கிடைக்கவில்லையென்று கடைக்காரர்கள் சொல்கிறார்கள். இந்த நிலைமையை மாற்றுவதற்குத் தான் 500 கார்டுகளுக்கு ஒரு கடை என்று—பொது மக்களுடைய நன்மையை உத்தேசித்து--வைக்க அரசு முன்வருமா? ஏற்கெனவே, இந்தக் கேள்வி கேட்கப்பட்டு கவனிப்பதாகச் சொல்லப்பட்டிருந்தது. அப்படி ஏதாவது கவனிக்கப்பட்டு, செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, தற்போது சுமார் 50 சதவீதம் கடைகளில் 500-க்குக் குறைவான குடும்ப அட்டைகளே வைக்கப்பட்டுள்ளன. மற்ற இடங்களில் 1,000 அளவுக்கு இருக்கின்றன. கடைகளை அதிகப்படுத்துவது என்றால் அதிகம் செலவாகும். எனினும் உணவுத் துறை மானியம் வரும்போது, இதனுடைய விவரம் தெரிவிக்கப்படும்.

**திரு. ப. ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நியாய விலைக் கடைகள்—அமுதம் அங்காடி—இருக்கும் ஊர்களில், இன்னும் ஒன்றிரண்டு மாதங்களில் அமுதம் அங்காடிகளை மூடிவிடப் போவதாகச் சொல்கிறார்கள். அப்படி மூடி கூட்டுறவுச் சங்கங்களோடு இணைத்துவிடப் போவதாகச் சொல்கிறார்கள். அப்படி இணைக்கும்போது

[1987 எப்ரல் 7

இப்போதே அமுதம் அங்காடிகள் எந்த, எந்த ஊர்களில் இருக்கின்றனவோ, அந்த, அந்த கிராமங்களில், அங்கங்கே, அமுதம் அங்காடிகளுக்குப் பதிலாக, கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கடைகள் இருக்குமா? அல்லது, வேறு கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கிற இடத்தில்தான் இந்த அமுதம் அங்காடிகளில் வாங்கியவர்கள் சென்று வாங்க வேண்டுமா?

அடுத்து, இந்த அமுதம் அங்காடியில் இருக்கிற ஊழியர்கள் அதே துறையில் பணியாற்ற அனுமதிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தைப் பொறுத்த வரையில் மொத்த வியாபாரத்தை மேற்கொள்வது என்றும் சில்லறைக் கடைகளைக் கூட்டுறவுத் துறையே நடத்துவது பொருத்தமாக இருக்கும் என்றும் அரசு முடிவெடுத்திருக்கிறது. அதன்படி, இப்பொழுது கூட்டுறவுத் துறையில் சுமார் 15,931 கடைகள் இருக்கின்றன. நாம் நடத்துவது, 5,049; இதர நிறுவனங்கள் நடத்துவது 55; ஆக 21,035 கடைகள் இருக்கின்றன. பெரும்பாலான கடைகளைக் கூட்டுறவு நிறுவனம்தான் நடத்துகிறது. தற்போது நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்துகின்ற கடைகளின் நிர்வாகத்தை கூட்டுறவு நிறுவனம் மேற்கொள்கிறது. கடைகள் அங்கேயே இருக்கும்; நிர்வாகத்தை அவர்கள் மேற்கொள்வார்கள். அந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே பணியாற்றுகின்ற ஊழியர்கள் விரும்பினால் கூட்டுறவுத் துறைக்குச் சென்று பணியாற்றலாம்; இல்லையென்றால், நுகர்பொருள் வாணிபக் கழகத்திலேயே வேறு வேலைகள் அவர்களுக்குத் தரப்படும்.

**திரு. க. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கின்றபொழுது, இனிமேல் கூடுதலாக நியாய விலைக் கடைகள் ஏற்படுத்துவதற்கு அரசிடத்திலே உத்தேசம் இல்லையென்று சொன்னார்கள். ஏற்கனவே, ஒரு வருவாய் வட்டத்திற்கு ஒரு கடை என்று இருந்து வருகிறது. ஆனால், சில வருவாய் வட்டங்களிலே இரண்டு ஊராட்சிகள் இருக்கின்றன. அந்த இரண்டு ஊராட்சிகளில் எந்த ஊராட்சியிலே கடை இல்லையோ, அந்த ஊராட்சி மக்கள் வேறு



1987 எப்ரல் 7]

ஊருக்குச் சென்று—நீண்ட தூரம் சென்றுதான்—வாங்க வேண்டியிருக்கிறது. அதை விரிவாக்கும்போது ஒரு மாவட்டத்திற்கு 4, 5 கடைகள் கூடுதலாக ஏற்படுத்த வேண்டி வரும். ஆகவே, ஒரு ஊராட்சிக்கு ஒரு கடை என்று ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவலை எனக்குப் புரிகிறது. வருவாய்க் கிராமத்திற்கு ஒன்று என்று இருப்பதை ஊராட்சி மன்றத்திற்கு ஒன்று என்று போடுவதிலே கூட நமக்கு சிரமம் இல்லை. ஆனால் செலவு அதிகமாகும். அதனால் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் யாராவது வேலையற்ற இளைஞர்கள் முன்வந்தால் அவர்களுக்கு துணைக் கடைகள் வைத்து நடத்த அனுமதி அளிக்கலாம். அப்படிச் செய்தால் அவர்களுக்கும் வேலை கிடைக்கும்; சிறிய சிறிய ஊர்களுக்கும் பொருள் கிடைக்கும் என்பதால் நாம் நிச்சயமாக அதுபற்றி யோசிக்கலாம். இப்போது ஆந்திர மாநிலத்தில் இந்தமுறை செயல்பட்டு வருவதாக அறிகிறோம். நாம் அதைப் பரிசீலனை செய்து, அதற்கேற்ப முடிவு செய்யலாம்.

**திரு. கே. அன்பழகன்:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது நியாய விலைக் கடைகளில் ஏழு பொருள்கள் வழங்கப்படுவதாகச் சொன்னார்கள். கேரள மாநிலத்தில் வழங்கப்படுவதைப் போல அந்த ஏழு பொருள்களோடு தேங்காய் எண்ணெயும் சேர்த்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, அதற்கு வாய்ப்பு இல்லை.

**திரு. ஆர். ரெங்கசாமி:** தலைவரவர்களே, தற்போது கிராமப் புறங்களில் பாமாயில் கிடைப்பதில்லை. 2, 3 மாதங்களாக புகார் செய்தும் கிடைக்கவில்லை. ஆகவே, பாமாயில் ஒழுங்காகக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, கிராமங்களில் நாம் பாமாயில் கொடுப்பதில்லை. நமக்கு மத்திய அரசு பாமாயில் கொடுக்க வேண்டும். அவர்கள் சரியாகக் கொடுப்பதில்லை; மத்திய அரசு கொடுத்த பிறகு நாம் கிராமங்களுக்குக் கொடுப்போம்.

[1987 ஏப்ரல் 7

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நியாயவிலைக் கடைகளை விஸ்தரிக்கும் நோக்கம் இல்லை என்று சொன்னார்கள். சில கிராமங்களில் 5 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சென்றுதான் பொருள்களை வாங்கவேண்டியிருக்கிறது. அதனால் மக்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். இந்தக் கஷ்டத்தை உத்தேசித்து, மாண்புமிகு அமைச்சரவர்கள் தூரத்தைக் குறைக்கின்ற வகையில் நியாய விலைக் கடைகளை கொஞ்சம் விஸ்தரித்து, ஏழை எளிய மக்களுக்கு அரிசி, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருள்களாவது ஒழுங்காகக் கிடைக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, புதிதாக அரசே நியாயவிலைக் கடைகளை அமைப்பதில்தான் சிரமம் என்று சொன்னேன். 5 மைல் தூரம் சென்று பொருள் வாங்க வேண்டியிருக்கிறது என்றால் ஒரு மைல் தூரத்திற்குள் கடை வைக்க முடியாது. ஆனால், அந்த ஊரில் உள்ள இளைஞர் கள், வேலையற்ற பட்டதாரிகள் யாராவது முன்வந்தால் அவர் களுக்கு அனுமதி அளிக்கலாம் என்ற யோசனை இருப்பதாகச் சொன்னேன். ஏதாவது நியாயவிலைக் கடைகளில் குறிப்பிட்ட பொருள்கள் கிடைக்கவில்லை என்றால், அவர்கள் ஒழுங்காகத் தரவில்லை என்று சொன்னால், அதுபற்றி அரசுக்கு அல்லது எனக்குத் தகவல் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

**டாக்டர் கே. சமரசம்:** தலைவரவர்களே, சில பகுதிகளில் குறிப்பாக குக்கிராமங்களில் நியாயவிலைக் கடைகளைத் திறப் பதற்கு அரசால் இயலாது என்றும் வேலையில்லாமல் இருக்கின்ற யாராவது கடை நடத்த முன்வந்தால் அவர்களுக்கு அனுமதி அளிக்கலாம் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித் தார்கள். அப்படியானால் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நியாயவிலைக் கடைகள் வைத்து நடத்துவதற்கு, அந்தக் கடை களை ஒழுங்குபடுத்துவதற்கு ஏதாவது சட்டத் திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றனவா? எந்த அடிப்படையில் அனுமதி அளிக்க இருக்கிறீர்கள் என்று சொன்னால் அப்படிப்பட்டவர்கள் அரசை அணுக வாய்ப்பாக இருக்கும். ஆகவே, அதுபற்றி விளக்கம் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 7]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, இப்படிப்பட்ட ஒரு திட்டம் ஆந்திர மாநிலத்தில் அமலில் இருப்பதாக அறிகிறேன். அது நமக்கு எந்தவகையில் ஏற்றது என்று பார்த்து, பின்னால் அவைக்குத் தெரிவிக்கப்படும்.

### பிற மாநில பகுதிகளை ஒட்டிய தமிழக பகுதிகளில் அரிசி ஆலை ஆரம்பித்தல்.

**142—(*வினா எண் 11896) திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற மாநில எல்லைப் பகுதிகளில் அரிசி ஆலை அமைக்க தடை ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை நீக்க அரசு பரிசீலித்து வருகிறதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (அ) இல்லை..

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** தலைவரவர்களே, நான் இந்தக் கேள்வியைப் போடுகின்ற சமயத்தில், எனது தென்காசித் தொகுதி கேரள மாநிலத்தின் எல்லையில் இருப்பதால், அனுமதி கேட்டு கொடுக்கப்பட்ட மனுக்கள் எல்லாம் பரிசீலனை செய்யப் படாமல் இருந்தன. இந்தக் கேள்வி போட்டபின்னால் அந்த மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு உரிமமும் வழங்கப்பட்டுள்ளது; அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அரிசி ஆலை அமைக்க உரிமம் வழங்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இருந்தது. இப்போது அரசுக்கு அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் அந்த அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவருக்கே கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, அவர்கள் கேள்வி போட்ட நோக்கமே நிறைவேறிவிட்டதால் துணைக் கேள்விக்கு அவசியம் இல்லை. இருந்தாலும் இந்த அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். அதற்கு மத்திய அரசிடமிருந்து அனுமதி வரவேண்டும். மைய அரசுக்கு இந்த அரசு கடிதம் எழுதுவதாக இருக்கிறது.

**திரு. டி. ஆர். வேங்கடராமன்:** தலைவரவர்களே, இன்றைக்கு நவீன அரிசி ஆலைகளில் ஷெல்லரை வைத்துத்தான் அரிசி அரைக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டும் ஹல்லரை வைத்துத்தான் அரிசி அரைத்துக் கொண்டிருக்கிறார்கள். மக்க ளுக்கு நன்மை பயக்கும் இந்தத் திட்டத்தை அரிசி ஆலைகள் செயல்படுத்தவில்லை. ஆகவே, இப்படி தவறு செய்கின்ற அரிசி ஆலைகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவியல் தொழில் நுட்பத்தை எளிதில் ஏற்றுக்கொள்ளச் செய்வது இயலக்கூடிய காரியம் அல்ல. ஆகவே கொஞ்சம் காலம் ஆகத்தான் செய்யும்.

### ஆம்பூரில் குடிநீர் சுத்திகரிப்பு ஆலை.

322—(*வினா எண் 3074) **திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூரில் குடிநீர் சுத்திகரிப்பு ஆலை தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் நகரில் உள்ள குடிநீர்த் திட்டத்தைப் பாதிக்கின்ற வகையில் அங்கே உள்ள பாலாற்றில் தோல் கழிவு நீர் கலக்கப் பட்டுவிடுவதால் அந்தத் தண்ணீர் உப்புத் தண்ணீராகப் போய் விடுகிறது. மேலும் அந்தத் தண்ணீரைக் குளிப்பதற்குப் பயன படுத்துவதன் காரணத்தால் தோல் வியாதிகள் எல்லாம் வருகின்றன. எனவே மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக இதனைப் போக்க உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு முன்னதாக, அந்தத் தண்ணீரைப் பருகுவதற்கும், குளிப் பதற்கும் தடை விதித்துவிட்டு நிவாரண வேலையை அரசு முடுக்கிவிடுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூரில் இயங்கி வருகிற குடிநீர்த் திட்டத்தின் கீழ் இப்போது சுத்திகரிப்பு ஆலை தொடங்கும் திட்டம் எதுவும் இல்லை. ஆனால் தோல் கழிவு நீரகற்றும் கூட்டுறவு ஆலை ஒன்று மட்டும் அந்தப் பகுதியில் இயங்க ஏற்பாடு ஆகி இருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவரவர்களே, எவ்வளவு ரூபாய் செலவில் இது இயங்க இருக்கிறது? மேலும் இப்போது அந்தப் பகுதியில் உள்ள தண்ணீர் கெட்டுவிட்ட காரணத்தால் திருப்பத்தூர் பகுதியிலிருந்து தண்ணீர் எடுத்தால் நல்லது. ஏனென்றால் அந்தத் தண்ணீர் கெடாமல் இருக்கிறது. அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? மேலும் தோல் தொழிற்சாலைகளால் தான் இவ்வாறு தண்ணீர் கெடுகிற சூழ்நிலை இருப்பதால் அந்தத் தோல் தொழிற்சாலைகளிடமிருந்து இந்தத் குடிநீர்த் திட்டத்திற்காக ஒரு தொகையை, அதாவது ஒரு பங்கை வசூலித்து எல்.ஐ.சி. அல்லது உலக வங்கியின் மூலமாக நிறைவேற்றுகின்ற வகையில் விசேஷத் திட்டத்தை அரசு தீட்டி இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, 2 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு பொது சுத்திகரிப்பு பிரிவு அமைப்பதற்காக ரிச்சர்ட்ஸ் அண்ட் க்ரூடாஸ கம்பெனியால் தயாரிக்கப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது. தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இந்தத் திட்டத்தினைக் கண்காணித்து வருகிறது.

**திரு. கி. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றைச் சுற்றியிருக்கிற பகுதிகளைப் பொறுத்தவரையில், குறிப்பாக நாடராம்பள்ளி தொகுதியிலிருந்துதான் அந்தப் பகுதியினைச் சுற்றியிருக்கிற அனைத்து நகராட்சிகளுக்கும், இரயில்வே நிலையத்திற்கும், சர்க்கரை ஆலைக்கும் குடிநீர் எடுக்கப்படுகிறது. இப்போது அந்தப் பகுதி பாதிக்கப் பட்டிருக்கின்ற சூழ்நிலை இருப்பதால் குடியாத்தத்தில் மண்ணாத்தூர் பகுதியிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 7

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

**திரு. க. நரசிம்மபல்லவன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கடல் நீரைச் சுத்திகரிப்பு செய்து குடிதண்ணீராகக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

**திரு. த. பழனி:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வடாற்காடு மாவட்டத்தில் இருக்கிற ஆம்பூர் பகுதிக்கு மட்டும் சொன்னார்கள். வடாற்காடு மாவட்டத்தில் இருக்கிற அனைத்து நகராட்சிகளுக்கும், குடிநீர் பாலாற்றிலிருந்துதான் வழங்கப்படுகிறது. ஊராட்சி மன்றங்கள் ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் எல்லாம் குடிநீர் திட்டங்களை பாலாற்றிலிருந்து தான் நிறைவேற்றி இருக்கின்றன. இதற்காக அரசு பல கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறது. அந்தக் குடிநீர்த் திட்டங்கள் எல்லாம் தற்போது பாழடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்படி பல கோடி ரூபாய் அளவுக்கு திட்டங்கள் தீட்டிக் கொடுக்கப்படுகிற குடிநீர், பாலாற்றில் தோல் கழிவு நீர் கலக்கப்படுவதன் காரணத்தால் கெட்டுப் போய்விடுகிறது. எனவே குடிநீருக்காக மிகப் பெரிய திட்டங்களைத் தீட்டுவதைக் காட்டிலும் பாலாற்றில் கலக்கிற அந்தத் தண்ணீரைத் தடுத்து நிறுத்தினாலே அங்கேயிருக்கிற அந்த பாலாற்றுத் தண்ணீரைக் குடிக்கின்ற மக்கள் அரசுக்கும் அமைச்சருக்கும் நன்றி சொல்வார்கள். அதை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாணபுமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பற்றி ஆலோசிக்கலாம்.

**மணலி புழல் பகுதியில் தூய்மையான குடிநீர்.**

323.—(* வினா எண். 4204) **திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

**சென்னையை அடுத்துள்ள மணலி, புழல் பகுதி மக்களுக்கு தூய்மையான குடிநீர் கிடைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?**



1987 ஏப்ரல் 7]

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணலி சின்னசேக்காட்டிற்கு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்த, ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. புழல் பேரூராட்சிக்கு ரூ. 9.63 இலட்சம் செலவில் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு, குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** பேரவையின் தலைநாயகர் அவர்களே, மணலி; புழல் போன்ற பகுதிகளிலிருக்கின்ற மக்களுக்கு உதவுவதற்காக மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவனம் பல இலட்சம் ரூபாய் கொடுக்க முன்வந்திருக்கிறது. அவர்கள் வழங்குகிற அந்த நிதியை அரசு பெற்றுக் கொள்ளுமா? அப்படிப் பெற்றுக் கொள்கிறபோது ஒரு நிபந்தனையைச் சொல்கிறார்கள். அதாவது தங்களுடைய டெக்னோகிராட்ஸை வைத்துக்கொண்டு அதனை விரைவாக முடித்துவிடுகிற சூழ்நிலையைப் பெறுவோம்; அதற்கு தாங்கள் அரசிடம் இருந்து தகுந்த ஆலோசனை பெறுவீர்களா என்று கேட்கிறார்கள். அதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட அறிக்கைகள் எதுவும் அவர்களிடத்திலிருந்து வரவில்லை, வந்த பிறகு அது பற்றி பரிசீலிக்கலாம்.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** மாண்புமிகு தலைநாயகர் அவர்களே, நம்முடைய மாநிலம் முழுவதிலும் வறட்சி இருக்கக் கூடிய சூழ்நிலையில், குறிப்பாக குடிதண்ணீர் பிரச்சினை அதிகமாக நிலவிக் கொண்டிருக்கிற நிலையில், சில தொழில்அதிபர்களும், அறக் கட்டளைகளும் தாமாகவே முன் வந்து கொடை அளிக்கும்போது, அந்த உதவிகளை அரசு ஏற்றுக் கொள்ள முன் வருமா? அதோடு மணலி பகுதி பௌதிக தொழிற்கூடங்கள் அதிகமாக இருக்கிற பகுதியாக இருப்பதால், அந்தத் தொழில் கூடங்களால் நிலத்தடி நீர் பாழாகாமல் இருக்க ஒரு மாஸ்டர் பிளானை தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு க. இராசாராம்:** தலைவர் அவர்களே, குடிதண்ணீருக்காக சிற்சில சின்ன உதவிகளைப் பெறலாம். இருந்தாலும் நாம் இப்போது மத்திய அரசின் மூலமாக உலக

வங்கியிடம் உதவிபெற்று திட்டங்களை செய்து வருகிறோம். ஒரு சில தொழில் அதிபர்களிடம் நன்கொடை வாங்கி செய்வதால் புண்ணியம் ஏற்பட்டு விடாது.

**திரு. வி. பி. சிந்தன்**: தலைவர் அவர்களே, சென்னைக்கு புறநகரப் பகுதியிலிருந்துதான் தண்ணீர் வருகிறது. குறிப்பாக ரெட்ஹில்ஸ் பகுதியிலிருந்து வருகிறது. ஆனால் அந்த செங்குன்றம் பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் கிடைக்கவில்லை. அவர்களுக்கு ஏதாவது ஒரு திட்டத்தைப் போட்டு தண்ணீர் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்**: தலைவர் அவர்களே, தற்போது சென்னையின் எல்லாப் பகுதிகளுக்குமே செங்குன்றம் பகுதியில் இருந்துதான் தண்ணீர் வருகிறது. அந்தப்பகுதி மக்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு வேண்டுமானால் ஆழ் துளை கிணறுகளைப் போட்டு தண்ணீர் தர ஏற்பாடு செய்யலாம்.

**நாகர்கோயில் நகராட்சியில் பாதாளச் சாக்கடை.**

324—(*வினா எண் 9135) **திரு. எப். எம். இராசரத்தினம்**: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் நகராட்சிக்குப் பாதாளச் சாக்கடை அமைக்க அரசிடம் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (அ) ஆம்.

(ஆ) நகார்கோவில் நகராட்சிக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ. 930 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. திட்ட பராமரிப்புச் செலவு ஆண்டொன்றுக்கு ரூ. 32.5 இலட்சம் ஆகும். நகராட்சியின் நிதி நிலைமையைக் கருதி இத்திட்டத்தை ஏற்க நாகர்கோவில் நகராட்சி முன்வரவில்லை ஏனைய நகராட்சிகளிலும் பெரும் முதலீடு தேவைப்படும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களை ஏற்பதில் இந்நிலையே உள்ளது. அரசு





இப்பொருள் பற்றி ஆய்வு செய்து, உள்ளாட்சி மன்றங்களின் நிதி நிலைக்கேற்ப தக்க நிதியுதவி செய்யும் வழிமுறைகளை வகுக்கும். அதனடிப்படையில் நாகர்கோவில் பாதாளச்சாக்கடைத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

**திரு. எப். எம். இராசரத்தினம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவினுடைய தென்கோடி பகுதியின் தலைநகரமாக இருக்கிற நாகர்கோவில் நகராட்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அந்த நகராட்சி முன் வராமல், ஏற்றுக் கொள்ளாமல் காலதாமதப் படுத்தினாலும், உலக வங்கியின் உதவியோடு அந்தத் திட்டத்தை நிறைவேற்றும் முயற்சியை மேற்கொள்ள அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்**: தலைவர் அவர்களே, ஏற்கனவே அந்த முயற்சியிலே இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது. 5 பெரும் திட்டங்களை உலக வங்கியின் முன் மத்திய அரசின் மூலமாக சமர்ப்பித்திருக்கிறோம். அதில் நாகர்கோவில் இந்தியாவின் தென்கோடி மாவட்டத் தலைநகர் என்ற முறையில், அந்தத் திட்டத்தையும் சேர்த்து அனுமதிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு. எப். எம். இராசரத்தினம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்தத் திட்டத்திற்கு திருத்திய மதிப்பீடு ஏதேனும் அளிக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்**: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். உலக வங்கியின் உதவி கோரி மத்திய அரசிடம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசு அனுமதி அளிக்குமேயானால் திருத்திய மதிப்பீடு பற்றி யோசிக்கலாம்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 ஆண்டுகளுக்கு முன்னால் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் முன்னிலையில் சேலம் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டு விழா நடந்தது. இப்போது அதற்கு போதுமான நிலம் கிடைக்கவில்லை என்பதால் நிறுத்தி வைத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். பர்ன் அன்ட் கம்பெனி கொடுத்திருக்கும் நிலத்தை உபயோகப்படுத்தி, இந்த பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 7

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அது பற்றி தனிக் கேள்வி போடவும்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தவரையில் பொது மக்களுடைய சுகாதாரத்தோடு சம்பந்தப்பட்ட முக்கியமான விஷயம் என்ற முறையில், நிதிப் பற்றாக்குறை உள்ள மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும், மாநில அரசு நிதி உதவி அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, நிதியை உலக வங்கியிடமிருந்தும் மத்திய அரசிடமிருந்தும் தான் பெற்றுத் தருகிற ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். குறிப்பாக மாவட்டத் தலைநகரங்களாக இருக்கிற நகராட்சிகளுக்கு முன்னுரிமைத் தர வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. அந்த வகையிலே நான் சேலம், நாகர்கோவில் போன்ற நகரங்கள் வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி:** தலைவர் அவர்களே, தம்பகோணம் பகுதியை 1953-ம் ஆண்டிலே ஆறு பகுதிகளாகப் பிரித்து ஒரு பகுதியிலே மட்டும் பாதாள சாக்கடைத் திட்டம் . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிக்கேள்வி போடவும்.

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி:** தலைவர் அவர்களே, தயவு செய்து அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கேள்வியை எழுதிக் கொடுங்கள்; அனுமதித்து, நாளைக்கே போடச் சொல்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டங்கள் பல பகுதிகளில் துவங்கப்பட்டு வேலைகள் அரைகுறையாக முடிக்கப்படாமல் இருக்கின்றன. அப்படி இருப்பவைகள் எந்தெந்த ஊர்களில் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து, அந்தமாதிரி இடங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, இந்தத் திட்டங்களை முடிப்பதற்கு அரசு நடவடிக்கையெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 7]

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, எந்த ஊரில் அப்படி இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக்கொடுப்பார்களானால் அதைப் பரிசீலிக்கலாம்.

**திரு. ஆ. பிரேம்குமார்:** தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டம் நகராட்சியின் வருமானம் அடிப்படையிலும், அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் தொகையின் அடிப்படையிலும் அமைக்கப்படுகிறதா? இத்திட்டத்தை எடுத்துக் கொள்வதற்கு வேண்டிய முக்கியமான தேவைகள் என்னென்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, மக்கள் தொகை அடிப்படையிலும், நகராட்சியின் வருமானம் அடிப்படையிலும்தான் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் வகுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

**திரு. ஜி. கே. பாரதி:** தலைவர் அவர்களே, மாநகராட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தில் வீடுகளுக்கு இணைப்பு கொடுப்பதில் முறைகேடுகள் நடப்பதாக தமிழக அரசுக்கு புகார்கள் வந்திருக்கின்றனவா? அப்படியானால் அவற்றின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார்கள் தற்போது இல்லை.

## மயிலாடுதுறையில் பாதாள சாக்கடை

325—(*வினா எண் 9783) **திரு. மு. தங்கமணி:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை நகருக்கு பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டுவரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. மு. தங்கமணி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபோது மயிலாடுதுறைக்கு பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டு வரும் செயற்குறிப்பு அரசிடம் இல்லையென்று சொன்னார்கள். மயிலாடுதுறை என்பது ஒரு வளர்ந்து வருகிற நகரமாக இருக்கிறது. மழைக காலங்களில் தண்ணீர் தேங்கி சுகாதார கேடுகளும், போக்கு வரத்து இடையூறுகளும் ஏற்படுகின்றன. பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டு வருவதற்கு குறைந்த அளவு ஒரு லட்சம் மக்கள் தொகை இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். மயிலாடுதுறையில் 80 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். எனவே ஒரு லட்சம் மக்கள் தொகை இருக்க வேண்டுமென்ற சட்டத்தைத் திருத்தம் செய்து 75 ஆயிரம் மக்கள் வசிக்கிற இடங்களிலும் பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டு வருவதற்கான முயற்சியை அமைச்சர் அவர்கள் மேற்கொள் வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்**: தலைவர் அவர்களே, மயிலாடுதுறை நகராட்சிக்கு வடிகால் திட்டமொன்று ஏற்கனவே 121 லட்சம் ரூபாய் செலவிலே போடப்பட்டது. 24 லட்சம் ரூபாய்க்கு வீடுகளுக்கு இணைப்புகள் வழங்கவும் திட்டம் தயாராகவே இருக்கிறது. ஆனால் அதற்கான நிதியாதாரங்கள் தற்போது இல்லை. ஆகவே இந்த மயிலாடுதுறை பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு அதிக நிதி தேவைப்படுவதால் மற்ற திட்டங்களோடு சேர்த்து உலக வங்கியிடத்தில் நிதியுதவி பெற மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளோம்.

திரு. மு. தங்கமணி: தலைவர் அவர்களே, மத்திய அரசிடம் நிதியுதவி கோருவதாகச் சொன்னார்கள். அதற்கு உடனடியாக நம்முடைய மாநில அரசு நடவடிக்கையெடுத்து எதிர்காலத்தி லாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்றி தருவதற்கு நடவடிக்கை யெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்**: தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய உதவியையும், உலக வங்கியின் உதவி யையும் பெறுவதற்கு மாநில அரசு தொடர்ச்சியாக முயன்று கொண்டிருக்கிறது.





திரு. எல்ல. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தமிழகத்தில் எந்தெந்த நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தைத் துவக்க உத்தேசம் இருக்கிறது? அதன் மொத்த மதிப்பீடு எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்**: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி கேட்டால் விடையளிக்க இயலும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்**: தலைவர் அவர்களே, ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு அதிகமாக இருக்கிற நகராட்சிகளில் எல்லாம் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டு வரவேண்டு மென்ற அரசினுடைய உத்தேசத்தின்படி, தமிழகத்தில் எத்தனை நகராட்சிகளில் ஒரு லட்சம் மக்களுக்கும் அதிகமாக மக்கள் தொகை இருக்கிறது? இவற்றில் தமிழகத்தில் எத்தனை நகராட்சிகளில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன் வந்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்**: தலைவர் அவர்களே, கேள்வி ரொம்ப சின்னதாக இருந்தாலும், பதில் ரொம்ப பெரிய தாகச் சொல்ல வேண்டியிருக்கும். ஆகவே தனிக்கேள்வி போட்டால், விடை தருகிறேன்.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம்; நமமுடைய அமைச்சர் அவர்களுடைய சொந்த மாவட்டம். கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி நகரத்திற்கு பாதாள சாக்கடை ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்**: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

### கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறையில் கூடுதல் முன்சீப் கோர்ட்டு

326—(*வினா எண். 4518) திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறை கூடுதல் முன்சீப் கோர்ட்டுக்கு Additional Munsiff Court. ) நடுவர் நியமிக்கப்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

[1987 ஏப்ரல் 7

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குழித்துறை கூடுதல் முன்சீப் கோர்ட்டுக்கு நடுவர் 16—5—1986 முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழித்துறையிலே 4 நீதிமன்றங்கள் இருக்கின்றன. 2 முன்சீப் கோர்ட்டுகள் டெம்பரரி என்று சொல்லி, கான்சல் ஆகி விட்டன. 2 நீதிமன்றங்கள்தான் அங்கே தற்போது இயங்கிக் கொண்டு இருக்கின்றன. இப்போது ஒரே ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்சிப்பை போட்டுவிட்டு, அவரை, பிரின்சிபல் மேஜிஸ்ட்ரேட் போஸ்ட்டுக்கும் இன்சார்ஜாக போட்டிருக்கிறார்கள். எனவே, அடிசனல் டிஸ்ட்ரிக்ட் முன்சிப் போஸ்ட்கள் காலியாக இருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? அதேபோன்று 1½ வருடமாக சப்ஜட்ஜ் இல்லாமல் இருப்பதும் அரசுக்குத் தெரியுமா? ஏறக்குறைய 800 வழக்குகளுக்கு மேல் தேங்கிக் கிடப்பது அரசுக்குத் தெரியுமா? எனவே இதை உணர்ந்து சப்ஜட்ஜையும், அடிசனல் டிஸ்ட்ரிக் முன்சீப்பையும் நியமனம் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிசனல் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டைப் பொறுத்தவரைக்கும் அது காலியாக இல்லை. டெம்பரரி கோர்ட்டாக துவக்கப்பட்டது. அது திருப்பி எடுக்கப்பட்டு விட்டது. சப்-கோர்ட்டைப் பொறுத்த வரைக்கும் பர்ஸ்ட் கிளாஸ் மேஜிஸ்ட்ரேட்டிலிருந்து சப்-ஜட்ஜை நியமிப்பதற்கு அவர்களுக்கு பதவி உயர்வு கொடுப்பதற்கு அரசு அறிவுறுத்தி இருக்கிறது. உயர்நீதிமன்றம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கூட 2 நீதிமன்றங்களிலே டிஸ்ட்ரிக்ட் முன்சீப்கள் இல்லை. ஒருவர்தான் அடிசனல் முன்சீப் பாகவும், அவரே பிரின்சிபல் டிஸ்ட்ரிக்ட் முன்சீப்பாகவும் ஆக்ட் செய்கிறார். அதேபோன்று சப்-ஜெட்ஜைப் பொறுத்த வரையிலும், ஹைக்கோர்ட் ரிஜிஸ்திராரை நான் பார்த்து கேட்ட போது, அவர்கள், தமிழக அரசு ஆணை பிறப்பிக்கவில்லை.



1987 ஏப்ரல் 7]

ஆகையினாலே சப்-ஜட்ஜ் போஸ்டுகள் நிரப்பப்படவில்லை என்று சொன்னார்கள். நம்முடைய அரசுதான் அந்த இடங்களுக்கு நீதிபதிகளை போடுகிறார்கள். ஆகவே தயவுசெய்து அமைச்சர் அவர்கள், சப்-ஜட்ஜையும் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் போஸ்ட்டையும் நிரப்புவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தினுடைய பதிவாளர் அத்தகைய ஒரு தவறான கருத்தைச் சொல்லியிருக்கமாட்டார்கள். காரணம் சப்-ஜட்ஜைப் பொறுத்தவரையில் பதவி உயர்வு மூலமாகத்தான் நிரப்பப்படுகிற ஒரு பதவி தமிழக அரசைப் பொறுத்தவரைக்கும். பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டிலிருந்து அவர்கள் பதவி உயர்வு செய்து, அவர்களை சப்-ஜட்ஜாகக் கொண்டுவரவேண்டும். ஆகவே உயர்நீதிமன்றத்தினுடைய அதிகார எல்லைக்குள் வருகிறது. தற்போது ஒரு கோரிக்கையை உயர்நீதிமன்றம் அரசுக்குத் தெரிவித்திருக்கிறது. சப்-ஜட்ஜைப் பொறுத்தவரைக்கும், by direct recruitment சப்ஜட்ஜைக் கொண்டு வரவேண்டும் என்ற ஆலோசனையைச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் நீதித் துறையிலே பணியாற்றுகிற சபார்டிடேட் ஜூடிசியரியில் உள்ளவர்களைப் பொறுத்தவரைக்கும், அவர்களுடைய பதவி உயர்வு வாய்ப்பு போய்விடும்; ஆகவே இதை ஏற்க முடியாது என்று உயர்நீதிமன்றத்திடம் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பேச்சுவார்த்தை உயர்நீதிமன்றத்திலே நடந்து வருகிறது. அது முடிந்த பிறகுதான் முடிவு தெரியும்.

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்திலே எத்தனை டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டுகளில் டிஸ்ட்ரிக்ட் முன்சீப்புகள் இல்லை. சப்கோர்ட்டுகளில் சப்-ஜட்ஜ்கள் இல்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? பூந்தமல்லியில் உள்ள சப்கோர்ட்டில் கூட இன்றைக்கு வரையிலும் சப்ஜட்ஜ் கிடையாது. ஆகவே அதை நிரப்புவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பூந்தமல்லியில், சப்ஜட்ஜாக திரு. இராமசாமி அவர்கள் பணியாற்றி வருகிறார்கள். டிஸ்ட்ரிக்ட் முன்சீப்பைப் பொறுத்த வரைக்கும் 56 இடங்களில் நிரப்பி இருக்கிறோம்.

மேற்கொண்டு 16 இடங்களில் நிரப்ப வேண்டியிருக்கிறது. உச்ச நீதிமன்றத்தில் சபார்டினேட் ஜுடிஷியரியைச் சார்ந்தவர்கள் வழக்கு தொடர்ந்து, அந்த வழக்கு நிலுவையில் 1 ஆண்டு காலம் இருந்து, அண்மையில் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்பை யொட்டி, சர்வீஸ் கமிஷன் பாஸ் பண்ணி, இன்டர்வியூ செய்ய இருக்கிறார்கள். அது வந்தவுடன் நிரப்பப்படும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், பத்மநாபபுரத்தில் பர்ஸ்ட் கிளாஸ் மேஜிஸ்டிரேட் சென்ற ஒரு ஆண்டு காலமாக இல்லாததன் காரணமாக, அந்த கேஸ் சம்பந்தப்பட்ட கட்சியினர், மாதம் ஒரு தடவை அங்கே போய் வரவேண்டிய நிலை ஏற்பட்டு, மக்களுக்கு மிகப் பெரிய சிரமம் ஏற்பட்டுக்கொண்டு இருக்கிறது. அதைப் போக்கக்கூடிய முறையிலே உடனடியாக அங்கே பர்ஸ்ட் கிளாஸ் மேஜிஸ்டிரேட் நியமனம் செய்யப்படுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சப்-மேஜிஸ்ட்ரேட்டுகளுக்குப் பதவி உயர்வு கொடுத்து, அவர்களை பர்ஸ்ட் கிளாஸ் மேஜிஸ்ட்ரேட்டுகளாக நியமிக்கவேண்டும் என்று மாநில அரசு உயர்நீதி மன்றத்தைக் கேட்டுக்கொண்டு இருக்கிறது. உயர்நீதிமன்றம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

### வரதட்சணைக் கொடுமை.

327—(*வினா எண் 4677) **திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வரதட்சணைக் கொடுமையால் உயிர் இழக்கும் பெண்கள் பற்றி விசாரிக்கவும், வரதட்சணை வாங்குபவர்கள், கொடுப்பவர்கள் இவர்கள் பற்றி விசாரிக்கவும் காவல் பிரிவு தனியாக ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா?

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரதட்சணைக் கொடுமையைப் போக்க 1984-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கூட்டப்பட்ட காவல் துறை அதிகாரிகளுடைய மாநாட்டில் எடுக்கப்பட்ட





முடிவுகளை ஒட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இட்ட ஆணையின்படி தமிழகத்தில் வரதட்சணைக் கொடுமையால் உயிர் இழக்கும் பெண்கள் பற்றிய புகார்களை விசாரிக்கவும் வரதட்சணை வாங்குபவர்கள் மற்றும் கொடுப்பவர்களைப் பற்றி விசாரிக்கவும் சிறப்பு (காவல்) குழுக்கள் (வரதட்சணை வழக்குகள்) சென்னை நகரிலும் மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் தலா ஒன்று என்ற விகிதத்தில் ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றன.

இதன்படி வரதட்சணை தொடர்புடைய குற்றங்களை விசாரணை செய்யவும் குற்றவாளிகளை சட்டத்தின் முன் கொணரவும் 1 ஆய்வாளர், 1 தலைமைக் காவலர், 2 காவலர்கள், 1 இளநிலை உதவியாளர் ஆகியோரைக் கொண்ட குழுக்கள் அனைத்து மாவட்டங்களிலும் தலா ஒரு குழு என்ற விகிதத்தில் செயல்பட்டு வருகின்றன.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் பிரச்சினையைத் தீர்க்கும்பொருட்டு தனிக் காவல் பிரிவை அமைத்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு தாய் குலத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எத்தனை வழக்குகள் காவல் பிரிவுக்கு வந்து பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன? இந்த மனுக்களின் மீது அளித்த தீர்ப்பின் அடிப்படையில் எத்தனை பேர் இதுவரை தண்டனை பெற்று இருக்கிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகாறும் 1980 ஆம் ஆண்டு ஒரு வழக்கும், 1981-ல் 2 வழக்குகளும், 1982-ல் 10 வழக்குகளும், 1983-ல் 9 வழக்குகளும், 1984-ல் 27 வழக்குகளும் வந்திருக்கின்றன. அதிலே தண்டனை பெற்றவர்கள் 6 பேர், விடுதலை பெற்றவர்கள் 6 பேர் மீதம் உள்ள வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்றன.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரதட்சணைக் கொடுமைகளைச் செய்கிறவர்கள் கணவன்மார்களாக இருந்தாலும் மாமியார்களாக இருந்தாலும் அவர்களை விசாரிக்காமலேயே குண்டர்கள் சட்டத்தின் கீழ் கடுமையான தண்டனை தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 7

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுகின்ற அளவுக்கு அதை திட்டமிட்டு செய்கிற கும்பலாக இருந்தால் பொது அமைதி பாதிக்கப்படுமானால "Likelihood of disturbance to public tranquility". என்ற அந்தச் சட்டத்தை இதிலே பயன் படுத்துவதற்கு அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரதட்சணைக் கொடுமையினால் —தினசரி நான் பத்திரிகையில் பார்த்துக்கொண்டு இருக்கிறேன்— குழந்தைகளோடு தற்கொலை செய்துகொள்கிற நிலைமை இருக் கிறது. ஆகவே நம்முடைய அமைச்சரவை நல்ல முறையில் ஆண்டுகொண்டு இருக்கிறபோதே, எப்படி அரிசனங் களுக்கு ஒவ்வொரு துறையிலும் 18 சதவீதம் வேலைவாய்ப்பு கொடுக்கவேண்டும் என்று சட்டத்தை வைத்து இருக்கிறோமோ அதேபோல், ஒவ்வொரு துறையிலும் பெண்களுக்கு 25 சதவீதம் வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீட்டப்படுகின்ற திட்டங்கள் பெண்களுக்கு வேலைவாய்ப்பு பெருகக்கூடிய அளவுக்குத்தான் அரசால் தீட்டப் படுகின்றன.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரதட்சணைக் கொடுமை காரணமாக நிகழ்கின்ற மரணங்களில் பெரும்பாலானவை புதிதாக பணம் பெறவேண்டும் என்பதைவிட திருமண சமயத்தில் பெண்களுக்கு பிறந்த வீட்டில் கொடுத்த நகை மற்றவைகளை அபகரிக்க வேண்டும் என்பதற்கும், மற்றும் மறுமணம் செய்யவேண்டி அதன் மூலம் பணம் சேட்ட வேண்டும் என்ற அடிப்படையிலும் பல்வேறு கொடுமைகள் மரணங்கள் நடக்கின்றன. இவைகளை எல்லாம் போக்குவதற்கு மாநிலத்தில் திருமணங்களை கட்டாயமாக பதிவு செய்யவும் அப்படி கட்டாயமாகப் பதிவு செய்கிறபோது முஸ்லீம்கள்



1987 ஏப்ரல் 7]

சட்டத்தில் இருப்பதுபோல பெண் வீட்டார் அந்த பெண்களுக்கு என்ன என்ன கொடுத்தார்கள் என்ற பொருட்களை எல்லாம் அந்த ரெக்கார்டில் சேர்ப்பதற்கும் அரசு விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இது குறித்து தீவிரமாக ஆய்ந்து வருகிறது.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளபடி மாவட்டங் களில் இதற்கான விசேஷ போலீசார் அடங்கிய குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். ஆனால் இந்த வரதட்சணை வழக்குகள் என்று சொல்லி 4 வருடங்களுக்கு கணக்கு கொடுத்து இருப்பதைப் பார்த்தால் மிகவும் குறைவாக வழக்குகள் விசாரணைக்கு வந்து தண்டனை ஆகியிருக்கிறது. அப்படி என்றால் இதற்குள் ஒரு முரண்பாடு இருக்கிறது. முரண்பாடு என்ன என்றால், இந்த வழக்குகள் நீண்ட நாட்க ளாக இழுத்துச் செல்லப்படுகின்றன. காலம் நீட்டி, சாட்சியங்கள் இல்லாமல் அந்த வழக்குகள் தோற்கடிக்கப்படுகின்றன. இந்த முறையில் நடப்பது எனக்குத் தெரியும். நானே பல ரிப்போர்ட்டு களை அனுப்பியிருக்கிறேன். கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கேட்டால் தெரியும். அதைத் தடுப் பதற்கு, துரிதமாகச் செய்வதற்கு இந்த இளம் ஆய்வாளர் மட்டும் போதாது. அதை மாற்றி அதற்கு மேலே இருக்கின்ற ஒரு இன்ஸ்பெக்டர் தகுதியில் ஒரு அதிகாரியை நியமித்து, அதற்கு உத்தரவாதம் அளிப்பார்களா என அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறை ஆய்வாளர் என்ற அளவில் தனி அதிகாரிகளைப் போடுவதால் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடாது. மாறாக வரதட்சணைக் கொடுமையிலிருந்து பெண்களைப் பாது காப்பதற்கான வகையில் தனியாக நீதிமன்றங்களை அமைப்பது தான் சாலச் சிறந்தது என்று அரசு கருதுகிறது. அதற்கான நடவடிக்கைக்கு தற்போது அரசு ஏற்பாடு செய்து கொண்டிருக் கிறது.

திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரதட்சணைக் கொடுமைக்கு முக்கியக் காரணம், நாட்டில் மாமியார்கள்தான் என்று சொல்லப்படுகிறது. அந்த அடிப்படையில் எத்தனை மாமியார்கள் கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள்? அதனால் தண்டனை அடைந்த மாமியார்கள் எத்தனை பேர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, அது குறித்து தகவல் இல்லை.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைநாயகர் அவர்களே, வரதட்சிணைக் கொடுமையினால் இறக்கின்ற மருமகள்தான் ஸ்டவ் வெடித்து இறப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அந்த ஸ்டவ் மாமியார்களையோ நாத்தனார்களையோ தொடுவதாகத் தெரியவில்லை. மருமகளுக்கு மட்டும் தான் ஸ்டவ் வெடிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அந்த ரகசியத்தை அறிந்து சொல்வார்களேயானால், அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. சைதை சா. துரைசாமி:** தலைவர் அவர்களே, மணமகன் மணமகளைத் திருமணம் செய்துகொள்ளும்போது, மணமகன் மணமகளை மட்டும் பெறவேண்டும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் சொன்ன மாதிரி, திருமணங்கள் பதிவு செய்யப்படும்போது மணமகன் பெண்ணை மட்டும் எடுக்க வேண்டும், வேறு எந்தப் பொருளையும் பெண் வீட்டில் பெறக்கூடாது. வரதட்சணை என்ற வகையில் வேறு எந்த உதவியையும் வாங்கி வரக்கூடாது என்ற ஷரத்தை, சட்டத் திருத்தம் கொண்டு வரும்போது சேர்த்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, இதில் பிரச்சினைகள் எழும்.

**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில படித்த இளைஞர்கள் வேலையில்லாத கொடுமையின் காரணமாகவும், வறுமையின் காரணமாகவும் சில பணக்கார வீடுகளில் பெண்களைத் திருமணம் செய்துகொண்டு



விட்டு மாப்பிள்ளையாகிவிடுகிறார்கள். திருமணம் செய்து கொண்ட சிறிது காலத்தில், மனைவிமார்களும், மாமனார்களும் சேர்ந்து மாமனார் வீட்டில் மணமகனைக் கொடுமைப்படுத்து கிறார்களே, அவர்களைத் தப்புவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். (பதில் இல்லை).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இளங்கோவன் தப்பிக்க வேண்டுமென்று நினைக்கிறார்.

**டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரதட்சிணைக் கொடுமைகளைத் தடுக்கின்ற வகையிலே, வரதட்சிணை இல்லாமல் திருமணம் செய்துகொள்கிற வர்களை ஊக்குவிக்கும் வகையிலே, அந்தத் தம்பதியர்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகளுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளிலே முன்னுரிமை கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, தகவலை சேகரிக்க முற்படுவார்களேயானால், வரதட்சிணை வாங்கவில்லை என்று எல்லோரும் வெளியிலே சொல்ல ஆரம்பித்துவிடுவார்கள். இதனால் பிரச்சினைகள் எழும்.

**மேல்நிலைப் பள்ளிகளில் முதலாண்டிலும் அரசுத் தேர்வு.**

328—(*வினா எண் 9554) திரு. செ. செம்மலை: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்நிலைப் பள்ளிகளில் முதலாண்டிலும் (பிளஸ் 1 வகுப்பிலும்) அரசுத் தேர்வு வைக்கும் முறை கையாளப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மேல்நிலைப் பள்ளிகளில் முதலாண்டிலும் அரசுத் தேர்வு வைக்கும் உத்தேசம் எதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளியிலே முதல் ஆண்டில் அரசுத் தேர்வு நடத்துகின்ற முறை இல்லை என்று இருக்கிற காரணத்தினால்,

முதலாண்டில் மாணவர்கள் படிப்பிலே அதிக அக்கறை செலுத்த வில்லை என்பதை அமைச்சரவர்கள் நன்றாக அறிவார்கள். தற்போது இருக்கிற நடைமுறைப்படி தேர்வுகள் பள்ளியிலே யிலே நடத்தப்பட்டு, அதே பள்ளி ஆசிரியர்களால் திருத்தப்பட்டு வருகின்ற காரணத்தினால், மாணவர்கள் படிப்பதிலே அக்கறை காட்டுவதில்லை. அதைத் தொடர்ந்து இரண்டாவது ஆண்டிலே தொடர்புள்ள பாடத் திட்டத்தைப் படிப்பதற்கு மாணவர்கள் சிரமப்படுகிறார்கள். இதனால் கல்வியினுடைய தரம் குறைந்து விடுகிறது. எனவே இதையெல்லாம் கருத்தில்கொண்டு மாண்புமிகு அமைச்சரவர்கள், இப்போது கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் 'செமஸ்டர்' முறை கையாளப்படுவதைப்போல், இதிலும் 'செமஸ்டர்' முறையைக் கொண்டு வந்து, முதலாவது ஆண்டு மொழிப் பாடங்களை முடித்துவிட்டு, இரண்டாவது ஆண்டில் 'எலக்டிவ்ஸ்' போன்ற பாடங்களை எழுதுகின்ற மாதிரி செமஸ்டர் சிஸ்டத்தை ப்ளஸ் டூவில் கொண்டு வந்து, அந்த முறையில் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, 10-வது வகுப்புத் தேர்விலே 'எக்ஸ்டர்னல் அசெஸ்மெண்ட்' புறத் தேர்வு இருக்கிறது. 12வது வகுப்புத் தேர்வில், புறத் தேர்வு இருக்கிறது. 11-வது வகுப்புத் தேர்வில் இண்டர்னல் அசெஸ்மெண்ட்' என்று அகத் தேர்வே போதும் என்று அகில இந்திய அளவிலே மத்திய அரசும், மற்ற மாநில அரசுகளும் முடிவு எடுத்து, மாணவர்களுக்கு 'ஸ்ட்ரஸ் அண்டு ஸ்ட்ரெயின்' இருக்கக்கூடாது என்றபடி நடவடிக்கை எடுத்திருக்கிறோம். 'செமிஸ்டர் சிஸ்டத்தைப்' பொறுத்தவரையில், கல்லூரிகளிலே கூட, எல்லா மட்டத்திலும் இன்னும் கொண்டு வரப்படவில்லை. தேவை என்று அரசு உணர்ந்திருக்கிறது. கல்லூரிகளிலே எல்லா மட்டத்திலும் கொண்டு வந்த பிறகுதான் பள்ளியிலே இதுபற்றி கருத இயலும்.

(முற்பகல் 10-50)

**திரு. இரா. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆம் வகுப்பு, பிளஸ் 2 வகுப்புகளுக்கு வைக்கும் அரசுத் தேர்வினால் ஏற்படுகின்ற இன்னல்களை அரசு உணர்ந்து, இந்த அரசு வைக்கின்ற அரசுத் தேர்வு முறையை மாற்றி அமைப்பதற்கான செயற் குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கல்விக் கொள்கையை ஒட்டி அனைத்து மாநிலங்களின் தேர்வு முறையை பொறுத்தவரைக்கும் Creative thinking faculty of the students என்ன என்பதை அறிய வேண்டிய அளவிற்கு மாற்ற வேண்டிய தாக்கீது மாநில அரசுகளுக்கு வந்து, நமது அரசும் அதை ஆய்ந்து வருகிறது.

**டாக்டர் அ. பொன்னுசாமி:** பெருமை பெற்ற பேரவையின் தலைவர் அவர்களே, பள்ளிகளிலே குறைவான மதிப்பெண்கள் வாங்கும் மாணவர்களுக்கு முறையாக சிறப்பு வகுப்புகள் நடத்தப்படுமா? நடத்தப்பட்டு வருகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு அத்தகைய ஸ்பெஷல் கோச்சிங் கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தை அடுத்த ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்த அரசு எண்ணியிருக்கிறது.

**திரு. கே. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, தற்போது நாம் கடைப்பிடித்து வருகின்ற தேர்வு முறைகள் மாணவர்களின் அறிவை கூர்மைப்படுத்துவதற்கு பொருத்தமான வழிமுறையாக இல்லை என்பதால், சோஷலிச நாடுகளில் கடைபிடிக்கப்படுகின்ற நல்ல பொருத்தமான, விஞ்ஞான பூர்வமான வழிமுறைகளை இங்கே கைக்கொள்ள அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதை அரசு தீவிரமாக ஆய்ந்து வருகிறது.

## நீலகிரி மாவட்டத்தில் ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் சாண எரிவாயு அமைப்பு.

329—(*வினா எண் 10987) திரு. கே. உச்சி: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் சாண எரிவாயு அமைப்புகள் 1984-85, 1985-86, 1986-87 நிறுவப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, (அ) நீலகிரி மாவட்டத்தில் ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் சாண எரிவாயு அமைப்புகள் நிறுவப்படவில்லை. தேசிய கரிம வாயு வளர்ச்சித் திட்டத்தின் கீழ்தான் நிறுவப்படுகின்றன.

(ஆ) எழவில்லை.

அண்ணா மாவட்ட சத்துணவு அமைப்பாளர்கள்.

330—(*வினா எண் 11584) திரு. கு. ரமணி: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1986, ஜூலை மாதத்தில் மட்டும் அண்ணா மாவட்டத்தில் சத்துணவு அமைப்பாளர்கள் 102 பேர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அண்ணா மாவட்டத்தில் கடந்த 1986 ஜூலை மாதத்தில் 24 சத்துணவு அமைப்பாளர்கள் மட்டுமே தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

(ஆ) அமைப்பாளர்கள் வருகைப் பதிவேடு, இருப்புப் பதிவேடு இவைகளை சரியாக பராமரிக்கத் தவறிய காரணத்திற்காக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவு அமைப்பாளர்களுக்கு இன்றைக்கு கிடைக்கின்ற வருமானம் ரொம்ப குறைவு. வேலைப் பளுவும் ரொம்ப கடினமானது. அவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தவறு செய்யாமல் பாதுகாக்க வேண்டியது கரெக்ட் தான். ஒரு நியாயமான முறையில் அவர்கள் கஷ்டங்களை கவனத்தில் எடுத்துக் கொண்டு இந்தத் தண்டனை கொடுப்பதை மட்டும் ஒரு ஆயுதமாகக் கொள்ளாமல், அவர்களைத் திருத்தி ஒழுங்குபடுத்துவதற்கான முறையில் அரசாங்கத்தினுடைய அணுகுமுறை இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, தவறு இருக்கிறது என்று கண்டுபிடித்தவுடனே தண்டனை வழங்கப்படுவதில்லை. ஒரு முறை, இரண்டு முறை, மூன்று முறை என்று அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. அங்கே இருக்கின்ற ஆய்வுப் புத்தகத்தில் எழுதப்படுகிறது. மூன்று முறை எழுதப்பட்ட பிறகும் அதே தவறுகளை அவர்கள் மீண்டும் செய்வார்களானால், அவர்கள் இதுபோல தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்படுகிறார்கள்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவு அமைப்பாளர்கள் ஒவ்வொருவரும் ஒரு பெரும் தொகையை, அவர்களுடைய சக்திக்கு அப்பாற்பட்ட தொகையை—அவர்கள் வாங்குகின்ற சம்பளத்திற்கும் அந்தத் தொகைக்கும் சம்பந்தம் இருக்க முடியாது—டெபாசிட் பண்ணித்தான் அவர்களுக்கு வேலை கொடுக்கப்படுகிறது. அதற்கு கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டால், அல்லது வேறுவிதமான கஷ்டங்களினால் கொடுக்க முடியாமல் போனால், அதற்கென்று அவர்கள் பெயரால் கொஞ்சம் பழி தீர்க்கின்ற மாதிரி சில நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. அதனால் கூட இப்படிப்பட்ட பழிவாங்கும் நடவடிக்கை நடைபெறுகிறது என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா? ஏன் அவர்களிடம் அப்படிப்பட்ட டெபாசிட் வாங்க வேண்டும்? அந்த டெபாசிட் முறைகளை அரசு நிறுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு சத்துணவு அமைப்பாளர்களிடமும் பல்லாயிரக் கணக்கான விலை மதிப்புள்ள பொருள்கள் வழங்கப்படுகின்றன. அன்றாடச் செலவுகளுக்கு அவர்களுக்கு காசுகளும் வழங்கப்படுகின்றன. எனவே, 600 ரூபாய் டெபாசிட்டாக வைக்க வேண்டும் என்று முடிவு செய்து அதை வசூலிக்க நாங்கள் எல்லோரிடத்திலும் ஆணையிட்டோம். ஆனால் அவர்கள் கோர்ட்டுக்குப் போய் தடை வாங்கி இருப்பதனால் தற்போது அவர்களிடத்தில் அந்த 600 ரூபாய் வசூலிக்கப்படுவது இல்லை.

**சமையல் எண்ணெய்களுக்கு ஒருமுனை வரி விதித்தல்.**

331—(*வினா எண் 8236) **திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலை எண்ணெய், ரிபைண்டு ஆயில், தேங்காய் எண்ணெய் போன்றவைகளுக்கு ஒருமுனை வரி விதிக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமுல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ). 17—3—1986 முதல் கடலை எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய், தேங்காய் எண்ணெய் போன்ற தாவர எண்ணெய்களுக்கு இம்மாநிலத்தில் முதல் விற்பனை முனையில் 4 சதவீதம் ஒருமுனை விற்பனை வரி விதிக்கப்பட்டு, இன்றைய தினம் நடை முறையிலே இருந்து வருகிறது.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒருமுனை வரி விதித்து இருப்பதாகச் சொன்னார்கள். மிக்க நன்றி. தேங்காய் எண்ணெய்க்கு ஒருமுனை வரி இருக்கிறது. ஆனால் தேங்காய்க்கு வரி கிடையாது. கடலை எண்ணெய்க்கு ஒருமுனை வரி என்னும்போது, கடலைப் பருப்புக்கு வரி இருக்கிறது. ஏதாவது ஒன்றுக்கு—கடலைப் பருப்புக்கு வரி இருந்தால், கடலை எண்ணெய்க்கு வரி நீக்கப்படுமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் அது பற்றி விவரம் சொல்லப்படும்.

**மாநில வணிகவரி ஆலோசனைக் குழு.**

332—(*வினா எண் 11211) **திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில வணிகவரி ஆலோசனைக் குழு எப்போது கூட்டப்பட்டது?

(ஆ) அதன் பரிந்துரைகளில் அரசு ஏற்றுக்கொண்டவை எவை?



**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மாநில வணிகவரி ஆலோசனைக் குழு கடைசியாக 11—10—1983-ல் கூட்டப்பட்டது. ஆலோசனைக் குழு நடைபெற்ற நேரத்தில் உறுப்பினர்கள் எழுப்பிய பிரச்சினைகளுக்கு கூட்ட நேரத்திலேயே விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இருந்தாலும் மூன்று முக்கியமான கோரிக்கைகள் சொல்லப்பட்டன: (1) தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959, பிரிவு 12 (5)-ன் கீழ் தண்டத் தொகை விதித்தல் சம்பந்தமாக; (2) வெல்லம், புளி, மிளகாய், தனியா, மஞ்சள் போன்றவற்றிற்கு ஒரு முனை வரி விதித்தல் சம்பந்தமாக: (3) சமையல் எண்ணெயை அறிவிக்கப்பட்ட பொருளாக வகைப்பாடு செய்தல்; இந்த மூன்று கோரிக்கைகளையும் அரசாங்கம் அமல்படுத்தியிருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில், இந்த வணிக வரி ஆலோசனைக் குழு 1983 ஆம் ஆண்டிலேதான் கடைசியாக நடத்தப்பட்டதாகச் சொன்னார்கள். அது கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக ஏன் நடத்தப்படவில்லை? அதை ஒவ்வோர் ஆண்டும் இரண்டு, மூன்று முறையாவது நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவையினுடைய தலைவர் அவர்களே, அந்தக் குழு 1983-லே இறுதியாகக் கூடி முடிவுகளை மேற்கொண்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக அந்தக் குழு அடிக்கடி கூட முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. அந்தக் குழுவினுடைய காலக் கெடு 31—3—1987 அன்று முடிவடைந்துவிட்டது. ஆகையினால், அந்தக் குழுவை நியமித்து அல்லது புதுக் குழுவை உருவாக்கி, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல், ஆண்டுக்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை கண்டிப்பாகக் கூட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**தஞ்சை மாவட்டம்; குடவாசல் ஒன்றியம், சேங்காலிபுரத்தில் தலைப்பு வாய்க்காலில் தடுப்புச் சுவர்.**

333—(*வினா எண் 7974) **திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம், சேங்காலிபுரம் தலைப்பு வாய்க்காலில் கட்டியிருந்த தடுப்புச் சுவர் இடிக்கப்பட்டு விட்டதால், மீண்டும் அங்கு ஒரு தடுப்பு அணை கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடிந்துள்ள தடுப்புச் சுவரை சரி செய்ய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இக்கோடையில் வேலைகள் முடிக்கப்பட உள்ளன.

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேங்காலிபுரம் வாய்க்கால் கிட்டத்தட்ட 3,000 ஏக்கர் பாசன வசதியைப் பெறுகின்ற ஒரு வாய்க்காலாக இருக்கின்றது. அந்த வாய்க்காலுக்கு வருகின்ற ஆண்டு லைனிங் செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லைனிங் செய்வதை நிதிநிலைமைக்கேற்றாற்போல் எடுத்து, செய்யவேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சேங்காலிபுரம் வாய்க்கால் சோழசூடாமணி ஆற்றிலிருந்து பிரிந்து வருகிறது. அந்த வாய்க்கால் தலைப்பு, பாசனம் பெறுகின்ற இடத்திலிருந்து 5 கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கிறது. அப்படி 5 கிலோ மீட்டருக்கு அப்பால் இருந்து தண்ணீர் வருவதால், தண்ணீர் கடைமடைப் பகுதிக்குப் போய்ச் சேருவது சிரமமாக இருக்கிறது. எனவே குடவாசல் பக்கத்திலே இருக்கின்ற தலைப்பு வாய்க்காலை மாற்றி சேங்காலிபுரம் பக்கத்திலே புதுக்குடி ரெகுலேட்டர் அருகிலே கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா அல்லது இதுபற்றி விவசாயிகளிடமிருந்து மனு ஏதேனும் வரப்பெற்றிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியோடு செய்யப்பட்டிருக்கிற காவிரிப் பாசன மேம்பகுதி சீரமைக்கும் திட்டத்தில் இப்படிப்பட்ட செக்டாம்கள் போன்றவைகள் நிறைய சேர்த்துள்ளோம். ஆகவே, தகுந்த நேரத்தில், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**கும்பகோணம் தாலுகா ஏனநல்லூர் நாச்சியார்கோவில் கிராமத்தில் விவசாயத்திற்கு படுக்கை அணை கட்டுதல்.**

334—(*வினா எண் 8293) **திரு. கி. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தாலுகா ஏனநல்லூர் நாச்சியார்கோவில் கிராமத்தில் விவசாயத்திற்கான தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய கூத்தனூர் அருகில் படுக்கை அணை (Bed Dam) கட்ட அரசு எடுத்த நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் வட்டம், கூத்தனூர் அருகில் படுக்கை அணை கட்டும் திட்டம் தற்போது இல்லை.

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் வட்டம் கூத்தனூர் பகுதிக்கு சுமார் 1,000 ஏக்கர் பாசனத்திற்காக பெட் டாம் கட்டுவதாக காவிரி மாடர்னைசேஷன் டிவிஷனிலே ஒத்துக்கொண்டு, பிறகு காவிரி டிவிஷனல் இ.இ. அலுவலகத்திலே தேங்கி நிற்கிறது. இதற்காக விவசாயிகள் கடந்த ஆண்டு, கிட்டத்தட்ட 2,000 பேர் உண்ணாவிரதம் இருந்தார்கள். இதே கேள்வியை இரண்டு மாதங்களுக்கு முன்பு கேட்டபோது, அமைச்சர் அவர்கள், கவனிக்கப்படும் என்றார்கள். தற்போதாவது, கவனித்து நடவடிக்கை எடுப்பார்களா? கிட்டத்தட்ட 1,000 ஏக்கர் சுத்தமாக பாழாகி இருக்

கிறது. தண்ணீர் இன்றி அவதிப்படுகிறார்கள், கூத்தனூர் பகுதி மக்கள். எனவே, இனிமேலாவது அரசு கவனித்து, நடவடிக்கை எடுத்து, விவசாயிகளைக் காப்பாற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11·00)

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை நான் புரிந்து கொண்டிருக்கிறேன். அதற்கு ஏற்றாற்போல் அதிகாரிகளிடம் கலந்து பேசி, சாத்தியக்கூறு இருக்கும் என்று சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு தலைவர் அவர்களே, காவிரியில் தண்ணீர் வராத நிலையில், வருகிற தண்ணீரை முறையாகப் பயன்படுத்த வேண்டும் என்று விவசாயிகள் துடிதுடித்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த முறை கூத்தனூர் படுக்கை அணை மாடாகுடி படுக்கை அணை தில்லையம்பர் படுக்கை அணை, சுந்தர பெருமாள் கோயில் படுக்கை அணை மற்றும் அண்ணல் அக்கராஹாரம் படுக்கை அணை ஆகிய 5 கோரிக்கைகளை வைத்து உண்ணாவிரதம் இருந்தோம். சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் சுமார் 2,000 விவசாயிகள் உண்ணாவிரதம் இருந்தார்கள். ஆனால் பொதுப்பணித் துறையினர் இது குறித்து என்ன என்று கூட கவலைப்படாமல் இருக்கிறார்கள். விவசாயிகளின் தொல்லைகளைப் போக்க குறைந்தபட்சம் இந்தப் படுக்கை அணைகளை—இது ஒன்றும் தற்போது வைக்கப்படும் கோரிக்கை அல்ல—கடந்த 10 அல்லது 15 ஆண்டுகளாக வைக்கப்பட்டிருக்கும் கோரிக்கை—கட்டித் தர வேண்டும் என்று கேட்டு வருகிறோம். எனவே அரசு இதை உடனடியாகக் கவனித்து விவசாயிகளைக் காப்பாற்றுமா என்று அறிய விரும்புகிறேன். இந்த 5 படுக்கை அணைகளையும் வரும் நிதியாண்டிலாவது மேற்கொள்ளுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்கும்போது, பொதுப்பணித்துறையைச் சார்ந்த அதிகாரிகள் உண்ணாவிரதம் பற்றி என் என்றுகூட கேட்கவில்லை என்று சொன்னார்கள். நான் அமைச்சர். அதை ஏன் என்று கேட்கிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டம் நாகாவதி அணை.

335—(*வினா எண் 9632) திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் நாகாவதி அணையிலிருந்து வாய்க்கால் மூலம் பாசனம் பெற வாய்க்கால் கட்டுமானப் பணி முடிந்து விட்டதா?

(ஆ) ஆம் எனில், பாசன வசதி பெறும் கிராமங்கள் எவை எவை?

(இ) எத்தனை ஏக்கர் பாசன வசதி பெறும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) நாகாவதி அணையிலிருந்து வாய்க்கால் மூலம் பாசனம் பெற வாய்க்கால் கட்டுமானப் பணி பெரும்பாலும் முடிந்துவிட்டது. இத்திட்ட வேலைகள் முழுவதையும் விரைவில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) மற்றும் (இ) நாகாவதி திட்டத்தின்படி பாசன வசதி பெறும் கிராமங்களும், பயனடையும் பரப்பும் கீழ் வருமாறு:—

| | |
|---|---|
| 1. அரகாசனஅள்ளி | 417.77 ஏக்கர் |
| 2. சின்னம்பள்ளி | 722.61 ஏக்கர் |
| 3. பெரும்பாலை | 852.62 ஏக்கர். |
| மொத்தம் | 1,993.00 ஏக்கர் |

**திரு. எச். ஜி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாகப் பதில் அளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சுமார் 1,000 ஏக்கருக்கு மேல் நாகாவதி அணையில் தண்ணீர் பாசனம் நடக்கிறது. இன்னும் சில கால்வாய்களில் வேலை முடிக்கப்படாமல் இருக்கிறது. பல காண்ட்ராக்டர்கள் வேலையை முடிக்காமல் இருக்கிறார்கள். அதையெல்லாம் விரைவுபடுத்தி கால்வாய்களை கட்டி முடிக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இன்னும் குறையாக—வேலை நடக்காமல் இருந்தால் அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லி உடனடியாக வேலையை முடிக்க ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. எச். ஜி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் மூன்றாம்பள்ளம் அணை என்று இருக்கிறது. மூங்கில் முடுவுக்குப் பக்கத்தில் கிழக்குப் பக்கத்து வாய்க்கால் உடைந்திருக்கிறது. எனவே மூன்றாம்பள்ளம் அணையிலிருந்து வரும் கிழக்கு வாய்க்காலை உடனடியாக சீர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு ஒரு அணைக்கட்டிலிருந்து வரும் கால்வாயைப்பற்றி கேட்டிருக்கிறார்கள். தனியாகக் கேள்வி கேட்டால் சரியான பதில் சொல்லப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்றாலும்கூட எங்கள் தர்மபுரி மாவட்டத்தைச் சார்ந்த வாணியாறு அணைக்கட்டு கட்டி முடிக்கப்பட்டு, வாய்க்காலும் தொடங்கப்பட்டு, பாசனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும் மதகுகள் சரியாக இல்லாத காரணத்தால் பாசனத்திற்கு முறையாகத் தண்ணீர் கிடைக்காமல் விவசாயிகள் பெரும் அவதிக்கு உள்ளாகியிருக்கிறார்கள். கீழே இருக்கிற சப்ளை சேனல் மூலம் ஏரிகளுக்கு பாசன வாய்க்கால்களில் முறையாக தண்ணீர் செல்லாமல் விவசாயிகள் பெரும் அவதிக்கு ஆளாகி



யிருக்கிறார்கள். எனவே அதை முறைப்படுத்தி, மதகுகளை ஒழுங்குபடுத்தி, பாசனத்திற்கு நீர் விடுவதையும் முறையாகச் செய்து விவசாயிகளுக்கு நல்ல வசதியைச் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியாறு மதகில் குறை இருக்குமானால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அறிவுறுத்திச் சொல்லி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். தண்ணீர் விடுகிற பிரச்சினையில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எங்கள் துறையைச் சார்ந்த கண்காணிப்புப் பொறியாளர் கலந்து பேசி ஒரு சுமுகமான நல்ல முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) உறுப்பினர் கொடுத்த ஓர் அறிவிக்கை குறித்து.

**திரு. க. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 23—3—1987 அன்று நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என் சம்பந்தமான பிரச்சினை. அறைக்கு வாருங்கள் பேசலாம்.

### (ஆ) முந்தைய நாள் நடைபெற்ற அலுவல் குறித்து.

**டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, On a point of Order. நேற்றைய தினம் தாங்கள் நல்ல பரந்த மனப்பான்மையோடு, கருணை உள்ளத்தோடு 'ஆனந்த விகடன்' ஆசிரியருக்கு கொடுக்கப்பட்ட தண்டனை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது point of orde அல்ல. என்னிடம் நீங்கள் கேட்கவில்லை. (குறுக்கீடு). நீங்கள் என் முன் அனுமதியைக் கேட்கவில்லை. என்னை பேச வைத்து விட்டு பிறகு அதை நீக்குவது சரியல்ல. நானே பேசியதை

நானே நீக்குவது சரியல்ல. என்னிடம் அனுமதி கேட்டு ஒரு வரன்முறையை வைத்துக்கொண்டு பேசுவதுதான் வழக்கம். இதை உங்களிடம் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்). அவ்வளவு பேரும் எழுந்தால் நான் வளைந்துவிட வேண்டுமா? இது முறையல்ல. வேறு எதையோ எழுப்பப் போகிறீர்கள் என்று நான் நினைத்தேன். இந்தப் பிரச்சினை அல்ல.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த நேரத்தில் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அது குறித்து முன் வரிசையில் உள்ளவர்கள்தான் எழுப்பலாம் என்று அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானித்தோம். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் மாசிலாமணி, உங்களுடைய பிரச்சினை என்று நினைத்து அனுமதித்தேன். இந்தப் பிரச்சினையைப் பற்றி என்னுடைய அறையில் சொல்லியிருந்தால் நான் கேட்டுவிட்டு அனுமதி தந்திருப்பேன். இது முறையல்ல. (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நடந்து, தீர்ப்பு வழங்கியதை இன்று விமர்சனமாக ஆரம்பிக்கிறார். (குறுக்கீடு). மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் கேட்டது வேறு. நேற்று தாங்கள் தீர்ப்பு வழங்கியதை இன்று மறுபடியும் விமர்சனம் போல ஆரம்பித்துப் பேசுவதைத் தாங்கள் அனுமதிக்கக் கூடாது என்பதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நான் சொல்லி விடுகிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையினுடைய ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவைகளைக் காப்பாற்றுவதில் சிலபல வரைமுறையை வகுத்திருக்கிறோம். அது மட்டுமல்லாமல் சில பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதுதான் முறை. அந்தப் பிரச்சினையை மறுபடியும் விவாதித்து ஒவ்வொருவரும் அதைப் பற்றி பேச ஆரம்பித்தால் மறுபடியும் விவாதத்திற்கு உள்ளாகி ஒவ்வொருவரும் பதில் சொல்லும் சூழ்நிலை ஏற்படக்கூடும். தயவு செய்து இந்தப் பிரச்சினையை அத்தோடு விட்டுவிடுவது எல்லோருக்கும் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்லுவது, முடிந்த பிரச்சினையை விவாதிப்பது முறையல்ல. நேற்றைய தினம் தீர்ப்பு அளித்த பிறகு நேற்றைய தினமே அந்த விவகாரம் முடிந்து விட்டது. (குறுக்கீடு). இந்தப் பிரச்சினையை இன்றைக்குப் பேசுவது சரியல்ல, முறையல்ல. (குறுக்கீடு). இவ்வளவு பேர் எழுந்திருக்கிறீர்களே, நான் ஒருவன் தனியாகத்தான் பேசுகிறேன். நீங்கள் அமருங்கள். (குறுக்கீடு). அவை முன்னவர் எனக்காக பேசுவதுதான். நீங்கள் எனக்காகப் பேசுவதாக இருந்தால் அனுமதிக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே. இங்கே காங்கிரஸ் ஆண்டு கொண்டிருந்தபோது, பேரவைத் தலைவராக திரு. செல்லப்பாண்டியன் இருந்தபோது, நான் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபோது, எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர்தான் 'பிரைவேட் மெம்பர் கோஸ்டியன்' என்று ஏதாவது பிரச்சினையை எழுப்பலாமே தவிர, இப்படியல்ல. முன் வரிசையில் உள்ள தலைவர்தான், திரு. சிவசண்முகம் தலைமையில் இருந்தபோதும் எழுப்பலாம், இப்படிப்பட்ட முறை அறவே இல்லை; எதிர்க்கட்சித் தலைவர் மட்டும்தான் பேசலாம், மற்றவர்கள் யாரும் எழுப்பக் கூடாது. (குறுக்கீடு). இந்தமாதிரி அப்போது எழுப்ப இடம் கிடையாது. இந்த மாதிரி எழுந்து, திரு. ரகுமான்கான் எழுந்து கொள்வது மாதிரி, எழுந்துகொள்ள இடமே கிடையாது. (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பிரச்சினை வேறு எங்கேயோ திசை திரும்பி விடக்கூடாது. இன்று ஆதி திராவிடர் நலத்துறை மானியம். ஆதிதிராவிடர் 42 உறுப்பினர்களின் சார்பில் இப்போது விவாதம் நடைபெற்றாக வேண்டும். பெரும்பான்மையான மக்கள். . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எங்கள் கருத்தைச் சொல்ல அனுமதிக்க வேண்டும். வரலாற்று உண்மைகளைச் சொல்லுகிறேன். கேட்டால் கேளுங்கள் இல்லாவிட்டால் போங்கள், ஆத்திரப்பட வேண்டிய அவசியமில்லை திரு. ரகுமான்கான் ஆத்திரப்பட வேண்டிய அவசியமில்லை. (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ரகுமான்கான் எழுந்திருந்து பேசுவது முறையல்ல. (குறுக்கீடு) இது அவமானம் அல்ல. நீங்கள் உறுப்பினர்தான், நான் ஒத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) திரு. ரகுமான்கான், அப்படி பேசுவது முறையல்ல. என்னுடைய அனுமதியைப் பெறாமல் பேசுவது முறையல்ல.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாரையும் அவமானப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் அல்ல. என்ன நடைபெற்றது என்று சொல்லுகிறேன். முன் வரிசையில் உள்ள தலைவர்கள் இப்படிப்பட்ட பிரச்சினைகளை எழுப்பலாம் என்று அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு எடுத்திருக்கிறோம். அதை அந்தந்தத் தலைவர்கள் அந்ததந்தக் கட்சிக்காரர்களுக்குச் சொல்ல வேண்டும். அந்தக் கட்சிக்காரர்கள் கட்டுப்பட வேண்டும். (குறுக்கீடு).

(முற்பகல் 11-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது முறையல்ல, அழகல்ல, சரியல்ல. (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அவரவர்கள் விருப்பப்படி பேசுவதென்றால் அவை எங்கேயோ போய்தான் முடியும் . . . . (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** I remind the hon. Members that they should all faithfully discharge their duties as per the constitution. அவ்வளவுதான் சொல்ல முடியும். வேறு ஒன்றுமில்லை (குறுக்கீடு) பிரச்சினை எங்கோ போகிறது, வளர்க்க வேண்டாம். (குறுக்கீடு) ஏன் போட்டு போட்டுக்கொண்டு பிரச்சினையை வளர்க்கிறீர்கள்? (குறுக்கீடு) இது வேண்டாம். இது முறையல்ல, இது முறையல்ல. (குறுக்கீடு) அவை முன்னவர் அவர்கள் பேசினால் நன்றாகக் கேட்கும். என்ன பேசினார்கள் என்று எனக்கே கேட்கவில்லை. (குறுக்கீடு) பேசுங்கள்.



**திருமதி டி. யசோதா :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் எங்களுடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இல்லாத காரணத்தால் துணைத் தலைவர் பொறுப்பில் இருக்கின்ற நான் எழுந்து பிரச்சினைகளைக் கேட்க வேண்டிய நிலையில் இருக்கிறேன். அதை முதலில் மாண்புமிகு நாவலர் அவர்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன். அடுத்தாற்போல் அவர்கள் சொன்னார்கள். வரைமுறை காப்பாற்றப்பட வேண்டும், கண்ணியம் காப்பாற்றப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அதில் எங்களுக்கு குறைந்தபட்ச கருத்து வேற்றுமை கூட கிடையாது. வரைமுறை காப்பாற்றப்பட வேண்டும். நேற்று அந்த ** என்பதைத்தான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வார்த்தைகள் சரியல்ல. Point of order ல் இப்படிப் பேசுவது சரியல்ல. (குறுக்கீடு) அதனால்தான் சொன்னேன். நான் வந்தவுடன் பேசினேன். நீங்கள் எழுப்பினீர்கள். பிரச்சினை முடிந்துவிட்டது. நேற்றைய பிரச்சினை முடிந்துவிட்டது. (குறுக்கீடு) * * என்று கூறியது அவைக் குறிப்பில் இருக்காது. தயவுசெய்து ஒத்துழையுங்கள்.

### 3. கவன ஈர்ப்பு.

### (அ) குடியாத்தம் இராஜேஸ்வரி மில்ஸ் மற்றும் சுலோசனா டெக்ஸ்டைல்ஸ் மில் தொழிலாளரின் இன்னல்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் ஆர். கோவிந்தசாமி மற்றும் கே சுப்பராயன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

***திரு. ஆர். கோவிந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "வட ஆற்காடு மாவட்டம், குடியாத்தத்திலுள்ள இராஜேஸ்வரி மில்ஸ் லிமிடெட் மற்றும் சுலோசனா டெக்ஸ்டைல்ஸ் ஆகிய இரண்டு மில்களிலும் ஒரே குடும்பத்தைச்

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

சார்ந்த நிர்வாகம் சுமார் 600-க்கு மேற்பட்ட தொழிலாளர்களை எந்தவித சட்ட உரிமையும் வழங்காமல், கொத்தடிமைகள்போல் நடத்தி, மில்லுக்குள்ளேயே நிர்வாகத்தினரால் தொழிலாளர்கள் தாக்கப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

வட ஆற்காடு மாவட்டம் குடியாத்தத்திலுள்ள இராஜேஸ்வரி மில்ஸ் மற்றும் சுலோச்சனா டெக்ஸ்டைல்ஸ் ஆகிய இரு ஆலைகளும் ஒரே குடும்பத்தைச் சார்ந்த சகோதரர்களால் நிருவகிக்கப்படுகின்றன. இராஜேஸ்வரி மில்ஸ் ஆலையில் 366 தொழிலாளர்களும் சுலோச்சனா டெக்ஸ்டைல்ஸ் ஆலையில் 54 தொழிலாளர்களும் பணிபுரிகின்றனர். இந்த ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களை நிருவாகங்கள் எவ்வித சட்ட உரிமையும் வழங்காமல் கொத்தடிமைகள்போல் நடத்துவதாகவும் மற்றும் ஆலைக்குள்ளேயே நிருவாகத்தினரால் தாக்கப்படுவதாகவும், தொழிலாளர்களிடமிருந்தோ, தொழிற் சங்கங்களிடமிருந்தோ எவ்வித புகாரும் தொழிலாளர் துறையில் பெறப்படவில்லை. இராஜேஸ்வரி மில்ஸ் ஆலை சமீபத்தில் 29—1—1987 அன்று வேலூர் துணைத் தலைமை தொழிற்சாலைகள் ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டபோது சட்டப்படியான அடிப்படை வசதிகள் அளிக்கப்பட்டு தேவையான பதிவேடுகள் பராமரிக்கப்பட்டதை அறிய முடிந்தது. சுலோச்சனா டெக்ஸ்டைல்ஸ் ஆலையை வேலூர் துணைத் தலைமை தொழிற்சாலைகள் ஆய்வாளர் சமீபத்தில் 7—1—1987 அன்று ஆய்வு செய்ததில் தேவையான பதிவேடுகளும் அறிவிப்புகளும் பராமரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆர். கோவிந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே அங்கே கிட்டத்தட்ட 600-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால் அறிக்கையிலே 366 பிளஸ் 54



என்று சொல்லி 420 தொழிலாளர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். மீதியுள்ள தொழிலாளர்கள் பணியில் சேர்ந்து 4, 5 வருடங்கள் ஆகியும் பெர்மனன்ட் செய்யப்படவில்லை. அது மட்டுமல்ல. இந்த காலத்திலே தொழிலாளர்களை உள்ளே அழைத்து அடிக்கிறார்கள்; துன்புறுத்துகிறார்கள். அது மட்டுமல்ல. 4 ஆண்டுகளாக அங்கேயுள்ள அத்தனை பேர்களும், ரூ. 2½, ரூ. 3 என்று கூலி பெறுகின்றவர்கள் எல்லாம் அவதிக்குள்ளாக்கப்பட்டு, பெர்மனன்ட் செய்யப்படாமல் இருக்கின்றார்கள். அவர்களுக்கு தொல்லைகள் கொடுத்துக்கொண்டு இருக்கின்றார்கள். அங்கே தொழிலாளர் தலைவரை, அங்கே வருகின்ற அதிகாரிகளை எல்லாம் சரிகட்டிக்கொண்டு தவறான முறையில் சர்வாதிகார ஆட்சி நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். அது மட்டுமல்ல, அவர்கள் பணியாற்றிய காலத்தில் சேமித்து வைத்த பிராவிடன்ட் பண்ட் பணத்தைக் கேட்கும்போது சரியாகக் கொடுப்பதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் மாரிமுத்து, தங்கமணி அவர்களுக்குச் சொல்கிறேன். ஒரே ஒரு சட்டசபை நடக்கட்டும்.

**திரு. ஆர். கோவிந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிலாளர்கள் வீட்டிற்குச் செல்கின்ற போது பெறுகின்ற அந்த பென்சன் தொகை, பிராவிடண்ட் பண்ட் தொகை ரூ. 25 ஆயிரம் அல்லது ரூ. 30 ஆயிரம் என்று கொடுக்க வேண்டுமென்றால் அதை ஒழுங்காகக் கொடுக்காமல், ரூ. 2 ஆயிரம், ரூ. 3 ஆயிரம் என்று கொடுக்கின்றார்கள். நிர்வாகத்தில் அவர்கள் தவறான பாதையிலே அந்த பணத்தைச் செலவழித்துவிட்டு, தொழிலாளர்கள் சேமிப்புப் பணத்தைச் சரியாகக் காடுப்பதில்லை. ரூ. 5,000, ரூ. 10,000 என்று கொடுக்கின்றார்கள், வசதி படைத்தவர்கள். பணம் படைத்தவர்கள், செல்வாக்குப் படைத்தவர்களாக இருக்கின்ற அவர்கள் குண்டர்களை வைத்துத் தாக்கி தொழிலாளர்களைத் துன்புறுத்துகின்றார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. ஆர். கோவிந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடக்கிறதைத்தான் சொல்கிறேன். அதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். அதிலே என்ன நடவடிக்கை என்பது பற்றிச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சொல்வது எப்படி என்பதற்கு ஒரு முறை இருக்கிறதல்லவா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களிடம் இருந்தோ, தொழில சங்கங்களிடமிருந்தோ எவ்விதப் புகாரும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடமிருந்து இந்தப் புகார் கூறப் பட்டுள்ளது. தொழிற்சங்க ரீதியாக வருமானால் நம் தொழிலாளர் நலத் துறை மூலமாக தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. ஆர். கோவிந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார்களை என்னிடத்திலே அந்தத் தொழிலாளர்கள் கொடுத்திருக்கின்றார்கள். இதை நான் முன்னமேயே குறிப்பிட்டிருக்கிறேன். அவர்கள் தொழிலாளர்களுடைய தலைவரை விலைக்கு வாங்கி விட்டிருக்கிறார்கள் என்பதையும் குறிப்பிட்டேன். ஆகவே தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காக அவர்கள் நிறையப் புகார்களை, அந்தத் தொழிலாளர்களே என்னிடத்திலே கொடுத்து இருக்கின்றார்கள் என்பதை இந்தச் சபை அறியுமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படி சொல்வது சரியல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெங்கசாமி அவர்களே இப்போது எழுந்து காட்டினார்கள். ஒட்டுமொத்தமாக தொழிற்சங்கத் தலைவர்களைக் குறை கூறுவது நியாயமாகாது. தொழிலாளர்களாக இருக்கக்கூடியவர்கள் சொல்வது, ஜெனியுவின். உண்மையான குறைகளாக இருந்தால், புகார்களாக இருந்தால் அதை எடுத்துச் சொல்லத்





தான் தொழிற்சங்கங்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் இருக்கின்றார்கள். ஆகையினால் நாம் மற்றவர்களைப்பற்றி புகார் சொல்லுகின்றபோது அவர்கள் நம் மீது சொல்லிவிடாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை பற்றி கிளப்பப் பட்டிருக்கிறது. இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் அதிகாரிகளால் வழங்கப்பட்டிருக்கின்ற இந்தத் தகவல் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாக இருக்கின்றது என்பதைத்தான் நான் குறிப்பிடுகிறேன். நடைமுறையில் அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் மொத்த எண்ணிக்கைத் தரப்படவில்லை. பட்டியலில் வேலை செய்கின்றதாகக் காட்டும் எண்ணிக்கை மாத்திரமே இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே சட்டப் படிக்கான சலுகைகள் அமுலாக்கப்படுவதாகவும், வசதிகள் செய்யப்படுவதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. நான் மிகுந்த பொறுப்போடு குறிப்பிட விரும்புவது, இந்தத் தகவல்கள் முற்றிலும் உண்மைக்கு பொருத்தமானது அல்ல. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து நான் அறிந்து கொள்ள விரும்புவது, சட்டப்படியான சலுகைகள்—பிராவிடண்ட் பண்ட் எத்தனைத் தொழிலாளர்களிடமிருந்து பிடிக்கப்படுகிறது, அங்கே ஈ.எஸ்.ஐ. சலுகைகள் கொடுக்கப் படுகின்றனவா, லீவ் பெசிலிட்டீஸ் இருக்கிறதா, கேஷுவல் லீவ் போன்ற சலுகைகள், மற்றும் பல்வேறு சலுகைகள்—அங்கே அமுலாக்கப்படுகின்றனவா? தொழிற்சாலை சட்டங்கள், எந்தெந்த சட்டங்கள் அங்கே அமுலாக்கப்படுகின்றன என்பது போன்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதெல்லாம் தொழிற்சங்கங்கள் கேட்டு பெற வேண்டிய சலுகைகள்.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்சங்கங்கள் கேட்டு பெறவில்லையென்றாலும் கூட, அரசு இயற்றியிருக்கின்ற சட்டங்களின்படி

அவைகள் சரியாக செயல்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கின்ற பொறுப்பு அரசுக்கு இருப்பதால் இன்ஸ்பெக்டர் ஆப் பேக்டரீஸ் மூலமாக அவற்றைக் கண்காணிக்க அரசு கடமைப்பட்டிருக்கிறது. சொல்லப்பட்டிருக்கின்ற விஷயங்களைப் பொறுத்த மட்டில் தொழிலாளர்கள் தரப்பிலிருந்தோ அல்லது தொழிற்சங்கத் தரப்பிலிருந்தோ புகார் ஏதும் வரவில்லையென்றாலும்கூட அரசு சட்டப்படி இதுகுறித்து நடவடிக்கை எடுக்காமல் இருக்கக் கூடாது என்பதால் ஒரு குழு போட்டு சட்டத்திற்கு புறம்பாக எங்காவது ஏதாவது நடந்திருக்கிறதா என்பதைப் பற்றி அரசு விசாரணை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வராத புகார்களுக்கு இவ்வளவு தூரம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வக்காலத்து வாங்குகிறார்கள் என்பதால் மாண்புமிகு உறுப்பினர் பாராட்டப்பட வேண்டியவர்கள். வேலூர் துணைத் தலைமை தொழிற்சாலைகள் ஆய்வாளர் சமீபத்தில் 7—1—1987 அன்று ஆய்வு செய்ததில் தேவையான பதிவேடுகளும், அறிவிப்புகளும் பராமரிக்கப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

## (ஆ) தக்காளி வீரிய ஒட்டு விதைகள் சரியாக முளைக்காததால் விவசாயிகளுக்குப் பாதிப்பு.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழக வேளாண்மைத் துறையால் விநியோகிக்கப்பட்ட, பங்களூர் இந்தோ—அமெரிக்கன் சொசைடி தயாரித்த தக்காளி வீரிய விதைகள், இந்த ஆண்டு தக்காளி பட்டத்தில் முளைக்காமல் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளதால், மேற்படி சொசைட்டியிடம் இருந்து விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு பெற்றுத் தரவேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

### அறிக்கை.

தமிழகத்தில் காய்கறி தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் குறுகிய பரப்பளவில் உற்பத்தியினை அதிகரிக்கவும், வருவாயினை பெருக்கவும் ஏதுவாக தமிழகத்தில் 1985-86 ஆம் ஆண்டு மாநில அரசு திட்டத்தின்கீழ், வீரிய ஒட்டுரக காய்கறி விதைகள் விநியோகம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வீரிய ஒட்டுரக காய்கறி விதைகள் மிக அதிகவிலை உள்ளதால் சாகுபடியாளர்களிடையே விரிவாக புகுத்தும் நோக்கத்துடன் 25 விழுக்காடு விலையில் விதை விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது. தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் 18 கிலோ வீரிய ஒட்டு தக்காளி, கத்திரி, வெண்டை, குட மிளகாய், காரட், முட்டைக்கோசு மற்றும் முள்ளங்கி விதைகள் விநியோகம் செய்யப்பட்டு 1985—86 ஆம் ஆண்டில் 1,500 விவசாயிகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளார்கள்.

2. இத்திட்டத்திற்கு காய்கறி சாகுபடியாளர்களிடம் அமோக வரவேற்பு காணப்பட்டதால் நடப்பு ஆண்டில் (1986—87) வீரிய காய்கறி விதைகள் ஏழு இனங்களில் 37.5 கிலோ அனைத்து மாவட்டங்களிலும் விநியோகம் செய்யப்பட்டது. இதனால் 3,200 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். தக்காளி விதையைப் பொறுத்த வரையில் பெங்களூரிலுள்ள இந்தோ—அமெரிக்கன் நிறுவனத்திலிருந்து சென்ற ஆண்டு போலவே, நடப்பு ஆண்டிலும் 18 கிலோ விதைகள் 1,450 விவசாயிகளுக்கு 10 கிராம் அளவில் சிறு பொட்டலங்களாக மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டது. மேலும், தக்காளி வீரிய ஒட்டு விதைப்பொட்டலத்துடன் பயிர் சாகுபடி பற்றிய கையேடு குறிப்பும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

3. தோட்டக்கலைத் துறையின் களப்பணியாளர்களிடம் இருந்து பெறப்பட்ட அறிக்கையில் தக்காளி விதைகள் அனைத்து இடங்களிலும் நல்ல முறையில் முளைத்தது என்று தெரிய வருகின்றது. என்றாலும் முளைத்த தக்காளி நாற்றுகளுக்கு

[திரு. ப. உ. சண்முகம்] [1987 ஏப்ரல் 7

பயிர் பாதுகாப்பு முறைகள் சம்பந்தப்பட்ட விவசாயிகளால் தக்க தருணத்தில் எடுக்காததால் "புள்ளிவாடல் நோய்" என்ற ஒரு வகை வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டு தக்காளி நாற்றுகள் ஓரிரு இடங்களில் சேதம் அடைந்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

4. ஆகவே, வழங்கப்பட்ட தக்காளி வீரிய ஒட்டு விதைகள் முளைக்காமல் விவசாயிகளுக்கு பெருத்த நட்டம் ஏற்பட்டது என்ற கூற்று ஆதாரமற்றது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தக்காளி விதை முளைக்காததால் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தும்கூட 'முளைக்காததற்கு ஆதாரமில்லை' என்று அறிக்கையில் சொல்லியிருப்பது வெந்தப் புண்ணில் வேலை பாய்ச்சுவது போல் இருக்கிறது. 25 ஏக்கரில் பயிரிட விலை உயர்ந்த தக்காளி வீரிய ஒட்டு விதைகள் கொடுத்தார்கள். இருந்தும் ஒரு ஏக்கரில் கூட சரியாக தக்காளி முளைக்க வில்லை. பாதிக்கப்பட்ட விவசாயிகளில் நானும் ஒருவன் என்ப தால் என்னுடைய சொந்த அனுபவத்தில் இதைச் சொல்கிறேன். தவறு நடந்திருக்கிறது என்பதை அதிகாரிகள் வந்து பார்வையிட்டு ஒத்துக்கொண்டார்கள். ஆனால் இங்கே அறிக்கையில் பாதிப்பு ஒன்றுமில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படித் தவறான தகவல் தந்த அதிகாரிகள்மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது? இது குறித்து விசாரணை நடத்தினால் நானே நடந்ததைச் சொல்ல தயாராக இருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இப்படித் தவறான தகவலை அதிகாரிகள் தந்தால் அது எப்படி சரியாகும்? விவசாயிகளுக்கு நஷ்டம் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன் என்ற முறையில் தவறான தகவல் தந்த அதிகாரி கள்மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாதிப்பு இல்லையென்று சொல்ல வில்லை. பாதிப்பு கொஞ்சம் இருக்கிறது என்றுதான் அறிக்கையில் இருக்கிறது. அவ்வளவு பெரிய பாதிப்பு இல்லையென்றுதான்



1987 ஏப்ரல் 7] [திரு. ப. உ. சண்முகம்]

அதிகாரிகள் குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். எந்த அரசாக இருந்தாலும் அதிகாரிகள் கொடுப்பதை வைத்துத்தான் இங்கே தகவல்களைக் கொடுக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது உண்மையாக இருக்குமேயானால், அதுபற்றி அவர் எழுதி கொடுத்தால், அரசு பரிசீலிக்கும்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே துறைச் செயலாளரிலிருந்து கீழ் மட்ட அதிகாரி வரை எல்லோருக்கும் இதுபற்றிச் சொல்லியும் பதில் ஒன்றும் இல்லையென்றதால்தான் நான் இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தேன். ஒரு ஏக்கருக்கு 9,500 ரூபாய் கொடுத்து விலைக்கு வாங்கிப் பயிரிட்டார்கள். 25 பெர்சன்ட் விலை என்றும் 75 பெர்சன்ட் மானியம் என்றும் சொல்லிக் கொடுத்தார்கள். அப்படியும் ஒரு தக்காளிகூட சரியாக வரவில்லை. ஆனால் அங்கே விதை வாங்கி கத்தரிக்காய் பயிரிட்டதில் விளைந்தது என்பதில் மாற்று கருத்துக்கு இடமில்லை. அதுமட்டுமல்ல, தக்காளி முளைத்ததில் கூட நோய் இருந்ததால் பிடுங்கி விடுங்கள் என்று அதிகாரிகள் சொன்னார்கள். இன்றைக்கு 10 லட்சம் ரூபாய்க்கு மேல் விவசாயிகளுக்கு இதனால் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் 25 ஏக்கரில் இதனைப் பயிரிட்டோம். ஆனால் அறிக்கையில் அதிகாரிகள் நஷ்டம் ஏற்பட்டதற்கு ஆதாரம் இல்லையென்று சொல்லியிருப்பதால் இது குறித்து விசாரணை நடத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொல்லியதை எடுத்துக்கொண்டு துறை இதுபற்றிப் பரிசீலிக்கும்.

### (இ) கும்பகோணம் அருகிலுள்ள திருப்புவனம் தொழிற்பேட்டையிலிருந்து வெளியேறும் புகையால் பாதிப்பு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர்கள் மு. இராசாங்கம் மற்றும் கி. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

*திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கும்பகோணம் அருகில் திருப்புவனத்தில் உள்ள அரசு தொழிற்பேட்டையிலிருந்து வெளிவரும் துர்நாற்றமுடைய விஷக்காற்றினாலும் தொழிற்பேட்டையில் அடிக்கடி ஏற்படுகிற தீ விபத்தினாலும் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

## அறிக்கை.

கும்பகோணம் அருகே திருபுவனத்தில் கும்பகோணம்-மயிலாடுதுறை சாலையில் சிட்கோ தொழிற்பேட்டை அமைந்துள்ளது. அங்கு சுமார் 15 சிறு தொழிற்சாலைகள் உள்ளன. இவைகளில் 10 தொழிற்சாலைகள் அலுமினிய தகட்டிலிருந்து அலுமினியப் பாத்திரங்களை உற்பத்தி செய்கின்றன. இத்தொழிற்சாலைகளிலிருந்து வாயுக் கழிவுகள் வெளிவருவதில்லை. மீதி உள்ளவைகளில் 1 தரணி இண்டஸ்ட்ரீஸ் மற்றும் 2. ஏ.வி.ஈ. இண்டஸ்ட்ரீஸ் என்ற இரண்டு கட்டுமானத் தொழிற்சாலைகள் கடந்த மூன்று வருடங்களாக இயங்கவில்லை. அலுமினியப் பாத்திரங்களை உற்பத்தி செய்யும் திருவாளர்கள் சிராஜ் மெட்டாலிக் ரோலிங் மில்ஸ் என்ற நிறுவனமும் இயங்குவது இல்லை. தற்போது 1. எல்.ஜி.எஸ். இண்டஸ்ட்ரீஸ் மற்றும் 2. பாண்ட் கெமிக்கல்ஸ் கார்ப்பரேஷன் என்ற இரண்டு தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. எல்.ஜி.எஸ். இண்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனம் திருச்சியிலுள்ள பெல் நிறுவனம். இத்தொழிற்சாலையிலிருந்து வாயுக் கழிவுகள் எதுவும் இல்லை.

2. திருவாளர்கள் பாண்ட் கெமிக்கல்ஸ் கார்ப்பரேஷன் என்ற நிறுவனம் மாதமொன்றுக்கு 25 மெட்ரிக் டன் பிரிக்ஷன் டஸ்ட் Friction dust உற்பத்தி செய்கிறது. முந்திரி எண்ணெய், கந்தக அமிலம், ஹெக்ஸாமைன் மற்றும் பாரா பார்மல்டிஹைட் ஆகியவைகள் மூலப்பொருட்களாகும். முந்திரி எண்ணெய் மற்றும் கந்தக அமிலம் திறந்த டிரம்களில் காய்ச்சப்படுகின்றன. லீகோ எரிபொருளாகப் பயன்படுகிறது. இக்கலவை பின்னர் குளிர வைக்கப்படுகிறது. இக்கலவை பிறகு ஹெக்ஸாமைன் மற்றும் பாரா பார்மல்டிஹைட் சேர்க்கப்பட்டு மீண்டும் காய்ச்சப்படுகிறது. இக்கலவை மீண்டும் குளிர வைக்கப்பட்டு, தூளாக்கப்பட்டு பொட்டலங்களாக்கப்படுகின்றன. இத்தொழிற்சாலை தொழிற்சாலை கழிவு நீர் (Trade effluent) எதனையும் வெளியேற்றுவதில்லை. இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு சுமார் 400 லிட்டர் வடிகால் கழிவு நீரை வெளியேற்றுகிறது. இக் கழிவு நீர் சிட்கோ வடிகால் கழிவுநீர் அமைப்பில் வெளியேற்றப்படுகிறது. இத்தொழிற்சாலை 25 மீட்டர் உயர்முள்ள புகைப் போக்கியினை அமைத்துள்ளது.

3. இத்தொழிற்சாலைக்கு அருகே 70 வீடுகளைக் கொண்டுள்ள கன்னித்தோப்பு என்ற கிராமம் உள்ளது. சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு தீ விபத்து ஏற்பட்டதென்றும், அது பொதுமக்கள் மற்றும் தீயணைப்பு படையினரால் அணைக்கப்பட்டதென்றும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

4. 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழும் 1981-ம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய ஒப்புதலை இந்நிறுவனம் பெறவேண்டும்.

5. இந்நிறுவனம் கழிவுநீரை வெளியேற்ற 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26 ஆம் பிரிவின் படி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதல் பெற வேண்டி விண்ணப்பித்தது. இந்நிறுவனத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு 6—1—1988 வரை புதுப்பிக்கப்பட்டுள்ளது. காற்று மாசு தடுப்புப் பகுதியில் இயங்குவதற்கு இந்நிறுவனம் 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் விண்ணப்பித்தது. 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 21 ஆம் பிரிவின்

கீழ் காற்று மாசுத் தடுப்புப் பகுதியில் இயங்குவதற்கு இந்நிறுவனத்திற்கு 28—10—1986 வரைக்குமான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்புதல் புதுப்பிக்கப்பட வேண்டும். காற்று மாசு வெளியேற அமைப்புகளை அமைக்க வேண்டும் என்றும் புகைப் போக்கியின் உயர்த்தை 30 மீட்டருக்கு உயர்த்த வேண்டும் எனவும் இந்நிறுவனம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

7. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிலைமையை கண்காணித்து வருகிறது.

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாரா இரண்டிலே குறிக்கப்பட்டுள்ளது, திருவாளர்கள் பாண்ட் கெமிக்கல்ஸ் கார்ப்பரேஷன் என்ற நிறுவனம் மாதமொன்று 25 மெட்ரிக் டன் பிரிக்ஷன் டஸ்ட் உற்பத்தி செய்கிறது; முந்திரி எண்ணெய், கந்தக அமிலம், ஹெக்ஸாமைன் மற்றும் பாரா பார்மல்டிஹைட் ஆகியவைகள் மூலப் பொருட்களாகும்; முந்திரி எண்ணெய் மற்றும் கந்தக அமிலம் திறந்த டிரம்களில் காய்ச்சப்படுகின்றன; லீகோ எரிபொருளாகப் பயன்படுகிறது என்று இதிலேயிருந்தே வெளிப்படையாகத் தெரிகிறது. அதிலே அதிக அளவிற்கு வரும் கந்தக அமிலம் கலந்த புகையினால் மூச்சுத் திணறல் போன்ற வியாதிகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு. இது இந்த ஸ்டேட்மெண்டிலேயே ஒத்துக் கொள்ளப்படுகிறது. ஆனால் 25 மீட்டர் உயரமுள்ள புகைபோக்கி இருப்பதாக சமாதானம் கூறப்பட்டுள்ளது. ஆனால் உண்மையிலேயே அங்கே புகைபோக்கி கிடையாது. அதை 30 மீட்டருக்கு உயர்த்த வேண்டும் எனவும் இந்நிறுவனம் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அதுவும் நடத்தப் பெறவில்லை. அங்கே அடிக்கடி தீ விபத்து ஏற்படுகின்ற அபாயமும் உண்டு. அதேபோல் அந்தப் புகையினால் ஏற்படக்கூடிய கடுமையான விளைவுகளையும் மக்கள் அனுபவிக்கிறார்கள். ஆகவே, அமைச்சரவர்கள் தனிக் கவனம் எடுத்து அந்தப் பகுதியிலே மக்களுக்கு நிம்மதி ஏற்பட நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 7]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, திறந்த வெளியில் என்பது அல்ல, திறநத டிரம்களில் காய்ச்சப்படுகின்றன என்றுதான் இருக்கிறது. புகை போக்கி இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், புகை போக்கி இல்லை என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்தை ஏற்று மீண்டும் அறிக்கை வாங்கி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதேபோன்று பாரா 5-லே 28—10—1986 வரைக்கும்தான் 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் அனுமதி அளித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த 6 மாத காலமாக அந்த நிறுவனம் அனுமதி இல்லாமல் இருக்கிறதா? அப்படியிருந்தால் அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இப்படி நிறுவனங்களை அலட்சியமாக நடத்தி அங்கே மக்களுக்குத் தொல்லை கொடுக்கிறார்களே, இதைப்பற்றிக் கடுமையான நடவடிக்கை எடுக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, அவர்களுக்கு 28—10—1986 உடன் கொடுக்கப்பட்ட ஒப்புதல் முடிந்திருக்கிறது. மேலும் புதுப்பிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார்களா என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் அதைப்பற்றிக் கூற முடியும்.

### (ஈ) கன்னியாகுமரி மாவட்டத்தில் யானைக்கால் நோய் பரவுதல்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டத்தில் வெகு விரைவாக பரவிவரும் யானைக்கால் நோயைத் தடுத்து நிறுத்தவும், நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைத்துள்ள மருத்துவ உதவி போதிய அளவு இல்லாமை பற்றியும் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

**அறிக்கை.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் யானைக்கால் நோய் பரவுவதைத் தடுப்பதற்காக, நாகர்கோயிலில் 23 பணியாளர்கள் கொண்ட ஒரு யானைக்கால் நோய்த் தடுப்புப் பிரிவும், மற்றும் பத்மநாபபுரம், குளச்சல், குழித்துறை ஆகிய மூன்று இடங்களில் ஒவ்வொரு இடத்திலும் 3 பணியாளர்களைக் கொண்ட யானைக்கால் நோய் இரவு இரத்த சேகரிப்புப் பரிசோதனை மற்றும் சிகிச்சை நிலையங்கள் 26—4—1985 முதல் செயல்பட்டு வருகின்றன. இம் மாவட்டத்தில் தேசிய யானைக்கால் நோய்த் தடுப்புப் பிரிவின்கீழ் இரவு இரத்தத் திவலைகள் ஆய்வுகள் செய்யப்பட்டு நுண்ணிய யானைக்கால் நோய்க் கிருமிகள் கண்டவர்களைக் கண்டறிந்து "டி.இ.சி." மாத்திரைகள் விநியோகிக்கப்பட்டு நோயாளிகளுக்குத் தகுந்த முறையில் சிகிச்சை அளித்து வருகின்றனர். நாகர்கோயிலிலுள்ள யானைக்கால் நோய்த் தடுப்பு பிரிவினரால் கொசுப்புழு உற்பத்தியின் அடர்த்தியும் தடுக்கப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பத்மநாபபுரம், மற்றும் குழித்துறை நகராட்சிகளில் உள்ள இரவு சிகிச்சைப் பிரிவுகள் இயங்கும் இடங்களிலிருந்து 3 முதல் 5 கி.மீ. சுற்றியுள்ள இடங்களில் வசிக்கும் மக்களுக்கும் பரிசோதனை செய்யப்பட்டு நோய் உற்றவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

நாகர்கோயில், தக்கலை ஆகிய நகராட்சிகளிலும், புதுக்கடை, விளவங்கோடு, கரிங்கல், குறுத்தங்கோடு ஆகிய பேரூராட்சிகளிலும் யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டு செலவின் மூன்றில் ஒரு பகுதியினை மேற்கண்ட நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு அரசின் மானியமாக வழங்கப்படுகிறது. இதைத் தவிர, இம் மாவட்டத்தில் உள்ள 11 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மற்ற அரசு மருந்தகங்களிலும் யானைக்கால் நோயைக் கண்டுபிடித்து தகுந்த முறையில்



சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்நோயினைக் குணப்படுத்தக்கூடிய டி.இ.சி. (D.E.C.) மாத்திரைகளும் மற்றும் பாரசிட்டமால் (PARACETAMOL) மாத்திரைகளும், பேடக்ஸ் (Baytex) என்னும் கொசுப்புழு நாசினி மருந்துகளும், யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ் இம் மாவட்டத்தில் இயங்கும் யானைக் கால் நோய்த் தடுப்புப் பிரிவு சிகிச்சை நிலையங்களுக்கு போதிய அளவு வழங்கப்பட்டு வருகின்றன. 1985 ஆம் ஆண்டில் 6,660 நபர்களின் இரத்தத் திவலைகளைப் பரிசோதித்ததில், 155 நபர்களுக்கு இந்நோய் பரவியிருப்பதாகக் கண்டறிந்து தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறே, 1986 ஆம் ஆண்டில், 57,975 நபர்களின் இரத்தத் திவலைகளைப் பரிசோதித்ததில் 1,164 நபர்களுக்கு இந்நோய் பரவியிருப்பதாகக் கண்டறிந்து தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கின்றது.

இம் மாவட்டத்தில் இத் திட்டம் செயல்படுவதற்கு முன் அதாவது 1985 ஆம் ஆண்டிற்கு முன் இந்நோயின் விழுக்காடு 6 ஆக இருந்தது. இந்நோய்த் தடுப்புப் பணியில் ஈடுபட்டதினால், 1985 ஆம் ஆண்டில் இந்நோயின் விழுக்காடு 2.3 ஆகவும், 1986 ஆம் ஆண்டில் இந்நோயின் விழுக்காடு 2 ஆகவும் குறைந்திருக்கிறது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் தரப்பட்டிருக்கின்ற புள்ளி விவரங்களை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். 1985 ஆம் ஆண்டிற்கு முன் இந் நோயின் விழுக்காடு 6 ஆக இருந்ததாக இவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த அதிகாரிகள் பதவியேற்ற ஒரு ஆண்டிற்குள்ளாகவே அது 2 விழுக்காடாக மாறியிருக்கிறது என்று சொன்னால் அதை எப்படி நம்ப முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. மட்டுமல்லாமல், 1985-ல் 6,660 நபர்களின் இரத்தத் திவலைகளைப் பரிசோதித்ததில், 155 பேர்களுக்கும், 1986 ஆம் ஆண்டில் 57,975 நபர்களின் இரத்தத்திவலைகளைப் பரிசோதித்ததில் 1,164 பேர்களுக்கும் நோய் இருந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தப் புள்ளிவிவரமானது நூற்றுக்கு நூறு தவறானவை என்று குற்றச் சாட்டாகக் கூறக் கடமைப்பட்டிருக்

கிறேன். காரணம் என்னவென்று சொன்னால் அந்த மாவட்டத்திலேயே நேரடியாக இருந்து பார்க்கின்றவன் நான். அந்தப் பகுதியில் நோய் பரவியிருக்கிறது என்று நான் சொன்னால் இங்கே குறிப்பிட்டிருப்பதைப்போல அல்ல. 30 விழுக்காட்டிற்கு அருகாமையில் பாதிக்கப்பட்டிருக்கக்கூடும். காரணம் என்னவென்று சொன்னால், எந்த எந்தப் பகுதிகளில் பரிசோதனை செய்தார்கள் என்ற விவரம் சரியாக இங்கே குறிப்பிடப்படவில்லை. இங்கே குறிப்பிட்டிருப்பதைப்போல ஒரு சில பகுதிகளை மாத்திரம்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதைவிட புதுக்கடை, இரணியல், கொட்டாரம், களியல், களியக்காவிளை, புட்டம், பரந்தாலங்கோடு, குலசேகரப் போன்ற பகுதிகளில் எல்லாம் பரவலாகப் பரவி வருகிறது. ஆகவே, அங்கே தடுப்பதற்கு என் முற்படவில்லை, ஏன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை? 11 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 11 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவத்திற்காக வருகின்றபொழுது அது யானைக்கால் நோய்தான் என்று கன்ஃபர்ம் ஆனதற்குப் பிறகுதான் அவர்களுக்கு மருத்துவம் செய்யப்படுகிறதே அல்லாமல், அவைகளைத் தடுப்பதற்கு ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடவடிக்கை எடுப்பதாகக் கொள்ள முடியாது. ஆகவே, அதைக் கவனத்திற்கொண்டு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமாத்திரமல்லாமல், கன்னியாகுமரி மாவட்டத்தில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியாகக் கேளுங்கள். ஒரு கேள்விக்கே இவ்வளவு நேரம் கொடுத்துக் கொண்டிருந்தால் என்ன செய்ய முடியும்? இரண்டு கேள்விகள் அனுமதிக்க வேண்டும். சுருக்கமாகக் கேளுங்கள்.

(முற்பகல் 11-30)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** துணைத் தலைவரவர்களே, இது மிக மிக முக்கியமான விஷயம். எது எதற்கோ மணிக்கணக்கில் நேரம் போகிறது. இந்த முக்கியமான விஷயத்திற்காக 5 நிமிட நேரம் கூடுதல் ஆனாலும் பரவாயில்லை. இங்கே தரப்பட்டிருக்கிற நோய் பற்றிய விழுக்காடு 6 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் அதிகாரிகள்





அங்கே பணியாற்ற முடியாமல் போய்விடுமோ என்ற அச்சத்தின் காரணமாக, மாண்புமிகு அமைச்சர் பெருமானின் நல்ல எண்ணத்தைப் பெற வேண்டும் என்ற அடிப்படையில் இந்த விகிதாச்சாரத்தைக் குறைத்துக் கொடுத்திருக்கிறார்களே தவிர உண்மையில் விகிதாச்சாரம் குறையவில்லை.

அது மட்டுமல்ல. அங்கே இருக்கிற பணியாளர்களின் எண்ணிக்கை 37 தான். கிட்டத்தட்ட கன்னியாகுமரி மாவட்டத்தில் 20 இலட்சம் மக்கள் இருக்கிறார்கள். 20 இலட்சம் மக்களுக்கு இந்த யானைக்கால் நோய் இருக்கிறதா என்று கண்டறிந்து சிகிச்சை செய்ய நியமிக்கப்பட்டிருக்கிற பணியாளர்கள், ஸ்வீப்பர், வாச்மென் எல்லோரையும் சேர்த்து, வெறும் 37 பேர்கள்தான். அவர்களால் அத்தனை பேர்களையும் பரிசோதித்து நோயைத் தடுத்து நிறுத்த முடியாது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, இந்த நோயிலிருந்து அந்த மக்களைக் காப்பாற்றத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** துணைத் தலைவரவர்களே, அங்கே 20 இலட்சம் மக்கள் இருக்கிறார்கள் என்றால் அந்த 20 இலட்சம் மக்களுக்கும் யானைக்கால் நோய் வந்துவிட்டது என்று பொருள் அல்ல. சுகாதாரத் துறையில் யானைக்கால் நோயைத் தடுப்பதற்கு என்று மட்டும் நியமிக்கப்பட்டிருக்கிற பணியாளர்களின் எண்ணிக்கைதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. 20 இலட்சம் மக்களுக்காக 20 இலட்சம் பணியாளர்களை நியமிக்க முடியாது. யானைக்கால் நோய் பரவாமல் தடுப்பதற்காக இவ்வளவு பணியாளர்களை நியமித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒட்டுமொத்தமாகப் பல கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். தனித் தனியாகக் கேட்டிருந்தால் தனித் தனியாகப் பதில் சொல்லியிருக்கலாம். இப்போது ஒரே ஒரு பதிலைத்தான் சொல்ல முடிகிறது. எல்லாவற்றையும் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** துணைத் தலைவரவர்களே, நியமிக்கப்பட்டிருக்கிற அதிகாரிகள் யானைக்கால் நோய்த் தடுப்பு பணிக்கு மட்டும் என்பது தெரிந்ததுதான். ஆனால் 20 இலட்சம் மக்களுக்கும் யானைக்கால் நோய் வந்துவிட்டது என்று நான்

சொல்ல வரவில்லை. எந்த எந்தப் பகுதியில் ஆய்வு நடத்தினார்கள்? எந்த எந்தப் பகுதியில் ஆய்வு நடத்துகிறார்கள்? அதிகாரிகள் போகாத ஊர்கள் பல இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இந்த நோய் பாதிக்கப்பட்ட பகுதி முழுவதற்கும் மருத்துவ உதவி வேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம். அது அல்லாமல் எல்லோருக்கும் மருத்துவ உதவி செய்ய வேண்டுமென்று நான் கேட்கமாட்டேன். ஆகவே, அதிகாரிகள் போகாத இடங்களுக்கும் போய் தடுப்புப் பணிகளை மேற்கொள்ள தேவையான செண்டர்களை, நிறைய செண்டர்களைத், திறந்து, யானைக்கால் நோயைத் தடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** துணைத் தலைவரவர்களே, தேவைப்பட்டால் மேற்கொண்டு அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கலாம்.

(உ) முதுமலை சரணாலயம் மூடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உச்சி அவர்களுக்குப் பதிலாக திரு. கே. கல்லன் அவர்கள் மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

**திரு. கே. கல்லன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "முதுமலை வனவிலங்கு சரணாலயம் 45 நாட்கள் வரை மூடப்பட்டுள்ளதால், பார்வையாளர்கள் அனுமதிக்கப் படாமை குறித்தும், கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டால் வன விலங்குகள் குடிநீர் தேடி அலையும் பரிதாப நிலைமை குறித்தும்" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:





அறிக்கை.

1986 ஆம் ஆண்டில் இரு பருவ மழைகளும் பொய்த்துவிட்டதால், முதுமலை வனவிலங்குச் சரணாலயத்தில் போதிய மழையில்லாமல் போய்விட்டது. இதனால், முதுமலை கிழக்குப் பகுதிகளிலும், சீகூர் வனச் சரகம் முழுவதிலும், வறட்சியான நிலைமை ஏற்பட்டதினாலும், மோயாறு ஆற்றில் நீர் வற்றிக்கொண்டு வந்ததாலும் வறட்சியின் காரணமாக, புல் தரைகள் காய்ந்து காட்டுத் தீ பரவும் அபாயம் ஏற்பட்டதாலும், சரணாலயத்தை 1—3—1987 முதல் 14—4—1987 வரை 45 நாட்களுக்குப் பொதுமக்களுக்கு மூடிவிடும்படி 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம் பிரிவு 33-ன்கீழ் தலைமை வனவிலங்குக் காப்பாளர் அறிவித்துள்ளார். இவ்வாறு சரணாலயம் கோடை மாதங்களில் மூடப்படுவது வழக்கத்தில் உள்ளது. கடந்த ஆண்டும் இவ்வாறு மூடப்பட்டிருந்தது.

2. வறட்சிக் காலங்களில் சரணாலயத்திலுள்ள புற்பூண்டுகள் காய்ந்து போய்விடும். இதனால் தானாகவே தீ விபத்து ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. தவிர, பார்வையாளர்கள், புகை பிடிப்பதனாலும் தீ விபத்து ஏற்படக்கூடுமாதலால் சரணாலயம் மூடப்பட்டுள்ளது. 14—4—1987-க்குப் பின் அப்போதுள்ள நிலைமையை ஆராய்ந்து சரணாலயத்தை மீண்டும் பார்வையாளர்களுக்குத் திறந்துவிடுவது குறித்து தலைமை வனவிலங்குக் காப்பாளர் முடிவு எடுப்பார்.

3. முதுமலை வனவிலங்குச் சரணாலயத்தில் தற்போது ஏற்பட்டுள்ள தண்ணீர் பற்றாக்குறையினைப் போக்குவதற்காக போர்க்கால அடிப்படையில் [illegible] மேற்கொள்ளப்பட்டுள்ளன. மலைப்பகுதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் (Hill area Development Programme.) ரூ. 7.5 இலட்சம் செலவில், 4 தண்ணீர் குட்டைகள் மற்றும் 6 ஆழ்துளைக் கிணறுகள் தோண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவற்றில் 4 தண்ணீர் குட்டைகளும், 3 ஆழ்துளைக் கிணறுகளும் தோண்டப்பட்டுள்ளன. ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து மணிக்கு சுமார் 10,000 லிட்டர் தண்ணீர் வீதம் எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்-

டத்தின்கீழ், மேலும் 4 டாங்கர்கள் மூலம் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு, தேவையான இடங்களில் வனவிலங்குகளின் வசதிக்காக ஊற்றி வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தற்போது, வனவிலங்குகளுக்குத் தேவையான அளவு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

### 4. அறிக்கைகள் அளித்தல்.

### பொதுக் கணக்குக் குழு.

THIRU T. VENKATA REDDI: Mr. Deputy Speaker, Sir, On behalf of the Chairman of the Public Accounts Committee. I present the following Reports of the Committee:

"Fifty eighth report of the Committee on Public Accounts on certain paragraphs in the Accounts of the Government in Tamil Nadu and the Report (Civil) of the Comptroller and Auditor-General of India for the year 1981-82 pertaining to Social Welfare Department:

Fifty ninth Report of the Committee on Public Accounts of action taken by the Government on the recommendations contained in the Six Report (Seventh Assembly) of the Committee on Public Accounts (1980-81) on the paragraph pertaining to certain Departments on the Accounts of the Government of Tamil Nadu for the years 1974-75 and 1975-76 and the Reports of the Comptroller and Auditor General of India (Civil) for the years 1974-75 and 1975-76.

Sixtieth Report on the action taken by the Government on the recommendations contained in the Twenty second Report of the Committee on Public Accounts (1982-83) on the Reports of the Comptroller and Auditor General of India for the years 1977-78 and 1978-79 (Revenue Receipts).



### 5. அறிவிப்பு.

### கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்.

### 6. அரசினர் சட்ட முன்வடிவு.

### கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### 7. வரவு-செலவுத் திட்டம், 1987—88, வாக்கடுப்பு—தொடர்ச்சி. கோரிக்கை எண் 31 பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 51,10,98,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 51,10,98,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கு இடுகாடுகளுக்குச் செல்வதற்கான பாதை வசதிகள் ஏற்படுத்தித் தரவேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 51,10,98,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. ஆ. சந்திரசேகரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், கச்சைகட்டி கிராமத்தில் தாட்கோ மூலம் வீடுகள் கட்டுதல் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 51,10,98,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**திரு. எஸ். என். இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் தொகுதி செய்துங்க நல்லூர் ஊராட்சிப் பகுதியில் வசிக்கும் ஏழை ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :





"மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 51,10,98,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பு@ அவைமுன் அச்சடிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறது. அதை நான் படித்ததாகக் கருதி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களை எடுத்துச் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன். இறுதியிலே என்னுடைய பதிலை அதற்கு விளக்கமாக நான் அளிக்கிறேன்.

* **திரு. சா. ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டுக்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் கொண்டுவரப்பட்டுள்ள மானியக் கோரிக்கையில் ஆதிதிராவிடர் நலத்துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 51,10,98,000 ரூபாய் ஆகும். ஆனால் தமிழகத்தில் வாழ்கின்ற ஆதிதிராவிட மக்கள் 18½ சதவீதம் பேர். அந்த அளவுக்கு ஆதிதிராவிட மற்றும் பழங்குடி சமுதாயத்தினர் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிகவும் குறைவு என்பதை இங்கே நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதிதிராவிட சமுதாய மக்கள் மற்ற சமுதாயத்தினரோடு பல வகைகளிலும் நெருக்கமாகவும், சமமாகவும் வாழ வேண்டுமென்றால் கல்வி ஒன்றுதான் முக்கியம். அதற்கான வழிவகையை அவர்களுக்குச் செய்ய வேண்டுமென்று இதற்கு முன்னதாக அண்ணல் காந்தியடிகளும் அன்னை இந்திரகாந்தியும் மற்ற, மற்ற தலைவர்களும் கூறியிருக்கிறார்கள். இந்தியா முழுவதிலும்

@ 697—740 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

[திரு. சா. ஜெயச்சந்திரன்] [1987 ஏப்ரல் 7

ஆதிதிராவிட மக்களின் கல்விக்கென்று தனியாக பள்ளிகளை அமைக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தமிழகத்தில் சுமார் 961 பள்ளிகள் ஆதிதிராவிட மக்களுக்காகவும், 183 பள்ளிகள் பழங்குடி மக்களுக்காகவும் துவக்கப்பட்டு நடைபெற்று வருவதாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள் அமைச்சர் அவர்கள். ஆனால் இந்த 961 பள்ளிகளில் எந்த இடத்தில் சென்று பார்த்தாலும் பெஞ்சு இல்லை; நாற்காலி இல்லை; ஒவ்வொரு நடுநிலைப்பள்ளியிலும் இரண்டே இரண்டு ஆசிரியர்களை மட்டும் வைத்துக்கொண்டு நடத்துகிறார்கள்.

(முற்பகல் 11-40)

உயர்நிலைப் பள்ளிகளை எடுத்துக் கொண்டால், மொத்த மாணவர்கள்—ஆசிரியர்கள் விகிதாசாரங்களை எடுத்துக்கொண்டால், மாணவர்கள் 800 பேர்கள் இருந்தாலும் கூட, 100 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற வீதத்தில் கூட இல்லை. ஓர் ஆசிரியர் பள்ளி என்று வைத்திருக்கிறார்கள். அங்கே 50-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிலுகிறார்கள். ஒரே ஒரு ஆசிரியர் எப்படி பாடம் சொல்லிக் கொடுக்க முடியும் என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிதிராவிட மக்களுக்காக பல பகுதிகளிலே பல வகைகளிலே சிறப்புத் திட்டங்கள் தீட்டப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். பக்கம் 9 இல், பாரா 22 இல் ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த விவசாயிகளுக்கு 6 ஆயிரம் ரூபாய் பாசனக் கிணறுகள் வெட்டுவதற்காக வழங்கப்படுவதாகச் சொல்லுகிறார்கள். கறவை மாடுகள் வாங்க 800 ரூபாய் வழங்கப்படுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் கேள்விப்பட்ட வரையில் 10 ஏக்கர் புஞ்சை நிலம் வைத்திருக்கக்கூடிய விவசாயிக்குத்தான் அந்த 6 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுவதாகத் தெரிகிறது. அதை மாற்றி 2 ஏக்கர் புஞ்சை நிலம் வைத்திருந்தாலும் அவர்களுக்கு இந்த 6 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே சமயத்தில் ஒரு கிணறு வெட்ட 6 ஆயிரம் ரூபாய் போதாது. அதிலேயும் 3 ஆயிரம் ரூபாய்தான் அரசு வழங்குகிறது. மீதி 3 ஆயிரம்



1987 ஏப்ரல் 7] [திரு. சா. ஜெயச்சந்திரன்]

ரூபாயைக் கடனாகத்தான் வழங்குகிறார்கள். ஆகவே, அதை மாற்றி கிணறு வெட்ட 10 ஆயிரம் ரூபாய் என்று வைத்து அதில் நான்கில் மூன்று பாகம், 7,500 ரூபாயைப் பணமாகவும், மானியமாகவும் வழங்க வேண்டும். மீதி 2,500 ரூபாயை வங்கியில் கடனாக வழங்கவும் அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பக்கம் 11-ல் பாரா 25-ல் வீட்டுமனை வழங்குகின்ற வகையில் 4,68,091 மனைகள் 3 சென்ட் வீதம் வழங்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எந்த வருடத்திலிருந்து, எந்த இடத்தில் கொடுக்கப்பட்டது என்ற விவரங்கள் இல்லை.

கடந்த 1974 ஆம் ஆண்டிலிருந்து நஞ்சை நிலங்களை வீட்டுமனைப் பட்டாக்களுக்கு வழங்கக் கூடாது என்று அரசு உத்தரவு இருப்பதாகத் தெரிகிறது. குறிப்பாக காட்டுமன்னார் கோவில், சிதம்பரம் தாலுக்கா போன்றவை 99 சதவிகிதம் நஞ்சை நிலம் கொண்ட தாலுக்காக்கள்தான். தஞ்சை மாவட்டத்திலும் 99 சதவிகிதம் நஞ்சை நிலங்கள்தாம். அப்படியானால் அந்தப் பகுதிகளில் ஆதிதிராவிட மக்களுக்கு மயானச் சாலைகள் அமைக்கவும். வீட்டு மனைகள் கொடுப்பதற்கும் நஞ்சையைத் தவிர வேறு நிலம் கிடையாது. அப்படியானால் அந்த இடங்களில் பட்டா வழங்குவது கூடாதா? ஏன் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது? ஏற்கெனவே, ஒரு குறிந்த காட்டுமன்னார் தாலுக்காவில் 17 கிராமங்களுக்குச் சென்று R.D.O., Harijan Welfare Tahsildar, D.W.O., மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியவர்கள் கொண்ட குழு ஆய்வு செய்து அறிக்கையை அரசுக்குத் தந்திருக்கிறதே, அதில் ஏன் கையொப்பம் இடவில்லை. அப்படியானால் ஆதிதிராவிட மக்களுக்கு நிலமே கொடுக்கக் கூடாது என்று நினைக்கிறதா? அரசுக்கு அதில் விருப்பம் இல்லையா? ஆகவே, தயவுசெய்து நஞ்சை நிலமாக இருந்தாலும் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாவும், மயான சாலை அமைப்பதற்கும் அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சா. ஜெயச்சந்திரன்] [1987 ஏப்ரல் 7

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதேபோல தாட்கோ மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுவதாக பக்கம் 11 பாரா 26 இல் குறிப்பிட்டிருக்கிறார்கள். வீட்டு மனைப் பட்டா வைத்திருப்பவர்களுக்கு 6,000 ரூபாய கொடுக்கிறார்கள். அந்த 6 ஆயிரம் ரூபாயையும், 3 தவணைகளாக வழங்குகிறார்கள். சாதாரணமான ஒரு ஏழை 3 சென்ட் நிலம் வைத்திருப்பவன், முதல் தவணை 2 ஆயிரம் ரூபாயை வாங்கிக் கொண்டு வந்து மண்ணை அள்ளிப் போட்டுவிட்டு செங்கல் வாங்கப் போனால் ஆயிரம் கல் 400 ரூபாயிலிருந்து விற்கின்றது. அந்த 2 ஆயிரம் ரூபாயை வைத்துக் கொண்டு மண்ணை வெட்டிவிட்டு, செங்கல் வாங்கிப் போட்டாலே பணம் தீர்ந்துவிடுகிறது. அவன் திரும்பப் போய் பணம் கேட்டால், (Basement) வரைக்கும் வர வேண்டும், அப்போதுதான் 4 ஆயிரம் ரூபாய், அடுத்த தவணை தர முடியும் என்கிறார்கள். பேஸ்மெண்ட் வரைக்கும் வரவேண்டுமென்றாலே 4 ஆயிரம் ரூபாய் வேண்டும். இந்த நிலையில் பேஸ்மெண்ட் வரைக்கும் கொண்டு வந்து காட்டினால்தான் அடுத்த 4 ஆயிரம் ரூபாயைக் கொடுப்போம் என்று சொல்லுகிறார்கள். அந்த வகையில் அவர்கள் இரண்டாயிரம் ரூபாயை வைத்துக்கொண்டு (Basement) வரையில் எப்படிக் கட்ட முடியும்? இதனைக் கொஞ்சம் சிந்திக்க வேண்டும் இந்த அரசு என்று கேட்டுக் கொள்கிறேன். ஆறாயிரம் ரூபாயிலிருந்து இதனை பத்தாயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று பல கோரிக்கைகளை வைத்திருக்கிறோம். அதனை உயர்த்தாவிட்டாலும் பரவாயில்லை. இதுபோன்று பணம் கொடுத்து வீடு கட்டுகிற நிலையைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாட்கோ நிறுவனத்தில் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கும், பள்ளி விடுதிகளைக் கட்டுவதற்கும் அதிகாரிகள் இருக்கிறார்கள், பொறியாளர்கள் இருக்கிறார்கள், மேற்பார்வைப் பொறியாளர்கள் இருக்கிறார்கள், எக்ஸிகியூட்டிவ் என்ஜினியர்கள் இருக்கிறார்கள், வைர்சியர்கள் இருக்கிறார்கள். இவர்களைக் கொண்டு தாட்கோ வீடுகளை ஏன் கான்ட்ராக்ட் மூலமாக கட்டிக் கொடுக்கக்கூடாது? என்னுடைய காட்டுமன்னார்கோவில் தொகுதியில் கொண்டசமுத்திரம் என்ற கிராமம் இருக்கிறது. அங்கே 100 பேர்களுக்குப் பட்டா வழங்கினோம். அவர்களில் 25 பேர்கள்



1987 ஏப்ரல் 7] [திரு. சா. ஜெயச்சந்திரன்]

சென்று இரண்டாயிரம், இரண்டாயிரம் ரூபாயாக வாங்கிவிட்டார்கள். அப்படி வாங்கியதில் ஐந்து வீடுகளைக்கூட அவர்களால் கட்ட முடியவில்லை. நானே நேரடியாகச் சென்று பார்த்து விசாரித்தேன். அவர்கள் கட்ட முடியாததற்கு என்ன காரணமென்றால் நான் முன்னால் சொன்ன காரணங்கள்தான். எனவே தொகையை அவர்களிடம் கொடுத்து விடுவதால் அவர்களால் வீடு கட்ட முடியவில்லை. அரசு அதிகாரிகளைக் கொண்டு, ஒப்பந்த அடிப்படையில் அந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆதிதிராவிடர்களுக்குப் பள்ளமான பகுதியில் வீட்டு மனைகளைக் கொடுக்கிறார்கள். அவர்கள் வீடு கட்டுவதற்கு கடன் கொடுக்கிறபோது, சமமானப்பகுதிகளில் ஆறாயிரம் ரூபாயும், மலைப்பகுதிகளில் ஒன்பதாயிரம் ரூபாயும் வழங்குகிறோம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். பள்ளமான பகுதிகளில் மனைகள் வழங்கப்படுகிறபோது, அவர்களுக்கு அமைச்சர் அவர்கள் என்ன செய்யவிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். பள்ளத்தைத் தூர்த்து, மேடாக்கிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

என்னுடைய தொகுதியில் 17 கிராமங்களில் வீட்டு மனைகள் பள்ளமான பகுதிகளில் வழங்கப்பட்டிருக்கின்றன. மழை பெய்தால் 2 அடி, 3 அடி தண்ணீர் அதிலே தேங்கி நிற்கும். குடிசைகள் எல்லாம் தண்ணீரில் மிதக்கும். அப்படிப்பட்ட இடங்களில் பள்ளத்தைத் தூர்ப்பதற்கு R.L.E.G.P., N.R.E.P., போன்ற திட்டங்களில் இது போன்று செய்வதற்கு இடமில்லை. எனவே தாட்கோ மூலமாக தனிப்பட்ட முறையில் நிதியொதுக்கீடு செய்தால்தான் இதனைக் கொடுக்க முடியுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அரசு சிறப்பான திட்டங்களைத் தீட்டி பள்ளங்களை மேடாக்கித் தரவேண்டுமென்றும் வீடுகளை ஒப்பந்த அடிப்படையில் கட்டித் தரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அரசுப் பணிகளில் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு 18 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதற்கும், கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும்போது அவர்களுக்கான சதவீதம் பூர்த்தி செய்யப்படுகிறதா என்பதையும்

கண்காணிப்பதற்கு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். இந்தக் குழு எத்தனை முறை கூடியிருக்கிறது? அப்படிக் கூடியதாவது தவறுகளைக் கண்டு பிடித்திருக்கிறதா என்ற விவரங்கள் எதுவும் தெரியவில்லை. இந்த இடங்களைப் பூர்த்தி செய்யாமல் பல துறைகளில் ஏமாற்றுகிறார்கள். 18 சதவீதத்தை வழங்காமல் இருக்கிறார்கள். தனியார் நிறுவனங்களிலும் ஆதிதிராவிட மக்களுக்கு 18 சதவீதம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று இந்த அரசு சுட்டிக்காட்டவில்லை. இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலும் அதுபற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்று வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சர் அவர்களின் தலைமையில் உள்ள இந்தக் குழு ஆறு மாதத்திற்கு ஒருமுறையாவது கூடி இவற்றைக் கண்காணித்தால்தான் ஆதி திராவிட மக்களுக்கான ஒதுக்கீடுகளை அரசு துறைகளும், மற்றவர்களும் பூர்த்தி செய்வார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல ஒவ்வொரு மாவட்ட அளவிலும் ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களை, பல கிராமங்களுக்கு ஒரு ஆதிதிராவிட மக்களின் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில்—கொண்ட ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்று பல தடவை கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1985-ம் ஆண்டிலும் சரி, 1986-ம் ஆண்டிலும் சரி, இந்த இரண்டு வருடங்களாக இந்தக் குழுவை அமைக்கிறேன் என்று சொன்னார்கள். அது அமைக்கப்படவே இல்லை. அதுபற்றி இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலும் சொல்லவில்லை. எனவே தயவுசெய்து மாவட்ட அளவில் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த, ஆதிதிராவிட பழங்குடி வகுப்பைச் சார்ந்த முக்கியஸ்தர்களைக் கொண்ட ஒரு குழுவை அவர்கள் தலைமையிலோ, அல்லது கலெக்டர் அவர்கள் தலைமையிலோ போட வேண்டும். ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் இயங்குவதைப் பற்றியும், ஆதிதிராவிடர் நலத் துறைக்கு வழங்கப்படுகிற நிதி சரியான முறையில் செலவு செய்யப்படுகிறதா என்பதைப் பற்றியும், மாவட்ட அளவில்





கண்காணிப்பதற்கு இந்தக் குழு உதவியாக இருக்கும். ஆகவே இதனை விரைவில அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

பழங்குடியினர் வகுப்பில் கூடை முடையும் குறவர் இனம் ஒன்று இருக்கிறது. அவர்கள் கூடை முடைபவர்கள். இந்த நகர சுத்தித் தொழிலாளர்களிலே அவர்களைச் சேர்த்திருக்கிறார்கள். கூடை முடையும் அந்தக் குறவ இனத்தையும் இதுவரையில் ஆதிதிராவிட இனத்திலே சேர்த்திருக்கிறார்கள். அவர்களை ஆதிதிராவிட இனத்திலே சேர்த்திருப்பதால், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் கிடைக்கவில்லை. அதற்காக அரசாங்கம் 8—3—1983 அன்று ஒரு உத்தரவு போட்டிருக்கிறது. அந்த உத்தரவு எண். ஆர். 54907, என். டி. டபிள்யூ 11821, அந்த உத்தரவு இதுவரையில் அமல்படுத்தப்படவில்லை. அந்தக் கூடை முடையும் குறவர் இனம் இன்னும் ஆதிதிராவிடர் வகுப்பிலேதான் சேர்க்கப்பட்டு இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து, அவர்களைப் பழங்குடி வகுப்பினர் பட்டியலிலே சேர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று கலப்புத் திருமணம் செய்து, அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு எம்.பி.பி.எஸ்., படிப்பதற்கு 12 சீட்டுகளும், சித்த மருத்துவப்படிப்பில் 2 இடங்களும், பார்மசி படிப்புக்கு 1 இடமும் பி.இ., படிப்புக்கு 5 இடங்களும் வழங்கப்படுவதாக, கொள்கைக் குறிப்பின் பக்கம் 14-ல் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதுவரையில் அப்படி எத்தனை பேர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள்? இதுவரையில் ஒருவருக்காவது வழங்கியிருக்கிறார்களா? அதற்கு ஏன் விளக்கம் கொடுக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே தெரிவிக்கப்படுபவைகளை உண்மையாகவே வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை-600 009.
136575

[1987 ஏப்ரல் 7

* திரு. தமிழ்மணி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்த மாமன்றத்திலே ஆதி திராவிடர் பழங்குடியினர் நலன்களுக்காக 1987-88 ஆம் ஆண்டுக்கு தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபாய் 51 கோடியே 11 லட்சம் ஒதுக்கீட்டை வரவேற்று, இந்த மானியக் கோரிக்கைகளின் மேல் பேசுகின்ற வாய்ப்பை நல்கிய தங்களுக்கு நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன்.

வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கின்ற ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் மற்றும் நலிந்தோர் நலன் காத்திட நாள் எல்லாம் உழைத்திடும் நாட்டின் நாயகர், தமிழக முதல்வர், மக்கள் தலைவர் அவர்களை வணங்கி மானியக் கோரிக்கையை வரவேற்றுப் பேசுகின்ற அதே நேரத்தில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறையின் அமைச்சரைப் பாராட்டி ஒருசில கருத்துக் களைக் கூற விழைகிறேன்.

ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்பேன் என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள் அவரின் பெயரால் அமைந்து இருக்கின்ற இந்த அரசு ஆதிதிராவிடர். பழங்குடியினருக்கு ஆற்றி வருகின்ற எண்ணற்ற காரியங்களை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

'இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள'

என்று கூறிய வள்ளுவரின் கூற்றுக்கு ஏற்ப தனது வலிய நிலையை தெரிவித்து உதவி கோருகின்ற நிலையை உணர்ந்து இன்றையதினம் தமிழகத்தினுடைய தலைநாயகராக இருக்கின்ற உயர்ந்த குடியில் பிறந்த எங்கள் இதய தெய்வம் அவர்கள் ஆதி திராவிடர்களுக்கும் பழங்குடியினர்களுக்கும் வேண்டிய அனைத்து உதவிகளையும், சீரிய முறையில் செய்கின்ற பாங்கினைப் பார்க்கின்றபோது. சமுதாய மக்கள் சார்பாக அந்த உன்னதத் தலைவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் ஆதி திராவிட நலத்துறையின் மூலமாக அந்த மக்களுக்கு கல்வி வளர்ச்சி மேம்பாட்டுக்காகவும், பொருளாதார ஏற்றத்திற்காகவும், விவசாய அபிவிருத்திக்காகவும் வீடுதாச்சாரத் திற்காகவும், ஏனைய திட்டங்களுக்காகவும் நிலம் அற்ற ஏழை



1987 ஏப்ரல் 7] [திரு. தமிழ்மணி?

விவசாகளுக்கு நிலம் கொடுக்கின்ற வகையிலும் ஆற்றி வருகின்ற பணிகளை வரவேற்று—பேசுகின்ற அதே நேரத்தில் இன்றையதினம் ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற நிலைமையைப் பார்க்கின்றபோது ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட, பேரூராட்சிகளில் இருக்கின்ற ஏழை, எளிய, நலிந்தவர் களாக இருக்கின்ற அந்த ஆதிதிராவிடர்கள் வாழ்கின்ற பகுதிகள் பேரூராட்சிகளுக்கு உட்பட்ட பகுதிகளாக இருக்கின்ற காரணத் தால் அங்கு வாழ்கின்ற ஆதிதிராவிடர்களுக்கும், பழங்குடியினர் களுக்கும் நன்மை கிடைக்கவில்லை. ஆகவே நமது இதய தெய்வம் இனிய தலைவர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அந்த ஊராட்சிகளில் வாழ்கின்ற ஆதிதிராவிட மக்களுக்கு நன்மை கிடைக்கின்ற வகையில் வருகின்ற ஆண்டுகளில் அந்தப் பகுதிகளுக்கு தாட்கோ மூலமாகவோ அல்லது அரசின் மூல மாகவோ நன்மை கிடைக்கின்ற திட்டத்தைத் தீட்டி நன்மை கிடைக்கின்ற அளவுக்குச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் தெரிவித்தார்கள், ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களின் வளர்ச்சிக்காக 20 வழக்கறிஞர்களைத் தேர்ந் தெடுத்து சிறப்பாக அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து அவர்களை முன்னுக்கு கொண்டு வர மாதம் 500 ரூபாய் அவர்களுக்கு உதவித் தொகையாகவும், பயிற்சியாளர்களுக்கு 5 ஆயிரம் ரூபாயும் கொடுப்பதாகத் தெரிவித்தார்கள். அது நடைமுறைக்கு வந்ததா என்றால் இதுவரையில் வரவில்லை. ஆகவே அருள் கூர்ந்து அதை அமல் செய்யவேண்டும். அதைப்பற்றி மானியத்தில் ஏன் பேசுகிறேன் என்றால் அந்தச் சமுதாய மக்கள் மிகவும் நலிந்த நிலையில் இருப்பதால் இனிய தலைவர் ஆட்சியில் எல்லாம் நடந்துகொண்டு இருக்கிறது என்று எண்ணுவதால் அருள்கூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக இந்தத் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டுவர வேண்டுகிறேன்.

[திரு. தமிழ்மணி] [1987 ஏப்ரல் 7

(நண்பகல் 12-00)

அதுமட்டுமல்ல. இன்றைய தினம் பழங்குடியினர், ஆதி திராவிடர்களுக்கு மட்டுமல்லாது ஏனையவர்களுக்கும் ஒரு கழகம் இருக்கிறது. அதைப்போலவே ஆதிதிராவிடர், பழங்குடியிருக்காக பொருளாதார வளர்ச்சி மேம்பாட்டுக் கழகத்தை அமைத்து, அந்த இரு தரப்பு மக்களுடைய வளர்ச்சிக்காக நல்ல ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்கியும், மேல்நிலைப் பள்ளிகளைக் கல்லூரிகளாக ஆக்கியும், ஏனைய திட்டங்களையெல்லாம் செய்து கொண்டிருக்கிற இந்த அரசைப் பார்த்து வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் கிராமங்களில் இருக்கின்ற ஏழை எளியவர்களுக்கு நிலம் கொடுப்பதற்காக, நில ஆர்ஜிதம் என்ற அளவில், நிலம் கையகப்படுத்தப்பட்டு, ஏழை எளிய ஆதித்திராவிடர் மக்களுக்குக் கொடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் உடனடியாக நடைமுறைக்கு வருமா என்று சொன்னால், அது காலங்கடந்து வருகின்ற நிலையிருக்கிறது. அதை உணர்ந்து அரசு இன்றையதினம் கிராமங்களில் இருக்கின்ற, வாழ்கின்ற ஆதிதிராவிடர்களுக்கு பட்டா கொடுக்கின்ற நேரத்தில், அரசு அதிகாரிகள் அது பெல்ட் ஏரியா, வாய்க்கால் புறம்போக்கு, மேய்க்கால் புறம்போக்கு, குளம் புறம்போக்கு என்று தெரிவித்து பட்டா கொடுக்காது செய்துவிடுகிறார்கள். அதையெல்லாம் போக்கி, எங்கெங்கே குடியிருப்பவர்கள் கேட்டிருக்கிறார்களோ, அங்கேயிருக்கின்ற மக்களுக்கு பட்டா கிடைப்பதற்கு உதவி செய்தால், அது பெரிய வாய்ப்பாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றையதினம் பேசுகின்ற நேரத்தில், 15 விடுதிகளைக் கட்டுவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியான திருப்போரூரில் பாழடைந்த வாடகைக் கட்டிடம் ஒன்றிருக்கிறது. அதைச் சீர்படுத்தி, செப்பனிட்டால் பெரிய காரியமாக இருக்குமென்ற காரணத்தினால், புதிய கட்டிடத்தை அமைத்து, அங்கே மாணவர்கள் பயன் பெறுகின்ற வகையில் மாணவர் விடுதியை அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 7] [திரு. தமிழ்மணி]

ஆறு இடைநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்கிடும் இந்தத் தருணத்தில், என்னுடைய தொகுதியில் இள்ளாம் பாக்கம் என்ற பகுதியிலுள்ள ஆதிதிராவிடர் பள்ளியில் 8 ஆம் வகுப்பு வரை உள்ளது. அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்கித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றையதினம் பல்வேறு திட்டங்களை அரசு வகுத்தாலும், அந்தத் திட்டங்கள் ஏழை எளிய மக்களுக்குச் சென்றடைகிறதா என்று சொன்னால், அது காலதாமதமாகிறது. இன்றையதினம் தமிழகத்தில் வாழ்கின்ற மக்களில் ஐந்தில் ஒரு பாகமாக இருக்கின்ற ஆதி திராவிடர்களுக்கு 18 சதவீதம் கண்டிப்பாகக் கிடைக்கிறதா என்று சொன்னால், இல்லை. ஆதிதிராவிடர்களுக்குக் கிடைக்கவில்லை. காரணம் கேட்டால், உங்கள் வகுப்பை சார்ந்தவர்கள் வரவில்லை. போட்டி போட்டியில்லை என்று சொல்கிறார்கள். எனவே அந்த வாய்ப்பைக் கட்டாயமாக அளித்து 18 சதவீதத்தை உயர்த்த வேண்டும். ஐந்தில் ஒரு பாகமாக இருக்கின்ற அந்த சமுதாய மக்களுக்கு 20 சதவீத விகிதாசாரத்தை அவர்களுக்குக் கொடுத்தாக வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே, புரட்சித் தலைவர் அவர்களை இரு கரம் கூப்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற தடவை இந்தச் சட்டமன்றத்திலே பேசும்போது, சட்டக் கல்லூரிக்கு, மாமேதை அம்பேத்கார் பெயரை வைக்க வேண்டுமென்று கேட்டேன். அதனை இவ்வாண்டும் நினைவுகூர்கின்றேன். மத்தியிலே பாராளுமன்ற வளாகத்திலும், கர்நாடக மாநிலத்தில் சட்டமன்ற வளாகத்திலும் டாக்டர் அம்பேத்கார் சிலையை அமைத்துள்ளது போல் தமிழக முதல்வர் அவர்களும், ஏனைய அமைச்சர்களும் ஒருமித்து அதேபோன்று இன்றைய தினம் சட்டப் பேரவை வளாகத்திலும் டாக்டர் அம்பேத்கார் சிலையை அமைத்துத் தர டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றையதினம் ஏனைய அரசியல் தலைவர்கள், தியாகிகள் அனைவருக்கும் அவர்கள் செய்த நல்ல காரியங்களுக்காக நினைவு நாள், பிறந்த நாள் என்ற வகையில் அவர்களுடைய சிலைக்கு மாலை அணிவிக்க அரசு ஏற்பாடு செய்

[திரு. தமிழ்மணி] [1987 ஏப்ரல் 7

கிறது. அந்த விழாக்களில் மாண்புமிகு முதலவர் அவர்களும், ஏனைய அமைச்சர்களும் கலந்துகொள்ளச் செல்கிறார்கள். அதுபோலவே வரும் 14 ஆம் தேதி டாக்டர் அம்பேத்கார் அவர்களின் பிறந்த நாள் வருகிறது. ஏழை எளிய சமுதாயத்தினரின் தலைவர் என்ற முறையில் அவருடைய சிலைக்கு மாலை அணிவிக்கின்ற முறையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் என்னுடைய தொகுதியிலே பல்வேறு திட்டங்கள் செய்ய வேண்டி இருக்கிறது. பாலங்கள் அமைப்பதிலே தேக்கங்கள் இருக்கின்றன. நாவலூர் பகுதியிலிருந்து முட்டுக்காடுக்குச் செல்லுகின்ற பாதை மிகவும் அத்தியாவசியமான பாதையாக இருக்கிறது. அங்கு 5,000-க்கு மேற்பட்டு 10,000-க்குள்ளாக மக்கள் நடமாடுவதால் மேம்பாலம் வேண்டுமென்று பலமுறை கேட்டுக்கொண்டோம். திட்டத்தில் இருக்கிறது, திட்டத்தில் இருக்கிறது என்று சொல்லுகிறார்களே தவிர நடைமுறைக்கு வரவில்லை. அதனை உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதால், ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு நன்மைகள் கிடைக்காத காரணத்தால் அங்கு வாழ்கின்ற மக்களுக்கு தொழிற்சாலைகள் அமைத்துத் தர வேண்டும். கடலோரம் வாழ்கின்ற மக்களுக்கு, மீன், இறால் போன்றவற்றைப் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்புகின்ற தொழிற்சாலையை அமைத்துத் தர வேண்டுமென்றும் அங்கு உப்பு தயாரிக்கும் தொழிற்சாலையை அமைத்துத்தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். வடநெமிலி, மீனவர் பகுதியாக இருக்கின்ற திருப்போரூர் இடையே ஒரு பெரிய ஆறு இருக்கிறது. அங்கு மக்கள் நடந்து செல்ல முடியாத நிலை இருக்கிறது. தண்ணீரில் தான் நடந்து செல்ல வேண்டும். எனவே, வடநெமிலியிலிருந்து திருப்போரூருக்கு பாலத்தை நடப்பாண்டிலே கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் தென்னாற்காடு, வட ஆற்காடு மாவட்டத்திலேதான் ஆதி திராவிடர்கள் அதிகமாக இருக்கிறார்கள். பல்வேறு மாவட்டங்களுக்கு, பல்வேறு தலைவர்கள் பெயரை வைக்கின்ற தமிழகத்தினுடைய புரட்சித் தலைவரைப் பாராட்டுகின்ற நேரத்தில்



1987 ஏப்ரல் 7] [திரு. தமிழ்மணி]

அவருடைய பெருமிதமான உணர்வுக்கு நாங்கள் செவி சாய்க்கின்ற நேரத்திலே, வட ஆற்காடு மாவட்டத்திற்கு டாக்டர் அம்பேத்கார் அவர்கள் திருப்பெயரை வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், எல்லா தலைவர்களுக்கும் மரியாதை செய்யப்படுகின்றபோது, அந்தத் தலைவருக்கும் மரியாதை கொடுத்தால் 5-லே ஒரு பாகமாக இருக்கின்ற அந்த மக்களுக்கு பெரு மகிழ்ச்சி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றையதினம் பல்வேறு திட்டங்களையெல்லாம் இந்த அரசு செய்துகொண்டிருக்கின்ற நேரத்தில் தாட்கோ மூலமாக வீடுகட்டிக் கொடுக்கின்றபோது அந்தக் குறைந்த அளவு ரூபாய் போதுமா என்று சொன்னால் நிச்சயமாகப் போதாது. ஆகவே கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு செய்கின்ற பல்வேறு நல்ல திட்டங்களை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்தில் தேவையானவற்றை இதயத் தலைவருடைய இந்த இனிய ஆட்சியில்தான் தெரிவிக்க வேண்டியிருக்கிறதே தவிர வேறு எங்கு சென்று எப்போது தெரிவிப்பது? ஆதலால்தான் இதையெல்லாம் சொல்ல வேண்டியிருக்கிறது. இன்றையதினம் ஒரு அவலமான நிலை. ஒரு தாயை இழந்த பெண் திருமணம் செய்துகொண்டால், தமிழக அரசின் சார்பிலே, ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. தாயும், தகப்பனும் இல்லாத பெண்ணுக்கு அந்த உதவி கிடைக்கிறதா என்றால் கிடைக்கவில்லை. தாய் இல்லாவிட்டால் ஆயிரம் ரூபாய், தாயும் தந்தையும் இல்லாவிட்டால் ஒன்றுமில்லை என்ற நிலையை நீக்கி, தாயும் தந்தையும் இல்லாத அந்த அபலைக்கும் ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு மாவட்டங்களிலே வாழ்கின்ற குறவர்கள் இன்றையதினம் ஷெட்யூல் காஸ்ட் பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதிலிருந்து நீக்கி அவர்களை ஷெட்யூல் ட்ரைப்ஸ் என்ற பட்டியலில் சேர்த்து அவர்களுக்கு வேண்டிய வசதி வாய்ப்புகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். எழுதுகின்ற ஆதிதிராவிட நண்பர்கள் பெருவாரியான பேர்கள் தேர்விலே தேர்வு பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்பதை

அரசு சற்று அருள்கூர்ந்து பரிசீலனை செய்து, அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு வெற்றி கிடைப்பதற்கு வேண்டிய அத்தியாவசியமான பயிற்சி உதவிகளைக் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

இன்றையதினம் நாட்டிலே விவசாயப் பகுதிகளாக இருக்கின்ற கிராமப் பகுதிகளுக்குச் சென்றால், கிராமங்களுக்கு சுடுகாடு இல்லை, தண்ணீர் இல்லை என்றெல்லாம் சொல்கிறார்கள். ஊராட்சித் தலைவர்கள் வந்திருக்கிறார்கள். அந்த ஊராட்சித் தலைவர்கள் பெருவாரியான அளவிற்கு மாற்றுச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் அவர்களுக்கு வேண்டிய பகுதிக்கு மட்டும் அந்த அத்தியாவசியமான நன்மைகளைச் செய்து கொள்கிறார்கள். குறிப்பாக ஆதிதிராவிட மக்களுக்கு அந்த நன்மைகள் கிடைக்கவில்லை. ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் செய்யத் தவறிய காரியங்களை எல்லாம் தாட்கோ மூலமாகவோ அல்லது வங்கிகள் மூலமாகவோ அந்த மக்களுக்குச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக ஆதிதிராவிட நலத்துறை சார்பிலே அந்த மக்களுடைய எழுச்சிக்கான, வளர்ச்சிக்கான குழு கடந்த 6, 7 ஆண்டுகளாக அமைக்கப்படாமல் இருக்கிறது.

பல்வேறு குழுக்கள் அமைத்திருக்கின்ற தமிழகத்தினுடைய தானைத் தலைவருடைய அரசிலே இன்றைய தினம் அந்த மக்களுக்காக ஒரு குழு அமைக்கப்படவில்லை என்றால் காரணம் என்ன? அவர்களுக்குப் போதிய அளவுக்கு வாய்ப்புகள் கிடைக்க வேண்டிய நல்ல சந்தர்ப்பங்கள் இருந்தும், கிடைக்காமல் போவதற்கு யார் காரணமாக இருக்கிறார்கள் என்பதைப் புரட்சித் தலைவர் அவர்கள் ஆராய்ந்து அந்தச் சமுதாய மக்களுக்கு நன்மை கிடைக்கின்ற அளவுக்கு அந்தக் கமிட்டியை அமைத்துத் தரவேண்டும். பல்வேறு ஏழை மாணவர்கள் டைப்ரைட்டிங் பயிற்சி பெறுவதற்கும், ஷார்ட்ஹேண்ட் படிப்பதற்கும் வசதிகள் செய்து தருகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் அந்த வசதியை யாரிடமிருந்து எப்படிப் பெறுவது என்ற விளக்கம் சரியாக இல்லாமல் இருப்பதால் அந்த ஏழை ஆதிதிராவிட





மக்களும், பழங்குடி மக்களும் பெற இயலாமல் இருக்கிறார்கள். அதைப் பெறுவதற்கு நல்ல முறையிலே விளம்பரம் தந்து, அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த ஏழை எளிய மாணவர்கள் முன்னேறுவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இந்தச் சந்தர்ப்பத்திலே என் தொகுதியைச் சேர்ந்த திருப்போரூர் ஒன்றியத்திலும், காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்திலும் ஏழை மக்கள் வாழ்கின்ற அந்தப் பகுதிகளிலே தண்ணீர்ப் பிரச்சினை அதிகமாக இருப்பதால் தாட்கோ மூலமாகவோ, குடிநீர் வடிகால் வாரியத் திட்டத்தின் மூலமாகவோ அதிக அளவு தண்ணீர் கிடைக்க வேண்டிய வசதிகளைச் செய்து தரவேண்டும் என்பதோடு, அந்த மக்களுடைய அத்தியாவசியமான லோன் இருக்கிறதே—அதாவது பெரும் விவசாயிகள் பெற்ற கடன் உதவியை நீக்கிய இந்தச் சர்க்கார், விவசாயக் கூலி பெற்ற 900 ரூபாய் கடன் உதவியை ஏன் நீக்கவில்லை. 5 ஆயிரம் ரூபாய் வாங்கியவர்களுக்குத் தள்ளுபடி செய்து இருக்கிறார்கள். ஆனால் 900 ரூபாய் வாங்கியவர்களுக்குத் தள்ளுபடி செய்யவில்லை. ஆகவே அருள்கூர்ந்து கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் கடனாகப் பெற்ற 5 ஆயிரம் ரூபாயைத் தள்ளுபடி செய்த புனிதத் தலைவரின் அரசு 900 ரூபாய் பெற்ற விவசாயிகளுக்கும், அந்த வங்கியினுடைய கடனை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்திற்கு மின்சாரம் பெறுகின்ற நேரத்தில், 5 வருடம், 7 வருடம் ஆகக் கேட்டுக்கொண்டிருந்தாலும், அந்தச் சமுதாய மக்களுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே, அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அவ்விவசாயிகளுக்கு மின்சாரம் கிடைக்க உரிய சலுகை செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே; இன்றைக்கு மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் 51.1 கோடிக்கு மேற்பட்டிருக்கின்ற தொகையைச் செலவு செய்வதற்காக இந்த அவையின் ஒப்புதலுக்காக, தீர்மானமாக முன்மொழிந்து இருக்கிறார்கள்.

நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் முன்மொழிந்த வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து இந்த மானியத்தின் மீது எனது கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

குறிப்பாக, இந்த விவாதத்திலே, இன்றைக்கு இந்த அவையிலே பேசப்படுகின்ற இந்த சமுதாயம் இருக்கிறதே, அந்தச் சமுதாயத்தை எத்தனை ஆண்டுக் காலமாக மற்றவர்கள், இந்தச் சமுதாயத்திற்கு அப்பாற்பட்டவர்கள், அரசியல்வாதிகள் எண்ணி இன்றைக்கு அந்தச் சமுதாயத்தை எந்த அளவுக்கு உயர்த் தூக்கி இருக்கிறார்கள் என்று பார்க்கிறபோது, மெத்த வருத்தப்படக் கூடிய ஒரு சூழ்நிலைதான் இருக்கிறது. குறிப்பாக, இந்தச் சமுதாயம் தன்னை வருத்தி உழைத்து மற்றவர்களை வாழ்விப்பதற்கும், உய்விப்பதற்கும் உழைத்த அந்தச் சமுதாயம் இன்றைக்கு பெருமைப்பட முடியாமல் இழிவு படுத்தப்பட்டு இருக்கிறது. இழிவான செயலைச் செய்தே, மற்றவர்களை பெருமைப்படுத்திய சமுதாயம் இன்றைக்கு யாரும் ஏறிட்டுப் பார்க்காமல் தள்ளப் பட்டு இருக்கிறது. இப்படி என்றால், எதிர்காலத்திலே இந்தச் சமுதாயத்திற்கு வாழ்வு உண்டா, இல்லையா என்ற பிரச்சினையில் இந்தச் சமுதாயம் உழன்று கொண்டிருக்கிற நேரத்தில் அதற்காகத்தான் இன்றைக்கு விவாதிக்க இங்கே கூடி இருக்கிறோம். அப்படிக் கூடி இருக்கும்போது, நான் மெத்த பணிவாகக் கேட்டுக்கொள்வதெல்லாம், தயவுசெய்து என்னை எதிர்க்கட்சிக்காரனாகவோ, அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவனாகவோ தயவுசெய்து கருதி விடாதீர்கள். அந்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் ஒட்டுமொத்தமான வளர்ச்சிக்காகத்தான் இங்கே அத்தனை பேரும் ஒன்றாக நின்று கொண்டிருக்கிறோம், பேசுகிறோம் என்பதைக் கவனத்திலே வைத்து, ஏதாவது பிரச்சினைக்குரியதாக இருந்தால் தயவுசெய்து அதை நீங்கள் சொன்னால், திருத்திக் கொள்வதற்கு ஏதுவாக இருக்கும்.

இன்றைக்கு இந்தச் சமுதாயத்திலே இருக்கின்ற நிலைமையை நாம் எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில், அதற்கு என்ன அந்தஸ்து இருக்கிறது? ஒரு முறை தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச்



சேர்ந்த மரியாதைக்குரிய திரு. மௌரியா அவர்கள் பாராளுமன்றத்திற்கு முன்னாலே நின்று தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் வளர்ச்சி பெறுவதற்கான திட்டங்களை முழக்கிக் கொண்டும், மத்திய அரசாங்கத்தைக் கண்டித்தும் முழங்கிக் கொண்டிருந்த நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பாராளுமன்றத்திலே இருந்து வெளியே வருகிறார். அப்படி வருகின்ற நேரத்தில் திரு. கந்தப்பனும் கூட வருகிறார். அப்போது அண்ணா அவர்கள் மௌரியா என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார், கேள் என்று சொன்னார். திரு. கந்தப்பன் சென்று பார்த்தார். பார்த்து விட்டதற்குப் பின்னாலே வந்து, மௌரியா பேசிக்கொண்டிருக்கிறார், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக முழங்கிக் கொண்டிருக்கிறார் என்று அண்ணா அவர்களிடம் அவர் சொன்னபோது, அண்ணா, நாமும் அங்கே செல்வோம் என்று சொன்னார்.

அப்படிச் சொன்னபோது திரு. கந்தப்பன் அவர்கள் சொன்னார்கள். நம்மை அழைக்கவில்லையே மௌரியா அவர்கள், அங்கே செல்லலாமா என்று கேட்டபோது அழகாக அண்ணா அவர்கள் சொன்னார்கள்: மௌரியா அவர்கள் முழங்கிக் கொண்டிருப்பது தன் சுய நலத்திற்காக இல்லை, தன்னுடைய வளர்ச்சிக்காக அல்ல. ஒட்டுமொத்தமாக இந்தியத் துணைக் கண்டத்திலே உழன்று கொண்டிருக்கிறார்களே, எதிர்காலத்திலே விடி வெள்ளி உண்டா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்களே பூச்சியினும் கேடாக, புழுவினும் கேடாக, நாயினும் கீழாக மதிக்கப்பட்ட ஒரு சமுதாயத்திற்காக திரு. மௌரியா அவர்கள் முழங்கிக் கொண்டு இருக்கிறார்கள். அவர் அழைக்காமல் செல்வதுதான் நாம் அந்தச் சமுதாயத்திற்குக் காட்டுகின்ற நன்றிக் கடன் என்று சொல்லி, பேரறிஞர் அண்ணா அவர்கள் அங்கு சென்றார்கள். சென்றதற்குப் பின்னாலே, பேரறிஞர் அண்ணா அவர்களை திரு. மௌரியா அவர்கள் பேசச் சொன்னார்கள். பேசுகின்ற நேரத்தில் அண்ணா அவர்கள் அழகாக ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். டாக்டர் அம்பேத்காருக்குப் பின்னாலே, இந்தச் சமுதாயத்திலே ஒரு அறிவாளியை நான் பார்க்கிறேன். அப்படிப் பட்ட ஒரு அறிவாளியாக, சிந்தனையாளராக இந்தச் சமுதாயத்திலே பிறந்திருக்கிறீர்கள்; நீங்கள் சிரமப்பட்டு, ரிக்ஷா ஓட்டி, சட்டப் படிப்பைப் படித்து இருக்கிறீர்கள்; இவ்வளவு திறமை

[திரு. மா. மணிமாறன்] [1987 ஏப்ரல் 7

களை ஒருங்கே பெற்றுள்ள நீங்கள், ஜாக்கிரதையாக இருங்கள் என்று சொன்னார்கள். இத்தகைய ஒரு அறிவாளியாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே இருக்கிறீர்கள் என்று சொன்னால், தயவு செய்து நீங்கள் அரசியல் சூழலில் ஆட்படாமல் இருங்கள் என்று சொன்னார்கள். அண்ணா அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். இந்தச் சமுதாயத்தை உய்விக்க வேண்டுமென்று சொன்னால் நீங்கள் எந்தக் கட்சியிலும் சேராதீர்கள். நீங்கள் தனித்து நின்று, டாக்டர் அம்பேத்கார் அவர்களின் பின்னாலே, சிறப்பாக இந்தச் சமுதாயத்திற்கு நீங்கள் பணியாற்ற வேண்டுமென்று அண்ணா அவர்கள் ஒரு வேண்டுகோளாக வைத்தார்கள். மேலும் அண்ணா சொன்னார்கள். தாழ்த்தப்பட்டவர்களின் திறமையையும், அறிவையும் சனாதனமும் பணமும் விலை பேசி விடும் நீங்கள் விலை போய்விடாதீர்கள் என்று சொன்னார்கள். ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் வேண்டுகோளாக வைத்த போதிலும்கூட, சனாதன அரசியல் அவரை விட்டு வைக்கவில்லை. அவர்களை ஒரு கட்சியின் சார்பாக பாராளுமன்றத்திலே உறுப்பினராக ஆக்கிவிட்டார்கள். இதை இங்கே நான் கோடிட்டுக் காட்டுவதற்குக் காரணம் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே அறிவாளர்கள் எங்கு தோன்றினாலும், அவர்களை விலை பேசுவதற்கு எல்லாத் தரப்பினரும் இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிறார்கள் என்பதை நான் மெத்த பணிவன்போடு இந்த அவையிலே சொல்லிக்கொள்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். அவர்கள் எந்தத் துறையாக இருந்தாலும் சரி, அரசியலிலே சிறப்பாக வந்தாலும்கூட அவர்களை மதிக்காத ஒரு நிலையை நாம் பார்க்கிறோம். எந்தவொரு அரசாக இருந்தாலும், அது யாராக இருந்தாலும், நாம் தாழ்த்தப்பட்டவர்களின் நலனை எண்ணிப் பார்க்கிறபோது, அவர்களுடைய அறிவாற்றலையோ, தொண்டையோ இன்றைக்கு யாரும் எண்ணிப் பார்ப்பதாகத் தெரியவில்லை. உள்ளபடியே சொல்லப்போனால், தந்தை பெரியாருடைய சுயமரியாதை இயக்கத்தில் பற்றுகொண்ட ஓரிருவர்தான் இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நாம் அப்படிப்பட்ட ஒரு சமுதாயத்தைத்தான் மனதிலே எண்ணிக்கொண்டிருக்கிறோம்.



1987 ஏப்ரல் 7] [திரு. மா. மணிமாறன்]

இன்றையதினம் அந்தச் சமுதாயத்தினுடைய கல்வித்தரம் மற்றும் ஒதுக்கீடு என்ன நடைமுறையில் இருக்கிறதென்று எண்ணிப் பார்க்கிறபோது நமக்கு உள்ளபடியே வேதனையாக இருக்கிறது. குறிப்பாக 1950-லிருந்து 1967 வரை தமிழ்நாட்டிலிருந்த அரசாங்கத்தால் இந்தச் சமுதாயத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கீடுகளை எண்ணிப் பார்க்கிறபோது நமக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது என்பதை இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 1967 வரையில் அரசாங்கமும் இருந்த ஒதுக்கீட்டில் 9 சதவீதத்தைத்தான் இந்த ஆதி திராவிடர் சமுதாயத்தின் நலனுக்காக ஒதுக்கிவந்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதை நான் கடமையாகக் கருதுகிறேன். 1967-ல் புதிய கட்சி ஆட்சிக்கு வந்த பின்னால் வைத்தியநாதன் குழுவினுடைய அறிக்கையை ஆராய்ந்து பார்த்து அந்த ஒதுக்கீட்டை 16 சதவீதமாக உயர்த்திய பெருமை பேரறிஞர் அண்ணா அவர்களைச் சேரும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். அந்தச் சமயத்தில்தான் அந்த ஒதுக்கீடானது 16 சதவீதமாக உயர்த்தப்பட்டது. அதற்குப் பின்னாலே டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் இந்த ஒதுக்கீடு 18 சதவீதமாக உயர்த்தப்பட்டது என்பதை இந்த நேரத்திலே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். அப்போது 18 சதவீதமாக உயர்த்தப்பட்ட ஒதுக்கீடு இன்று வரையில் அதே 18 சதவீதமாகத்தான் இருக்கிறது என்பதை மெத்த வேதனையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்குப் பின்னால் 1985-86 கொள்கை விளக்கக் குறிப்பிலே மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். 1981 சென்சஸ் புள்ளி விவரங்களின்படி பார்க்கிறபோது மொத்தம் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 19.4 சதவீதம் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அப்போதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இடத்தில் அரசாங்கப் புள்ளி விவரப்படியே இது 19.4 சதவீதமாக இருக்கிறபடியால் இந்த ஒதுக்கீட்டையும் 18 சதவீதத்திலிருந்து அதிகமாக ஆக்கி 20 சதவீதமாக உயர்த்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டேன். அப்போது ஆதிதிராவிட நல அமைச்சர் அவ்வாறு செய்ய வேண்டுமென்றால் அதற்கு அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் "வேண்டாம், மாநில

[திரு. மா. மணிமாறன்] [1987 ஏப்ரல் 7

அரசே அதைக் கொடுக்கலாம்" என்று சொன்னார்கள். இது நடந்து 2 ஆண்டுக் காலம் ஆகியும் எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் அந்தச் சமுதாயம் கீழ் மட்டத்திலேயே இருந்து கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது மிகவும் வேதனையாக இருக்கிறது. இந்த ஒதுக்கீடு சம்பந்தமாக எனக்கு இன்னொரு ஐயப்பாடு எழுந்திருக்கிறது. மறைந்த இந்தியப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், அவர்கள் இறப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னால், நேஷனல் டெவலப்மெண்ட் கௌன்சில் கூட்டத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் தீர்மானத்தில் எதிர்காலத்தில், இப்போதிருக்கும் ஒதுக்கீட்டை எடுத்துவிட்டு பொருளாதார நிலைக்கேற்ப ஒதுக்கீடுகளைச் செய்யலாம் என்று ஒரு பொருளை முன்மொழிந்தார்கள். அதே நேஷனல் டெவலப்மெண்ட் கௌன்சில் கூட்டத்தில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இருந்தார்கள். எந்தவிதமான எதிர்ப்பையும் இந்தக் கருத்துக்கு அவர் எழுப்பவில்லை. அப்படி எந்தவித எதிர்ப்பும் எழுப்பப்படாத காரணத்தால்தான் அந்தச் சமுதாயத்தின் எதிர்காலம் எப்படி இருக்குமோ என்ற ஐயத்திற்கு இடமிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாதிரி ஒரு மாற்றம் செய்வதற்கு கான்ஸ்டிடியூஷனல் அமென்ட்மென்ட் கொண்டுவரப்பட வேண்டும். அப்படி ஒரு அமெண்ட்மெண்ட்டைக் கொண்டு வருவதற்கு உரியதை என்.டி.சி-யிலேயே ஒரு சப்ஜெக்டாக வைத்துப் பேசும்போது எந்த எதிர்ப்பும் தெரிவிக்கப்படாமல் இருந்ததைப் பார்க்கும்போது விவரம் தெரியாத மக்களை நாம் ஏமாற்றுகிறோமோ அல்லது எப்படி ஏமாற்றலாம் என்று நினைக்கிறோமோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது என்று நான் அரசைக் குற்றம் சாட்டுகிறேன்.

அடுத்து, சான்றிதழ் வழங்கப்படும் முறைபற்றி ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இன்றையதினம் ஆதிதிராவிடர்களுக்கு ஜாதிச் சான்றிதழ் தாசில்தாரால் வழங்கப்படுகின்றன. ஷெட்யூல்டு டிரைப்-ஐச் சேர்ந்தவர்களுக்கு அந்தச் சான்றிதழ் ஆர்.டி.ஓ.-வால் வழங்கப்படுகிறது. ஆனால் இன்று எத்தனையோ பேர் போலியான சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டு வேலைக்குச் செல்கின்றார்கள். இன்னும் சொல்லப்போனால் [illegible]



1987 ஏப்ரல் 7] [திரு. மா. மணிமாறன்]

போலிச் சான்றிதழ் பெற்றவர்களில் சிலர் பெரிய அதிகாரிகளாக உட்கார்ந்துகொண்டு வேலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். செல்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் போலிச் சான்றிதழ் பெற்றவர்களில் சிலர் பெரிய அதிகாரிகளாக உட்கார்ந்துகொண்டு வேலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-20)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

உங்களுக்கு மாதிரிக்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமானால் சுப்ரீம் கோர்ட்டிலேயே ஒரு கைடு லைன்ஸ் கொடுத்திருக்கிறார்கள். அந்தந்த மாநிலத்தில் உள்ள தலைமைச் செயலாளரையே செயலாளராகப் போட்டு குழு அமைத்து எங்கெங்கே பொய்ச் சான்றிதழ் கொடுக்கப்பட்டிருக்கிறது—அதன் அடிப்படையில் யார், யார் வேலையில் சேர்ந்திருக்கிறார்கள் என்று ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். உச்ச நீதிமன்றமே இப்படிப்பட்ட ஒரு கைடு லைன்ஸ் கொடுத்திருக்கிறது. ஆனால் இதுவரை எந்த மாநிலமாவது அதைச் செய்திருக்கிறதா என்றால் இல்லை. குறிப்பாகத் தமிழகத்திலே அதை நாம் செய்திருக்கிறோமா என்றால் நிச்சயமாக இல்லை. மத்திய அரசாங்கத்தில் இருக்கிற பல ஊழியர்கள் இன்றைக்குத் தாழ்த்தப்பட்டவர்களுக்கான சலுகைகளை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் உண்மையிலேயே தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களா என்றால் இல்லை. அப்படிப்பட்டவர்கள் மீது இன்றுவரை அரசாங்கம் எடுத்திருக்கிற நடவடிக்கை என்ன என்றால் ஒன்றுமில்லை என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதைச் சொல்லுவதற்கு முன்பாக நான் இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தமிழகத்தில்கூட ஒரு பை-எலெக்ஷன் நடந்தது. உப்பிலியாபுரம் தொகுதியில் அந்த பை-எலெக்ஷன் நடைபெற்றது. அதற்கு முன்னாலே அந்தத் தொகுதியிலிருந்து சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர் ஷெட்யூல்டு டிரைப் அல்ல என்று உச்ச நீதிமன்றமே தீர்ப்பளித்திருக்கிறது. அவர் பொய்ச் சான்றிதழ் ஒன்றை வாங்கித் [illegible]

தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கிறார். நான் மெத்தப் பணிவன்போடு இங்கே உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்—அரசியல் கட்சியின் சார்பாகத்தானே அப்படிப்பட்டவர்கள் தேர்தலில் போட்டியிடுகிறார்கள்—அவர்கள் எந்தக் கட்சியின் சார்பில் உறுப்பினராக—வேட்பாளராகப் போட்டியிட்டாலும்—அவர் உண்மையிலேயே எந்தச் சமுதாயத்தைச் சார்ந்தவர் என்பதை அவர்களாலே தெரிந்து கொள்ள முடியாதா? அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்குத் தெரியாதா? அந்த மாவட்டத்தில் அந்தக் கட்சியில் இருப்பவர்களுக்குத் தெரியாதா? கட்டாயம் தெரியும். இருந்தாலும்கூட அந்த உப்பிலியாபுரம் தொகுதியில் கொண்டாரெட்டி என்கிற பெயரில் ஒரு ரெட்டியார் போட்டியிட்டு வெற்றி பெற்று வந்தார். 4 ஆண்டுக் காலம் உறுப்பினர் என்கிற முறையில் அனைத்து சலுகைகளையும் அனுபவித்த பிறகுதான் உச்ச நீதிமன்றம் அவர் தாழ்த்தப்பட்டவர் அல்ல என்று தீர்ப்பு சொல்லியது. அதற்குப் பிறகுதான் அவர் தம் பதவியை இழந்திருக்கிறார். நான் கேட்கிறேன்—ஒரு தாசில்தார் மீது நடவடிக்கை எடுத்திருக்க முடியும். சான்றிதழ் கொடுத்தவர் என்று அதிகாரி மீது நாம் நடவடிக்கை எடுத்திருக்க முடியும். ஆனால் அந்த நபரின் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோமா * அப்படி ஏமாற்றிய அரசியல்வாதியின் மீது நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோமா? இதையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

கொண்டா ரெட்டி என்று சொல்லி வெற்றி பெற்ற ரெட்டியார் சமூகத்தைச் சார்ந்தவர் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? அந்த அரசியல் கட்சிதான் நடவடிக்கை எடுத்ததா என்று உங்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட நிலைமை இன்றைக்கும் நீடித்துக் கொண்டுதான் இருக்கிறது. பொய்ச் சான்றிதழ் பெற்றே ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து ஒரு பிரச்சினையைக் குறித்து நான் இங்கே வலியுறுத்திட விரும்புகிறேன். ஆதிதிராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் உள்ள ஒதுக்கீடுபற்றி மிகச் சிறப்பாகச் சொல்லி அதை முறையாகச் செயல்படுத்தியிருப்பதாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். இதைப் பொறுத்தவரையில் மாநில ரீதியாக



அமைக்கப்பட்ட கமிட்டி ஒன்று இருக்கிறது. அதாவது ஸ்டேட் ஆதிதிராவிடர் கமிட்டி என்று அதற்குப் பெயர். அந்தக் கமிட்டி இப்போது என்ன ஆயிற்று? இத்தனை ஆண்டுக் காலமாக அது என்ன, புதை குழிக்குப் போய் விட்டதா? என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். திரு. சௌந்திரராஜன் அவர்கள் அமைச்சராக இருந்தபோது அந்தக் கமிட்டி செயல்பட்டது. ஆதிதிராவிடர் அமைச்சராக நீங்கள் வந்ததற்குப் பிறகு அந்தக் கமிட்டிக்கு உயிர் உண்டாகுமா அல்லது இன்னும் புதை குழியில்தான் தொடர்ந்து இருக்குமா என்று நான் கேட்க விரும்புகிறேன். அந்தக் கமிட்டி செயல்படாமல் இருந்திருக்கிறது என்பதை நான் மெத்த வருத்தத்தோடு இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே எந்தத் துறையாக இருந்தாலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உரிய இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அண்மையில் குரூப் ஒன்று என்று சொல்லப்படும் டி.எஸ்.பி. தேர்வுக்காக நடத்தப்பட்ட பரீட்சை மூலமாக ஆட்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதில் 26 பேர்களுக்கு டி.எஸ்.பி-யாக தேர்வு நடைபெற்று தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆனால் அதில் 4 பேர்தான் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள். அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட 26 பேரில் 4 பேர் மட்டும்தான் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள். 4 பேருக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நீங்களே ஒத்துக்கொண்டுள்ளீர்கள். நீங்கள் கூறுகிற முறையில் பார்த்தால்கூட 18 சதவீத ஒதுக்கீடு என்று பார்க்கிறபோது 4 பேர் என்பது சரியாக இருக்கிறதா என்றால் இல்லை. 24 பேரில் 4 பேருக்குக் கொடுத்திருக்கிறோம் என்றால் அது 18 சதவீத அடிப்படையில் ஒதுக்கப்படவில்லை என்பதைத்தான் குறிக்கும். காரணம் 26-ல் 18 சதவீதம் என்பது 4.7 பேராகும். 0.7 என்று சொல்லுகிறபோது 0.5-க்கு மேலே போனால் அதை ஒன்றாகத்தான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நாம் கணித வகுப்பிலே பாடம் படிக்கவில்லையா? அந்தப் பாடத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படிக்கவில்லையா? அப்படிப் படித்த நீங்கள்தான் அப்பாவி ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இதைச் செய்திருக்கிறீர்களா? ஒரு 0.3 சதவீதம் அதிகமாகக் கொடுத்து இன்னொரு டி.எஸ்.பி. பதவியைக்

கொடுத்து ஆதி திராவிடப் பெருங்குடி மக்களுக்கு அந்த நன்மையைச் செய்திருக்கக் கூடாதா? அதுமட்டுமல்ல. இனி எதிர்காலத்தில் இந்த 18 சதவிதமாவது தொடர்ந்து நீடிக்குமா இல்லையா என்பதே புரியாமல் இருக்கிறது. இதைப்பற்றி இந்த அரசு எந்தவிதக் குறிப்பையும் சொல்லாமல் இருப்பது நியாயம் தானா என்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. ஏற்கெனவே குரூப் ஒன்று பரிட்சையைப் பொறுத்தவரை அத்தேர்வுக்கு ஆதிதிராவிட அதிகாரிகளைப் பொறுத்த வரை வயது வரம்பு ஏதும் குறிப்பிடப்படாமல் இருந்து வந்தது. பின்னாலேதான் அதற்கான வயது வரம்பு நிர்ணயிக்கப்பட்டது. அதைப்போலவே எக்சாமினேஷன் பீஸ் கூட வசூலிக்கப்படாமல் இருந்தது பின்னாலேதான். தேர்வுக் கட்டணமும் வசூலிக்கும் முறை ஏற்பட்டது. ஒரு முறை சட்ட மன்றத்தில் இப் பிரச்சினையை டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கே எதிர்க்கட்சித் தலைவராக இருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்துக் கேட்டார்கள். அவர்களுக்கு வயது வரம்பு வைக்கக்கூடாது என்றும் எக்சாமினேஷன் பீஸ் வாங்கக்கூடாது என்றும் கேட்டபோது—அது பற்றிய பைல் இருக்கிறது என்று சொல்லி அந்த பைலில் டாக்டர் கலைஞர்தான் உத்தரவிட்டிருக்கிறார் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள்.

அப்போதே கலைஞர் அவர்கள் கேட்டார்கள். அப்படியே நானே உத்தரவிட்டிருந்தாலும் சரி அதை மாற்ற வேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். ஒரு பாதிக்கப்பட்ட சமுதாயம் பரிதவிக்கும் சமுதாயம்—உரிமை பாதிக்கப்பட்ட சமுதாயம் சார்பாகக் கேட்கிறேன்—கெஞ்சுகிறேன்—தயவுசெய்து மாற்றித் தாருங்கள் என்று கேட்டார்கள். அதைப்போலவே எக்சாமினேஷன் பீசும் வசூலிக்கக் கூடாது என்று டாக்டர் கலைஞர் அவர்கள் கேட்டார்கள். என்னை நம்புங்கள், நான் செய்கிறேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1977-ல் உத்தரவாதம் அளித்தார்கள். ஆனால் இன்றுவரை அது ரத்து செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல—ஆளுகிற கட்சியில் யாராக இருந்தாலும் தாழ்த்தப்பட்டவர்





களுக்கு நாம் என்ன செய்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்றுதான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைப் பற்றிச் சொல்லும் போது, பல பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை நீங்கள் மத்திய அரசாங்கத்தோடு சேர்ந்து செய்துகொண்டிருக்கிறீர்கள்; கறவை மாடு மற்றவைகள் எல்லாம் கொடுத்துக் கொண்டிருக் கிறீர்கள். இதைத்தான் இன்றைக்கு புரட்சிகரமானது என்று இந்த அரசு கருதுகிறது.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்காக செய்யப்பட்ட மூல தனச் செலவு என்ன என்பதைக் கணக்கிட்டுப் பார்த்தால் மெத்த வேதனையாக இருக்கிறது. மூலதனச் செலவாக ஆதிதிராவிடர் நலனுக்காக 1975-76-ல் அன்றைய அரசாங்கம் 14 கோடி ரூபாய் மட்டும் வீடு கட்டுவதற்காக தொகையை ஒதுக்கியிருந்தார்கள். 1975-76-ன் வரவு-செலவு மொத்தத் தொகை 557 கோடியில் 14 கோடி ரூபாயை வீடுகட்ட ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு தொடர்ந்து பார்த்தால் 1977-78-லிருந்து 1980 வரை 3.27 கோடி ரூபாய் ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கியிருக்கிறார்கள். 1980-81-ல் 2.70 கோடி ரூபாயும், 1981-82-ல் 2.2 கோடி ரூபாயும், 1982-83, 1983-84, 1984-85 ஆகிய மூன்றாண்டுகளுக்கு ஆண்டிற்கு இரண்டு கோடி ரூபாயும், 1985-86-ல் 3 கோடி ரூபாயும், 1986-87-ல் 3 கோடி ரூபாயும், 1987-88-ல் இந்த ஆண்டு 1.4 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதையும் சாட்டியிருக்கிறார்கள். இன்று தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு இப்படி சாட்டப் பட்டிருக்க வேண்டுமா?

ரூபாய் 3,745 கோடி வரவு-செலவு பார்க்கும் இந்த அரசாங்கம் எண்ணிப் பார்க்காமல் ஆயிரம் ரூபாயை காட்டுகிற அளவில் இருப்பது நியாயமா? தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு இலட்சக் கணக்கான வீடுகளைக் கட்டுவதாக அறிவித்திருக்கிறீர்களே, உங்களைக் கேட்கிறேன். சாதாரணமாக 1.4 கோடி ரூபாயை பெர்பார்மென்ஸ் பட்ஜெட்டில் குறிப்பிட்டிருக்கிறீர்களே. நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையா என்பதைக் கேட்க கடமைப் பட்டிருக்கிறேன். கொடுத்திருக்கிற அலாட்மெண்ட்டைப் பார்த்

தால் 1975-ல் 14 கோடி ரூபாய் என்றால், அந்த நிதிநிலை அறிக்கையில் 1977 முதல் 1986 வரை மொத்தமாக ஒதுக்கிய தொகையைக் கணக்கிட்டு 1975-76 ஆகிய ஆண்டில் விடுகட்ட. ஒதுக்கிய விகிதாசாரத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால், தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு, ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டுவதற்காக மொத்தம் 462 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்க வேண்டும். ஆனால் இந்த அரசு 1977-78-ல் இருந்து 1987-88 வரை மொத்தமாக வீடு கட்டுவதற்காக ஒதுக்கியிருப்பது 28.0 கோடி ரூபாய். மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். 1975-76 விகிதத்தில் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டுவதை நிறைவேற்றாததால் ஆதி திராவிடர்களுக்கு 434 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுத்தி உள்ளீர்கள். அப்படியானால் ஆதிதிராவிடர்களுக்காக வீடு கட்டு கட்டுவதற்காக வேகமாகப் பேசுகிறார்களே அது உண்மையா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மொத்தமாக மூலதனக் கணக்கிலே பார்த்தால் 1975-ல் உள்ள நிலையைக் கணக்கிட்டுப் பார்த்தால் ஏறத்தாழ 432 கோடி ரூபாய்க்கு மேலாக வீட்டு வசதிக்காக மட்டும் ஆதிதிராவிடர்களுக்கு இழப்பு இருக்கிறது. அது மட்டுமல்லாமல் மூலதனச் செலவில் 1975-76-ல் இருந்து இன்றைக்கு வரை ஒதுக்கப்பட்டுள்ளதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஒட்டு மொத்தமாக இந்தத் துறையில் 1975-76 விகிதத்தில் ஒதுக்காததால் 544 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு மட்டும் வீட்டு வசதிக்காக மூலதனச் செலவில் இழப்பு ஏற்பட்டிருப்பது 434 கோடி ரூபாய். ஏன் இப்படி ஒதுக்கியிருக்கிறார்கள்? மூலதனச் செலவுக் கணக்கில் அதிக இழப்பு பரிதாபத்திற்குரிய நிலையில் உள்ள ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களின் தேவையில் தள்ளப்பட்டிருக்கிறதே, ஏன் என்பதைப் பார்க்கும்போது மெத்த வருத்தமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வீடு கட்டும் திட்டத்தில் வேகத்தைக் காட்டுவதற்காகக் கூறுகிறார்கள். 1974-75-ம் ஆண்டில் வைக்கப்பட்ட இலக்கு 10 ஆயிரம் வீடுகளைக் கட்ட வேண்டும் என்பதாகும். ஆனால் கட்டி முடிக்கப்பட்டது 10,162 வீடுகள். கொள்கையில் பத்தாயிரம் வீடுகள் என்று இருக்கும் போது 1974-75 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது பத்தாயிரத்திற்கு மேல் என்றால், எண்ணியதை எய்தியது யார் என்பதை நீங்கள் கவனத்திலே கொள்ள வேண்டும்.





இதுபோன்றே பல திட்டங்களைக் கோடிட்டுக் காட்டமுடியும். 1971-72-ல் ஆதிதிராவிடர்களுக்கு மட்டும தட்டச்சு சுருக்கெழுத்தாளர்களுக்குப் பயிற்சி கொடுக்கும் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கினார்கள். சென்னை, மதுரை, திருச்சி, கோவை ஆகிய நான்கு மாவட்டத் தலைநகரங்களில் முதலில் ஏற்பாடு செய்தார்கள். 1975-76 ஆம் ஆண்டில் வட்டத் தலைமையிடங்களுக்கும் இதை விஸ்தரிக்க வேண்டும் என்று உத்தரவு போட்டார்கள். அது இன்றுவரை செயலாக்கப்பட்டிருக்கிறதா என்பதைக் கேட்க விரும்புகிறேன். வட்டத் தலைநகரத்தைப் பொறுத்தவரையில் எத்தனை தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள் * இன்றைக்கு இந்தத் திட்டம் கிணற்றில் போடப்பட்ட திட்டமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னுமொன்று. டியூப் வெல் கார்ப்பரேஷன் என்று ஒரு கார்ப்பரேஷன் இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்காக கிணறுகளை இறக்கிக் கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். டியூப் வெல் கார்ப்பரேஷன் இறக்கியிருக்கக்கூடிய கிணறுகளுக்காக இலவசமாக மின்சாரம் கொடுக்க வேண்டும் என்று டியூப் வெல் கார்ப்பரேஷன் அரசாங்கத்தின் பி.டபிள்யூ.டி. துறையைக் கேட்டிருக்கிறது.

(பிற்பகல் 12-30)

அரசாங்கத்தினர் மின்சாரத் துறை தலைவரிடத்தில் கேட்டிருக்கிறார்கள். அவர் முடியாது, செலவு அதிகமாகும் என்று மறுத்திருக்கிறார். அதற்குப் பின்னாலே ஒரு உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். அந்த உத்தரவிலே டியூப் வெல் கார்ப்பரேஷன்-ஆல் பொருத்தப்பட்ட மோட்டார்களுக்கு இலவசமாகக் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வுத்தரவின் திருத்தத்திலே "Small farmers.. No charge; Other farmers.. Lumpsum of Rs. 75 per Horse Power of the contracted load per annum. Small farmers ....... "No charge ....... Tube wells sunk by Tamil Nadu State Tube Wells Corporation catering to small farmers; No charge. Other farmers .. Lumpsum of Rs. 75 per horse power of the contracted per annum."

[திரு. மா. மணிமாறன்] [1987 ஏப்ரல் 7

முன்னாலே அரசாங்கத்திடம் கேட்டதெல்லாம் அவர்களுக்கு இனாமாகக் கொடுக்க வேண்டுமென்றுதான். அதற்குப் பின்னாலே இனாமாகத் தருவதைக் கொள்கையாக அறிவிக்கிறார்கள். கடைசியில் சிறு விவசாயிகளுக்குத்தான் என்று அறிவிக்கப்படுகிறது. ஆதி திராவிடர்களுக்கு என்று கொடுக்கவில்லை. இந்த உத்திரவைப் போடுவதற்கு முன்னால் பொதுப் பணித்துறைச் செயலாளர் அரசாங்கத்திற்கு, அமைச்சருக்கு பைலை அனுப்புகிறார். அந்த பைலை அமைச்சரவர்கள் பார்க்கிறார்கள். அந்த வித்தியாசத்தைப் பார்த்து, தாழ்த்தப்பட்டவர்களுக்கு பயனளிக்கும் வகையில் ஆக்கபூர்வமாகச் செய்ய உரிய அமைச்சரவர்கள் தவறி இருக்கிறார். யாரிடம் நாங்கள் இப்போது கேட்பது? அதிகாரிகளிடம் கேட்க முடியுமா? அதிகாரிகள் போட்ட உத்திரவில் இப்படிப்பட்ட குளறுபடிகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்றைச் சொல்லி, முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்காக மத்திய அரசும், மாநில அரசும் ஒதுக்கீடு செய்து, செலவு செய்யும் நிலை இருக்கிறது. அப்படி இன்றைக்கு செலவு செய்யும் நேரத்தில், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்காக ஒதுக்கப்படும் பணம் முறையாகச் செலவு செய்யப்படவில்லை. செலவு செய்யாமல், பல வங்கிகளில் மூலதனமாக முடக்கப்பட்டிருக்கின்றன. ஐந்து ஆண்டுக்கால கணக்கைக்கூட ஆடிட்டுக்கு அவர்கள் தரவில்லை. டிரூப் வெல் கார்ப்பரேஷனை எடுத்துக் கொண்டாலும் சரி, தாட்கோவை எடுத்துக்கொண்டாலும் சரி, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அவர்கள் செலவு செய்த கணக்கைத் தணிக்கைக்கு அனுப்பவில்லை. அப்படி அனுப்பாமல், இன்றைக்கும் காலதாமதம் செய்வதால், இதுபற்றி தணிக்கைக் குழு பெரிய குற்றச்சாட்டு சுமத்தியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே நம்முடைய பொதுக் கணக்குக் குழு ஓர் அறிக்கை தருகிறது. அந்த அறிக்கையிலே மிகவும் சங்கடப்பட்டுச் சொல்கிறார்கள். மத்திய அரசு ஒதுக்கீட்டை தாட்கோ 5 ஆண்டுக் காலமாக



1987 ஏப்ரல் 7] [திரு. மா. மணிமாறன்]

பயன்படுத்திய விவரத்தை தணிக்கைக்குத் தராமல் இருப்பதை பொதுக் கணக்குக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது. மேலும் 5 ஆண்டுக் காலமாக தணிக்கைக்குக் கணக்கைக் காட்டாமல் இருப்பதன் காரணமாக மக்களுக்குப் பலன்கள் போய்ச் சேருகிறதா, இல்லையா என்று கண்டுபிடிக்க முடியவில்லை. பெரும்பாலும் பலன்கள் கிடைக்காமல் இருக்கக்கூடும். அது மட்டுமல்ல, கடுமையான, முறைகேடான தவறுகளுக்கும் அது வழி வகுக்கும் என்று அஞ்சுகிறோம் என்று பொதுக் கணக்குக் குழு கருத்து தெரிவிக்கிறது.

அடுத்து, தாட்கோவில் 3 கோடி ரூபாய்க்கு மேலாக இன்றைக்கு வங்கிகளில் முடக்கப்பட்டிருக்கிறது. 1976-77-லே அரசாங்கத்தில் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அந்தத் துறை தனியாகப் பிரிக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். 1977-78-ல் போடப்பட்ட உத்தரவு இன்றுவரை செயலாக்கப்படவில்லை. அங்கே, ரெவின்யூ இலாக்காவிலிருந்து தாசில்தார் வருகிறார். வருமானம் உள்ள இடமாக இருந்தால், இருக்கிறார். இல்லை என்றால் தன்னுடைய துறைக்கே திரும்பப் போய்விடுகிறார். இந்த நிலை தொடர்ந்து நீடித்தால், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு எந்த அளவுக்கு நாம் செய்ய முடியும் என்பதைக் கேட்க விரும்புகிறேன் . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோருக்கும் 15 நிமிடங்கள்தான். உங்களுக்கு 23 நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன். எந்த உறுப்பினருக்கும் இவ்வளவு நேரம் கொடுக்கவில்லை. அடுத்து திரு. எம். என். ராமஜெயம்.

**திரு. ம. நா. ராமஜெயம்:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற ஆதி திராவிடர் பழங்குடியினர் மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பை நல்கிய பேரவையின் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்திலே அறிமுகப்

[திரு. ம. நா. ராமஜெயம்] [1987 ஏப்ரல் 7

படுத்தியிருக்கின்ற எந்தத் திட்டமானாலும், அது சத்துணத் திட்டமானாலும் சரி, இலவச சீருடைத் திட்டமானாலும் சரி, இலவசப் பாடப் புத்தகம் வழங்கும் திட்டமானாலும் சரி, ஒரு விளக்கு திட்டமானாலும் சரி, இலவச காலனி வழங்கும் திட்டமானாலும் சரி அவற்றின் மூலம் பெரும்பாலான ஆதி திராவிட பழங்குடி மக்கள் பலன் பெற வேண்டுமென்று எண்ணி, இன்றைக்கு சிறப்பான திட்டங்களை தமிழகத்திலே செயல் முறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே எங்களுடைய இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு ஆதிதிராவிடர் பழங்குடி மக்கள் சார்பாக முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு ஏழ்மைக் கோட்டின் கீழ் உள்ள ஆதிதிராவிடர் குடும்பங்கள், வறுமை நிலையிலிருந்து நீங்கி, அவர்களுடைய பொருளாதாரம் மேம்பாடு அடைய வேண்டுமென்று எண்ணி, ஆதிதிராவிடர் சிறப்பு உள்ளடக்கத்திட்டத்தின் கீழ் ரூ. 132 கோடியே 69 லட்சம் ரூபாயும், சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு 195 கோடியே 92 லட்சம் ரூபாயும் ஒதுக்கீடு செய்து, இந்தச் சமுதாய மக்களின் அடிப்படைத் தேவைகளான உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் கொடுத்து உதவும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களை இதயபூர்வமாக பாராட்டக் கடமைபட்டுள்ளவனாக இருக்கிறேன்.

அதே நேரத்தில், அனைத்து ஆதிதிராவிடர் பழங்குடி மக்கள் வசிக்கும் காலனி பகுதிகளில் இடுகாடுகள் இல்லாமலும் மற்றும் சாலைகள் இல்லாமலும் அவர்கள் அந்தக் காலனியில் இருப்பவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலைமைகள் இன்னமும் அங்கே இருந்து கொண்டிருக்கின்றன. ஆதிதிராவிடர் நல அமைச்சர் அவர்கள் அந்தக் காலனி பகுதிகளுக்கு இடுகாடுகளையும் சாலை வசதிகளையும் ஒரு சிறப்பு திட்டத்தைப்போட்டு கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் அனைத்து ஆதிதிராவிடர்கள் பகுதிகளிலும் காலனி பகுதிகளில், டெலிவிஷன் பெட்டி வைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு டெலிவிஷன் ஸ்டேஷன் பவர்



1987 ஏப்ரல் 7] [திரு. ம. நா. ராமஜெயம்]

75 கிலோ மீட்டர் தூரத்திற்கு இருக்கிறது. மேலும் நீட்டிக்க முடியாது என்ற காரணத்தினால் டெலிவிஷன் வைக்கமுடிய வில்லை என்று காரணம் சொல்லுகின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசு அனுமதி பெற்று ஆதிதிராவிடர் காலனிகள் அனைத்திலும் டெலிவிஷன் வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து, சமுதாயத்தில் கல்வி அறிவு அளிக்காமல் எந்தவிதமான நற்பயனும் கிடைக்காது என்பதை உணர்ந்த டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆரம்பப்பள்ளி முதல் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி வழங்குவதுடன் இலவசப் பாடப் புத்தகமும், சீருடையும் வழங்கிட திட்டம் கொண்டுவந்திருக்கின்றார் என்றால் அதற்கு நான் உளப்பூர்வமாகப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். இன்று சிறப்புத் தேர்வு கட்டணத்திலிருந்து விதிவிலக்கும் அளித்து, பொறியியல், மருத்துவம், வேளாண்மை போன்ற தொழில்கல்வி மற்றும் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு செலவைச் சரிக்கட்ட கடன் உதவித்தொகையும் அளிக்கப்பட்டு, இந்தக் கல்வி பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு விலை அதிக முள்ள இன்றியமையாத மிக முக்கிய பாடபுத்தகங்களை வாங்கு வதற்கு, புத்தக வங்கித் திட்டம் என்ற புதிய திட்டத்தை அரசு அறிமுகம் செய்திருப்பது பெருமைப்படக்கூடிய ஒன்றாகும். இன்றைக்கு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற இந்திய ஆட்சிப் பணி தேர்வுகள் எழுத, தேர்வுக்கு முன் பயிற்சி அளித்து அவர்களுடைய கல்வி, பொருளாதாரத்தை உயர்த்த பாடுபடும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களை ஆதிதிராவிடர் சமுதாயத்தின் சார்பாக மனமாரப் பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

இன்றைக்குப் பெரும்பான்மையான ஆதிதிராவிடர் குடும்பங் களுக்குச் சொந்தமான வீடுகளோ அல்லது வீட்டு மனைகளோ இல்லை என்பதனை நன்கு தெரிந்த டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 3 செண்ட் வீட்டுமனை நிலம் கொடுக்க வேண்டுமென்று அவசிய அவசர உணர்வோடு இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்று கருதி, குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 4 லட்சத்து 70 ஆயிரம் குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் கையகப்படுத்தி இதன் மூலம் சுமார் 10 லட்சம் பேர்

[திரு. ம. நா. ராமஜெயம்] [1987 ஏப்ரல் 7

களுக்கு இலவசமாக வீட்டு மனையும் கொடுத்து இருக்கின்றார்கள் என்றால் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் நான் மனமார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். வீட்டு மனை கொடுப்பது மட்டுமல்லாமல் ஆதிதிராவிடர்கள் வீட்டு வசதிக் கழகத்தின் மூலமாக ஒரு வீட்டுக்கு ரூ. 9000 என்ற வகையில் வீடுகட்டிக் கொடுத்து ஆதிதிராவிடர் பொருளாதாரத்தை மேம்பாடு அடையச் செய்யும் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களையும் ஆதிதிராவிடர் அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன். மேலும் இந்தப் பணிகளை தீவிரமாக நடைமுறைப்படுத்த தாலுக்கா அளவிலுள்ள தனித் தாசில்தார் அலுவலகத்திற்கு ஒரு ஜீப் இல்லாத அவல நிலை இருக்கிறது. ஆதலால் இன்றைக்கு அங்கு ஜீப் இல்லாத காரணத்தினால் அவர்களுக்குக் காலனி பகுதிகளில் உடனுக்குடன் வீட்டு மனைப் பட்டா சரிவரக் கொடுக்க முடியவில்லை. அதிலே கால தாமதம் இருக்கின்ற காரணத்தினால் இன்றைக்குத் தனித் தாசில்தார் அலுவலகத்திற்கு ஒரு ஜீப் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே வீட்டுமனைகளை எடுக்க நிலத்தை ஆர்ஜிதம் செய்யும்போது நில உடைமைதாரர்கள் நீதிமன்றங்களுக்குச் சென்று விடுகின்ற காரணத்தினால் இதுவரையில் பல வருடங்களாக முடிவு பெறாமல் பல வழக்குகள் நிலுவையில் உள்ளன. இதைத் தவிர்க்க நில ஆர்ஜிதத்தைப் பொறுத்த வரையில் கவனிக்க தனியார் கவர்ன்மென்ட் பிளீடர் நியமிக்க அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டுமென்று பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தைப் பொறுத்தவரையில் மாநிலத்தில் தற்போது 23 நடமாடும் காவல் பிரிவுகள் வாகன வசதியுடன் பி.சி.ஆர். ஆக்டின் கீழ் செயல்பட்டு வருவதாக அறிகிறேன். தற்போது தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இலவசக் காலனித் திட்டத்தை நடைமுறை ஆண்டு அறிமுகம் செய்திருக்கின்றார்கள்.



1987 ஏப்ரல் 7]. [திரு. ம. நா. ராமஜெயம்]

(பிற்பகல் 12-40)

அதேநேரத்தில் எனது தொகுதியில் இன்று நாள் வரையில் நடுக்குப்பம், வண்ணப்பேர், விநாயகபுரம் போன்ற கிராமங்களில் வசிக்கும் ஆதிதிராவிடர்கள் செருப்பு போட்டுக் கொண்டு கிராமத்துக்குள் செல்லக்கூடாது என்ற அவல நிலைமை இருந்து கொண்டு வருகிறது. இதைப் போக்க, குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் செயல்படும் காவல் படை பிரிவுகளை தீவிரமாகச் செயல்பட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆதிதிராவிடர் மக்கள் பெரும்பான்மையோர் சிறு விவசாயிகளாகவும், விவசாயக் கூலிகளாகவும் இருக்கின்ற காரணத்தால் இதனைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்றவற்றை மானியத்தில் வழங்குவதன் மூலம் சுமார் 2 லட்சம் ஆதிதிராவிடர்கள் பலன் அடைகின்றனர். அதேபோல உபரி நிலத்தின்கீழ் கையகப்படுத்தி ஒப்படை செய்யும் ஆதிதிராவிடர்களுக்கு சாகுபடி செய்வதற்கு 1 ஹெக்டேருக்கு ரூ. 2,500 மானியத்துடன் கடன் வசதி செய்து கொடுப்பதுடன், குழாய்க் கிணறு வாரியத்தின் மூலமாய் குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படுவது பாராட்டுக்குரிய ஒன்றாகும். அதையும் நான் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஆதிதிராவிடர் குடும்பத்தினர் பெரும்பான்மையோர் விவசாயக் கூலிகளாக உள்ளதால் அவர்களுடைய வறுமையை மனதில் கொண்டு ஆண்டு ஒன்றுக்கு கத்தி, கடப்பாறை, மண்வெட்டி, கோடாரி போன்ற அவசியமாக உபயோகிக்கும் பொருட்களை இலவசமாக வழங்கும் புரட்சித் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு மாநில அரசு பணிகளிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும் ஆதிதிராவிடர் பழங்குடியினர்களுக்கு பதவிகள் சரியான முறையில் கொடுக்கப்படுகின்றனவா என்பதை ஆய்வு செய்ய, தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைத் தலைவராகவும், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களைத் துணைத்

[திரு. ம. நா. ராமஜெயம்] [1987 ஏப்ரல் 7

தலைவராகவும் துறை இயக்குநரைச் செயலாளராகவும் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். ஒரு கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டிருப்பதை நான் உளப்பூர்வமாக, மனதாரப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் இந்தக் குழுவைக் கூட்டாத நிலைமை இருக்கிறது. இதிலுள்ள காலதாமதத்தைப் போக்கி உடனடியாக இந்தக் குழுவைக் கூட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களின் பாது காவலராக இருக்கின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆதிதிராவிடர் நலத் துறையை அவர்களுடைய நேரடி மேற்பார்வையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்ற எனது பணிவான வேண்டுகோளை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள் கிறேன். இன்றைக்கு ஆதிதிராவிடர் நலத் துறையும், சமூக நலத் துறையும் இணைந்து ஒரே செயலாளர் பொறுப்பில் இருப்ப தாலும், மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்டக் கண்காணிப் பாளர் மேற்பார்வையில் சில துறைகள் இருப்பதாலும், இந்தத் துறையைச் சேர்ந்த மாவட்ட அளவில் உள்ள அதிகாரிகள் சரியாக செயல்படாமல் மெத்தனப் போக்கில் செயல்படுகிறார் கள், இந்தப் போக்கை மாற்ற இந்த இலாகாவை மாண்புமிகு முதல்வர் அவர்களே நேரடி பார்வையில் வைத்துக்கொள்ள ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு பட்டமும், சட்டமும் படித்த ஆதிதிராவிட சமூகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் இங்கே இருப்பதால் அவர்களில் சிலருக்கு ஆதி திராவிடர் நலத்துறை அல்லாத மற்ற துறைகளில் பொறுப்பு அளித்துவிட்டு ஆதி திராவிடர் நலத் துறையை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மறுபடியும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலுள்ள புளிச்சப்பள்ளம் கிராமத்தில் இருக்கின்ற ஆதிதிராவிடர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை பல ஆண்டுக் காலமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர் களும் அதுகுறித்து உத்தரவாதம் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக அதை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தி அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 7] [திரு. ம. நா. ராமஜெயம்]

அடுத்து, மரக்காணம் ஆதிதிராவிடர் காலனியில் 5 ஆயிரம் மக்கள் தொகைக்கு மேல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வேண்டுமென்று விண்ணப்பம் செய்தோம். பல ஆண்டுகள் ஆகியும் இதுவரை வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட வில்லை. இப்படி காலதாமதம் செய்வதைத் தவிர்த்து, மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக மரக்காணம் ஆதி திராவிடர் காலனியில் வசிப்பவர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மரக்காணம் ஆதிதிராவிடர் காலனியில் ஒரு கம்யூனிட்டி சென்டர் இதுவரை இல்லாததால் திருமணம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்த வசதியில்லாமல் அந்த மக்கள் அவதிப் படுகிறார்கள். என் தொகுதியில், என் பகுதியில் அவதிப் படுகின்ற அந்த ஆதிதிராவிட மக்களுடைய கோரிக்கையை ஏற்று உடனடியாக ஒரு கம்யூனிட்டி சென்டரை அங்கே ஏற் படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வானூர் புளிச்சப்பள்ளத்தில் ஒரு தொழில் நுட்பக் கல்வி மையத்தை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக் கிறேன்.

மேலும், தஞ்சை, திருச்சி, தென்னார்க்காடு போன்ற மாவட்டங்களிலே வசிக்கும் மலைக் குறவர்கள் எஸ்.சி. பட்டியலில் இருக்கிறார்கள். அவர்களை எஸ்.டி. பட்டியலுக்கு மாற்றி, எஸ்.டி.க்கு உள்ள அந்தச் சலுகைகளை அவர்களுக்குக் கொடுப் பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பினை நல்கிய துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கையின் மீது இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துக் களைச் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியினை உரித்தாக்கிக் கொள்ளுகின்றேன். தமிழகத்திலே இன்றைய புள்ளி விவரப்படி ஒரு கோடியே இருபது இலட்சம் மக்கள் தாழ்த்தப்பட்டவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இது தமிழக மக்கள் தொகையிலே ஐந்தில் ஒரு பங்கை

[திரு. கு. தமிழரசன்] [1987 ஏப்ரல் 7

உள்ளடக்கிய மக்கள் தொகை. அப்படிப்பட்ட பெரும் மக்கள் தொகையை உள்ளடக்கிய இந்தத் தாழ்த்தப்பட்ட சமூகம் இன்னமும்கூட சமுதாய நிலையிலேயும், பொருளாதார நிலையிலேயும், அரசியல் நிலையிலேயும் ஆக மூன்று நிலைகளிலேயும் ஒடுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு, நசுக்கப்பட்டு, கேட்பாரற்றுக் கிடக்கிறது என்பதை நான் வேதனையோடு சுட்டிக்காட்டியே ஆக வேண்டும். இதைத்தான் நம்முடைய அமைச்சரவர்கள்கூட இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே முதலிலேயே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். எனவே, இப்படி பல்லாயிரம் ஆண்டுக் காலமாக ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டுக் கிடக்கின்ற ஒரு சமூகத்திற்கு நாம் ஏதாவது செய்ய வேண்டுமென்றால் அவர்களை உண்மையாகவே கை தூக்கி விடுவதிலே அக்கறை உள்ளவர்களாக இருப்போமானால் நிச்சயமாக சில தனித் திட்டங்களைப் போட்டு, சில தனி ஒதுக்கீடுகளை ஒதுக்கி, பிரத்தியேக அக்கறை எடுத்துக் கொண்டால்தான் அவர்களுக்கு விடுதலை காண முடியுமே தவிர, வழக்கம் போன்ற திட்டங்களை வைத்துக்கொண்டு, பெரிய அளவிலே எதையும் செய்துவிட முடியாது. அப்படிப்பட்ட தனித் திட்டங்கள் இதிலே இருக்கின்றனவா என்றால் நிச்சயமாக இல்லை என்றே சொல்ல வேண்டும்.

இந்த ஆதிதிராவிடத் துறைக்கு 51 கோடி ரூபாயை நம்முடைய அரசு ஒதுக்கியிருக்கிறது. 18 சதவீதம் உள்ள ஒரு சமுதாய மக்களுக்கு, ஒரு கோடியே இருபது இலட்சம் மக்களைக் கொண்ட ஒரு சமுதாயத்திற்கு இந்த 51 கோடி ரூபாய் என்பது போதுமா என்றால் போதாது. 3,745 கோடி ரூபாயை நாம் இந்த பட்ஜெட்டிலே ஒதுக்கியிருக்கிறோம். மொத்தமாக அவ்வளவு தொகை இருக்கின்றபொழுது, 18 சதவீதம் உள்ள இந்த மக்களுக்கு 51 கோடி ரூபாயிலே பல்வேறு காரியங்களை நாம் செய்துவிட முடியும் என்று என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எனவே, குறைந்தபட்சம் 250 கோடி ரூபாயையாவது இந்த ஆதிதிராவிட நலத் துறை மானியத்திற்கு ஒதுக்கியிருந்தால் நாம் பல்வேறு நலத் திட்டங்களைச் செய்திருக்கலாம்.

கடந்த மூன்று ஆண்டுக்காலமாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே என்ன கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதேதான் இதிலேயும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. புள்ளி விவரங்கள் சில மாறி இருக்கின்றனவே ஒழிய, எடுத்துச் சொன்ன விஷயங்கள் மாறவில்லை. தொடர்ந்து அதையே தான் சொல்லி வருகிறோம்.



1987 ஏப்ரல் 7] [திரு. கு. தமிழரசன்]

இருபதாம் நூற்றாண்டிலேகூட, அதிவேகமாக விஞ்ஞானத்திலே முன்னேற வேண்டுமென்ற இந்த நேரத்திலேகூட, சாதாரண குடிமக்களுக்கு அடிப்படை வசதிகள் இருக்கின்றனவா என்றால், தமிழகம் முழுவதும் எங்கும் எந்த ஒரு குடியிருப்புகளுக்கும் அப்படிப்பட்ட வசதிகள் முழுமையாக நிவர்த்தி செய்யப்படவில்லை. சென்னை போன்ற மாநகரங்களிலே இன்னமும்கூட தாழ்த்தப்பட்ட மக்கள், சாதாரணமாக பிளாட்பாரங்களிலே வசித்துக்கொண்டு இருக்கின்ற அவல நிலையைப் பார்க்கிறோம். சென்னை போன்ற மாநகரங்களிலே, சேரிகளை இழிவுபடுத்துகின்ற முறையிலே, நகரம் சரியாக இல்லையென்றால், சேரியைப் போல இருக்கிறது, குப்பத்தைப்போல இருக்கிறது என்று இழித்துச் சொல்கின்ற பகுதியாக இருப்பதைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறோமே தவிர ஒரு மறுமலர்ச்சி காண முடியவில்லை. எனவே, கட்சி மாச்சர்யங்கள் இல்லாமல், கொள்கை வேறுபாடு இல்லாமல், தாழ்த்தப்பட்ட மக்களைக் கை தூக்கி விடுவதில் ஏற்றத்தாழ்வு இல்லாமல் இருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் புள்ளிவிவரம்தான் மாறியிருக்கிறது. வார்த்தைகள் மாறவில்லை என்று சொல்கிறார்கள். புள்ளிவிவரம் மாறினால் மட்டும் போதும், அதிகமான நிதி ஒதுக்கியிருக்கிறோம் என்பதாகப் பொருள். அதுமட்டுமல்ல, இப்பொழுது சேரி என்பது ஒரு மோசமான வார்த்தையாக அழைக்கப்படுகிறது என்று சொன்னார்கள். சேரி என்பது மக்கள் ஒற்றுமையாகச் சேர்ந்து வாழும் இடம் என்பது பொருள். எனவே, அதைத் தவறாக நினைக்க வேண்டாம்.

(பிற்பகல் 12-50)

**திரு. கு. தமிழரசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. ஆனால் சொல்லுகின்றபோது அந்த வார்த்தையை இழிவுபடச் சொல்கிறார்களே தவிர இப்படிப்பட்ட தமிழ்ப் பொருள்பட சொல்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஒப்புக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

[திரு. கு. தமிழரசன்] [1987 ஏப்ரல் 7

கல்வித் துறையைப் பொறுத்தவரையில் சில திட்டங்களை எல்லாம் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். எல்லா நிறுவனங்களிலும் 18 சதவீதம் நிச்சயமாக வழங்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறார்கள். சென்னை போன்ற பெரிய நகரங்களில் 'டான் போஸ்கோ' பள்ளி இருக்கிறது; அதைப்போலவே 'ஹோலி ஏஞ்சல்ஸ்' பள்ளி இருக்கிறது. அவை எல்லாம் அரசு உதவி பெற்று நடைபெறுகின்ற பள்ளிகள்தான். ஆனால் அங்கே எல்லாம் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு 18 சதவீதம் தரப்படவில்லை. டான் போஸ்கோ பள்ளியில் ஒரு விழுக்காடு கூட இடம் ஒதுக்கப்படவில்லை. ஹோலி ஏஞ்சல்ஸ் பள்ளியிலும் ஒரு விழுக்காடு கூட இடமில்லை. ஆகவே, இப்படிப்பட்ட நிறுவனங்களைப் பொறுத்தவரையில் அரசு நிர்ணயித்துள்ள விகிதாச்சாரப்படி ஒதுக்கீடு இல்லவே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போன்று மருத்துவக் கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ். படிப்புக்கு 18 சதவீதம் ஒதுக்கி, அந்த அளவுக்கு தாழ்த்தப்பட்டவர்கள் இடம் பெறுகிறார்கள். ஆனால் எம்.டி., டி.சி.எச்., டி.ஜி.ஓ. போன்ற டிப்ளமோ படிப்பில் 18 சதவீதம் ஒதுக்கப்படவில்லை. காரணம் என்னவென்று கேட்டால் டி.ஜி.ஓ-வில் 4 இடம் இருக்கிறது: எம்.ஜி.ஓ.வில் 5 இடம் இருக்கிறது; அதில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மற்றவர்களுக்கு என்று பிரிக்க முடியாது என்று சொல்லி, தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடம் இல்லாமலேயே செய்துவிடுகிறார்கள். எனவே, டிப்ளமோ படிப்புகளில் கூட 18 சதவீதம் வருகிறதா என்பதைப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அரசு கடந்த ஆண்டு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 35 மதிப்பு எண்கள் இருந்தால் போதும், சேர்த்துக்கொள்ளலாம் என்று ஒரு ஆணை போட்டது. அது ஓராண்டுக்கு மட்டும்தான் என்று செயலாளர் குறிப்பிட்டிருக்கிறார். இப்படி ஓராண்டுக்கு என்று இல்லாமல் நிரந்தரமானதாக அந்த ஆணை இருந்தால் இந்த ஆண்டு தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருந்திருக்கும். ஆகவே, அதை நிரந்தரமான ஆணையாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 7] [திரு. கு. தமிழரசன்]

ஆதிதிராவிட நலப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு முழுவதிலும் அந்தப் பள்ளிகளில் மேசை, நாற்காலி இல்லை, மாணவர்கள் உட்கார இடமில்லை என்ற நிலைதான் இருக்கிறது. அங்கே இருக்கிற மாவட்ட நல அதிகாரிகளைக் கேட்டால் எங்களுக்கு வசதி இல்லை; போதுமான பணம் இல்லை; தேவையான தொகை ஒதுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். ஆகையால் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் வெறும் தரையில் மரத்தடியில் உட்கார்ந்து பாடம் கற்கும் நிலைமை இருக்கிறது. கொள்கை விளக்கக் குறிப்பிலே இந்த மக்களைக் கல்வித் துறை ஒன்றுதான் கைதூக்கி விடும் என்பதைப் பிரதானமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் கல்வி நிறுவனங்களிலே இப்படிப்பட்ட வாய்ப்பில்லாத நிலைமை இருந்தால் அந்த மக்களை எப்படி கைதூக்கி விட முடியும்? டாட்கோ கைத்தறித் துறையைச் சேர்ந்த சில இடங்களில் கைத்தறி நெசவாலைகளை அமைத்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறோம்; மேலும் சில இடங்களில் அமைக்கப்படும் என்ற திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். ஆனால் பல இடங்களில் இந்தத் திட்டம் செயல்படவில்லை. காரணம் என்னவென்று கேட்டால் அங்கே தரப்படுகிற கூலி மிகவும் குறைவாக இருக்கிறது. தினக் கூலியாக 2½ ரூபாய், 5 ரூபாய் என்று தந்தால் அங்கே யார் வருவார்கள்? எனவே இந்த அரசு அந்தத் தொகையை உயர்த்தி, போதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** துணைத் தலைவர் அவர்களே, நேபாள் தறியில் தினம் 7 ரூபாய் முதல் 10 ரூபாய் வரை சம்பளம் தரப்படுகிறது. நேபாள் தறி எல்லா இடங்களிலும் செம்மையாகச் செயல்படுகின்றது. ஒன்றிரண்டு இடங்களில் பழுதுபட்டிருந்தது; அவையும் பழுதுபார்க்கப்பட்டு விட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. தமிழரசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. பொன்னேரியில் இன்னும் செயல்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அண்ணன் எஸ்.எம்.டி. காலத்திலிருந்தே செயல்படவில்லை. இப்படி இருந்தால் எப்படி அந்தச் சமூகம் மேம்பட முடியும்?

[திரு. கு. தமிழரசன்] [1987 ஏப்ரல் 7]

பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 3,000 ரூபாய் என்றும் 5,000 ரூபாய் என்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் கறவை மாடு வாங்கவும் கிணறு வெட்டவும் கடன் வழங்குகிறார்கள். இந்த 3,000 ரூபாய், 5000 ரூபாய் பெறுவதினாலே தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேறி விடுவார்களா? பொருளாதார மேம்பாடு அடைந்து விடுவார்களா? நிச்சயமாக முடியாது. தாழ்த்தப்பட்ட மக்களைப் பொருளாதாரத் துறையிலே உயர்த்த வேண்டுமென்றால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று தனியாக தொழிற்சாலைகளை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை இந்த மன்றத்திலும் வேறுபல இடங்களிலும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் வலியுறுத்தி வருகிறார்கள். தனியாகத் தொழில் பிரிவுகளை அமைக்கலாம்; கூட்டுறவு நூற்பாலைகளை நிறுவலாம்; கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்தலாம். வேறுபல மாநிலங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று தனியாக கூட்டுறவு நூற்பாலைகளையும், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளையும் உருவாக்கியிருக்கிறார்கள். அப்படி உருவாக்குவதன் மூலம்தான், பெரும் தொழில்களைத் தனியாக உருவாக்குவதன் மூலம்தான், தாழ்த்தப்பட்டவர்களுக்கு தொழில் தொடங்க தொழில் முதலீடு செய்வதன் மூலம் தான் பொருளாதார மேம்பாடு அடைய முடியுமே தவிர 3,000 ரூபாய் 5,000 ரூபாய் வழங்குவதால் பொருளாதார மேம்பாடு அடைய முடியாது. ஆகவே, இப்படிப்பட்ட அவல நிலைகளை மாற்றி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று தனியாக கூட்டுறவு நூற்பாலை களையும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளையும் உருவாக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே வலியுறுத்த விரும்புகிறேன்.

இன்றைக்கு நம்முடைய தமிழக அரசு ஈமச்சடங்குத் தொகையை உயர்த்தியிருக்கிறது. அதேபோன்று தாழ்த்தப்பட்ட மாணவர்கள் விடுதிகளில் அவர்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகையை ரூ. 140 ஆக அரசு ஆக்கி இருக்கிறது. இவைகளை எல்லாம் நான் மகிழ்ச்சியோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் கூட அந்தத் தொகையை உயர்த்தித் தந்தால் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். அந்த மாணவர்கள் அதனால் பலன் அடைவார்கள். அவர்களுடைய தேவைகளை நிவர்த்தி செய்துகொள்கின்ற வகையில் அது உதவியாக இருக்கும்.



1987 ஏப்ரல் 7] [திரு. கு. தமிழரசன்]

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனை தருவதற்காக நிலங்கள் கையகப்படுத்துகிற முறைகளைப் பற்றி எல்லாம் இந்தக் கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். நான் பல்வேறு முறை இந்த மன்றத்தில் வலியுறுத்தி இருக்கிறேன். பல்வேறு வழக்குகள் இன்றைக்கு, ஆதிதிராவிடர் வீட்டுமனை தொடர்பானவை நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கின்றன. அவை ஏறக்குறைய 10,000-க்கு மேற்பட்டு இருக்கலாம். ஒவ்வொரு ஊரிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனை வேண்டுமென்று விண்ணப்பம் போடுவார்கள்; அதிகாரிகள் வந்து ஆய்வு செய்வார்கள்; பின்னர் அது அரசுக்குப் போகும்; பின்னர் அந்த நிலச்சொந்தக்காரர் நீதிமன்றத்திற்குப் போவார்; தடையை வாங்கிக் கொண்டு வருவார். இந்த நிலையில், அது அப்படியே நிற்கும். இப்படியே 10 ஆண்டுக் காலம் 15 ஆண்டுக்காலம் கடந்துவிடும். அந்த மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வந்து சேராது. இதிலே நான் வலியுறுத்தி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மின்சாரத்துறையினர் யார் வீட்டு நிலத்தில் வேண்டுமானாலும் கம்பங்களை நட்டுவிடுகிறார்கள். தேசிய நெடுஞ்சாலைத்துறையினர் ஓரத்தில் உள்ள கட்டிடங்களை எல்லாம் இடித்துத் தள்ளிவிடுகிறார்கள். ஆனால் ஆதிதிராவிட நலத்துறை மட்டும் வீட்டுமனைப்பட்டா வழங்குகிறபோது அங்கே இருக்கின்ற நிலச் சொந்தக்காரர்கள் எல்லாம் கோர்ட்டுக்குச் சென்று ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். எனவே மின்சாரத்துறைக்கும், தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கும் சட்டங்கள் எப்படிப் பொருந்துகிறதோ அதேபோல் ஆதி திராவிடர் நலத்துறைக்கும் அந்தச் சட்டங்களைப் பொருத்தி அதற்குத் தடையாக எது இருக்கிறதோ, அந்தத் தடைகளை எல்லாம் தகர்த்து எறிந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா தரவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு உரிய வகையில் தனிச் சட்டங்களை அதற்காக ஏற்படுத்த வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே சென்னையைப் பொறுத்தவரையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சேரி என்ற வார்த்தையே இல்லை என்று சொன்னார்கள். அரசாங்கமே அந்த வார்த்தையை எடுத்துவிட்டு, குடிசைமாற்று வாரியத்தின் மூலம் சேரி, சேரியாக எடுத்துக்கொள்கிற வகையில் சட்டத்தை 10 ஆண்டுகளுக்கு முன்பே பிறப்பித்திருக்கிறது. ஆனாலும்

[திரு. கு. தமிழரசன்] [1987 ஏப்ரல் 7

சென்னைமாநகரத்தில் பல்வேறு சேரிகள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. சென்னையிலே தேனாம்பேட்டையில் கதீட்ரல் சாலை அருகிலே கவாளச்சேரி என்ற ஒரு சேரி இருக்கிறது. அது 100 ஆண்டுகளுக்கும் மேலாக அங்கே இருந்து வருகிறது. அந்த இடம் அங்கே இருக்கிற ஒரு கிறிஸ்தவ கோயிலுக்குச் சொந்தமான இடம். அந்த இடத்தை, இன்றைக்கு யாரோ பணம் தருகிறார்கள் என்பதற்காக தனியார் நிறுவனத்திற்கு விற்று இருக்கிறார்கள். அந்தத் தனியார் நிறுவனம் அங்கே ஒரு பள்ளிக்கூடம் கட்டுவதற்காக அந்த இடம் வேண்டும் என்ற வகையில் 100 ஆண்டுகளுக்கும் மேலாக இருப்பவர்களை எல்லாம் வெளியேற்றுகின்ற நிலைமை இருக்கிறது. அப்படி அவர்களைத் தொந்தரவு செய்துகொண்டு இருக்கிறார்கள். ரவுடிகளை வைத்தும், குண்டர்களை வைத்தும் அவர்களுடைய குடிசைகளைப் பிரித்துப் போடுகிறார்கள்.

சென்னையில் இருக்கின்ற சேரிகளைப் பொறுத்தவரையில் அரசாங்கம் மூன்று வகையில் பிரித்து இருக்கிறது. ஒன்று—அரசாங்கத்தின் நிலத்திலே உள்ள சேரிகள், இரண்டு—தனியார் நிலங்களிலே உள்ள சேரிகள், மூன்று—கோயில் நிலங்களில் உள்ள சேரிகள். ஆனால் தனியார் நிலங்களில் உள்ள சேரிகளானாலும் சரி, கோயில் நிலங்களிலே உள்ள சேரிகளானாலும் சரி, அவர்களை அப்புறப்படுத்துக்கூடாது என்ற நடைமுறை இருக்கிறது. அரசாங்கத்தின் நிலத்திலே உள்ள, சேரிகளாக இருந்தாலும் கூட சட்டப்படி அதனை ஒழித்துவிட்டால் அந்த இடத்தில் அங்கே இருக்கின்ற தாழ்த்தப்பட்டவர்களுக்கு பட்டா வழங்க வேண்டும் என்று மரபு இருக்கிறது.

திரு. சிவசண்முகம் பிள்ளை என்பவர் சட்டப்பேரவைத் தலைவராக இருந்தவர். அவர் வசித்த நுங்கம்பாக்கம் பகுதியில் அவர்பெயரில் உள்ள ஒரு சேரி இடம் தனியாருக்கு விற்கப்பட்டு இருக்கிறது. அங்கே வசிப்பவர்களைக் குண்டர்களை வைத்து, ரவுடிகளை வைத்து கொடுமைப்படுத்துகிற நிலைமையும், அவர்களுடைய குடிசைகளைப் பிய்த்து எறிகிற நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. அதேபோன்று கவாளச்சேரியிலும் செய்கிறார்கள். கோயில் நிலமாக இருந்தாலும் சரி, அல்லது ட்ரஸ்ட் நிலமாக இருந்தாலும் சரி அதிலே தாழ்த்தப்பட்டவர்கள் குடியிருந்தால் அவற்றை அரசு ஆணையில்லாமல் யாருக்கும் விற்கக்கூடாது



1987 ஏப்ரல் 7] [திரு. கு. தமிழரசன்]

என்று இருந்தாலும் விற்று விடுகிறார்கள். எனவே இதிலே ஆதி திராவிட நலத்துறை உரிய நடவடிக்கை எடுத்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனை கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம், சிதம்பரத்தில் உள்ள நந்தனார் கல்விக் கழகத்தை அரசு மையமாக ஆக்கி இருக்கிறது. நான் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களின் சார்பாக இதனை உண்மையிலேயே வரவேற்று, பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுடைய சமுதாயத்தைத் சேர்ந்த தலைவராக இருந்த சுவாமி சகஜானந்தா அவர்கள் மிகப் பெரிய லட்சியத்தோடு சிதம்பரத்தில் கல்விக் கழகத்தை நிறுவினார்கள். ஆனால் சில புல்லுருவிகள் தான்தோன்றித்தனமாக அந்தக் கழகத்தை நடத்திய நிலைமையில் அரசு தக்க நேரத்தில் உரிய நடவடிக்கை எடுத்து கையகப்படுத்திக் கொண்டதற்காக மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசு அதற்கு ஒரு ஆலோசனைக் குழு என்ற ஒரு குழுவை தமிழகம் முழுவதிலும் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் சமூகத்தலைவர்களைக் கொண்டு நிறுவ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

கிராமப்புறங்களிலே இன்னமும் கூட தீண்டாமைக் கொடுமை, ஜாதீயக் கொடுமை எந்த அளவுக்கு பல்கிப்பெருகி தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் பார்த்து வருகிறோம். கிராமப் புறங்களில் மட்டுமல்லாமல் அரசு அலுவலகங்களிலும் கூட அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. அவர்கள் எல்லாம் 18 சதவீத ஒதுக்கீட்டிலே வந்தவர்கள் தானே என்று கேலி பேசுகிற, கிண்டல் செய்கிற, ஏளனம் செய்து கேவலப்படுத்துகிற நிலைமை இன்றைக்கும் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

ஒரே ஒரு நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். துணை வேந்தர் பதவி, மிகப் பெரிய பதவி, தமிழகத்திலே எல்லோரும் பாராட்டக் கூடிய பதவி. டாக்டர் சாந்தப்பா அவர்கள் அந்தப் பதவியிலே இருந்தார்கள். அவர் மிகப் பெரிய அறிஞர். அவரைப் பார்த்து ஒரு சாதாரண பேராசிரியர் ஜாதியைச் சொல்லி நேரடியாகத் திட்டினார், மிகப் பெரிய பதவில் இருக்கக் கூடிய ஒருவரை ஒரு சாதாரண பேராசிரியப் பதவியில் இருக்கக் கூடியவர் ஜாதியின் பெயரைச் சொல்லி

நேரடியாகத் திட்டினார். டாக்டர் சாந்தப்பா அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து அவரை வேலை நீக்கம் செய்தார்கள். டாக்டர் சாந்தப்பா அவர்கள் மிகப் பெரிய அறிஞர். புரட்சித் தலைவருக்கு சமூகப் பொருளாதார நிலையில் டாக்டர் பட்டம் தரவேண்டும் என்று வலியுறுத்தி அதற்கு ஏற்பாடு செய்தவர். அவருடைய பதவிக் காலம் முடிந்தவுடன், அந்தப் பேராசிரியர் மீண்டும் பதவியில் அமர்த்தப் படுகிறார். ஒரு விசாரணை இல்லை, நடவடிக்கை இல்லை. மீண்டும் பேராசிரியராக நியமிக்கப்படுகிறார். ஒரு பெரிய பதவியில் இருக்கக்கூடிய ஒரு துணை வேந்தரைப் பார்த்து ஒரு சாதாரண பேராசிரியர் ஜாதியைச் சொல்லி நேரடியாகத் திட்டுகிறார் என்னும்போது கிராமப்புறங்களில் இருக்கிற சாதாரண மக்கள், தொழிலாளர்கள், இந்தக் குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் என்ன பாதுகாப்பைப் பெற்றுவிட முடியும் என்று தெரியவில்லை.

ஒரு சாதாரண பேராசிரியர், அவர் எப்படிப்பட்டவர் என்றால், அவருக்கு ஒரு முறை அரசு பரிசு தர முன்வந்தபோது புரட்சித்தலைவர் கையினால் வாங்க மாட்டேன் என்று வம்பு பேசி இந்த அரசையே ஏளனம் செய்தவர். அப்படி ஜாதிப் பெயரைச் சொல்லி ஒரு துணைவேந்தரை ஏளனப்படுத்தியவர், அரசையே ஏளனப் படுத்தியவர் மீண்டும் பதவியில் அமர்த்தப் படுகிறார். இப்படி இனிமேல் நடைபெறாமல் அரசு கவனித்துக் கொள்ள வேண்டும். அப்படி நடைபெறாமல் இருக்க வேண்டும் என்றால் அந்தக் குற்றங்களைச் செய்தவருக்கு ஆயுள் தண்டனை வழங்க வேண்டும். அப்படி ஆயுள் தண்டனை வழங்க அரசு முன் வந்தால் தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும்.

அடுத்து, இட ஒதுக்கீடு முறையில் 18 விழுக்காடுகள் முறையாக ஒதுக்கப்படுகிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கு முன் 12 ஆயிரம் பேர்களை வருவாய்த் துறையிலே நிரந்தரமாக்கினார்கள். அதில் இந்த 18 விழுக்காடு ஒதுக்கும் முறை கடைப் பிடிக்கப்பட்டதா என்றால் இல்லை. அப்போது இந்த 18 விழுக்காடு தரப்பட வில்லை என்று எடுத்துச் சொன்னோம். மாண்புமிகு நாவலர் அவர்களும் தவறு நடந்திருக்கிறது. தப்பு நடந்திருக்கிறது, உரிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று





சொன்னார்கள். ஆகவே 18 விழுக்காடு ஒதுக்கீடு முறை சரியாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தரப்படுவதாகச் சொல்வது சரியான தகவல் இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டு அது செயல்பட்டு வருவதாகச் சொல்லுகிறார்கள். அந்தக் குழுவின் அறிக்கையையும் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்போடு இணைத்துத் தந்திருக்கலாம், அது நலமாக இருந்திருக்கும் என்பது என் கருத்து. 18 சதவீத விழுக்காடு ஒழுங்காகக் கொடுக்கப்பட வேண்டும் என்றால், கர்நாடக மாநிலத்தைப் போல், மாராட்டிய மாநிலத்தைப் போல், இன்னும் மற்ற மாநிலங்களில் இருப்பதைப் போல் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று தமிழ்நாட்டிலும் அமைக்கப்பட வேண்டும் என்று கொஞ்சம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

* திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முன் முன்மொழியப்பட்டிருக்கிற ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக் கைகள் மீது நான் சார்ந்திருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் 11-வது பக்கம் 25-வது பாராவில் ஒரு பொருத்தமான வாக்கியத்தைச் சொல்லியிருக் கிறார்கள். அதாவது 'அடி மட்டத்தில் இருக்கும் இம் மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் துயரமானது' என்று சரியாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி துயரமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் தமிழகத்தில் 94.01 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு கோடி மக்களாக இருக்கிற இவர்களின் வாழ்க்கை மிகவும் துயரமானது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படி துயரமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த மக்களுக்கு, 3,600 கோடி ரூபாய் கொண்ட தமிழக வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் 51.11 கோடி ரூபாய் மட்டும் ஒதுக்கியிருப்பது என்பது, அந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை முழுமையாகப் புரிந்து கொண்டு அவர்களை கைதூக்கி விடுகிற முறையில் வகை செய்யப் பட்டிருக்கிறதா என்றால், இல்லையென்று சொல்ல வேண்டிய சங்கடமான நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை மிக வருத்தத்தோடு

கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் தமிழகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற ஏழை எளிய ஆதிதிராவிட மக்கள் குடியிருப்பதற்குக் கூட இடமில்லாமல் இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நாட்டிற்குச் சுதந்திரம் கிடைத்து 40 ஆண்டுகள் ஆகிறது என்று பேசுகிறோம். 20 ஆண்டுகள் திராவிடர் இயக்கம் தமிழகத்தில் இருந்திருக்கிறது என்றாலும் ஆதிதிராவிட மக்கள் குடியிருக்கும் இடம் அவர்களுக்குச் சொந்தமாக்கப்படாமல் இருக்கிற கொடுமை இன்றைக்கும் நீடிக்கிறது. ஆகவே, இரண்டு ஆண்டுகளுக்குள்ளாவது ஆதிதிராவிட மக்கள் குடியிருக்கிற நிலத்தைச் சொந்தமாக்குவதற்கான முயற்சியில் இந்த அரசு ஈடுபடுமா என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரையில் நான் எதிர்பார்க்கிறேன்.

அடுத்து ஆதிதிராவிடர் நலனைக் கவனிப்பதற்காக எங்கள் மாவட்டத்தில் நாகை, நன்னிலம், குடவாசல் ஆகிய மூன்று வட்டங்களுக்கும் சேர்த்து ஒரே ஒரு தனி தாசில்தார் நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த மூன்று வட்டங்களையும் அவர் எப்படி சேர்ந்து பார்க்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கு ஒரு கேள்விக்கு பதிலளிக்கும் போது அமைச்சர் அவர்கள் ஒன்றைத் தெரிவித்தார்கள். தமிழகத்தில் 25 லட்சம் எக்கர் நிலம் அரசாங்கத்தின் கையில் இருப்பதாகச் சொன்னார்கள். இந்த நிலங்களில் அரசு அவர்களுக்கு குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு முன்வர வேண்டும். அவர்கள் மாட மாளிகை, கூட கோபுரங்களைக் கேட்கவில்லை. இந்தக் குடியிருப்பு மனைகளை அவர்களுக்குச் சொந்தமாக்குகிற வகையில் முயற்சியை அரசு எடுக்குமா என்று நான் கேட்கிறேன். அவர்களுக்கு நிலம் சொந்தமாக்குவதில் ஏற்படுகிற சங்கடங்களுக்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் தேவைங்குடி புலியூர் என்ற கிராமத்தில் 28 ஆதிதிராவிட மக்களுக்கு குடியிருப்பு மனை வேண்டுமென்று 1977-ம் ஆண்டு கோரி, இன்று 1987-ம் ஆண்டு வரையில் கொடுக்கப்படாமல், 10 ஆண்டு காலமாக அந்த பேப்பர் அங்குமிங்கும் போய்க் கொண்டிருக்கிறது. அது தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருக்கிறது. இன்னும் அவர்களுக்கு குடிமனை வழங்கவில்லை. அந்த மனைகளை அரசுக்கு விலைக்கு கொடுத்து





விடுகிறோம் என்று நிலச்சொந்தக் காரர்கள் ஒப்புதல் கொடுத்துப் பல ஆண்டுகள் ஆகியும் வழங்கப்படாத நிலையில் 10 ஆண்டு காலமாக அந்த பேப்பர் பயணம் செய்து கொண்டிருக்கிறது. இன்றைக்கும் அந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கிறது. ஆனால் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள், ஆதிதிராவிட மக்களுக்குக் குடிமனைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று. நான் கேட்கிறேன் எனக்குத் தெரிந்த வரையில் என்னுடைய தொகுதியில் 1986-87 ஆம் ஆண்டில் ஒரு ஆதிதிராவிடருக்குக்கூட குடியிருப்பு மனைப்பட்டா வழங்கப்படவில்லையென்பதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். இதே மன்றத்தில் மாண்புமிகு முன்னவர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும் போது சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் கிட்டத்தட்ட குடிமனை கேட்டு மனு செய்திருப்பவர்களின் 52 ஆயிரம் மனுகள் நிலுவையில் இருக்கிறன்ன.

(பிற்பகல் 1-10)

அந்த மாவட்டத்திலே 52 ஆயிரம் மனுக்கள் என்று சொன்னால், தமிழகம் முழுவதிலும் லட்சக்கணக்கான குடும்பங்கள் குடியிருப்பதற்கு மனையில்லாமல் மனுச் செய்தவர்கள் மனு செய்யாதவர்கள் எவ்வளவு பேர்கள் குடியிருக்க மனையில்லாமல்-வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் பார்த்து 2 ஆண்டுகளுக்குள் ஆதிதிராவிடர்கள்குடிருக்கக் கூடிய இடத்தை அவர்களுக்குச் சொந்தமாக்கிக் கொடுக்க வேண்டும், அதற்கு நடவடிக்கை எடுப்பீர்களா என்று நான் அறிய ஆசைப்படுகிறேன்.

அதேபோல் இந்தக் குடியிருப்பு மனை வழங்குவதில் இன்றைக்குக் கிராமத்திலே இருக்கிற ஆதிதிராவிடர்களுக்குத் தான் குடியிருப்பு மனை வழங்குகின்ற சட்ட விதிகள் இருக்கின்றன. பேரூராட்சிகளிலும், நகராட்சிகளிலும் இருக்கின்ற ஆதிதிராவிடர்களுக்குக் குடியிருப்பு மனை வழங்க அவர்கள் குடிசையிலே வாழ்ந்து கொண்டிருப்பவர்களாக இருந்தாலும்—விதிகளில் இடமில்லை. எனவே ஆதிதிராவிடர்கள் பேரூராட்சியில் இருந்தாலும், அல்லது நகராட்சிகளில் இருந்தாலும் அவர்கள் வசதியற்ற நிலையில் குடிசைகளில் வாழ்ந்து கொண்டு, தினக் கூலிகளாக வேலை செய்து கொண்டு இருக்கக் கூடியவர்களுக்கும் குடியிருப்பு மனை வழங்க வேண்டும்.

[திரு. கோ. வீரய்யன்] [1987 ஏப்ரல் 7

ஒருசிலர் ஓட்டு வீடுகளிலே வாழ்ந்து கொண்டிருக்கலாம். ஆனால் பெரும்பாலான ஆதிதிராவிட மக்கள் குடிசைகளிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே நகராட்சிகளாக இருந்தாலும் பேரூராட்சிகளாக இருந்தாலும் அந்த ஏழை எளிய ஆதிதிராவிட மக்களுக்கு நீங்கள் வீட்டு மனை கொடுப்பதற்கு ஏற்ற வகையில் சட்ட விதிகளை மாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வீடுகள் கட்டுவதற்குக் கொடுக்கக்கூடிய நிதியை உயர்த்துவது பற்றி அரசின் ஆய்விலே இருப்பதாகச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆதிதிராவிடர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற 6 ஆயிரம் ரூபாயை 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டும். அதேபோல் பழங்குடியினருக்கும் 9 ஆயிரம் ரூபாய் என்று இருப்பை மாற்றி, 15 ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டும். தினசரி பொருள்களினுடைய விலைகள் உயர்ந்து கொண்டிருக்கக்கூடிய நேரத்தில் அவர்கள் வீடு கட்டுவதற்கு ஒதுக்கக்கூடிய தொகை போதுமானதாக இல்லை. எனவே இதை உயர்த்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கல்வியைப் பற்றி கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். இந்த ஆதி திராவிட நலப் பள்ளிகள், அது ஆரம்பப் பள்ளிகளாக இருந்தாலும் சரி, மேல்நிலைப் பள்ளிகளாக இருந்தாலும் உயர்நிலைப் பள்ளிகளாக இருந்தாலும், அந்த மாணவர்கள் அங்கு சென்று படிக்கக்கூட முடியாத அளவிற்கு மிக மிக மோசமான நிலையில் கீத்துக் கொட்டகைகளில், பாழடைந்த இடங்களில், அந்தப் பள்ளிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும் சுகாதார வசதியற்ற நிலைமையில் அந்தப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அந்தக் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று இது பற்றிக்கேட்டால், எங்களுக்கு போதிய நிதியில்லை என்று சொல்கிறார்கள். ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் உள்ள பள்ளிகளில் பணிபுரியக் கூடிய, மாவட்ட அளவிலே பணி புரியக்கூடிய ஊழியர்களுக்கு 2 மாதமாக ஊதியம் கொடுக்க முடியாத நிலைமையிருக்கிறது. அரசு அதற்குப் பிறகு அனுமதித்து ஊதியம் பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே, அந்தக் கல்வி நிலையங்களை எல்லாம் சீராகச் செப்பனிட்டுக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 7] [திரு. கோ. வீரய்யன்]

அதேபோல் மாணவர்கள் விடுதிகள். என் தொகுதியில் குறிச்சி என்ற இடத்தில் அரிசன மாணவர் விடுதி இருக்கிறது. அது கீத்துக் கொட்டகையில் தான் இயங்கி வருகிறது. அதனுள்ளே புகுந்து போய், வெளியே வருவதற்குள் என்ன விபத்து ஏற்படுமோ என்ற அச்சம் ஏற்படுகின்ற அளவிற்கு அந்த விடுதி இருக்கிறது. எனவே அங்கே மாணவர் விடுதி ஒன்றைக் கட்டித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியிலே ஒரு மாணவர் விடுதி கீத்துக் கொட்டகையிலே இருக்கிறது என்றும், அது இடிந்து விழக்கூடிய நிலையிலே இருப்பதாகவும் சொன்னார்கள். பொருளாதார அடிப்படையில் படிப்படியாக விடுதிகளைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர், நாளைக்கே வாடைக்கு நல்ல கட்டிடமாக பிடித்துக் கொடுத்தால், அந்த இடத்திலே இந்த மாணவர் விடுதியை மாற்றிக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலுக்கு நன்றி. நான் கடந்த 2 ஆண்டுகளாக இதைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எழுதிக் கொடுத்தும், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே இதைப் பற்றி பேசியும், எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் அந்த மாணவர் விடுதியில் சேருவதற்குத் தயங்கி, நாகைப்பட்டினத்தில் உள்ள விடுதியில் சேருவதற்கு மாணவர்கள் மனுக் கொடுக்கிறார்கள். இதனால் குறிச்சியில் உள்ள இந்த மாணவர் விடுதிக்கு மாணவர்கள் வரமுடியாத நிலைமை இருக்கிறது. வேறு இடத்தை வாடகைக்கு பார்த்து கொடுங்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் வாடகைக்கு இடம் பிடித்துக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அதை ஏற்று, மாணவர் விடுதியை மாற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த அவையிலே ஒன்று குறிப்பிடப்பட வேண்டும். ஜாதிச் சான்றிதழ் வாங்குவதைப் பற்றிச் சொல்ல வேண்டும். இன்றைக்கு மிகப் பெரிய அளவிற்கு நாடு முன்னேறியிருக்கிறது,

நாட்டிலே வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள், பின்தங்கியவர்கள், ஆதி திராவிட மக்கள் பெரும் அளவிற்கு படித்து, ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். போன்ற பெரும் பதவிக்குக் கூட வந்துவிட்டார்கள். இருந்தாலும், கல்வி நிலையங்களில் சேருவதற்கு ஜாதிச் சான்றிதழ் வாங்க வேண்டும் என்று செல்லும்போது 'பறையன், பள்ளன், செக்கிலியன்' என்று எழுதிக் கொடுத்தால்தான் ஜாதிச் சான்றிதழ் கொடுக்கக் கூடிய அளவிற்கு விதிகள் இருக்கிறதே, அந்த விதிகளை மாற்றுவதற்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? அந்த விதியை மாற்றவேண்டும் என்று நாங்கள் பல ஆண்டுக்காலமாக வற்புறுத்தி வருகிறோம். எனவே, 'பறையன், பள்ளன், செக்கிலியன்' என்று இல்லாமல், ஆதி திராவிடர் என்று எழுதிக் கொடுத்தாலே அந்த ஜாதிச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும், அதற்கு அரசு ஆணையிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இவ்வளவு ஆண்டுகளுக்குப் பிறகும் மிகவும் சங்கடப்படக்கூடிய அளவிற்கு, இந்த ஜாதிச் சான்றிதழ் வாங்குகின்ற நிலை இருப்பதை மாற்றி, அரசு உத்திரவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல்தான் தெருக்களுக்கு பாதை வசதி சரியாக இல்லை. குடிசைகளுக்கு மின் விளக்குகள் வேண்டும் என்று அந்த விவசாயத் தொழிலாளர்கள் கேட்டால் நிச்சயமாக அதற்கான பொருட்கள் கையில் இல்லை என்று மின்சார வாரியம் கையை விரித்து விடுகிறது. அதனால் ஆயிரக்கணக்கில் மின் விளக்கு கேட்டு வந்த மனுக்களுக்கு இன்றைய வரையில் கிடைக்காமல் இருக்கிறது. ஏராளமான தெருக்களுக்கு பாதை வசதி இல்லை. பல ஆண்டுக் காலமாக கேட்டாலும் பணம் இல்லை, பணம் இல்லை, பணம் இல்லை என்று சொல்கிறார்கள். சரியானபடி பாதைகள் இல்லை, கிணறுகள் இல்லை, தெரு விளக்குகள் இல்லை, குடிசைகளுக்கு விளக்குகள் கொடுப்பது இல்லை. அவன் செத்த பிறகு சுடுகாட்டுக்குச் செல்ல வேண்டும் என்றால் அந்த சுடுகாட்டுக்கும் பாதை இல்லாத நிலை தான். என்னுடைய தொகுதியில் மட்டப்புறம், மேலச்செட்டிச்சேரி, செம்பிய மகாதேவி போன்ற இடங்கள் இன்னும் நிறைய இருக்கின்றன, நான் 2, 3 இடங்களைத் தான் குறிப்பிட்டு இருக்கிறேன்—ஏராளமான இடங்களுக்கு சுடுகாட்டுக்கு பாதை இல்லாமல் இருக்கின்ற கிராமங்கள் நிறைய இன்றைக்கும் இருக்கின்றன. குறிப்பாக



நான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் பேசும் போதும், நாகப்பட்டினம் ஆர்.டி.ஓ.விடம் பேசும்போது குறிப்பிட்டுச் சொன்னேன். நீங்கள் அந்த இடுகாட்டுக்கு பாதை வசதி செய்து கொடுங்கள், இல்லை என்றால் நல்ல பாதை இருக்கக் கூடிய இடத்திற்கு அந்த இடுகாட்டை மாற்றிக் கொடுங்கள் என்று கேட்டேன். 2 ஆண்டுகளுக்குப் பிறகும் இன்னும் அந்த இடுகாட்டுக்கு பாதைவசதி செய்து தரவில்லை. சுதந்திரம் பெற்று 40 ஆண்டுகள் ஆகியும் இந்தத் திருநாட்டில் ஆதிதிராவிடர்கள் இடுகாட்டுக்கு பாதை இல்லாமல் எண்ணற்ற கிராமங்கள் இன்றைக்கும் தமிழகத்தில் இருக்கின்றன. அதற்காக கேட்டால் பணம் இல்லை, பிறகு பார்க்கலாம் என்று சொல்கிறார்களே தவிர உரிய முறையில் உரிய ரோடுகள் இல்லாமல் இருக்கின்றன.

இன்றைக்கு எனக்கு முன்னால் பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். ஆதி திராவிடர் மக்களுக்கு முன்னால் ஜாதியை வைத்து இருந்தோம், பிறகு பழங்குடியினர் என்று சொன்னோம். பிறகு அரிசனங்கள் என்று சொன்னோம், பிறகு ஆதி திராவிடர்கள் என்று இப்போது சொல்கிறோம். இது எல்லாம் ஏட்டு அளவில் உள்ள பெயர் மாற்றங்களே தவிர கிராமப் புறங்களில் இருக்கக்கூடிய அந்த ஆதி திராவிட மக்களுக்கு இன்றைக்கு நாடு முழுவதும் நடக்கக் கூடிய முறையில் ஜாதியின் பெயரால் அவர்கள் ஒடுக்கப்படு கிறார்கள், ஒடுக்கப்படுகிறார்கள், துன்புறுத்தப்படுகிறார்கள், அவைகள் வேதனை மிகுந்த, துயரம் மிகுந்த காட்சிகளாக இருக்கின்றன. அதற்கு தமிழகம் விதிவிலக்கு என்று சொல்லிவிட முடியாது. இங்கே 2 மாத காலமாக பேசிக்கொண்டு இருக் கிறோம், கிராமப்புற மக்களுக்கு, பெண்களுக்கு காலணி வழங்குகிறோம் என்று அதற்காக 10 கோடி, 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி இருக்கிறோம். ஆனால் இன்றைக்கு தஞ்சை மாவட்டத்திலே பூண்டியிலே கபிஸ்தலத்திலே மற்றும் பலவிடங் களில் ஆண்களே செருப்பு போட்டுக்கொண்டு தெருவில் நடக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆனால் நாம் இங்கே பெண்களுக்கு செருப்பு கொடுக்கக் கூடிய [illegible] பேசிக் கொண்டு இருக்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்களை மேல் ஜாதிக்காரர்கள் தாக்கும்போது அரசியல் கட்சிகள் கூட இங்கே ஆதி திராவிடர்களுக்காக அந்த ஏழை எளிய மக்களுக்காக

[திரு. கோ. வீரய்யன்] [1987 ஏப்ரல் 7

அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று பேசக்கூடிய அரசியல் கட்சிகள் கூட அந்த ஆதி திராவிடர்கள் தெருதெருவாக தாக்கப்படும்போது மேல் ஜாதிக்காரர்கள் இருக்கக்கூடிய அரசியல் கட்சிகள் கூட அந்த ஆதிதிராவிடர்கள் தெருத்தெருவாக காரர்களோடு சேர்ந்து கொண்டு இருக்கக்கூடிய காட்சியை நாம் பலயிடங்களில் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். தமிழகத்தில் விழுப்புரம் இதற்கு ஒரு சாட்சியாக அமைந்து இருக்கிறது.

குறிப்பாக, அவர்களுக்கு குறைந்தபட்ச சட்டக் கூலி கொடுங்கள் என்று கேட்டால் அவர்களுடைய வீடுகளை எரித்து நாசம் செய்கிறார்கள். சென்ற ஆண்டு திருச்சி மாவட்டத்தில் நெய்குப்பம் என்ற இடத்தில் 400 குடும்பங்கள் சட்டக்கூலி கேட்டபோது அவர்களை எரித்து சாம்பல் ஆக்கியது நமக்கு எல்லாம் தெரியும். இப்படி ஏழை எளிய மக்களுக்கு, ஆதி திராவிட மக்களுக்கு எதிராக நடக்கக்கூடிய சமூகக் கொடுமைகளை தடுத்து நிறுத்தி அவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்கு உரிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்

பழங்குடியினரைப் பொறுத்தவரையில் கல்வராயன் மலை, ஜவ்வாது மலையில் இருக்கக்கூடிய அந்த மக்களுக்கு அந்த நலிந்த மக்களுக்கு பட்டா வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பலமுறை அரசிடம் முறையிட்டும், அது கிடைக்கவில்லை. அதிகாரிகளைக் கேட்டால் நாங்கள் கொடுப்பதற்கு தயார், ஆனால் உரிய சர்வேயர் எங்கள் கையில் இல்லை அதை சர்வே செய்து கொடுப்பதற்கு, என்று திரும்பத்தூரில் உள்ள ஆர்.டி.ஓ. அவர்கள் சொல்கிறார்கள். எனவே உரிய சர்வேயர்களை நியமித்து அவர்களுக்கு அதைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இனாம்தார்களிடமிருந்து 1976 ஆம் ஆண்டு அரசு அதை எடுத்துக்கொண்டது. அதிலே பல ஆண்டுகள் பல தலைமுறை, தலைமுறையாக வாழ்கின்ற மக்கள் அதை அனுபவித்தும் வருகின்ற அந்த இடத்தை அந்த மக்களுக்கு சொந்தமாக்கித் தர முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 7] [திரு. கோ. வீரய்யன்]

(பிற்பகல் 1-20)

அதேபோன்று தான் இந்த மலைவாழ் இடங்களில் இருக்கக் கூடிய பழங்குடியினரைப் பொறுத்தவரையில், வனத்துறை அதிகாரிகளால் அவர்கள் மிகவும் கொடுமைப்படுத்தப்படு கிறார்கள். வனத்துறை, காவல்துறையைச் சார்ந்த அதிகாரி களால் மிகப் பெரிய கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். மலையிலே வாழ்ந்துகொண்டிருக்கக் கூடிய மக்கள் அப்படி கொடுமைகளுக்கு ஆட்படுத்தப்பட்டு, பொய் வழக்குகள் போடப் பட்டு கொடுமைகளை அனுபவிக்காத மலைவாழ் மக்களே இல்லை என்ற நிலை இருக்கிறது. சில பெரிய மனிதர்கள் மலையிலே இருக்கின்ற மரங்களை எல்லாம் வெட்டி எடுத்துக் கொண்டு போய்விட்டு, மலையிலே இருக்கின்ற மலைவாழ் மக்கள் வெட்டியெடுத்துச்சென்றதாக பொய் வழக்குகளைப் போட்டு, அவர்களை துன்புறுத்துகின்ற நிலைமை இருக்கிறது. கல்ராயன் மலையில் நடந்த, இப்படிப்பட்ட சம்பவங்களைப் பற்றி அமைச்சர் அவர்களிடம் நானே அங்கேயிருந்து வந்த மனுக்களை கொடுத்திருக்கிறேன். அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இந்த மலைவாழ் மக்களுடைய நலனை பாதுகாப்பதற்காக, அவர்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய கொடுமைகளை தெரிந்து கொள்வதற்காக, இந்தச் சட்டப் பேரவையில் ஒரு குழுவை நியமித்து, அந்த மலைகளுக்கு நேராகச் சென்று அங்கே அவர்கள் அனுபவிக்கின்ற கொடுமைகளைப் பார்த்து தெரிந்து கொண்டு, இந்த அவைக்கு சொல்வதற்கான ஒரு குழுவை நியமிக்க வேண்டு மென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்துத் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின்கீழ் 1986 ஆம் ஆண்டில் 12,148 வழக்குகள் பதிவு செய்யப்பட்டதாகவும் அதிலே 4,161 வழக்குகளும் தண்டனை வழங்கப்பட்டிருப்பதாகவும், நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக் கிறார்கள். ஏறத்தாழ மீதமுள்ள 8,000 வழக்குகள் என்ன வாயிற்று நடைமுறையில் இருக்கிறதா, அல்லது முடிந்து விட்டதா, அல்லது அதன்மீது விசாரணை நடைபெறுகிறதா என்ற விவரங்கள் கொள்கைக் குறிப்பிலே இல்லை. நம்முடைய அமைச்சரவர்கள் பதில் அளிக்கும்போது, அதற்கான விவரங் களை அளிப்பார்கள் என்று கருதுகிறேன்.

[திரு. கோ. வீரய்யன்] [1987 ஏப்ரல் 7

இந்தக் குற்றங்களை விசாரிக்க நீதிமன்றங்கள் போதுமானதாக இல்லை. தஞ்சை மாவட்டத்தில் ஒரேயொரு நீதிமன்றம் தான் இருக்கிறது. கீழத் தஞ்சைக்கு என்று ஒரு நீதிமன்றம் தனியாக ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றே ஒன்று. பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கென்று கட்டிடம் கட்டுவதற்கான இடத்தை வாங்கி, அந்த இடத்திற்கான பணமும் அரசு செலுத்தி, அந்த நிலச் சொந்தக்காரர் அந்த நிலத்தைக்கொடுக்க முடியாது என்று நீதிமன்றத்திற்குச் சென்று, நீதிமன்றம் விசாரணை நடத்தி, வழக்கு முடியும் தருவாயில் இருக்கும்போது, திருச்சியிலுள்ள பாப்பாரக்குறிச்சி என்ற இடத்திலுள்ள ஆதிதிராவிட பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கான கட்டிட வழக்கு உயர்நீதிமன்றத்தில் முடியும் தருவாயில் இருக்கும்போது அரசு அந்த வழக்கை ஏன் வாபஸ் பெற்றது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன். பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

**திரு. சோ. கலிதீர்த்தான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு கோ. வீரய்யன் அவர்கள் பேசும்போது கல்ராயன் மலையிலுள்ள அனைத்து மலைவாழ் மக்களும் தொல்லைகளுக்கு ஆளானார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் அவ்வாறு சொல்வது தவறு. ஏதோ மற்றவர்கள் சொல்வதை வைத்துப் பேசுகிறார்கள். ஏதோ ஒரு சிலர் தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கலாம், இன்னல்பட்டிருக்கலாமே ஒழிய, எல்லோரும் அந்த இன்னல்களுக்கு ஆளானார்கள் என்று சொல்வது தவறு.

**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே; நம்முடைய உறுப்பினர் கலிதீர்த்தான், அந்தத் தொகுதியின் உறுப்பினர் என்று நன்றாகத் தெரியும். நான் அதைத் தெரிந்துதான் சொல்கிறேன். கல்வராயன் மலைக்கு நான் 6 முறை சென்று, மலையிலே இருந்த அந்த மக்களிடம் தங்கி, வாழ்ந்து, அவர்களுடைய இன்னல்களையும், என்னைவிட அவர் நன்றாக அறிவார்கள். இந்த அவையிலே ஆயிரங்களையும் நேரில் பார்த்திருக்கிறேன். அதைப்பற்றி சொல்வதற்கு அவருக்குச் சங்கடமாக இருக்கலாம். அந்த



1987 ஏப்ரல் 7] [திரு. கோ. வீரய்யன்]

சம்பவங்களைப் பற்றி பலமுறை நான் எழுத்து மூலமாக 3, 4 குறிப்புகளை அமைச்சர் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.24 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

மாலை 4.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் **தலைவர் திரு. வேட சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.**

**7. வரவு-செலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு—தொடர்ச்சி. கோரிக்கை எண் 31—பழங்குடியினர் ஆதிதிராவிடர் முதலியோர் நலன் (தொடர்ச்சி).**

**திரு. சோ. கலிதீர்த்தான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விழைகிறேன். தமிழ்நாட்டில் இப்போது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 20 சதவிகிதத்தினர் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் மலைவாழ் மக்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி, மக்களின் மேம்பாடு என்பது தாழ்த்தப்பட்ட மக்களின் மேம்பாட்டைப் பெரிதும் சார்ந்ததாக இருக்கிறது. இதை மனதில்கொண்டு சமூகத்திலுள்ள சுமார் 50 சதவீத மக்களை வறுமைக்கோட்டிற்குமேல் உயர்த்த வேண்டுமென்ற மாநில அரசின் உயர்ந்த எண்ணமும் போக்கும் பாராட்டத்தக்கதாகும்.

என்னுடைய தொகுதியிலே சுமார் 30 ஆயிரம் பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் 1976 ஆம் ஆண்டுதான் அவர்கள் சுதந்திர இந்தியாவிற்குள் வரமுடிந்தது. அங்கே இருக்கின்ற மக்களின் பொதுவான வாழ்க்கைத்தரம் அடிப்படை வசதிகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. எனினும் கல்வராயன்மலைப் பகுதியில் அந்த மக்களின் மேம்பாட்டிற்காக 75

சதவீத மானியம் கொடுத்து அரசு ஊக்கம் தருகிறது. அந்த மக்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க மாறுதல் இன்னும் தேவைப்படுகிறது.

நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வதெல்லாம் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தும்போது அவை மக்களின் முன்னேற்றத்திற்குப் பொருத்தமானவையா என்று சிந்தித்து திட்டங்களைத் தீட்டவேண்டும். அதைப்போலவே அந்த மக்களின் தேவைகளை உணர்ந்து தீட்டப்படும் திட்டங்கள்தான் வெற்றியைத் தரும்.

ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளைச் செய்து தர அரசு முன்வருவதைப்போல் பழங்குடி மக்களுக்கும் செய்து தரவேண்டும். குக்கிராமங்களிலே பழங்குடி மக்கள் வாழ்கிறார்கள், அவர்களுக்கும் குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அதுவும் மலைப் பகுதிகளிலே இருக்கின்ற அந்த மக்களில் பெரும் பகுதியினர் குடிசைப் பகுதிகளிலேதான் வாழ்ந்து வருகிறார்கள். எப்படி தாட்கோ நிறுவனத்தின் மூலமாக எல்லாக் கிராமங்களிலும் தன்னிறைவுத் திட்டம் போன்று வீடுகள் கட்டித்தரப்படுகிறதோ அதைப்போன்று மலையில் வாழ்கின்ற அந்தப் பழங்குடியினருக்கும் விடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டும். இப்போது 600 வீடுகள் ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாகவும் என்.ஆர்.இ.பி. மற்றும் ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டங்கள் மூலமாக திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்பட்டுத்தப் படுகிறதோ அதைப்போன்று அந்தத் திட்டங்களை விரிவுபடுத்தி கூடுதலாக நிதியை ஒதுக்கி அவர்களுக்கு வீடுகளைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு பழங்குடியினர் மேம்பாட்டிற்காக 973 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதற்காக நான் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது அந்த மக்களின் வருமானத்தையும் வேலை வாய்ப்பையும் தன்னிறைவையும் ஏற்படுத்தும் வகையில் அமைந்திட வேண்டும்.

அரசின் குறிப்பேட்டில் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு உதவும் திட்டங்கள் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன. அந்த மக்கள் எல்லாம் அடிப்படை அல்லது தொடர்க்க கல்வியைப் பெற்றவர்கள். உயர்கல்வியைத் தொடர்ந்து





பெறுவதற்கு அரசு வசதிகளை ஆங்காங்கே பெருக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாநிலத்தில் பழங்குடியினர் மொத்தம் 36 பிரிவினர் உள்ளார்கள். என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கல்வராயன் மலையில் அனைவரும் மலையாளிகள் என்ற பிரிவைச் சேர்ந்தவர்கள். பல்லாண்டுக்காலமாக அடிமைத்தனத்தில் இருந்த அவர்கள் வாழ்வு மிளிர அரசு பின்வருவனவற்றில் கவனம் செலுத்த வேண்டும். ஆதி திராவிடர்களுக்கு உள்ளது போல் பழங்குடியினருக்கும் தனியே ஒரு வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் தோற்றுவிக்க வேண்டும்.

இன்னும் ஒரு முற்றுப்பெறாத பிரச்சினையாக இருப்பது, நிலங்களை ஒப்படைப்பது (செட்டில்மெண்ட்). பழங்குடியினர் விரைந்து நன்மை பெறும் வகையில் அவற்றைச் செயல்படுத்த வேண்டும். பழங்குடியினருக்குப் பட்டா செய்யப்பட்ட நிலத்தை மற்றவர்கள் வாங்காத அளவு சட்டத்தின் மூலமாகத் தடை விதிக்க வேண்டும்.

அந்த மலையை அரசாங்கம் எடுத்த பிறகு, இந்த நிலங்களை சர்வே செய்தபொழுது அங்கேயுள்ள அதிகாரிகள் எல்லாம் காடு என்று சொன்னதை எல்லாவற்றையும் ரெக்கார்டிலே பதிவு செய்து விட்டார்கள். ஆனால் காடு என்று அரசாங்கத்திலே வைத்துக் கொள்வோமானால் அது வனத் துறையைச் சேர்ந்ததாகப் போய்விடும். அங்கு ஏறத்தாழ 57,000 ஹெக்டேர் நிலம் உள்ளது. மக்கள் ஏறத்தாழ 37,000-க்கு மேல் வசித்து வருகிறார்கள். தற்போது 5,000 குடும்பங்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மற்றுமுள்ளவர்கள் பட்டா இல்லாமல், ஆண்டாண்டுக் காலமாக அனுபவித்து வந்த, இரண்டுமூன்று ஆண்டுகளாக அனுபவித்த நிலங்களையெல்லாம் வனத்துறை செடிகளை நடுகின்ற நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. அந்த நிலங்களுக்கெல்லாம் அரசாங்கம் பழங்குடியினர் வாழ்கின்ற இடங்களுக்கு எல்லாம் தடை விதிக்கின்றார்கள். வனத் துறையினர் எங்களுக்குத்தான் சொந்தம் என்று பல தொல்லைகளை மக்களுக்குக் கொடுத்து வருகிறார்கள். நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள், அவர்களுக்கு அறிவுரை செய்து, அந்தப் பழங்குடியினருக்குப் பாதுகாப்பாக, உதவியாக இருக்க வேண்டும்.

முன்பு வனத் துறை அமைச்சரும் மற்றவர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க மாவட்ட ஆட்சித் தலைவரும் வனத் துறை அதிகாரிகளும் என்னைப் போன்றவர்களைச் சேர்த்து, குழு அமைத்து, அக்குழுவின் மூலம் மலைவாழ் மக்களுக்கு என்ன, என்ன செய்ய வேண்டுமென்று திட்டம் தீட்டி அரசாங்கத்திற்கு அனுப்பி இருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு ஆதி திராவிட அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி மாண்புமிகு முதல் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அந்தத் திட்டத்தைச் செயல் படுத்த முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, கல்வி, தொழில் நுட்பக் கல்வி வசதிகளை அதிகரிக்க வேண்டும். இந்த மக்களுக்கு வேறு தொழில் அதிகமாகத் தெரியாது. அவர்களுக்கு தொழில் நுட்பக் கல்வி அறிவு அளிக்க, அங்கே பாலிடெக்னிக்கும், கலைக் கல்லூரியும், பொறியியல் கல்லூரியும் ஏற்படுத்தி, மலைவாழ் மக்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எல்லாக் காலங்களிலும் மலைவாழ் மக்கள் சிறுதொழில்கள் செய்யக் கூடிய வகையில் திட்டங்களைச் செயல்படுத்தி தர வேண்டும். அவர்களுக்கு சுகாதார மருத்துவ வசதிகளை அதிகரிக்க வேண்டும். இப்பொழுது 4 ஆரம்பச் சுகாதார மருந்தகங்கள் அங்கே உள்ளன. நான் கூட சென்ற ஞாயிற்றுக்கிழமை சென்று—இந்த ஆசிலே இந்த ஆண்டு இரண்டு சுகாதார மருந்தகங்களைத் துவக்கி வைத்தோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, 4 சுகாதார மருத்துவ மையங்கள் இருக்கின்றன. ஆரம்பச் சுகாதார மையம் ஒன்று—கீழ்ப் பகுதியிலே உள்ள மையங்களைப் போல்—மலை மேலே ஏற்படுத்திக் கொடுத்து ஆரம்ப சுகாதார நிலையத்திலே, மலைவாழ் மக்கள் தங்கி மருத்துவ வசதி பெற தனித் திட்டம் தீட்டி, அவர்களுக்குச் செயல்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அங்குள்ள கூட்டுறவுச் சங்கங்களில் பழங்குடியினர் முழுமையாக ஈடுபட முயற்சிக்க வேண்டும். லேம்ப் சொசைட்டிகள் 3 கல்வராயன் மலையிலே உள்ளன. நானும் சென்ற தடவை சட்ட





மன்ற உறுப்பினராக இருந்த பொழுதும் சேர்த்தேன். இப்பொழுதும் சேர்த்தேன். மலைவாழ் மக்கள் மழையை நம்பி வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்குக் கிணறுகள் வெட்டவும், ஆயில் இன்ஜின் கொடுக்கவும், திட்டங்களைச் செயல்படுத்தவேண்டும், கடன் உதவி அளிக்க வேண்டும். நான் கூட, மாண்புமிகு ஆதி திராவிட நல அமைச்சரைக் கேட்கும்போது இந்தக் கேள்விதான் கேட்டேன். அவர்களுக்கு பட்டா இருந்தால்தான் நிலவள வங்கியோ அல்லது கூட்டுறவுச் சங்கங்களோ கடன் வழங்க முடியும். பட்டா இல்லாத காரணத்தினாலே கடன் கொடுக்க மறுக்கிறார்கள். பொதுவாக பல தகராறுகள் இருக்கின்ற காரணத்தினாலே, அந்த அடிப்படையிலேயாவது, அங்கேயுள்ள கிராம நிர்வாக அலுவலர் மூலமாக அந்த நிலத்தை, 3 ஏக்கரோ, 2½ ஏக்கரோ எவ்வளவு கொடுக்க முடியுமோ அதைக் கொடுத்தால், அவர்களுக்கு கிணறு வெட்டுவதற்கும், ஆயில் என்ஜின் வாங்குவதற்கும், மின்சார மோட்டார் வாங்குவதற்கும் உதவியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்றையதினம் மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் உள்ள கல்வராயன் மலையிலும், வெள்ளி மலையிலும் இருக்கக்கூடிய லேம்ப் சொசைட்டியிலே ஒரு தனி அலுவலர் இருக்கிறார். அந்த அதிகாரியை உடனடியாக மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த லேம்ப் சொசைட்டியினுடைய நிர்வாக இயக்குநர் அவர்களை உடனடியாக அங்கேயிருந்து வெளியே அனுப்பி வைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால், அங்கு வசிக்கின்ற மலைவாழ் மக்களுக்கும், மற்ற பொது மக்களுக்கும் தொல்லைகளை உண்டாக்குகின்ற அளவுக்கு அவர் செயல்பட்டு வருகிறார். இன்றையதினம், இங்கே வனத்துறை அமைச்சர் அவர்களும் வந்திருக்கிறார்கள். நான் நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்திலே மிகவும் முக்கியமான ஒரு வேண்டுகோளாக வைக்க விரும்புவது, அந்த மலைவாழ் மக்களுக்கு முக்கிய வருமானமாக வரக்கூடியது கடுக்காய், புளி போன்றவைகளின் மூலமாகத்தானே தவிர, வேறு எதுவும் கிடையாது. அரசாங்கத்தின் மூலம் எவ்வளவோ கோடிக்கணக்கான ரூபாய்களை அவர்களுக்கு நாம் செலவு செய்கிறோம். அங்கு விளைகின்ற பொருள்களில் ஒருசில பொருள்கள் ஊருக்குள்ளே இருக்கின்ற பட்டா நிலங்களிலேயே கிடைக்கின்றன. எங்கோ ஒருசில இடங்களிலே, காடுகளிலே கடுக்காய் மரங்களும், புளிய மரங்களும்

[திரு. சோ. கலிதீர்த்தான்] [1987 ஏப்ரல் 7

இருக்கின்றன. அங்கே அதிகாரிகள் சர்வே செய்கின்றபோது பார்ப்பீர்களேயானால், ஊா் ஓரத்திலே ஒரு புளிய மரம் இருக்கிறது என்றால் அதுகூட வன இலாக்காவைச் சார்ந்ததுதான என்ற தகராறுகளை உண்டாக்குகின்ற ஒரு நிலைமை இருக்கிறது. அந்த மரங்களின்மூலம் அரசாங்கத்திற்கு அதிக வருமானம் வந்துவிடுவது இல்லை. ஏறத்தாழ 1 லட்சம், 1½ லட்சம் ரூபாய்தான் அதிலே வரும். வனத்துறை அமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களிடத்திலே இதுபற்றிச் சொல்லி மலைவாழ் மக்களுக்கு அங்கே கிடைக்கின்ற புளியையும், கடுக்காயையும் அவர்களே சுதந்திரமாக எடுத்துக்கொள்வதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்குப் போதிய கல்வியறிவு கிடையாது. கொஞ்ச நாளைக்கு அவர்கள் அனுபவித்துக்கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். லேம்ப் சொசைட்டியிலே குத்தகைக்கு விடுகிறார்கள். இந்த குத்தகைக்கு விட்ட காரணத்தினாலே அவர்களுடைய பட்டா நிலத்திலே இருக்கக்கூடிய புளியை எடுத்துக்கொண்டு வந்தாலும் கூட நல்ல விலைக்கு விற்பதற்கு நிலைமை இருக்கிறது கோ-ஆப்பரேடிவ் சொசைட்டியிலே உள்ளவர்கள் எங்கே பாஸ் என்கிறார்கள். மலைவாழ் மக்கள் தெரியாமல், தவறி எடுத்து வந்து விட்டாலும்கூட, அதை பொது மக்கள் வாங்குகின்ற போது எங்கே பாஸ் என்று கேட்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள்கூட இங்கே இருக்கிறார்கள். பஸ்ஸிலேகூட புளியை ஏற்றிச் செல்வதற்கு மறுக்கிறார்கள். இந்தமாதிரி பல தொல்லைகள் அந்த மலைவாழ் மக்களுக்கு ஏற்படுகின்றன. லேம்ப சொசைட்டியில் இதையெல்லாம் நீக்குவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்நின்று, பல நல்ல காரியங்களை மலைவாழ் மக்களுக்காக செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிணறு வெட்டவும், மோட்டார் என்ஜின் வாங்குவதற்கும் அவர்களுக்குக் கடன் கொடுப்பதற்கு ஒரு சிறப்பான திட்டத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று உங்களை கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மானியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுமார் 5 லட்சம் பழங்குடி மக்களை பாதுகாக்க ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு டார்ச் லைட் வழங்க நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்திலே சொல்லி அவர்களுக்கு டார்ச் லைட் வழங்குவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு



[திரு. சோ. கலிதீர்த்தான்] [1987 ஏப்ரல் 7

கிராமத்திற்கு செல்வதாக இருந்தால் நடைபாதை வழியாகத்தான் செல்லவேண்டியிருக்கிறது. வழிகளிலே மலைப்பாம்பு, கரடி, குள்ளநரி போன்றவைகளின் தொல்லைகளெல்லாம் இருக்கின்றன. இவைகளையெல்லாம் முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச்சொல்லி மலைவாழ் மக்களுக்கு டார்ச் லைட் வழங்குவதற்கு ஏற்பாடு செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். 1

வரும் நிதி ஆண்டிலே என்னுடைய தொகுதியிலே உள்ள கோமுகியில் உயர்நிலைப் பள்ளி மற்றும் விடுதி கட்டுவதற்காக நம்முடைய அரசு முன்வந்து, நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களின் அரசு 56 லட்சத்து 32 ஆயிரம் ரூபாயை ஒதுக்கிக் கொடுப்பதற்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுகுறித்து நம்முடைய அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அங்கே ஒரே ஒரு பள்ளிதான் இருக்கிறது என்பதைச் சொல்லி, இன்னொரு உயர்நிலைப்பள்ளியையும் அங்கே ஏற்படுத்திக் கொடுத்து, அதற்குத் தேவையான கட்டிடங்களையும் சோராப்பட்டி என்ற இடத்திலே கட்டிக் கொடுப்பதற்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேற்குப் பகுதியில் வாழுகின்ற மக்கள் முக்கியமாக மழையை நம்பி வாழ்கின்றார்கள். இதனைப் போக்குவதற்கு அரசு இலவசமாக அல்லது அதிக மானியம் கொடுத்து, கிணறுகளை வெட்டுவதற்கு உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். இதனை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் அரசு ஆதி திராவிட மக்கள் இருக்கக்கூடிய பகுதிகளில் குழாய்க் கிணறுகள் தோண்ட 3,000 ரூபாய் மானியம் வழங்குகிறது. அதை கருத்திலே கொண்டு மலைவாழ் மக்களுக்கும் அந்த வசதியை வழங்குவதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இம் மக்களுக்கு வேலைவாய்ப்பை வனத்துறை அதிக அளவில் கொடுக்க இயலும். விதிகளை வைத்து, அம் மக்களை அச்சுறுத்த என்றுவதை விட சமூகக் காடுகள், பழத்தோட்டம் அமைத்தல், வன வளர்ச்சிப் பணிகளில் இவர்களுக்கு அதிக அளவில் வேலை கொடுக்கப்பட வேண்டும். இவைகளை எல்லாம் நம்முடைய வனத்துறை மூலமாக செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தென்னாற்காடு, தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்களில்

வசிக்கும் மலைக் குறவர் இனத்தைச் சார்ந்த குறவர்களை குறவர் என்று அழைப்பதால் இவர்களுக்கு மலைவாழ் மக்களுக்கான சான்றிதழ் வழங்க இயலாத காரணத்தினால மலைவாழ் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க உத்திரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். அன்று ஆதி திராவிட மக்களுக்கு அண்ணல் காந்தியடிகள் தீண்டாமை ஒழிப்பு முறையைக் கொண்டு வந்தார். அதன் பிறகு அம்பேத்கார் அவர்கள் ஆதி திராவிடர் களுக்கு அரசியல் பாதுகாப்பை தந்து சென்றார். 1976-லே நம் முடைய பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் இருந்த போது—இந்த நாட்டிலே சுதந்திரம் அடைந்த இவ்வளவு காலத் திற்கு பிறகு—என்னுடைய தொகுதியில் இருந்த கல்வராயன் மலையில் உள்ள மலைவாழ் மக்களுக்கு சுதந்திரம் ஏற்பட வழி செய்து கொடுத்தார். இன்றோ, ஏழை எளியவர்களின் ஒளி விளக்காகத் திகழும் புரட்சித் தலைவர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் நலனைப் பாதுகாக்கும் அரணாக இருந்து வருகின்றார். என்னுடைய தொகுதிக்கு சில நல்ல காரியங்களை செய்வதற்கு அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியைச் சார்ந்த கல்ராயன் மலைக்கு நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் 5 கோடி ரூபாய் அளவிலே அங்கே போக்குவரத்து வசதி, சாலை வசதிகளை செய்து கொடுத்தார். பேருந்துகளை விடுவதற்காக சென்ற மாதம் மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே வந்து 2 பேருந்து களை துவக்கிக் கொடுத்தார்கள். அதற்கு முன்பாக 2 பேருந்து கள் அங்கே ஓடிக்கொண்டிருக்கின்றன. இந்த நடைபாதையில் சென்றுகொண்டிருந்த மக்களுக்கெல்லாம் பேருந்தில் செல்லக் கூடிய 5 கோடி அளவிற்கு சாலைகளை அமைத்து பேருந்துகளை விடுகின்ற பெருமை நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களையே சாரும் என்பதை சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியைச் சார்ந்த வெள்ளிமலையிலிருந்து தொரப்பட்டு வரையிலும் ஒரு புதிய சாலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அந்தச் சாலையை ஏற்படுத்திக்கொடுத்தால் 10, 15 கிராமங்களில் உள்ள மலைவாழ் மக்கள் பயன் அடைவார்கள். எனவே அங்கு போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். நம் முடைய சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களும் இங்கே இருக் கிறார்கள். போன ஆண்டு கல்ராயன் மலையிலே சுற்றுலாத்



துறை மூலமாக கோடை விழாக்கள் எல்லாம் நடந்தன. புரட்சித் தலைவர் அவர்கள் வந்த பிறகுதான் 3 ஆண்டுகளாக கோடை விழாக்கள் அங்கே நடக்கிறது. அந்தப் பகுதியிலே மோகம் என்ற நீர்வீழ்ச்சி இருக்கிறது. பொது மக்கள் எல்லாம் அதை சென்று பார்க்கின்ற அளவிற்கு போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மோகம் மற்றும் கல்வராயன் பகுதியை சுற்றுலா மையமாக்க வேண்டும். சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களும், போக்கு வரத்துத்துறை அமைச்சர் அவர்களும்—இரண்டு பேர்களும்— இன்றைக்கு இருக்கிறார்கள். அவர்கள் அங்கே வந்தபோது எங்களுடைய கோமுகி அணையில் பார்க்குகள் அமைத்து சுற்றுலா மையமாக மாற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பதாக அன்றையதினம் சொன்னார்கள். அதை நிறை வேற்றிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அரிசியைக் கண்டிராத அந்த கல்வராயன் மலைவாழ் மக்களுக்கு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு வந்த பிறகுதான் அங்கே சத்துணவு மையங்களும் மற்றும் ஆதி திராவிடர் நலப் பள்ளிகளும் ஏற்ப டுத்திக் கொடுத்திருக்கிறார்கள். ஏறத்தாழ 28 ஜி.டி.ஆர்.எஸ். பள்ளிகளும், 59 சத்துணவு மையங்களும் அங்கே செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. அந்த ஜி.டி.ஆர். பள்ளிகளிலே 2,242 மாண வர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். 1,400 மாணவர்கள் அந்த பள்ளியிலேயே, அங்கேயே இருந்து, உண்டு உறங்கி, தங்கி படிக்கி றார்கள். மற்ற மாணவர்களுக்கு அந்த வசதி கிடையாது. அதை கொடுப்பதற்கு நம்முடைய ஆதி திராவிடர் நல அமைச்சர் அவர்கள், எவ்வளவு மாணவர்கள் அந்தப் பள்ளியிலே சேர்த் தாலும் கூட, அங்கே உணவு வழங்குவதற்குரிய சட்டத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 4-20)

அந்த 59 பால்வாடி பள்ளிகளைச் சொன்னேனே. அங்கே ஏறத்தாழ 3,600 பிள்ளைகள் சத்துணவு சாப்பிடுகிறார்கள். அந்தக் குழந்தைகளுக்கு—நம்முடைய புரட்சித் தலைவர் அவர் களுடைய அரசு வந்த பிறகுதான் ஏறத்தாழ மலைவாழ் மக்கள் 5,000 பேர்களுக்கு மேல், அந்தக் கல்வி வசதிகளைப் பெறுகின்ற ஒரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்து இருப்பது இந்த அரசுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல், தன்னிறைவுத் திட்டம். ஏனென்றால், இங்கே இருக்கிறவர்கள் எல்லாம், தன்னிறைவுத் திட்டம், கிராமப் பகுதிகளிலே உள்ள மக்களுக்கு எல்லாம் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்து விட்டோம். மலைப் பகுதி மக்கள் எல்லாம்—சுகாதார வசதி இல்லாமல் கிராமங்களிலும், ஏதும் அறியாத மலைவாழ் மக்கள் இருக்கிற காரணத்தால், சுகாதார வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்கு, தன்னிறைவுத் திட்டம் போல் ஒரு திட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு சிறப்பு நிதியினை இங்கே ஒதுக்கிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கோமுகி அணை அருகி லுள்ள பள்ளியிலேதான், மாணவர்கள் உயர்நிலைப்பள்ளியிலே தான்,—தென்னாற்காடு மாவட்டத்திலேயே மிகவும் மெச்சத் தகுந்த அளவிற்கு முதலிடத்திலே அங்கே படிக்கின்ற மாணவர்கள் பயின்று வருகிறார்கள். அதற்கு இந்த ஆண்டு கட்டிடங்கள் கொடுத்து இருக்கிறார்கள். அங்கே இன்னொரு பள்ளியை ஏற்படுத்திக் கொடுத்து, அந்த மலைவாழ் மக்களுடைய திறமையை எடுத்துக் காட்டுகிற அளவுக்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கல்வராயன் மலையிலே இரும்பு கிடைக்கிறது. அந்த இரும்பைக் கொண்டு ஒரு இரும்புத் தொழிற்சாலையை அங்கே ஆரம்பித்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இரும்புத் தொழிற்சாலையுடன், அங்கே கிடைக்கின்ற கடுக்காயைக் கொண்டு, கூட்டுறவுத் துறை மூலமாக, கூட்டுறவு கடுக்காய் தொழிற்சாலை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

***திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட ஆதி திராவிடர்—பழங்குடியினர் மானியத்தின் மீது ஜனதா கட்சி சார்பாக பேசும்போது, ஆதி திராவிட மக்கள் இன்னும் மிகப்





பின் தங்கிய நிலையில்தான் இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பெருந் தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்தில் அவர்களுக்குக் கொடுக்கப் பட்ட சலுகைகள் காரணமாக படிப்பு வசதிகள் அவர்களுக்கு ஏற்பட்டது. அந்தப் படிப்பு வசதி ஏற்பட்ட காரணத்தி னாலே சிலர் வாழ்க்கையிலே முன்னேறி இருக்கிறார்களே தவிர, மற்றபடி அதிகமானவர்கள் வாழ்க்கையிலே எந்த விதமான எதிர் காலமும் இல்லாமல் இன்னல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

படித்தவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. குறைந்த பட்ச வசதி கூட இல்லாமல் கிராமங்களிலேயும், நகர்ப்புறங் களிலேயும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இலவசமாக வீட்டு மனைப் பட்டா கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அது அனைத்து இடங்களிலும் முறையாக வழங்கப்படவில்லை. பட்டா கிடைத்தவர்களுக்கு வீட்டினைக் கட்டிக்கொள்ள அரசின் உதவி சரியான முறையில் கிடைக்கவில்லை.

தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு அமைக்கப்பட்டிருக்கும் மாணவர் இல்லங்கள், மாணவியர் இல்லங்கள் எல்லாம் பழு தடைந்த நிலையிலே தமிழ்நாடு பூராவும் இருக்கின்றன. அதிக மான கட்டிடங்கள் வாடகைக் கட்டிடங்களிலே இருக்கின்றன. அந்த மாணவ—மாணவியர் தங்கும் விடுதிகளை உடனடியாக மராமத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தவிர, அந்தக் கட்டிடங்கள் எல்லாம் அரசினுடைய சொந்தக் கட்டிடங்க ளாக, புதிய இடங்களிலே கட்டப்படவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தவிர, ஆதிதிராவிட மாணவர்களுக்கு இட வசதிகள் போத வில்லை. மாணவர்களுக்கு ஹாஸ்டல் ஒதுக்கும்போது—அதிகப் படியான ஆதிதிராவிட மாணவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பு கின்ற நிலை எற்படுகிறது. எனவே, ஒவ்வொரு மாணவர் இல்லத்திலும் 20 இடங்களுக்குக் குறையாமல் அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இந்த ஆண்டு 15 புதிய விடுதிகள் கட்டப்பட இருப்பதாக அரசினுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கிறது. அதில் 10 மாணவர்களுக்கும், 5 மாணவியர்

களுக்கும் என்று இருக்கின்றது. ஒரு மாவட்டத்திற்கு 5-ஆவது குறைந்தது, 100 இடங்களிலே அந்த புதிய விடுதிகளை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலேயே அந்த மாணவ—மாணவியர் விடுதிகளிலே உள்ள பலனை அனுபவிப்பவர்கள் 52,000 பேர்தான் என்று போட்டு இருக்கிறீர்கள்.

தமிழ்நாட்டில் ஒரு கோடி பேர் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். 18 சதவீதம் பேர் தாழ்த்தப்பட்டவர்கள் என்றால் கணக்கு அப்படித்தான் வருகிறது. அப்படியென்றால் சுமார் 20 லட்சம் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பொருள். ஆனால் நீங்கள் வசதி செய்து கொடுத்திருப்பதோ 52,000 பேர்களுக்குத்தான். எனவே இதையும் இந்த அரசு சரி பார்த்து தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு வேண்டிய கல்வி வசதியைக் கொடுப்பதற்காவது மாணவர் இல்லங்களையும் மாணவியர் இல்லங்களையும் அதிகப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதாவது கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் ஒன்றைச் சொல்லியாக வேண்டும். விருதுநகர் தொகுதியில் பிரவிப்பட்டி, நமஸ்கரித்தான்பட்டி, வெள்ளூர் போன்ற கிராமங்களில் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதாகச் சொல்லி அவர்களை அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக ஆக்கி நீங்கள் எல்லாம் உங்கள் குடிசைகளை இடித்துவிட்டு, பேஸ்-மட்டம் வரை போட்டுவிட்டு வாருங்கள், நாங்கள் பணம் தருகிறோம் என்று சொல்லி அவர்களும் அதை நம்பி குடிசைகளை இடித்துவிட்டு பேஸ்-மட்டம் வரை போட்டுவிட்டு கூட்டுறவுச் சங்கத்திற்குப் போனால் பணமில்லை என்று சொல்லிவிட்டார்கள். இது இப்போதில்லை. 2, 3 ஆண்டுகளுக்கு முன்னாலே நடந்தது. அப்படி பணம் இல்லை என்று சொன்ன காரணத்தால் அவர்கள் தெருக்களில் இருக்கிற சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. ஏழை அரிசனங்கள்—தாழ்த்தப்பட்டவர்கள். இப்படிப் பாதிக்கப்பட்டதால் தான் அவர்களை எல்லாம் நேரிலேயே காமராஜர் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் அழைத்துச் சென்று முறையிட்டேன். அவர்களும் அந்தக் கூட்டுறவுச் சங்கத் தலைவரைக் கூப்பிட்டு



விசாரித்தார்கள். அப்போது அவர்கள் "வாஸ்தவம்தான்—அப்படித்தான் சொன்னோம்—ஆனால் இப்போது பணம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அதன்பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் இது குறித்து அரசுக்கு எழுதி உரிய நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். சொல்லி ஒரு வருஷம் ஆகிறது, இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே அரசு இந்தக் குறைபாட்டைச் சரி செய்வதற்கு அவர்களுக்கெல்லாம் உடனடியாக வீடு கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே இன்னும் பல இடங்களில் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்காக தனியார் இடங்களை அரசு எடுக்க முயற்சிக்கும்போது அவர்கள் நீதிமன்றம் போய் தடை உத்தரவு வாங்கிவிடுகிறார்கள். அதன் பிறகு வழக்கு முடிந்து அரிசனங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. இப்படி அவர்களுக்கு வீட்டுமனை வழங்க சாத்தியமற்ற நிலைமை ஏறத்தாழ, 5 அல்லது 6 முதல் 10 ஆண்டுகளாக இருந்து கொண்டிருக்கிறது. இதில் விருதுநகரில் கூட கோட்டைப் பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் நீதிமன்றத் தீர்ப்பு காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப் போலவே விருதுநகரில் காந்திபுரம் தெருவில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுப்பதற்கு இயலாதபடி நீதிமன்றத் தடை இருப்பதால் காலதாமதம் ஏற்பட்டு அவர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இன்னொன்றையும் கூட இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். கோவையிலிருந்து வீடு அற்ற தாழ்த்தப்பட்டோர் சங்கத்தின் சார்பில் ஒன்றை எழுதியிருக்கிறார்கள். அதில் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள். என்றால் 1983 ஆம் வருஷம் மார்ச் மாதம் 11 ஆம் தேதி அரிசன மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தில் அது நீதிமன்றப் பரிசீலனைக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட அதை சபையில் அறிவித்தார்கள் என்றும் ஆனால் அதன் மீது நடவடிக்கை எதுவும் இல்லை என்றும் சொல்லியிருக்

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1987 ஏப்ரல் 7

கிறார்கள். எனவே அரசு அந்தத் திட்டத்தை உடனடியாக அமுல் படுத்த இன்னொரு துணைச் சட்டம் வேண்டுமானாலும் போட்டு அமுல்படுத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு ஒதுக்கும் பணத்தை முழுவதுமாகச் செலவிடாமல் இந்த அரசு அதை நிறுத்தி வைத்திருப்பதாகவும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் சரிபார்த்து, ஆதிதிராவிட மக்களுக்குப் பயன்படுகிற வகையில் மத்திய அரசு கொடுக்கிற பணத்தை செலவழிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பல இடங்களில் அருந்ததியினர் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் 5 வீடுகள் அல்லது 10 வீடுகள் என்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களான அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற இலவச வீட்டு மனைப் பட்டாவும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. என் தொகுதியில் ஐந்து குடும்பங்கள் அல்லது 10 குடும்பங்கள் இருக்கிறோம் என்று சொல்லி சட்டமன்ற உறுப்பினரான என்னிடம் மனுக்களைக் கொடுக்கிறார்கள். அவர்களுடைய குறைகளை நிவர்த்திக்க பல்வேறு விதமான முயற்சிகளைச் செய்தும் இதுவரை எந்தவிதமான நிவாரணமும் கிடைக்கவில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கவேண்டும். அதைப்போலவே காமராஜர் மாவட்டத்தில் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் இதுவரை 182 தான் என்று நீங்கள் அளித்த பதிலில் சொல்லப்பட்டிருக்கிறது.

(மாலை 4-30)

ஒரு மாவட்டத்திலே தொகுப்பு வீடுகள் கட்டியிருப்பது 182 என்று சொன்னால், 3 ஆண்டுகளில் 30 இலட்சம் வீடுகள் எப்படி கட்டிக் கொடுக்க முடியும்? இந்தத் திட்டத்தை எப்போது விரைவாகச் செய்யப் போகிறீர்கள்? லட்சக்கணக்கில் ஒரு மாவட்டத்தில் வீடுகளைக் கட்டுவதாகச் சொன்ன நீங்கள், 182 வீடுகளைக் கட்டியிருக்கிறீர்கள். காமராஜர் மாவட்டத்திலே ஒரு இலட்சம் வீடுகள் கட்ட வேண்டும். ஆனால் கட்டியிருப்பது 182 வீடுகள் என்று கணக்கு கொடுத்திருக்கிறார்கள் என்னுடைய கேள்விக்கு. இன்னும் அதிகமான அளவுக்கு வீடுகளைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 7] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

தாட்கோ மூலம் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தில் ரூபாய் 6,000 பணம் கொடுத்து வீடுகளைக் கட்டச் சொல்கிறார்கள். அதை 10,000 ரூபாயாகத் தர வேண்டுமென்று சென்ற ஆண்டு கோரிக்கையில் வேண்டுகோள் விடுத்தோம். அது பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் அப்போது சொன்னார்கள். இன்னும் அந்தப் பரிசீலனை முடிந்து, அவர்களுக்கு 10,000 ரூபாய் வழங்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதை 10,000 ரூபாயாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விருதுநகர் தொகுதியில் சிவகாசி ஒன்றியத்தில் சிவலூர், எரிச்சநத்தம், குமிழங்குளம், கிருஷ்ணமநாயக்கம்பட்டி போன்ற ஊர்களில் உள்ள அரிசனங்களுக்கு மொத்தமாக ஒரேயிடத்தில்—எரிச்சாநத்தத்தில்—130 வீடுகள் கட்டித்தர வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டு, ஏற்பாடுகள் செய்யப்பட்டு பல ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. இதற்கான ஏற்பாடுகள் எல்லாம் முறைப்படி செய்யப்பட்டிருக்கின்றன. பாரம் 5, 6 என்று எல்லாம் சொல்லுகிறார்கள். என்ன என்று எனக்குத் தெரியவில்லை. அதெல்லாம் கொடுக்கப்பட்டு, அந்த இடத்தின் உரிமையாளர்கள், நிலத்தின் சொந்தக்காரர்கள் விலைக்குத் தர உறுதிமொழி கொடுத்து, எழுதிக் கொடுத்துவிட்டார்கள். ஆனால் இன்னும் அந்த ஏற்பாடு செய்யப்படவில்லை. அதற்கான ஆதி திராவிட நல தாசில்தார் அவர்கள் அருப்புக்கோட்டையில் இருக்கிறார். 6 மாதங்களுக்கு முன்பாக தொலைபேசியில் அவருடன் பேசி, எப்படியாவது அந்த அரிசன மக்களுக்கு 130 வீடுகளைக் கட்ட ஏற்பாடு செய்து கொடுக்கும்படி கேட்டேன். இன்னும் ஒரு மாதத்தில் முடித்துக் கொடுப்பேன் என்று சொன்னார். ஆனால் இன்னும் செய்யவில்லை. இன்னும் காலதாமதமாகிறது என்பதை உங்கள் மூலமாக கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் ஒன்று. ஜவ்வாது மலையில் ஆலங்காயம் பகுதியில் சந்தன மரங்களையும், மற்ற மரங்களையும் வெட்டி விற்கும் சமூக விரோதிகள், அங்கேயுள்ள வன இலாகா அதிகாரிகள், காவல் துறையில் மலைவாழ் பழங்குடி மக்கள்மீது பொய்ப் புகார்கள் கொடுத்து, அவர்களைப் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாக்குகிறார்கள். இவர்கள் செய்யும் சமூக விரோதச் செயலுக்கு அவர்கள் மீது வழக்கு போடுகிறார்கள். அவர்கள்மீது வழக்கு போட்டு, இவர்கள்

தப்பித்துக் கொள்கிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் அதை எல்லாம் சரி பார்த்து தக்க நடவடிக்கையை அரசு அதிகாரிகள், காவல் துறையினர் மீது எடுத்து ஏழைப் பழங்குடி மக்களை வாழ்விக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பள்ளிக்கூடங்கள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரய்யன் அவர்கள் சொல்லும்போது, மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனே கட்டித் தருவோம் என்று சொன்னார்கள். இடம் பார்த்திருக்கிறோம் என்று சொன்னார்கள். விருதுநகர் தொகுதியில் சுந்தரக்குடும்பப்பட்டி என்ற ஊர் இருக்கிறது. அங்கே ஒரு பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளி வாடகைக் கட்டிடத்தில் இருக்கிறது. அந்தக் கட்டிடம் பாதி ஓட்டுச் சாப்பு, பாதி ஓலைச் சாப்பு. எனவே அடிக்கின்ற வெய்யிலும் அங்கேதான் அடிக்கிறது, பெய்கிற மழையும் அங்கேதான் பெய்கிறது. அந்த மாணவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் அமைச்சரவர்கள் சரி பார்த்து, பள்ளிக்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே 85 மாணவர்கள் படிக்கிறார்கள். 2 ஆசிரியர்கள்தான் இருக்கிறார்கள். மேலும் 2 ஆசிரியர்களை அங்கே நியமிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. க. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அரசுக்கு கோரி இருக்கின்ற 31 ஆம் மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களை கோரி நிறைந்தமைக்காக என்னுடைய நன்றியைக் கூறி இங்கே என் கருத்துக்களை முன் வைக்கிறேன். தமிழகத்திலே இருக்கக் கூடிய மக்கள் தொகையிலே ஏறத்தாழ 5 பேர்களுக்கு ஒருவர் ஆதிதிராவிடர் மக்களாக இருக்கின்றார்கள் என்பதையும் இந்திய துணைக் கண்டத்திலேயே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினுடைய எண்ணிக்கை ஐந்தில் ஒரு பங்கு இருப்பதால், அண்ணல் அம்பேத்கார் அவர்கள் ஐந்தில் ஒரு பகுதி மக்களுக்கு சலுகைகள் கொடுக்கின்ற அளவிற்கு, அந்தச் சலுகைகள் குறைந்தபட்சம் 18 சதவிகிதம் அவர்களுக்கு சலுகை கொடுக்க வேண்டும் என்ற அளவுக்கு அரசியல் சட்டத்திலே அவர்கள் உரிமையை ஏற்படுத்தித் தந்தார்கள். அந்த உரிமையின் அடிப்படையிலே, இன்றைக்கு இந்தியாவை



ஆளுகின்ற அரசு, தமிழகத்திலே இருக்கின்ற அரசு, அதே போல் மற்ற மாநிலங்களிலே இருக்கின்ற அரசுகள் எல்லாம் ஆதிதிராவிட மக்களுக்கு அரசியல் சட்டத்திலே 18 சதவிகிதம் ஒதுக்கீட்டை முறையாக செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள். சில நேரங்களிலே சிரமங்கள் இருப்பதை நாடு அறியும். இங்கே நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலே புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு ஆதி திராவிட மக்கள் எவ்வளவு காலம் தாழ்த்தப்பட்ட மக்களாகவே இருக்கின்றார்கள். ஆகவே குறிப்பிட்ட காலகெடுவுக்குள் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் ஆட்சி வருவதற்கு முன்னாலேயே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அலுவலகத்தைத் திறந்த அன்று 1974லே பேசினார்கள். அந்த பேச்சினுடைய விளைவைத் தொடர்ந்து 1977லே ஆட்சிப் பொறுப்புக்கு வந்து இன்றைக்கு 1987 வரையிலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே இருக்கின்ற அத்தனை மக்களையும் எப்படியாவது மேம்படுத்த வேண்டும் என்று மத்திய அரசின் உதவியோடு பல்வேறு திட்டங்களை அவர்கள் செயல்படுத்தி வருகின்றார்கள். இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது நாமெல்லாம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலேயே சலுகைகளைப் பெற்று பள்ளிகளிலேயும், கல்லூரிகளிலேயும் படித்தவர்கள். ஆகவே அப்போதிருந்த நிலையைவிட இப்போது தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு சலுகைகளும் வசதிகளும் பெருகியிருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்கிறபோது உண்மையிலேயே மனநிறைவு கொள்கிறேன். காரணம் 1962-லே சட்டக் கல்லூரியிலே படிக்கின்றபோது எங்களுக்கு மாதத்திற்கு 60 ரூபாய்தான் விடுதிக்காக கட்ட வேண்டிய உபகாரச் சம்பளம். ஆனால் இன்றைக்கு பள்ளியிலே இருக்கும் மாணவர்களுக்கு ரூ. 60-லிருந்து 90 ரூபாய் வரை பெற்றுக் கொண்டிருந்த மாணவர்கள் ரூ. 85-லிருந்து ரூ. 140 வரை ஒரு மாதத்திற்குப் பெறக்கூடிய ஒரு நிலையை புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்படுத்தியிருக்கின்றார்கள் என்பதை எண்ணும்போது, மாணவர்கள் இல்லங்களிலே இருக்கின்ற மாணவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். மாணவிகள் இல்லங்களிலே இருக்கின்ற மாணவிகள் மகிழ்ச்சியடைகிறார்கள். அது மட்டுமல்ல, இவைகள் தவிர, பலருக்கு எண்ணெய், சோப்பு, சீக்காய் போன்றவைகள் இலவசமாக வழங்குவதை இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்கிறேன்.

[திரு. க. பாலசுப்பிரமணியன்] [1987 ஏப்ரல் 7

தமிழகத்திலே புரட்சித் தலைவர் அவர்கள் உணர்வுபூர்வமாக அந்தச் சமுதாயத்தை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளே முன்னேறவைக்க வேண்டும் என்ற எண்ணம் பூராவாக உள்ளவர்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் நாம் சீக்கிரத்திலே முன்னுரிமை அளித்தாக வேண்டும் என்றுதான் இன்றைக்கு பல்வேறு திட்டங்களை அவர்களுக்காக செயல்படுத்துகிறார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினுடைய மொத்த எண்ணிக்கை, ஆதி திராவிடர்கள் எண்ணிக்கை 88.81 லட்சம் என்றும், பழங்குடி மக்களுடைய எண்ணிக்கை 5.20 லட்சம் என்றும் இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வேன். ஆதி திராவிடர்கள் சமுதாயத்திலே இருக்கின்ற மக்கள் 88.81 லட்சம் என்பது அதிகமான மக்கள் தொகையைக் கொண்டதாகத்தான் இருக்கின்றது. ஓரளவுக்கு இந்த சமுதாயத்திலே இருப்பவர்கள் மற்ற சமுதாயத்தைப் பார்த்து தாழ்த்தப்பட்ட உணர்வுடன் இருக்கின்றார்கள். ஆனால் பழங்குடி மக்கள் என்று சொல்லக்கூடிய 5.20 லட்சம் மக்கள் எந்தவிதமான உலகத்தையும் அறியாதவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு உலகத்தை நாங்கள் காட்டுகிறோம் என்று அதிகாரிகள் சொன்னாலும் சில பேர்கள் காட்டுகிற உலகம் தாறுமாறாக இருப்பதை உணர்ந்து வேதனைப்படும் மக்களாக இருக்கின்றார்கள். நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வேன், அந்த மக்களுடைய எண்ணிக்கையிலே இன்றைக்கு 5 வயது என்று எடுத்துக்கொண்டால் ஏறத்தாழ ஒரு லட்சம் சிறார்கள் தேறுவார்கள்.

(மாலை 4-40)

அந்த 1 லட்சம் பேர்களுக்கும் ஒரு 10 ஆண்டுக் காலத்திற்குள், ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள், குறிப்பிட்ட திட்டங்களை அவர்களுக்காகத் தீட்டி, ஒரேயடியாக அவர்கள் முன்னேறுவதற்காக வாய்ப்பினை ஏற்படுத்தினால், 5 வயதில் இப்போது இருக்கின்ற சந்ததியினரும் சரி, இனிமேல் வர இருக்கின்ற சந்ததியினரும் சரி விழிப்புணர்ச்சியுடன் அந்தச் சமுதாயம், சந்ததியினர் முன்னேறுவார்கள். காரணம். இப்பொழுது எவ்வளவு திட்டங்களை நாம் அவர்களுக்காகத் தீட்டினாலும் அந்தத் திட்டங்கள் அவர்களைச் சென்று அடையாதவாறு அவர்களுடைய கலாச்சாரம் அவர்களை விரட்டி விடுகிறது.



1987 ஏப்ரல் 7] [திரு. க. பாலசுப்பிரமணியம்]

அடுத்து, இந்திய அரசு எச்.ஏ.டி.பி. என்கிற மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துமாறு ஒவ்வொரு மாநிலத்திற்கும் உதவி வருகிறது. இத்திட்டத்திலே மலைவாழ் மக்களுக்கு செய்ய வேண்டிய திட்டங்களும் அடங்கி இருக்கின்றன. அதையும், தமிழக அரசு செய்யும் திட்டங்களையும் ஒன்றாக இணைத்து இன்னும் ஒரு 5 ஆண்டுக் காலத்திற்குள், 10 ஆண்டுக் காலத்திற்குள் அந்த சமுதாயத்திலுள்ள சின்னஞ்சிறார்கள் எல்லாம் நல்ல முறையில் முன்னேறுவதற்காக முழுமையாக பக்குவப்பட்ட அதிகாரிகளை வைத்துக்கொண்டு அவர்களை மேலும் மேம்படுத்துவதன் மூலமாக ஒரு புதிய நல்ல சமுதாயத்தை விரைவிலே உருவாக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆர்.எல்.இ.ஜி.பி. என்கிற கிராமப்புற நிலமற்றோர்க்கான வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், என்.ஆர்.இ.பி. என்கிற தேசிய வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டி கொடுக்கப்படுகின்றன. ஒரு வீட்டுக்கு 9 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது. வீட்டுக்கு மட்டும் 6 ஆயிரம் ரூபாய் என்றும், பக்கத்திலே இருக்கின்ற இதர சௌகரியங்களுக்காக 1,800 ரூபாய் என்றும், கழிப்பிடம் கட்டுவதற்கு 1,200 ரூபாய் என்றும் ஆக மொத்தத்தில் 9 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது. இந்தத் தொகையை மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு 10 ஆயிரம் ரூபாயாக ஆக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல இத்திட்டத்தின்கீழ் இனிமேல் கட்டுகின்ற வீடுகளை மேடான பகுதிகளில் கட்ட வேண்டும். ஏற்கெனவே பள்ளத்தில் இருக்கிற வீடுகளைப் பொறுத்தவரையில் மண் கொட்டி மேடாக ஆக்க வேண்டும். அதற்கு தமிழக அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு சென்ட் நிலம் இருந்தால் அதிலே கட்ட முடியாது என்று சொல்கிறார்கள். அந்த சமுதாய மக்களுடைய துரதிருஷ்டம் என்னவென்றால் யாரையாவது என்றாலும், அரசியல்வாதிகளானாலும் சரி அவர்களுடைய காலை பிடித்துக்கொண்டு கேட்பதால் ஒரு சென்ட் நிலம் இருந்தால் கூட அவர்களுக்கு பட்டா போட்டு கொடுத்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலை

தஞ்சை மாவட்டத்தில் பொதுவாக இருக்கிற ஒன்று. இதனால் அவர்கள் அரசுத் திட்டங்களின் பயனைப் பெற முடியாத நிலை இருக்கிறது. இப்போது குறைந்தபட்சம் 1½ சென்ட் என்று இருப்பதை 3 சென்ட் ஆக ஆக்கி அறிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனாலும் ஏற்கெனவே 1 சென்ட் பட்டா நிலம் வைத்திருப்பவர்களுக்கு எல்லாம் வீடு கட்டிக் கொடுக்க இந்த அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பள்ளமாக இருந்தால் அந்த இடங்களை எல்லாம் மேடாக ஆக்க பணம் ஒதுக்க வேண்டும். இனிமேல் மேடான பகுதிகளில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும்.

இப்போது இருக்கின்ற நிலைமை என்ன என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசுந்தரம் குறிப்பிட்டார். நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து நிலத்தை கையகப்படுத்தி ஆதி திராவிட மக்களுக்கு கொடுப்பதற்கு முன்பே நிலச்சொந்தக்காரர்கள் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று தடை வாங்கி விடுகிறார்கள். அதன் காரணத்தால் காம்பன்சேஷனையும் அவர்கள் பெற்றுக்கொண்டு, அந்த இடத்தையும் அவர்கள் பயன்படுத்திக் கொண்டு, அதிலிருந்து வருகின்ற வருவாயையும் அவர்களே எடுத்துக்கொள்கிற நிலைமை இருக்கிறது. உண்மையிலேயே அரசு திட்டங்களின் பயன்கள் அவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை என்று சொல்கிறார்கள். அதிலும் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 'நஞ்சையும், புஞ்சையும் சேர்ந்து கொஞ்சி விளையாடும் தஞ்சை' என்று சொல்லுவார்கள். அவர்களுக்கு அவசியமாக இத்திட்டங்கள் தேவை. ஆகவே, நஞ்சையாக இருந்தாலும் மேடாக ஆக்கி அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இதிலே சில விதி விலக்குகளை, கோயில் நிலங்களாக இருந்தால் பட்டா கொடுக்கக் கூடாது என்று ஆணையிட்டிருக்கிறார்கள். ஆனால் கோயில் நிலங்களாக இருந்தாலும், நீண்ட காலமாக, ஏற்கெனவே வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் நஞ்சையாக இருந்தாலும் சரி, கோயில் நிலங்களாக இருந்தாலும் சரி அவர்களுக்கு பட்டா கொடுக்கலாம். அதற்கு உபயோகமில்லாத சில கோயில் நிலங்கள், தனியார் கோயில்





களுக்குச் சொந்தமான நிலங்களோ அல்லது அறநிலையத் துறை கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களோ அல்லது ஆதீன சந்நிதானங்கள், மடாதிபதிகளுக்குச் சொந்தமான நிலங்களோ நிறைய இருக்கின்றன; தரிசாக இருக்கின்றன, எந்தவிதமான உபயோகமும் இல்லாமல். அந்த நிலங்களைக் கையகப்படுத்துவதன் மூலம் வருமானமில்லாத கோயில்களுக்கு அரசின் பணம் சேரும். அதை மொத்தமாக வங்கியிலே போட்டு அந்தக் கோயிலுக்குள்ள காரியங்களைச் செய்ய முடியும். அதே நேரத்தில் அந்த இடத்தில் பட்டா கொடுத்து, அந்த மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க முடியும். ஆகவே, அந்த விதியைத் தளர்த்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே வேறு வழியில்லாமல் நஞ்சை நிலத்தைத் தவிர நிலமே கிடைக்கவில்லை என்ற இக்கட்டான நேரத்தில் நஞ்சை நிலமாக இருந்தாலும் பட்டா வாங்கிக் கொடுத்து, அதைக் கொஞ்சம் மேடாக்கி வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே இருக்கின்ற பள்ளிகளிலே ஆதிதிராவிட மக்களுக்காக 961 பள்ளிகள் இருப்பதாக இங்கே நம்முடைய குறிப்புகளிலே இருக்கிறது. நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன், அந்தப் பள்ளிகள் குறைந்த அளவுதான்; 5 ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், 6 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 3 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவித்திருக்கிறார்கள். இன்னும் அதிகமான பள்ளிகளை அப்படி உண்டாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசுக்கும், மாண்புமிகு நம்முடைய ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், என்னுடைய தொகுதியிலே கொண்டல் என்ற ஒரு கிராமத்திலே நடுநிலைப்பள்ளி ஏற்கனவே இருந்தது. அதைக் கடந்த ஆண்டு உயர்நிலைப் பள்ளியாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு இன்னும் சில தளவாட சாமான்கள், அதனுடைய விஸ்தரிப்பு வேலைகள், விளையாட்டு

இடங்கள் ஆகிய இவைகளெல்லாம் தேவைப்படுகின்றன. அதை உடனடியாக விரைவில் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சீர்காழியிலே மூன்று ஆண் மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அதிலே ஒரு மாணவர் விடுதி இருக்கிறது ஆதிதிராவிட நலத் துறையிலே. ஆனால் அந்த விடுதி வாடகைக் கட்டிடத்திலே இருக்கிறது. மழைக் காலத்திலே, பெய்கின்ற மழை பூராவும் கட்டிடத்திற்குள்ளே வரும். வேறு வழி இல்லை. அந்தக் கட்டிடத்தைத் தவிர வேறு வழியில்லை. ஆகவே இந்த ஆண்டு நிதியிலே விடுதிக்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதிக்குப் பக்கத்திலே இருக்கின்ற வைத்தீஸ்வரன் கோயில் பேரூராட்சியில் அரசினுடைய மேல் நிலைப்பள்ளி இருக்கிறது. அதிலே பிற்பட்ட மாணவர்களுக்காக ஒரு விடுதியும், ஆதிதிராவிட மாணவர்களுக்கு ஒரு விடுதியும் இருக்கிறது. ஏறத்தாழ 400-க்கு மேற்பட்ட மகளிர் படிக்கிறார்கள். அவர்களுக்கு மகளிர் விடுதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

திட்டங்கள் என்று எடுத்துக்கொண்டால், குடிநீர்த் திட்டங்களை நல்லமுறையிலே அரசு அனைத்து மக்களுக்கும் செய்து கொடுக்கிறது. ஆனால் என்னவோ தெரியவில்லை, சில வேளைகளில் அதிகாரிகளின் கவனக் குறைவோ என்னவோ, ஆதிதிராவிடர்களுக்குக் குடிநீர் இணைப்பை, பைப் லயனை, குழாய் வசதியைச் செய்து கொடுப்பதில், தாமதம், தவறு ஏற்பட்டுவிடுகிறது. அப்படிக் குடிதண்ணீர் கொடுத்தாலும் ஒரு ஊராட்சியிலோ அல்லது குறிப்பிட்ட ஒரு பகுதியிலோ எடுத்துக்கொள்வோமேயானால் அதிலே முன்னுரியையாக ஆதிதிராவிட மக்கமேயானால் அதிலே முன்னுரிமையாக ஆதி திராவிட மக்களுக்கு இணைப்பு கொடுக்க வேண்டும், தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு எவ்வளவுதான் அரசு நிதியை ஒதுக்கினாலும், எவ்வளவோ காலமாகத் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு அதிகமான நிறைவு இல்லை என்பது உண்மைதான். ஆனால்



நான் அரசுக்கு ஆலோசனையாகச் சொல்ல விரும்புகிறேன். அரசினுடைய உதவியைப்பெற்ற கல்வி நிறுவனங்கள், அவர்கள் குறிப்பிட்ட நபர்களை, அல்லது கல்வி நிறுவனத்தில் குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் தலைவராக இருந்தால் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை நிரப்பிக் கொள்கிறார்கள். அங்கேயெல்லாம் அரசியல் சட்டம் அல்லது சமுதாயச் சலுகையினுடைய அடிப்படை செல்வதில்லை. ஆகவே, அரசின் உதவியைப் பெற்று, அரசின் மானியத்தைப்பெற்று அப்படி நடக்கின்ற பள்ளிகள் கட்டாயமாக நிரப்ப வேண்டுமென்று ஆணை பிறப்பிக்க வேண்டும். அரசு ஆணை பிறப்பித்தாலும் அதை லேசாகக் கருதி தப்பித்து விடுகிறார்கள். ரோஸ்டர் சிஸ்டம் என்று வைத்துக்கொண்டு, அதிலே நிரந்தரமாக இடம் இருக்கிறது என்றால், அதை நிரப்புவதற்குப் பதிலாக வேலை செய்பவர் ஒருவரை மூன்று மாதங்களுக்கு விடுமுறை போட வேண்டும் என்று அந்த நிர்வாகம் கேட்கிறது. அவரும் விடுமுறை போடுகிறார். ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவரை நிரப்ப வேண்டுமென்பதற்காக அந்த மூன்று மாத விடுமுறை போட்ட இடத்தில் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவரைக்கொண்டு நிரப்புகிறார்கள்.

(மாலை 4-50)

அந்த மூன்று மாத இடைவெளியில் ஒருவர் ஓய்வு பெற்றாலோ, அல்லது வேலை காலியாக இருந்தாலோ அந்த இடத்தில் வேறு வகுப்பைச் சேர்ந்தவர்களைப் போட்டு நிரப்பிவிடுகிறார்கள். விடுப்பில் சென்றவர் வரும்போது அந்த இடத்தில் அமர்த்தப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் பதவி இழக்கிறார். இப்படிப்பட்ட விளைவுகளால் காலம் காலமாக அரசாங்கம் என்னதான் சட்டங்களைப் போட்டாலும், திட்டங்கள் கொண்டு வந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் புறக்கணிக்கப்படுவது வாடிக்கையாக இருந்துகொண்டிருக்கிறது. இதை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டால் உண்மையிலேயே தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு எந்த அளவுக்கு பணத்தை ஒதுக்கி சலுகை செய்கிறோமோ அந்த அளவுக்கு சலுகையின் பலன் அந்த மக்க

[திரு. க. பாலசுப்பிரமணியன்] [1987 ஏப்ரல் 7

ளுக்குப் போய்ச் சேரவில்லை. அளிக்கப்பட்ட சலுகையின் பலன் அந்த மக்களுக்கு சரியாகக் கிடைக்க தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீண்டாமை ஒழிப்பு பற்றி ஒரு சிறிய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். கலப்புத் திருமணம் செய்துகொள்ளுகின்ற தம்பதியர்களை ஊக்குவிப்பதன் மூலம் தீண்டாமையை ஒழிக்கலாம். ஆகவே; எந்த ஒரு தம்பதியினர் கலப்புத் திருமணம் செய்துகொள்கிறார்களோ அவருடைய வேலைக்கு அரசாங்கம் உத்தரவாதம் கொடுக்க வேண்டும். அவர்களுடைய உறவு எவ்வளவு காலம் தொடர்ந்து இருக்கிறதோ அவ்வளவு காலம் அவருடைய பதவி இருக்கும். உறவில் விரிசல் ஏற்பட்டால் பதவி போய்விடும் என்ற நிபந்தனையை வைத்து அரசாங்கம் வேலைக்கு உத்தரவாதம் செய்தால் நிச்சயமாக தீண்டாமை ஒழிப்பைத் தீவிரமாகச் செயல்படுத்த வாய்ப்பு இருக்கும். இப்படிப்பட்ட காரியத்தை நம்முடைய அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. குறிஞ்சிப்பாடி தங்கராசு அவர்கள் தொகுதியான குறிஞ்சிப்பாடியில் ஒரு ஆதிதிராவிடர் மாணவர் இல்லம் இருக்கிறது. அது வாடகைக் கட்டடத்தில், தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. ஆதி திராவிடர் இல்லங்கள் எல்லாம் பெரும்பாலும் தனியார் வாடகைக் கட்டடங்களிலேதான் இயங்கி வருகின்றன. இப்படி தனியார் கட்டடங்களிலே செயல்படுகின்ற இல்லங்களுக்கு முன்னுரிமை கொடுத்து அரசு நிதியைப் பயன்படுத்தி உடனடியாக சொந்தக் கட்டடம் கட்ட வேண்டும். குறிஞ்சிப்பாடி தொகுதியிலுள்ள அந்த மாணவர் இல்லத்திற்கு வாங்கப்பட்ட இடம் இருக்கிறது. இன்னும் அங்கே கட்டடம் கட்டப்படவில்லை; அதை விரைவிலே கட்டிக் கொடுக்க வேண்டும். குறிஞ்சிப்பாடி ஒரு பேரூராட்சி தான். பணம் கொஞ்சம் அதிகமாகக் கிடைக்கிறது என்பதால் ஆரம்பத்தில் தனியார் கட்டடங்களை வாடகைக்குக் கொடுக்கிறார்கள். கொஞ்ச நாள் சென்றவுடன் ஜாதி வெறி காரணமாக அந்த இடத்தை காலி செய்ய முயற்சி செய்கிறார்கள். இப்படிப்பட்ட இக்கட்டான நிலைமை ஏற்படாமல் இருக்க வாடகைக்



1987 ஏப்ரல் 7] [திரு. க. பாலசுப்பிரமணியன்]

கட்டடத்தில் செயல்படும் இல்லங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதில் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு இன்றைக்கு 30 இலட்சம் வீடுகளைக் கட்டவிருக்கிறது. அந்த 30 இலட்சம் வீடுகளில் தாழ்த்தப்பட்ட மக்களும் நல்ல பயனடைவார்கள். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் ஒரு சமயத்தில் ஜாதி இந்துக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள்—அவர்களுடைய உறவு எப்படி இருக்கிறது என்றால், "The relationship between the caste Hindus and the untouchables is that of foot and shoe". என்று மிகவும் வேதனையோடு சொன்னார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஜாதி இந்துக்களுக்கும் உறவு எப்படி இருக்கிறது என்றால் காலுக்கும் காலணிக்கும் இருக்கிற உறவு போன்றது என்று சொன்னார்கள். காலுக்குப் பயன்படுத்திய காலணியை வீட்டுக்குள்ளே வரும்போது வீட்டிலே ஒரு ஓரத்தில் கழற்றி வைத்துவிட்டு, உள்ளே செல்கிறோம். அதைப்போன்று தாழ்த்தப்பட்ட மக்கள் சமுதாயத்தில் எவ்வளவு உயர்ந்தவர்களாக இருந்தாலும் சமுதாயத்திலே அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று வேதனையோடு தெரிவித்திருக்கிறார்கள். அந்த வேதனையைப் போக்குவதற்கு இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு எந்தச் சமுதாயம் காலணியே போடக்கூடாது என்று சொன்னார்களோ அந்தச் சமுதாயத்திற்கு, காலணியைப் போட்டுக் கொள்ளலாம், தைரியமாக அவர்கள் காலணி அணிந்துகொள்ளலாம் என்ற அளவுக்கு காலணித் திட்டத்தைக் கொண்டுவந்து, சமுதாயத்தில் நலிந்தவர்களாக இருந்தாலும், அதனைப் பெற வழிவகை செய்திருக்கிறார்கள். இப்படி பல திட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் நன்மைக்காக.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. எஸ். எ. ஆறுமுகம் அவர்கள் பேசும்போது பட்டா கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். இந்த மானியக் கோரிக்கை சம்பந்தப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பில் 4,68,091 மனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுதான் தற்போதைய நிலைமை. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில்

[திரு. க. பாலசுப்பிரமணியன்] [1987 ஏப்ரல் 7

நன்செய் நிலங்களைத் தவிர வேறு இடம் இல்லை. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு எவ்வளவு செய்தாலும் நன்செய் நிலங்களைப் பாதுகாக்கின்ற அதே நேரத்தில் ஆதி திராவிட மக்களுக்கு அதிகமான மனைப் பட்டாக்களையும் வழங்க வேண்டும்; வழங்கி வருகிறது. ஆதிதிராவிட மக்களை மேலே கொண்டுவர வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப் படையில் பல்வேறு மனைப்பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக் கின்றன. தஞ்சை மாவட்டத்தில் பெரும்பாலும் நன்செய் நிலங் களே அதிகமாக இருப்பதால், இந்த விதியைக் கொஞ்சம் தளர்த்தி னால் தஞ்சை மாவட்டம், தென்னார்க்காடு மாவட்டத்தின் கிழக்குப் பகுதி ஆகிய இடங்களில் ஆதிதிராவிட மக்களுக்கு ஓரளவு மனைப்பட்டா கொடுக்க வாய்ப்பு இருக்கும் என்று கூறி, இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்த மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. பி. ஆர். திருஞானம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க நான் விழைகிறேன்.

என்னுடைய தொகுதியான ஏற்காட்டில் மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். என்னுடைய தொகுதி அருநூற்று மலை, கல்வராயன் மலை, கொல்லிமலை, நெய்யமலை போன்ற 4 மலைப் பகுதிகளை உள்ளடக்கியதாக இருக்கிறது. அங்கெல்லாம் மலைவாழ் மக்கள் அதிகமான பேர் வாழ்கிறார்கள். அந்த மலை வாழ் மக்களுக்கு உதவுகின்ற வகையில் என்.ஆர்.இ.பி., ஆர்.எல். இ.ஜி.பி. போன்ற திட்டங்களின் மூலமாகவும் மற்றும் தாட்கோவின் மூலமாகவும் அதிகமான வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மலைவாழ் மக்களுக்கு அதிக அளவில் வீட்டுமனைப் பட்டா கிடைக்காமல் இருக்கிறது. அதனை நிவர்த்தி செய்கின்ற வகையில் இந்த அரசு மலைவாழ் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 7] [திரு. பி. ஆர். திருஞானம்]

அந்தப் பகுதியிலிருக்கின்ற மலைவாழ் மக்கள் ஒவ்வொரு கிரா மத்தியிலும் சாலை வசதி இல்லாமல் பெரிதும் அவதிப்படுகி றார்கள். அதை முன்னிட்டு ஒவ்வொரு கிராமத்திற்கும் இணைப்புச் சாலைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அந்த கிராமங்களில் இருக்கின்ற மக்களின் நிலங்களை, கீழே யிருந்து செல்கின்ற எஸ்டேட் உரிமையாளர்கள் எல்லாம் வாங்கிக் கொண்டு அவர்களுக்குச் செல்வதற்கு நடைபாதை வசதிகளைக் கூட விடாமல் அடைத்துக்கொள்கிறார்கள். அந்தப் பாதைகளில் 6 மணிக்குப் பிறகு செல்லக்கூடாது என்று சொல்கிறார்கள். அதாவது காப்பி பயிர் செய்கிற நேரத்தில் அந்தப் பாதையில் செல்லக்கூடாது என்று சொல்லி அவர்களுக்கு இடையூறுகளைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதில் அரசு தலையிட்டு அங்கே இருக்கிற ஒவ்வொரு கிராமத்திற்கும் அதாவது மலைவாழ் மக்கள் வாழ்கிற ஒவ்வொரு கிராமத்திற்கும் பாதை வசதியைச் செய்து கொடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாகச் சொல்லப்போனால் கொம்புதூக்கி, சொணப்பாடி ஆகும். அடுத்து குடிநீர்ப் பிரச் சினை. குடிநீர் தட்டுப்பாடு மிக அதிகமாக இருப்பதால் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் ஒன்று அல்லது இரண்டு கிலோ மீட்டர் அளவுக்குச் சென்றுதான் குடிநீரை எடுத்து வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு ஆழ்துளைக் குழாய்க் கிணறுகளை அதிகமாக அமைத்துக் கொடுக்குமாறு நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கி றேன்.

ஏற்காட்டில் மாரமங்களம், பெலாக்காடு, கொம்புதூக்கி போன்ற கிராமங்களுக்கு மின்சார வசதி அமைத்துத் தரவேண்டும். தமிழ் நாட்டில் மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்கிற இடங்களில் இருந்து அவர்களுடைய விளைநிலங்களை மற்றவர்கள் வாங்க முடியாத அளவுக்கு தமிழக அரசு ஒரு புதிய ஆணையைப் பிறப் பிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்போது தான் அங்கே ஆண்டாண்டுக் காலமாக வாழ்ந்து வருகின்ற மலை

[திரு. பி. ஆர். திருஞானம்] [1987 ஏப்ரல் 7

வாழ் மக்களின் நிலங்களை வேறு யாரும் வாங்க முடியாத நிலைமை ஏற்படும். அவர்களே அங்கே விவசாயம் செய்து பிழைக்க வழி ஏற்படும். அந்த வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். மலைவாழ் மக்களின் குறைகளைக் கவனிக்க கட்சி சார்பற்ற குழுவினை அமைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முயற்சிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு வேலைவாய்ப்புகளில் மத்திய அரசு மலைவாழ் மக்களுக்கு 5 சதவீதமும், எஸ்.சி.-க்கு 18 சதவீதமும் கொடுக்கிறது. அதேபோன்று மாநில அரசும் தனித்தனியாகப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ரெட்டியார் என்ற வகுப்பினர் கொண்டாரெட்டி என்று போட்டுக்கொண்டு எஸ்.டி.-க்குக் கிடைக்க வேண்டிய சலுகைகளை தங்களுடைய பண பலத்தினால் அனுபவிக்கிறார்கள். 1980-ம் ஆண்டு உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின்படி கொண்டா ரெட்டி என்ற இனத்தவர்கள் தங்களுடைய சான்றிதழ்களை ஆர்.டி.ஓ. மூலம்தான் பெறவேண்டும் எனக் கூறியுள்ளது. ஆனால் இவர்கள் சேலம், ஆத்தூர், மேட்டூர், திருச்சி, மதுரை, செங்கற்பட்டு ஆகிய இடங்களில் இருக்கின்ற தாசில்தார், உதவி தாசில்தார் ஆகியோரிடத்தில் சென்று சான்றிதழ் பெற்றுக்கொண்டு, கொண்டாரெட்டி என்ற எஸ்.டி. இனத்திலே தங்களைச் சேர்த்துக்கொண்டு அதன்படி பல்வேறு துறைகளில் வேலையில் இருக்கிறார்கள். இது குறித்து விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நாயக்கர்கள், காட்டு நாயக்கர்கள் என்றும், குறவர்கள், மலைக்குறவர்கள் என்றும், சோழியர், சோழகர் என்றும் போட்டுக்கொண்டு, அந்த வகையில் சான்றிதழ் பெற்றுக்கொண்டு அரசுப் பணியில் சேர்வதால் உண்மையான எஸ்.டி. மக்கள் திசை மாறிய பறவைகளாக இருந்துகொண்டிருக்கிறார்கள். அரசு உரிய ஆணைகளைப் பிறப்பித்து உண்மையான மலைவாழ் மக்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 7] [திரு. பி. ஆர். திருஞானம்]

(மாலை 5-00)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

சேலத்தில் ஏற்காடு மலை அடிவாரத்தில் தொடங்க இருக்கும் புதிய மருத்துவக் கல்லூரிக்கு அன்னை இந்திரா மருத்துவக் கல்லூரி என பெயர் சூட்டுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். ஏற்காட்டைச் சேர்ந்த மதூர் கிராமத்திற்கு ஜி.டி.ஆர். ஸ்கூல் ஒன்றை அமைத்துக் கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பெரிய கிருஷ்ணாபுரத்தில் தீ விபத்தால் பள்ளிக் கட்டிடம் எரிந்துவிட்டது. இதனால் மாணவ மாணவியர் மரத்து நிழலில் பயின்று வருகிறார்கள். அதற்கு புதிய கட்டிடம் கட்டிக் கொடுக்குமாறு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஏத்தாபூரில் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் 1,700 மாணவ மாணவிகள் பயின்று வருகிறார்கள். மாணவிகள் மட்டும் 700-க்கு மேல் இருக்கிறார்கள். ஆகவே இங்கு பெண்களுக்கு என்று தனி மேல்நிலைப் பள்ளி ஒன்றை இந்தக் கல்வி ஆண்டில் அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இவர்கள் அரசுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தையும் 1982-லேயே கட்டியிருக்கிறார்கள். இன்றுவரை பள்ளி கிடைக்கவில்லை. அதையும் இந்தக் கல்வியாண்டிலேயே அமைத்துக் கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்

கல்வராயன் மலையில் எல்லாக் கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகளைச் செய்து கொடுக்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கல்வராயன் மலையில் உள்ள மலைவாழ் மக்களுக்கு தீப்பிடிக்காத வகையில் அதிக வீடுகளை கட்டிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பி. ஆர். திருஞானம்] [1987 ஏப்ரல் 7

வலசையூர் தொட்டில் ஏரியிலிருந்து வலசையூர், பள்ளிப்பட்டு, பள்ளிப்பட்டு காலனி, கூட்டுச்சாலை போன்ற ஊர்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் குடிநீர் வழங்கும் திட்டத்தை நிறை வேற்றுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள் கிறேன்.

பூவனூர், தாதனூர், மூக்கனூர் ஆகிய கிராமங்களுக்கு மயான வழி இல்லை. ஆதலால் இவர்களுக்கு மயான வசதி செய்து கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியைச் சார்ந்த ஆச்சாங்குட்டப்பட்டி என்ற கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுத்து உதவுமாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரையும், முதல் அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

தும்பல், மாமாஞ்சி வழியாக அருர் கோட்டப்பட்டி செல்லும் பாதையை மலைவாழ் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பாதை வசதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல தும்பல், மாமாஞ்சி பீமன்பாளையம், பாப்ப நாயக்கன்பட்டி, மேட்டுக்காடு, ஏழு புளி போன்ற கிராமங்களில் மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்ந்து வருகிறார்கள் என்பத னால் இந்தக் கிராமங்களை கல்ராயன் மலைப் பகுதியோடு சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எழில் கொஞ்சும் ஏற்காடு, ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படும் ஏற்காட்டை ஓர் சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டும் என்றும் அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்காடு ஒரு சுற்றுலாத் தலமாக இருப்பதால், இங்கு அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை ஒன்றை அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 7] [திரு. பி. ஆர். திருஞானம்]

எஸ்.டி.யில் இருந்து அமைச்சராகவோ, வாரியத்தின் தலைவராகவோ இதுவரை யாருக்கும் பதவி கொடுக்கவில்லை. அந்தக் குறையை நிவர்த்தி செய்து வாரியத்தின் தலைவராகவோ அல்லது அமைச்சராகவோ நியமனம் செய்யுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கிராம அதிகாரிகளாக இருந்தவர்கள் இப்போது வேலை இழந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு விதிகளைத் தளர்த்தி வேறு வேலை கொடுக்கும் வகையில் அரசாணை நிலை என். 919, நாள் 31—7—1986-ல் வந்தது. அதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தோம். ஆனால் தமிழகத்தில் எந்த ஒரு மாவட்டத்திலும் பதவி இழந்த கிராம அதிகாரிகளுக்கு எந்தத் துறையிலும் வேலை வாய்ப்பை இன்றுவரை கொடுக்கவில்லை. இந்த வகையிலும் வேலை வாய்ப்பு இல்லாமல் கிட்டத்தட்ட 1,880 குடும்பங்கள் மிகவும் சிரமப்படுகின்றன. அவர்களுக்கு வேறு ஏதாவது பணி கொடுக்கும் வகையில் திட்டம் வகுத்துக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கி றேன்.

கொட்டவாடி, பேளூர்காடிப்பட்டி, கல்யாணகிரி, கல்லேரிப் பட்டி, எத்தாப்பூர், அபிநவம், குமாரபாளையம், பனமல், குறிச்சி, தும்பல் ஆகிய பகுதிகளில் வெற்றிலைக் கொடிக்கால்கள் அழிந்து விட்டதால் கூட்டுறவுக் கடன்களை ஓராண்டுக் காலத்திற்கு அந்த விவசாயிகளுக்கு தள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தர்மபுரி மாவட்டத்தில் வாணியாறு அணைத் திட்டம் கட்டி முடிக்கப் பெற்றிருக்கிறது. முள்ளிக்காடு என்ற பகுதியில் மலைவாழ் மக்கள் வாழ்ந்த இடங்களை இந்த அணைத் திட்டத் திற்காக அரசு எடுத்தார்கள். அணை கட்டி முடிந்து மீதமிருக் கிற நிலங்களை விவசாயிகளுக்கு இன்னும் திருப்பிக் கொடுக்காத நிலை இருக்கிறது. அந்த நிலத்திற்கான பட்டாக்களையும் திருப்பிக் கொடுக்கவில்லை. மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் பெறப்பட்ட நிலங்களில் மீதியிருப்பதை அந்த விவசாயிகளுக்குத் திருப்பிக் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியில் ஆனைமடு, கரியக்கோவில் ஆகிய இரண்டு நீர்த்தேக்கங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதனால் ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும். அங்கே ஒரு சர்க்கரை ஆலையை அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. தா. சாமிக்கண்ணு**: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய ஒருசில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆதி திராவிட மக்களின் நல்வாழ்விற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு பல சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. குறிப்பாக ஆதிதிராவிட மக்களின் குடும்பத்தில் இறப்பு ஏற்பட்டு விட்டால் ஈமச் சடங்கிற்காக உதவித் தொகை வழங்க அரசு வழிவகை செய்துள்ளது. தற்போது அந்த வகையில் 100 ரூபாய் உதவிப் பணம் தருவதை 200 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய செங்கம் தொகுதியில் அரிசன மக்கள், ஆதி திராவிட மக்கள் வாழும் தோக்கவள்ளி என்ற இடத்தில் ஆதி திராவிடர் நலப் பள்ளி ஒன்றினை புதியதாகத் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய செங்கம் பகுதியில் ஆதி திராவிடர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கிறார்கள். அந்தக் குடியிருப்புகள் கட்டித் தருவதற்கு அவர்கள் ஆறாயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். அந்த ஆறாயிரம் ரூபாயில் கோதுமையும், அரிசியும் கூட கொடுக்கிறார்கள். இவ்வாறு கொடுப்பதால் அந்த ஏழை மக்கள் வீடுகளைச் சரிவர கட்ட முடியவில்லை. அதனால் அதனை முழு மானியமாகவே, ரூபாயாகவே கொடுத்து அந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.



(மாலை 5-10)

ஆதிதிராவிட மக்களுக்காக வீடுகள் கட்டுவதற்கு இப்போது 6 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதை 10 ஆயிரமாக உயர்த்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆதி திராவிட நலத் துறையின் மூலமாக என்னுடைய தொகுதியில் ஒரு கேர்ல்ஸ் ஹாஸ்டல் இருக்கிறது. அந்த ஹாஸ்டலில் படிக்கின்ற மாணவிகளுக்கு சரியான இடம் போதுமான அளவிற்கு இல்லாததால், அங்கு படிக்கும் மாணவிகள் ரொம்பவும் அவஸ்தை பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். எனவே அதை வேறு இடத்திற்கு மாற்றித் தரவேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரிசன மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா கோரி பல மனுக்களைத் தந்திருக்கிறோம். வீட்டு மனைப் பட்டா வாங்குவதற்கு அரசாங்கத்திற்கும் மனுக்களைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். அப்படி பல மனுக்கள் கொடுத்துக்கொண்டிருந்தாலும், அந்த இடங்களுக்குச் சொந்தக்காரர்கள், ஸ்டே வாங்கி அதை நிறுத்தி விடுகிறார்கள். இதுமாதிரி பல இடத்திலே நாங்கள் மனு கொடுத்தும் வீட்டுமனைப் பட்டா கிடைக்கவில்லை. எனவே இதை கவனமாக பரிசீலித்து உடனடியாக இந்த வீட்டு மனைப் பட்டாக்களை கொடுக்குமாறு கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி சொல்லி, முடிக்கிறேன், வணக்கம்.

**டாக்டர் க. நல்லமுத்து**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர், மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மானியக் கோரிக்கை எண் 31-ன் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய சார்பிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக என் நன்றியையும் வணக்கத்தையும் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பற்றி பேசும்போது அவர்களுடைய வாழ்க்கை நலத்திற்காகவும், சமூக நீதியை அவர்கள் பெறுவதற்காகவும், இங்கே நாம் எல்லாம் ஆராய்ந்து கொண்டு இருக்கிறோம். ஆதிதிராவிடர்களுக்கு சமூக அந்தஸ்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அவர்களை சமூக அநீதியிலிருந்து காத்து, சமூக நீதி வழங்க வேண்டும். அத்துடன்

[டாக்டர் க. நல்லமுத்து] [1987 ஏப்ரல் 7

அவர்களை பொருளாதாரத்தில் உயர்த்தி, நல்வாழ்வு அமைத்துக் கொடுக்க வேண்டும். இதற்கு எல்லாம் இந்த அரசு என்னென்ன திட்டங்களை வகுத்திருக்கிறது, அவைகளை எப்படி எல்லாம் செயல்படுத்த முயன்றுகொண்டிருக்கிறது என்பதைப் பற்றி இங்கே நாம் எண்ணிப் பார்க்கிறபோது, மிகவும் வேதனையாகத் தான் இருக்கிறது.

குடியுரிமைப் பாதுகாப்பை முதற்கண் எடுத்துக்கொண்டால், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு குடியுரிமை பாதுகாப்பு எவ்வாறு வழங்கப்பட்டு இருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது மிகவும் வேதனையாக இருக்கிறது. மேலும் ஆதிதிராவிட மக்களுக்கு, பழங்குடி மக்களுக்கு இந்தச் சமுதாயத்திலே எந்தெந்த வகையிலே அநீதிகள் இழைக்கப்பட்டு, அவர்களுடைய வாழ்க்கை எவ்வளவு துயரம் நிறைந்ததாக, கொடுமை நிறைந்ததாக இருக்கிறது என்பதையும், அவர்கள் விலங்குகளைப் போன்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்கிறபோது, உள்ளபடியே தமிழக அரசு இந்த வேதனைக்கெல்லாம் பொறுப்பேற்று, எதிர்காலத்திலாவது சிறப்பாக செயல்பட்டால், சற்று மனக்குறையை நீக்க முடியும் என்பதை நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆதிராவிட மக்களுக்கு குடியுரிமைப் பாதுகாப்பை இந்த அரசு கொடுக்கிறதா? என்பதை இந்த மன்றத்திலே நான் வினாவாகக் கேட்கிறேன். ஆதி திராவிடர்களுக்கு குடியுரிமைப் பாதுகாப்பைக் கொடுப்பது இந்த அரசினுடைய கடமை. ஆனால் இந்த அரசு குடியுரிமைப் பாதுகாப்பை கொடுக்கத் தவறிவிட்டது என்பதை நான் பல்வேறு உதாரணங்கள் மூலமாக எடுத்துக் காட்ட முடியும். அதற்கு ஒரு உதாரணத்தை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். நமக்கெல்லாம் தெரியும். நமது மனசாட்சிக்கு நன்றாகவே தெரியும். இங்கே ஆதிதிராவிட மக்கள், பழங்குடி மக்கள் சமூக நீதியைப் பெறவில்லை. அநீதிக்கு ஆட்படுகிறார்கள். இவர்களை எப்படி இந்த அரசு பாதுகாக்க முயற்சிகள் மேற்கொள்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, இந்த அரசு இவர்களை பாதுகாப்பதற்கு முயற்சி கூட செய்யவில்லை என்று நான் கூற முடியும். இங்கே, ஆதிதிராவிட, பழங்குடி மக்களுடைய குடியுரிமையைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்கு இங்கே டி. சி. ஆர். கோர்ட் வைத்திருக்கிறார்கள் இதையெல்லாம் எதற்கு வைத்திருக்கிறீர்கள்



1987 ஏப்ரல் 7] [டாக்டர் க. நல்லமுத்து]

அவர்களுடைய சுயமரியாதையையும், குடியுரிமையையும், மான மரியாதையையும் பாதுகாப்பதற்குத்தானா என்று எண்ணிப் பார்க்கிறபோது உள்ளபடியே இது ஒரு கேலிக்குரிய செயலாகத் தான் இந்துகொண்டு வருகிறது. கும்பகோணம் நாம் அறிந்தது தான். இந்த டி.சி.ஆர். கோர்ட் இரண்டு மாவட்டங்களுக்கு ஒன்று, மூன்று மாவட்டங்களுக்கு ஒன்று என்றுதான் அமைக்கப்பட்டிருக்கிறது. கும்பகோணத்திலும் ஒரு டி.சி.ஆர். கோர்ட் இருக்கிறது. அந்த கோர்ட், நீதிபதி இல்லாத கோர்ட். இவர்கள் எப்படி இங்கே குடியுரிமையைப் பாதுகாக்கப் போகிறார்கள் என்பதை இங்கே வினாவாக வைக்கிறேன். அடுத்து, இவர்களை பொருளாதாரத்தில் மேம்படுத்தி, சிறப்பான வாழ்க்கையை அமைத்து, இவர்களுக்கு சமுதாய அந்தஸ்தைப் பெற வைக்க வேண்டும். இதுதான் இந்த அரசினுடைய எண்ணமாக இருக்குமென்று நான் கருதுகிறேன். இங்கே பொருளாதாரத் திட்டங்கள், என்ன திட்டங்கள் தீட்டப் பெற்றிருக்கின்றன இந்த அரசின் மூலம் என்று நான் கேட்க விரும்புகிறேன். இவர்களுடைய வாழ்வு பொருளாதாரத்தில் எப்படி உயரப் போகிறது? இதையும் நீங்கள் எண்ணிப் பார்க்க நான் வேண்டுகிறேன். பொருளாதாரத் திட்டம் என்று பார்க்கிறபோது, நமது பாரதப் பிரதமர் அவர்கள் பல பொருளாதார நிபுணர்களையும், விஞ்ஞானிகளையும் வைத்து சிந்தித்து பொருளாதாரத் திட்டங்களையெல்லாம் வகுத்துக் கொடுத்து இருக்கிறார்கள். 20 அம்சத் திட்டம் என்பதும் இங்கே பொருளாதாரத் திட்டம்தான். இந்தத் திட்டத்தை தமிழக அரசு எந்த நிலையில் செயல்படுத்துகிறது என்பதை தயவுசெய்து இங்கே இருக்கின்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும், அமைச்சர் அவர்கள் என்று சொல்வதைத் திருத்திக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 அம்சத் திட்டத்தை தமிழக அரசு எந்த அளவில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை—செயல்படுத்தவில்லை என்பதைப்போல இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள்—அவர்களுடைய மத்திய அரசைச் சார்ந்த அமைச்சர் அவர்களே இங்கே வந்து, 20 அம்சத் திட்டத்

[திரு. எ. அருணாசலம்] [1987 ஏப்ரல் 7

திட்டத்தை தமிழக அரசுதான் சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்று பாராட்டி விட்டுச் சென்றிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கெல்லாம் தெரியும்; காங்கிரஸ் பேரியக்கம் என்பது பாரம்பரியமான இயக்கம். (குறுக்கீடு) என்னைப் பேச விடுங்கள். நான் ஆதிதிராவிட நலத்துறை மானியத்தின் மீது பேசுகிறேன்: (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அமருங்கள். (குறுக்கீடு). எல்லோரும் அமைதியாக இருங்கள். (குறுக்கீடு).

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பாராட்டி இருக்கிறார்கள், உண்மைதான். அமைச்சர் பாராட்டுகிறார் என்றால் அதனுடைய பொருள் என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அண்ணாதாசன், இப்படி ஒருவருக்கொருவர் குறுக்கே பேசுவது முறையல்ல. உறுப்பினர் பேசும்போது அமைச்சர் பதில் சொல்லலாம். உறுப்பினர் பேசுவதாக இருந்தால் ஏதாவது விதியின்கீழ் பேசலாம். (குறுக்கீடு).

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமெல்லாம் தோழமைக் கட்சி. இங்கே 20 அம்சத் திட்டத்தை. . . . . (குறுக்கீடு).

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் பேசுகின்றார்; அமைச்சர் பதில் சொல்கின்றார். இடையிலே உறுப்பினர்களுக்கு ஏதேனும் விளக்கம் தேவையென்றால், உங்கள் மூலமாக அவர்கள் கேட்டால், பதில் சொல்வதற்கு எங்கள் கட்சியின் உறுப்பினர்கள் தயாராக இருக்கிறார்கள். அதை விட்டுவிட்டு, * * என்று கூச்சல் போட்டுக்கொண்டு இருப்பது அருவெறுப்பாக இருக்கிறது. (குறுக்கீடு).

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1987 ஏப்ரல் 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி ஒருவருக்கொருவர் நேருக்கு நேர் பேசக்கூடாது. (குறுக்கீடு). நீங்கள் அமருங்கள். என்ன இப்போது இவ்வளவு பேரும் எழுந்து கொள்கிறீர்கள். இவ்வளவு பேரும் போடுகின்ற சத்தத்தால் அவருக்கு அப்படிக் கேட்கிறது. சத்தமாக யாரும் பேசக்கூடாது. அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

(மாலை 5-20)

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மத்திய அமைச்சர் அவர்கள் 20 அம்ச திட்டம் சிறப்பாகச் செயல்படுகிறது என்று பாராட்டி இருக்கிறார்கள் என்றால் அதனுடைய பொருளை நீங்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். 20 அம்ச திட்டம் சிறப்பாக செயல்பட வேண்டும் என்பதை நாகரீகமான முறையில் எப்படி செயல்பட வேண்டும் என்பதை உணர்த்திக் காட்டி சொல்லியிருக்கிறார்கள் என்பதை ஞாபகப்படுத்தி பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு உறுப்பினர் பேசும்போது அவருக்கு ஏதாவது பதில் சொல்ல வேண்டும் என்றால் நீங்கள் பேசும்போது அல்லது உங்கள் கட்சியில் உள்ளவர்கள் பேசும்போது அதற்கு பதில் சொல்லுங்கள். ஒவ்வொரு வார்த்தைக்கும் பதில் சொல்லிக்கொண்டு பேசுவது சரியல்ல.

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பாரதப் பிரதமர் அவர்கள் ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்காக பொருளாதார மேம்பாட்டுக்காக இங்கே கொடுக்கப்பட்ட திட்டங்கள் தமிழகத்தில் எவ்வாறு செயல்பட்டு கொண்டு வருகிறது என்பதைத்தான் நாம் பேசிக்கொண்டு இருக்கிறோம். இது நன்கு செயல்படவில்லை என்பதை நான் உதாரணத்தோடு சொல்ல விரும்புகிறேன். என் வாயில் இருந்து வருகின்ற வார்த்தைகள் எல்லாம் உண்மையான வார்த்தைகளாகத் தான் இருக்கும். நான் படித்தவன், பண்புள்ளவன், உண்மையைத்தான் பேசுவேன். ஆதாரத்துடன்தான் பேசுவேன். பொருளாதாரத் திட்டம் 20 அம்ச திட்டம் என்று கூறுகிறோம். அந்தத் திட்டங்களை எடுத்துக் கொள்ளுங்கள். ஏழை எளிய

மக்கள், வறுமைக் கோட்டுக்கு கீழே இருப்பவர்களுக்காக ஏழ்மை ஒழிப்புத் திட்டம் என்று கொண்டு வந்து இருக்கிறோம். அந்தத் திட்டம் எவ்வாறு செயல்படுகிறது என்பதை எண்ணிப் பாருங்கள். தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்காக வழங்கப்படுகின்ற அந்த கோதுமை, அரிசி, பணம் எல்லாம் அவர்களைச் சென்று அடைகிறதா? சப்சிடி என்று இங்கே நியாய விலைக் கடைகளின் மூலம் வழங்கப்படுகின்ற அந்த அத்தியாவசியப் பொருட்கள் எல்லாம் அந்த உரிய மக்களுக்குச் சென்று அடைகிறதா? என்பதை எல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகவும் கண்ணியத்திற்கு உரியவர் என்பதை நான் அறிவேன். அவர்கள் குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால், குறிப்பிட்டுச் சொன்னால் அரசு அதன் மீது நடவடிக்கை எடுக்கும். ஏதோ மத்திய அரசு கொடுக்கும் கோதுமை, அரிசி, பணம் எல்லாம் அது எங்கோ போய் சேர்ந்து விடுகிறது, திட்டம் நிறைவேறவில்லை என்பதைப் போல அவர் சொல்லிக்கொண்டு இருக்கிறார். அதனால் நமக்கு இருக்கின்ற உறவு மட்டும் அல்ல பொதுமக்கள் சந்தேகிக்கக்கூடிய அளவுக்கு நிலைமை ஏற்படும். ஆகவே குற்றம் இருந்தால், தவறு இருந்தால், எங்கேயாவது ஊழல் நடந்து இருந்தால், சுட்டிக்காட்டுங்கள். அரசு அதன்மீது நடவடிக்கை எடுக்கும். அதை விடுத்து, சருவது எல்லாம் அங்கே போகிறது தெரியும், என்ன ஆகிறது தெரியும் என்று பேசுவது அழகல்ல. நாகரீகம் அல்ல. அவர் மெத்த படித்தவர், மிகவும் கண்ணியமானவர், அவர் மிகவும் நாகரீகம் தெரிந்தவர், அவர் இப்படிப் பேசுவது சரியல்ல.

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உரையை ஆரம்பிக்கும்போது ஆரம்பத்திலேயே சொன்னேன். நடந்த உண்மையத்தான் சொல்வேன் என்று சொல்லியிருக்கிறேன். சற்று பொறுமையாக இருப்பீர்களானால் நடந்த உண்மையை ஆதாரத்தோடு சொல்வேன். எனது பெரம்பலூர் தொகுதியில் உள்ள வேப்பந்தட்டை, அதேபோல் பெரம்பலூருக்கு அண்மையில் இருக்கின்ற வேப்பூர், ஆலத்தூர், இந்த 4 ஒன்றியங்களை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளுங்கள். இதற்கு ஒரு ஆய்வுக் குழுவை வையுங்கள். அங்கு எவ்வாறு முறைகேடுகள் நடந்து இருக்கின்றன என்பதைப்பற்றி எல்லாம் நான் சொல்லுகிறேன். அங்கே இருக்கின்றவர்கள் உண்மைக்கு மாறாக கணக்குகளை எழுதிவைத்து விட்டு அங்கே இருக்கின்ற அரிசி, கோதுமை, பணம் இவைகளை எல்லாம் அங்கே இருக்கின்றவர்கள், அதிகாரத்தில் இருக்கின்றவர்கள் பின்னணியில் இருப்பவர்கள் அவைகளை எல்லாம் அபகரித்து இருக்கிறார்கள்.



**டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்றவைகள் உண்மையாக இருக்குமானால் அங்கே இருக்கின்ற ஊராட்சி ஒன்றியத்தில், போய்ச் சொல்லலாம், டி.டி. சியில் போய்ச் சொல்லலாம், அங்கே இருக்கின்ற அரிசன நலத் துறையில் போய்ச் சொல்லலாம். அதைக் கேட்டு அங்கே பரிசீலனை செய்து உண்மையான நிலையில் குற்றச்சாட்டு இருந்தால், அதற்கு வேண்டிய நடவடிக்கையை அவர்கள் எடுப்பார்கள். அதை யாரும் மறுக்கவில்லை. யாருக்கு அந்த நன்மைகள் போய்ச் சேர வேண்டும் என்று மத்திய அரசு கருதுகிறதோ, மாநில அரசு கருதுகிறதோ அது அவர்களுக்குப் போய்ச் சேரும் என்பதை தயவுசெய்து நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குற்றச்சாட்டைச் சொல்கிறேன் என்று சொல்லிக்கொண்டே தான் இருக்கிறார்கள். அவருடைய தொகுதியைப் பற்றி சொல்லும் போது வேப்பந்தட்டை, வேப்பூர், பெரம்பலூர் ஆகிய இடங்களைப் பற்றிச் சொன்னார்கள். அங்கே இருக்கின்றவர்களுக்கு அந்த ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி. ஆகிய திட்டத்தின் வாயிலாக ஒதுக்கப்படுகின்ற கோதுமை, அரிசியை எடுத்துக் கொண்டு போகிறார்கள் என்றார்கள். நீங்கள் தான் அங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர். அதைப்போலவே வேப்பூர் பகுதியைப் பொறுத்தவரையில் அது என்னுடைய தொகுதிக்கு உட்பட்டது. அங்கே யார் எடுத்துக்கொண்டு போகிறார்கள்? நான் மாதத்திற்கு 2, 3 தடவை அந்தப் பகுதியில் சுற்றுப்பயணம் செய்து கொண்டு வருகிறேன். அப்படிப்பட்ட புகார் எதுவும் என் தகவலுக்கு வரவில்லை. அப்படி புகார் சொல்லுகின்ற நேரத்தில் அதை எடுத்துக் காட்டி யார், இன்னார் இந்த மாதிரி செய்கிறார் என்று சொன்னால் அரசு அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்.

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அவையில் கூறிய அனைத்திற்கும் நான் பொறுப்பேற்கிறேன். இங்கே பொருளாதாரத் திட்டங்களைப் பற்றி, மத்திய அரசுடைய பொருளாதாரத் திட்டங்களைப் பற்றி பேசி வருகிறேன்.

இங்கே இன்னொரு உதாரணத்தைக் கூற விரும்புகிறேன். என்னுடைய உரையைத் தொடங்குகின்றபோது * * (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதம் ஒரு முறையாகப் போக வேண்டும். தயவுசெய்து, பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் மானியக் கோரிக்கையின் மீது பேசவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருப்பதை சிதைத்து விடாதீர்கள். பொறுமையாகப் பேசுங்கள். எதுவும் முறையாக இருக்க வேண்டும். * * என்று சொல்வது முறையல்ல. பதிலுக்குத் திரும்ப வந்தது என்றால், அதைத் தாங்குவதற்கு உங்களுக்கு சக்தி இருக்க வேண்டும். இது அவைக் குறிப்பில் வேண்டாம்.

**டாக்டர் க. நல்லமுத்து:** இங்கே என் பேச்சைத் துவங்குகின்றபோது, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரவர்கள் அவையில் இல்லை. ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் மட்டும் அவையில் இருந்தார்கள். இப்போது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது இன்றைக்கு மானியம் வழங்கக்கூடிய அமைச்சர் இருக்கிறார். போக்குவரத்து மானியத்தின் மீது பிரச்சினைகளை வளர்க்காதீர்கள். நேரத்தை வளர்க்க வேண்டும். நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டும். அதிகமாகப் பேச வேண்டும்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நல்லமுத்து அவர்கள் பேசத் துவங்கியதிலிருந்து நான் இங்கே தான் இருந்தேன். நீங்கள் அழைக்கிறபோது அவர் சீட்டில் இல்லை. அதற்குப் பின்னால் தான் வந்தார். இதற்கு மேல் நான் ஆதாரம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. நான் இங்கேயே தான் இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது முறையல்ல. தனிப்பட்ட தாக்குதலைத் தவிர்ப்பது நல்லது. இல்லாவிட்டால் அது நாகரீகமான, நம்முடைய நடவடிக்கையாக அமையாது.

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் கருத்தை நான் கூறிவிடுகின்றேன். நீங்கள் அதை கண்டனக் கணையாகத் தொடுத்தாலும் சரி, நீங்கள் எந்தக் கோணத்திலே உங்களுடைய பாணியில், நீங்கள் என்னைத் தாக்கினாலும் சரி, நான் அதை ஏற்றுக்கொள்வதற்கும், தாங்கிக்கொள்வதற்கும் சக்தி படைத்தவனாக இருக்கிறேன். இங்கே மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரவர்கள் மானியமல்லாது, ஆதிதிராவிட நலத்துறை மானியக் கோரிக்கை தான் நடந்து கொண்டிருக்கிறது என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆதிதிராவிடர், பழங்குடி மக்களுடைய நலனில், இங்கே இருக்கின்ற அனைத்து அமைச்சர்களுக்கும் பங்கு உண்டு என்ற நல்லெண்ணத்தில் நான் எதிர்பார்த்தேன். வேறு ஒன்றும நான் இங்கே எதிர்பார்க்கவில்லை. இங்கே பொருளாதாரத் திட்டத்தை நான் பார்க்கும்போது . . . (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதிதிராவிட நலத்துறை மானியக் கோரிக்கை பற்றி எவ்வளவு நேரமானாலும் பேசலாம், எத்தனை உறுப்பினர்கள் வேண்டுமானாலும் பேசட்டும் என்று காலையிலே தாராளமாக சொல்லியிருக்கிறேன். ஸ்பெஷலாகக் கொடுத்திருக்கிறேன். 'டோண்ட் ஸ்பாயில் தி கிளைமேட்'.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் அவைக் குறிப்பில் வேண்டாம். மானியத்தைப் பற்றி பேசுங்கள். தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றிப் பேசுங்கள்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1987 ஏப்ரல் 7

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலனில், பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் பணிகள், தமிழகத்தில் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது என்பதைப் பற்றித்தான் நான் ஆதாரத்துடன் கூறிக் கொண்டிருக்கிறேன். இங்கே போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் இருக்கிறார்கள். இங்கே ஆதாரத்துடன் ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். இங்கே பாரதப் பிரதமர் 1976-ல் ஒரு பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டம் தான் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்குப் பேருந்து பர்மிட் வழங்கும் திட்டம். அந்தத் திட்டத்தை போக்குவரத்துத் துறை அமைச்சர் இன்னும் அமல்படுத்தவில்லை. (குறுக்கீடுகள்).

(மாலை 5-30)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, நேற்றைய தினம் போக்குவரத்து மானியக் கோரிக்கை முடிந்திருக்கிறது. நேற்றைய தினம் பல உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை லாரி பெர்மிட் கொடுக்கிறபோது, 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இந்த அரசாங்கம் ஒதுக்கி வைக்கிறது. ஒருவேளை அதற்குப் போதிய அப்ளிகேஷன் வரவில்லை என்று சொன்னால், இரண்டாவது முறையாக தாழ்த்தப்பட்டவர்கள் தனியாக அழைக்கப்படுகிறார்கள். அதிலும் வரவில்லை என்று சொன்னால், மற்றவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. அதேபோன்று, பஸ் பர்மிட்டைப் பொறுத்தவரை தாழ்த்தப்பட்டவர்கள் எங்கெங்கே போட்டிருந்தாலும், எல்லோருக்கும் ஒரு சட்டதிட்டம் வைத்திருக்கிறார்கள். அதிலே 18 சதவிகிதம் கடைப்பிடிக்க வேண்டுமென்று வைத்திருக்கிறோம். அந்த சட்டதிட்டத்திற்கு உட்பட்டு வரவில்லை என்றால், போதிய அப்ளிகேஷன் வரவில்லை என்றால், 18 சதவிகிதத்தை நாங்களாகவே ஆதிதிராவிடர்களை அழைத்து ஒதுக்கி விட முடியாது. அவர்கள் மனுக்கள் போட்டால், இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், ஒன்றைச் சொல்கிறேன். தாழ்த்தப்பட்டவர்களுக்கு இந்த அரசாங்கம் செய்திருப்பதுபோல், நிச்சயமாக வேறு எந்த அரசாங்கமும் செய்திருக்க முடியாது என்று திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 7]

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாரி பர்மிட்டைப் பொறுத்தவரை 18 சதவிகிதம் ஆதிதிராவிடர்களுக்கு கொடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். (குறுக்கீடு) ஒதுக்கியிருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

**திரு. மு. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி நேருக்கு நேராக நீங்களே பேசக்கூடாது. 'டோண்ட் பிகேவ் லைக் ஸ்கூல் சில்ரன்'.

**திருமதி டி. யசோதா:** ஒதுக்கியிருப்பதாகச் சொல்லுகிறார்கள். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், எனக்குத் தெரிந்த பல ஆதிதிராவிடர்களிடம், லாரி பர்மிட்டிற்காக மனு போடுங்கள் என்று சொல்லி, போட்டதற்குப் பிறகுகூட, அதுவும் எக்ஸ் சர்வீஸ் மேனாக இருந்தும்கூட, பலருக்கு பர்மிட் கிடைக்கவில்லை. அது மட்டுமல்ல, சில சட்டதிட்டங்களுக்கு சரியாக இல்லை என்ற காரணத்தினால், அது மற்றவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. சட்டதிட்டங்களில் இவர்களுக்கு சற்று தளர்வை காட்டி, ஏன் அவர்களுக்குக் கொடுக்காமல், கடந்த 1979-லே இருந்து இன்றுவரை 10 ஆண்டுகளாகியும் இவர்களுக்கு கொடுக்காமல் இருப்பதற்கான காரணங்கள் என்ன என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, நான் என்னிடத்தில் அதிகாரிகள் கொடுத்த கணக்கை வைத்திருக்கிறேன். குறிப்பாக ஆதி திராவிடர்களுக்கு 18 சதவிகிதம் லாரி பர்மிட் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் நேரடியாகப் போய், ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். அதிலே பலமுறை நாங்கள் திருப்பித் திருப்பிக் கேட்டும் அப்ளிகேஷன் வரவில்லை. எனவே, அப்படி யாருக்காவது கொடுக்கவில்லை என்று நீங்கள் எழுதிக் கொடுத்தால், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கலாம். அப்படி தெரிந்து செய்திருந்தால், அதன்மீது நடவடிக்கை எடுக்க எங்களுக்குத் தயக்கம் இல்லை. என்றாலும், அவர்களுக்கு ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எத்தனையோ முறை ஆதி திராவிடர்கள் வரவேண்டும் என்பதற்காக, பர்மிட்டுக்கு விண்ணப்பம் போடுங்கள் என்று திருப்பித் திருப்பிக் கேட்டிருக்கிறோம். அதற்கான கணக்கைக் கொடுக்கிறேன்.

[திரு. சு. முத்துசாமி] [1987 ஏப்ரல் 7

பஸ் பர்மிட்டைப் பொறுத்தவரை, சட்டதிட்டத்திற்கு உட்பட்டு கொடுக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதிகாரிகளுக்கு இருக்கிறது. ஒருவேளை சட்டதிட்டத்திற்கு உட்பட்டு கொடுக்கவில்லை என்று நீதிமன்றத்திற்குப் போகிறபோது, இந்த அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்று சொல்லும்போது, சட்ட திட்டத்திற்கு உட்பட்டுத்தான் செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களும் சட்டத்திட்டத்திற்கு உட்பட்டுத்தான் மனு போட வேண்டும். மனுவே போடவில்லை என்றால், எப்படி ஒதுக்குவது? ஆதி திராவிடர்களுக்கு சட்டப்படி ஒதுக்க வேண்டியதை இந்த அரசாங்கம் ஒதுக்கி வைத்திருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரிலே ஜெயராஜ் என்ற ஆதி திராவிடர் பஸ் பர்மிட்டிற்கு மனு செய்கிறார். அவர் மனுவை எதிர்த்து தமிழக அரசு . . . .

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, ஜெயராஜ் பிரச்சினையைப் பற்றி நேரடியாக எனக்குத் தகவல் தெரியும். சட்டதிட்டத்திற்கு உட்பட்டு மனு செய்ய வேண்டும். எங்கு வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும் மனு செய்யலாம் என்ற நிலை இல்லை. அது மாற வேண்டும். 18 சதவிகிதம் ஆதி திராவிடர்களுக்கு கொடுக்கப்படுகிறது. யார் யார் மனு கொடுக்கிறார்களோ, அவர்களுடைய மனுக்களை பரிசீலனை செய்யவேண்டிய உரிமை இருக்கிறது. மனுப் போட்ட ஆதி திராவிடர்களுக்கு கொடுத்துவிட்டு, மற்றவர்களுக்கு கொடுக்கலாம் என்ற நிலையை வைத்திருக்கிறோம். மனுவே போடாமல் இருந்தால், அதை ஏற்றுக்கொள்கிற நிலை இல்லை.

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜெயராஜ் என்னும் ஆதிதிராவிடர் சுப்ரீம் கோர்ட்டிலே வழக்கு தொடுத்து, அதிலே வெற்றி பெற்றும் பஸ் பர்மிட் அவருக்கு இன்றுவரை வரவில்லை.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, சுப்ரீம் கோர்ட்டிலே வெற்றி பெற்றால் அதை அரசாங்கம் நிறுத்த முடியுமா? இதற்குத் தாங்கள்தான் முடிவு எடுக்க வேண்டும்.



1987 ஏப்ரல் 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுபோன்ற விவகாரங்களைப் பற்றி முதலிலே என்னிடம் காட்டிவிட்டுப் பேசவேண்டும். சுப்ரீம் கோர்ட்டிலே வெற்றி பெற்ற பிறகு அரசாங்கம் அதை மீறுவார்களா?

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுப்ரீம் கோர்ட்டிலே தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் அந்தத் தீர்ப்பை தமிழக அரசு அமுல் செய்யாமல் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் அரசியல் வேண்டாம். உச்ச நீதிமன்றத்திலே ஆதிதிராவிடர்களை நீதிபதியாக நியமியுங்கள் என்று இந்த நேரத்தில் நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** தலைவர் அவர்களே, முதன் முதலாக ஆதி திராவிடரை சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக, அதுவும் ஒரு தமிழரை நியமித்த பெருமை . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் பாகி, டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜாகி, ஹைகோர்ட் ஜட்ஜாகி அதற்கு பிறகு தான் சுப்ரீம் கோர்ட் ஜட்ஜாகப் போட்டீர்கள். நீங்கள் ஒன்றும் சலுகை காட்டவில்லை. சலுகை காட்டுவதாக இருந்தால் நேராக எடுத்துப் போடுங்கள். மற்றவர்களைப் போடுகிற மாதிரி . . . . . . . (கூச்சல்-குழப்பம்) ஆதிதிராவிடர் வக்கீலை எடுத்து நேராகப் போடுங்கள். (குறுக்கீடு). நேரடியாகப் போடலாம். (குறுக்கீடு) (கூச்சல்—குழப்பம்) திரு. வேங்கடரமணன், உட்காருங்கள்—நான் சொல்கிறேன்.

Even a Law College Professor can be directly appointed to the Supreme Court as a distinguished jurist.

ஆதிதிராவிடரில் distinguished jurist இல்லையா தமிழ்நாட்டிலே? அவரைப் போடுங்கள். மற்ற கம்யூனிட்டியில் நேராக போடுகிறார்கள். ஏன் ஆதிதிராவிடர் கம்யூனிட்டியில் போடவில்லை? (குறுக்கீடு). அட்லீஸ்ட் ஆதி திராவிடருக்கு அதைச் செய்யுங்கள். நேராகச் செய்யுங்கள்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** தலைவர் அவர்களே, தவறான தகவலைத் தருகிறீர்கள். . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தவறான தகவல் அல்ல. நேரடியாகப் போடலாம். மற்ற கம்யூனிட்டிக்கு போடுகிற மாதிரி இந்த கம்யூனிட்டியை போடுங்கள். போடலாம் என்கிறேன். (குறுக்கீடு) போட்டிருக்கிறார்கள். எத்தனையோ வக்கீல்களுக்கு போட்டிருக்கிறார்கள். ஆதிதிராவிடர்களுக்கு தெரிந்த சட்டம் எல்லோருக்கும் தெரியும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, வக்கீல்களின் வாதம் தலைக்கு மேலே போய்க்கொண்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் பேச வேண்டும். அதுபற்றி பேசுவதற்கு எல்லோரும் வழிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே 42 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய செண்டிமெண்டை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். நாமும் அவர்களுடைய வாக்குகளைப் பெற்றுத்தான் இங்கே வந்திருக்கிறோம், தமிழகத்திலே.

**டாக்டர் க. நல்லமுத்து:** தலைவர் அவர்களே, இங்கே ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம், இலவசப் பட்டா வழங்கும் திட்டம், இந்தத் திட்டங்களைப் பற்றியெல்லாம் (கூச்சல்—குழப்பம்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மக்களுக்காக இந்த அரசு ஏதாவது செய்ய வேண்டும், செய்வதற்கு நாம் உதவ வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில்தான் நான் இங்கே பேசிக் கொண்டிருக்கிறேன். தயவு செய்து என்னைப் பேச விடுங்கள். (கூச்சல்-குழப்பம்). இங்கே ஆதிதிராவிட மக்களுக்காக இலவச மனைப் பட்டா வழங்கும் திட்டம், இலவச வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இந்த இரண்டு திட்டத்தையும் நான் இணைத்துக் கொள்கிறேன். இந்த இலவச மனைப்பட்டா வழங்கும் திட்டத்தில் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம்.

Article 124 Clause 3:

"A person shall not be qualified for appointment as a Judge of the Supreme Court unless . . . . .

he has been for at least ten years an advocate of a High Court or of two or more such Courts in succession" Any lawyer can be appointed. Any 'distinguished jurist' can be appointed.

(கூச்சல்-குழப்பம்). இதோடு முடிந்தது.



**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** தலைவர் அவர்களே, என்னை பதில் சொல்ல விடுங்கள். நீங்கள் சொல்லுகின்ற கருத்தை நான் ஒத்துக்கொள்கின்றேன். இந்தியாவிலே சுதந்திரம் கிடைத்ததிலிருந்து . . . . . . (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏன் அதைச் செய்யக் கூடாது?

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** தலைவர் அவர்களே, என்னைப் பேசவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைச் செய்யலாம். அரசியல் சட்டத்தில் இடம் இருக்கிறது. ஏன் போடக்கூடாது? ஏன் போடத் தடுக்கிறீர்கள். ஆதிதிராவிடர்களுக்கு அறிவு இல்லையா? மற்ற கம்யூனிட்டி மாதிரி அறிவு இல்லையா என்று கேட்கிறேன்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** I object what yau say. நீங்கள் திசை திருப்புகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசியல் சட்டத்தில் இருக்கின்ற விதி முறையைக் காட்டினோம் போடுவதும், போடாததும் உங்களுடைய இஷ்டம். போடலாம் என்கிறேன்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** தலைவர் அவர்களே, ஏன் என்னைப் பேச விடமாட்டேன் என்கிறீர்கள். . . (குறுக்கீடு, கூச்சல் குழப்பம்).

(மாலை 5-40)

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடுகள்).

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, உங்களுடைய கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்திய அரசாங்கத்தினுடைய உச்ச நீதிமன்றத்திலே யாரை நீதிபதியாகப் போடலாம் என்பதற்கு ஜூரிஸ்ட்டைப் போடலாம் என்று சட்டத்திலே இருக்கிறது. ஆனால் சுதந்திரம் கிடைத்ததிலிருந்து இன்றைய வரை ஹைகோர்ட்டிலே இருக்கின்ற நீதிபதிகளை மட்டும் தான்—இன்றைய வரை, அது ஆதிதிராவிடரா, ஆதி திராவிடர் இல்லையா என்ற வித்தியாசம் பாராமல் மத்திய அரசு, அதிலும் குறிப்பாக, முதன் முதலில் ஒரு ஆதி திராவிடரை, அதுவும் தமிழகத்தைச் சார்ந்தவரை உச்ச நீதிமன்றத்திலே நீதிபதியாக அமர்த்திய பெருமை நமது தமிழகத்

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] 1987 ஏப்ரல் 7]

திற்கு உண்டு என்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர ஆசைப்படுகிறேன். (குறுக்கீடு) இன்றைய தேதியிலே கூட, ஆதிதிராவிட . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொன்னது என்னவென்றால், இவ்வளவு நாள் போடவில்லை என்ற விவகாரம் அல்ல. இவ்வளவு நாள் அரசியல் சட்டத்திலே இருந்த உரிமை ஏன் மறுக்கப்பட்டது. ஏன் போடவில்லை? (குறுக்கீடு).

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவையினுடைய தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலேயே ஒருவர் உப கேள்வி கேட்க வேண்டுமென்றால், கேட்பதற்கு அனுமதி கொடுக்கக்கூடிய அதிகாரம் உங்களிடம் இருக்கிறது. நாங்கள் கையைத் தூக்குகிறோம். நீங்கள் விடவில்லையென்றால், எங்கள் மீது நீங்கள் கோபப்படுவதாக நாங்கள் கருதவில்லை. அதேபோல், சட்டத்திலே சொல்லி இருக்கிறது என்று சொன்னால், சொல்லப்பட்ட பலவற்றில், உயர்நீதிமன்றத்திலே இருப்பவரைத் தான் போடவேண்டும் என்று அரசு முடிவெடுத்து அதிலே ஜாதி வித்தியாசம் பாராமல், குறிப்பாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவரை உச்சநீதிமன்ற நீதிபதிகளாக இன்றைக்கு மத்திய அரசு நியமித்துக் கொண்டு இருக்கிறது. இந்த மாநிலத்திலே கூட, இன்றைக்கு சென்னை உயர்நீதிமன்றத்திலே கூட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர். (குறுக்கீடு, கூச்சல்—குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அமரலாம். (குறுக்கீடு). அது அல்ல. நான் சொல்வது, ஒரு மாவட்ட நீதிபதியையோ உயர்நீதிமன்ற நீதிபதியையோ உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிப்பது சலுகை அல்ல. அவர்கள் ஒன்றும் பேவர் வாங்க வரவில்லை. அவர் டிஸ்டிரிக்ட் முனிசிப்பாக இருந்து, சுப்ரீம் கோர்ட் ஜட்ஜாக ஆகியிருக்கிறார். Select a lawyer. அதுதான் பேவர். வேர் வாவில்லையென்று சொன்னால், it is a matter of right. (குறுக்கீடு. கூச்சல்)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இதிலே மேற்கொண்டு விவாதம் தேவையில்லை. அந்த அரசியல் சட்டத்தை யாத்தவரே டாக்டர் அம்பேத்கார் அவர்கள்தான். ஆகவே, இதைப் போய் ஏன் பெரிதுபடுத்திக் கொண்டிருப்பானேன்? எனவே, மற்றவற்றைப் பேசும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 7]

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இலவச மனைப்பட்டா வழங்கும் திட்டம் என்ற திட்டத்தை எடுத்துக் கொண்டோமானால் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டாவுக்காக கையகப்படுத்தச் செல்கின்றபோது அந்த இடத்திற்குச் சொந்தக்காரர்கள், ஹைகோர்ட்டு சுப்ரீம் கோர்ட்டுக்கு சென்று விடுகிறார்கள். ஹைகோர்டிலே, சுப்ரீம் கோர்ட்டிலே ஆயிரக்கணக்கான இலட்சக்கணக்கான இத்தகைய வீட்டு மனைப் பட்டா வழக்குகள் இன்னும் கிடப்பிலே இருக்கின்றன. இதையெல்லாம் இந்த அரசு சிந்தித்துப் பார்த்து கோர்ட்டுக்குச் செல்லாத வகையில், ஆதிதிராவிடர்களுக்கு குடியிருப்பதற்கு வீட்டுமனைப் பட்டா—அது ஒரு அடிப்படைத் தேவை; அந்த அடிப்படைத் தேவைக்காக அங்கே கையகப்படுத்தும் மனைக்கு, சுப்ரீம் கோர்ட், ஹைக்கோர்ட் வரை சென்று பல ஆண்டுகள், 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் காலம் கடந்து அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் நிலை எல்லாம் இருக்கிறது.

ஆகவே, தமிழக அரசு அங்கே வீட்டுமனைப் பட்டா கையகப்படுத்துகின்ற நேரத்தில், 'கம்பல்சரி லேண்ட் அக்வெசிஷன்' என்ற திட்டத்தை—கோர்ட்டுக்கு செல்லாத ஒரு ஆக்டடை, அமெண்ட்மெண்ட்டைக் கொண்டு வந்து நிலங்களைக் கையகப்படுத்தி வீட்டு மனைப் பட்டா வழங்கக்கூடிய வழிவகை செய்தால், உள்ளபடியே 30 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்க வசதியாக இருக்கும். வீட்டுமனைப் பட்டாவே இல்லாமல், 30 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்க முடியும் என்று கூறிக்கொள்வதில் மிகவும் சிரமங்கள் இருக்கின்றன என்பதை சுட்டிக்காட்ட விழைகிறேன்.

வீடு கட்டுகின்ற—இலவச வீடு கட்டும் அந்தத் திட்டத்தையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தத் திட்டத்தில் கட்டப்படுகின்ற வீடுகள் எல்லாம் அங்கே உள்ளபடியே ஆரோக்கியமான நிலையில் இல்லை. அவைகள் எல்லாம் 5, 10 ஆண்டுகள், அதற்குக் கூட இல்லாமல், 5 ஆண்டுகள் தான் நிலைத்து நிற்க முடியும் என்ற நிலை இருக்கிறது.

இன்னும் கொஞ்ச காலத்திற்கு கெட்டியாக அது இருக்கும் படியாக—அங்கே 6 ஆயிரம் ரூபாய், 9 ஆயிரம் ரூபாய் என்பதை—உண்மையிலேயே, நல்ல ஒரு வீடு, சாதாரண நடுத்தர மக்கள் வாழக்கூடிய ஒரு வீட்டை இன்னும் உறுதியாகக் கட்டிக் கொடுக்கின்ற வழிவகைகளைச் செய்தால் உள்ளபடியே ஆதி திராவிட பழங்குடி மக்களுக்கு நன்மை செய்ததாக இருக்கும். இங்கே ஆதி

[டாக்டர் க. நல்லமுத்து] [1987 ஏப்ரல் 7

திராவிட மக்களுடைய, பழங்குடி மக்களுடைய மேம்பாட்டிற்கு மிகவும் முக்கியமான திட்டம் கல்வித் திட்டம். இலவசக் கல்வித் திட்டம்.

அந்த இலவசக் கல்வித் திட்டத்தை நாம் எடுத்துக் கொண்டால் உள்ளபடியே மிகவும் வேதனைப்படுத்தக் கூடியதாகத்தான் இருக்கிறது. இலவசக் கல்வித் திட்டம் என்று இங்கே வைத்துவிட்டு, இங்கே பல்வேறு தனியார் கல்லூரிகளையும், மருத்துவக் கல்லூரிகளையும் பொறியியல் கல்லூரிகளையும், தொழில் நுட்பப் பள்ளிகளையும் துவங்கி இருக்கிறீர்கள். இதுவாக இருக்கும்போது, **ஆதிதிராவிட, பழங்குடி மக்களுக்குரிய அந்த 18 விழுக்காடு** என்ற சலுகை கிடைக்காமல் போய் விடுகிறது. என்னால் இங்கே உதாரணத்தைச் சொல்ல முடியும். என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பெரம்பலூரிலே இருக்கின்ற துரைசாமி என்பவருடைய மகன் சிவக்குமார் என்பவர் கடந்த ஆண்டு பொறியியல் கல்லூரிக்கு மனுச் செய்திருந்தார், மனு செய்து அவருக்கு பொறியியல் கல்லூரியில் இடம் கொடுத்தது. அது ஒரு தனியார் கல்லூரி. அதிலேதான் இடம் கொடுக்கப்பட்டது. 18 சதவிகிதம் என்ற சலுகையில் சீட்டு கிடைத்தது. ஆனால் அதற்குரிய நன்கொடை என்கிற பணத்தை அந்த மாணவர் கட்ட முடியாத காரணத்தால் அந்தப் பொறியியல் கல்லூரியில் அவர் சேருவதற்கு முடியவில்லை. எனவே இலவசக் கல்வி என்ற திட்டம் எல்லாம் ஏமாற்றப்படுகிற ஒன்றாகத்தான் இருக்கிறது என்று வேதனையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சிவக்குமார் என்ற அந்தப் பொறியியல் கல்லூரியில் இடம் கிடைத்த மாணவரைப்பற்றி நான் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு கல்வி பயிலுவதில் **பாதுகாப்பு தமிழக அரசில் இல்லை என்ற கருத்தை** வலியுறுத்தத்தான் சொல்லுகிறேன். சிவக்குமார் என்ற அந்த மாணவன் இதைக் குறித்து முன்னாள் கல்வி அமைச்சர் அவர்களிடமும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரிடமும் முறையிட்டும்கூட இதுவரை உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. இந்த மாணவனுக்கு கல்லூரிக்கான நன்கொடை வசூலிக்கப்படாமலேயே இடம் கொடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்படவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன். இப்படி கல்வி கற்க முடியாத நிலையில் இந்தச் சமுதாயத்தை எப்படி முன்னேற்றப் போகிறீர்கள் என்றுதான் கேட்க விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது).



1987 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மணி 5-11-க்கு ஆரம்பித்தீர்கள். 40 நிமிடங்கள் ஆகிவிட்டன. முடித்து விடுங்கள். Mr. Venkataramanan, I am here to direct him நீங்கள் எல்லாம் ஸ்பீக்கர் மாதிரி நடந்தால் . . . . (குறுக்கீடு) அப்போது நீங்கள் சொல்லுங்கள். நான் போகிறேன். நேரம் எனக்குத் தெரியாதா? முறையல்ல.

திரு. டி. ஆர். வேங்கடராமணன்: Sir, you have named me and let me explain. I have been only trying to stop it.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அது முடிந்துவிட்டது. 5-11 மணிக்கு ஆரம்பித்தார். இப்போது 5-46 மணி ஆகிவிட்டது. இன்னும் 5, 6 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. முறையல்ல. போதும். (குறுக்கீடு). நீங்கள் இவ்வளவு பேரைக் கூப்பிட்டு சப்போர்ட் பண்ணுகிறீர்கள். நான் யாரைக் கூப்பிட்டு வைத்துச் சொல்வது? முறையல்ல. நீங்களெல்லாம் சேர்ந்து கோவாப்பரேட் பண்ணி இவ்வளவு நேரம் பேசியாகிவிட்டது. எவ்வளவு நேரம் வாய்ப்பு கொடுப்பது? இன்றைக்கு அதிகமான நேரத்தைக் கொடுத்து அதிகமான உறுப்பினர்களைப் பேச வைக்க வேண்டும் என்று சொன்னதே நான்தான். எவ்வளவு நேரம் கொடுத்தாலும் திருப்தியில்லை என்றால் என்ன பண்ணுவது? எதைச் சொன்னாலும் மாற்று சொல்லிக்கொண்டேயிருந்தால் என்ன செய்வது? அடுத்த உறுப்பினர் பேச இருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் பேச இருக்கிறார். அவர்களிடத்தில் கொடுத்துவிடுங்கள். அவர் பேசுவார். அடுத்து, திரு. பாலாஜி.

திரு. கே. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டுக்கான ஆதி திராவிடர் நலத்துறை மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி என்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைய தினம் ஆதி திராவிடர் நலத் துறைக்காக மொத்தம் கிட்டத்தட்ட 51 கோடி ரூபாய்க்கும் அதிகமாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறது. அந்த மானியக் கோரிக்கையின்மீது பேச வேண்டிய அருமை நண்பர்கள் மத்திய அரசு வழங்குகிற பணத்தையெல்லாம்

நாங்கள் ஏதோ தவறாகச் செலவழிப்பது போல சுட்டிக்காட்டியதைப் பார்க்கிற நேரத்தில் ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன். அவர் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார். அவருடைய தொகுதியில் தவறு நடக்கிறது என்றால் அதைச் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துக் கூறியிருக்கலாம்.

அது மாத்திரமல்லாமல் அந்தப் பணத்தை வழங்குகிற மத்திய அரசாங்கமே அது சரியான முறையில் செலவு செய்யப்படுகிறதா என்று ஆய்வு செய்ய தங்கள் அலுவலர்களையெல்லாம் அனுப்பி வைக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் அவர்கள் பேசும் நேரத்தில் ஒன்றைச் சொன்னார்கள். மத்திய அரசாங்கம்தான் பணத்தைத் தருகிறது என்று சொன்னார்கள். ஏற்கெனவேகூட சென்ற முறை இந்த மன்றத்தில் பேசுகிற போதும் மத்திய அரசு தருகிறது; மத்திய அரசு தருகிறது என்று குறிப்பிட்டார்கள். மாநிலங்களிலிருந்து பல்வேறு துறைகள் மூலமாக வரிகளைப் பெற்று அந்தப் பணத்தில் ஒரு பகுதியைத்தான் மாநில அரசாங்கங்களுக்கு மத்திய அரசு தருகிறதே தவிர ஏதோ தமிழகத்தில் அந்தப் பணத்தை வசூல் செய்யாமல் மொத்தத்தில் வேறு எங்கேயோ இருந்து அல்லது வேறு நாட்டிலிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு வந்து இங்கே கொடுப்பதைப் போல் பேசுவது நடைமுறைக்கு ஒத்து வராது என்பதை நான் இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் எந்த ஒரு அரசும் செலவு செய்கிற அந்தப் பணத்தை மக்களிடத்தில் இருந்து வரியாக வாங்கித்தான் செலவிடுகிறது. ஆகவே நாங்கள் எல்லாம் அடிமைகளைப் போலவும் மத்தியில் இருப்பவர்கள் ஆளுகிறவர்களைப் போலவும் பேசுவது பேரறிஞர் அண்ணா அவர்களின் கருத்துக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் கருத்துக்கும் ஏற்றதல்ல என்று சொல்லிக் கொள்கிறேன். (கரவொலி)

(மாலை 5-50)

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலும், எனது தொகுதிக்கு அண்மையில் இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் திரு. அருணாசலம் அவர்களுடைய தொகுதியிலும் நடந்து வருகிற பல்வேறு குறைகளையெல்லாம் உரிய அதிகாரிகளிடம், உரிய அமைச்சரிடம் பல்வேறு சந்தர்ப்பங்களில் முறையீடு செய்திருக்கிறேன் என்பதை கூறிக்கொள்கிறேன்.





**திரு. கே. பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் அவர்கள் மாதத்தில் இரண்டு முறை, மூன்று முறை அந்தத் தொகுதிக்குச் செல்லுகிறேன், என்னிடத்திலே இப்படிப்பட்ட புகார்கள் வரவில்லை என்று உடனடியாக மறுத்திருக்கிறார்கள். அருமைச் சகோதரர் அவர்கள் தான் எடுத்துச் சொன்னதாக இங்கே பேசுகிறார்கள். எங்களால் கூட கருத்துக்கு கருத்து பதில் சொல்ல முடியும். ஆனால் இன்றைக்கு நாங்கள் அரசியலில் இருக்கின்ற காரணத்தால் எதை வேண்டுமானாலும் எடுத்தெறிந்துவிட்டுப் போகலாம். அதைத் தாங்கிக் கொள்ள வேண்டும் என்ற நியதி இங்கே யாருக்கும் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாநிலத்திலே நாங்களும் ஆளுகிறோம், மத்தியிலே நீங்கள் ஆளுகிறீர்கள். ஆளுகிற நாம் பேசுகின்ற கருத்துக்கள் முறையாக இருக்க வேண் வேண்டும். தவறு தவறுதான். அந்தத் தவறை யார் செய்தாலும் சுட்டிக்காட்டுவதுதான் நம்மைப் போல உள்ளவர்களுடைய கருத்து என்பதை தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் தெரிந்து பேசுவது என்றைக்குமே நலம் பயக்கும். அந்த வகையிலே ஆதிதிராவிட நலத்துறை வாயிலாக பழங்குடி சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு எல்லாம் ஏராளமாக பொருள்களைச் செலவு செய்து இங்கே புரட்சித் தலைவருடைய அரசாங்கம் நன்மை செய்து கொண்டிருக்கிறது. அதிலே இன்னின்ன காரியங்களை விட்டுவிட்டார்கள், இப்போது வாடகையில் உள்ள பள்ளிக் கட்டடங்களை சொந்தக் கட்டிடங்களாக மாற்றுங்கள் என்று சொன்னால் அவை ஏற்புடைய கருத்துக்கள். அதே நேரத்தில் அங்கே உள்ள மாணவர்களுக்கு அரசு கொடுக்கும் பணத்திலே அலுவலர்கள் தவறு செய்வார்களேயானால் அதைச் சுட்டிக்காட்டுங்கள், அது வரவேற்கக் கூடிய கருத்து. அது களையப்பட வேண்டிய கருத்து என்பதை தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு இந்த மானியத்திலே ஆதி திராவிட மக்களுக்கு அங்கே படிக்கின்ற அல்லது அந்த விடுதியிலே தங்கிப் படிக்கின்ற மாணவர்களுக்காக விடுதியிலே காஸ் அடுப்புகளை வைப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்க ஒன்று. அது மட்டுமல்லாமல் அந்தச் சகோதரர்கள் படிக்க ஒரு மேசை, நாற்காலி வழங்குவதாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்கப்பட வேண்டிய கருத்து. இதிலே ஏதாவது விடுபட்டிருந்தால் அதையெல்லாம் சேர்க்க வேண்டும் என்று இங்கே

[திரு. கே. பாலாஜி] [1987 ஏப்ரல் 7

எடுத்துச் சொல்ல வேண்டும். இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த சகோதரர்களாக இருக்கிறார்கள். அந்தச் சகோதரர்களுக்காக இங்கே திட்டத்தட்ட எந்தத் துறையாக இருந்தாலும் 18 சதவிகிதம் வாய்ப்பு வழங்குகிறோம். அதிலே குறைபாடு இருக்குமானால் அதை எடுத்துச் சொல்ல வேண்டும். இங்கே பேசிய நண்பர்கள் போக்குவரத்துத் துறையிலே, அது லாரியாக இருந்தாலும், பேருந்தாக இருந்தாலும், தனிப்பட்ட முறையிலே வேண்டியவருக்கு மறுக்கப்பட்ட காரணத்தாலே இங்கே பேசுகிறாரோ என்ற உணர்வு எங்களிடத்திலே ஏற்படுகிறது. அப்படி இருக்கக்கூடாது. எந்தக் கருத்தைச் சொன்னாலும் தவறு தவறுதான். அவருக்கு சட்டப்படி, அந்த முறைப்படி அவர்களுக்கு தகுதியிருந்து மறுக்கப்பட்டிருந்தால் வருத்தப்பட வேண்டிய ஒன்று, அது களையப்பட வேண்டிய ஒன்று. அதை மாண்புமிகு அமைச்சரிடத்திலே அன்புச் சகோதரர் எடுத்துக் கூறியிருக்க வேண்டும்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பிரச்சினையை எழுப்புகிறோம் என்றால், அதன் மூலம் இந்தச் சமுதாயத்தில் உள்ள பலருக்கு வழி கிடைக்கும் என்பதால்தான் பிரச்சினைகளை எழுப்புகிறோம். அதற்காக அந்த நபருக்கு வேண்டியவர் என்ற நிலையை ஒரு குறுகிய கண்ணோட்டத்தோடு மாண்புமிகு உறுப்பினர் கற்பிப்பது சரியாக இருக்குமா என்பதை உங்கள் மூலம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சொல்லிவிட்டார்கள். குறையாகச் சொல்லவில்லை. அவர்களே சொல்லிவிட்டார்கள். உங்களைப் பற்றி என்ன சொன்னார்கள் என்பதைப் பற்றிச் சொல்லுங்கள். நான் அனுமதிக்கிறேன்.

**டாக்டர் க. நல்லமுத்து:** நான் அதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்களே பேசிக் கொண்டிருந்தால், பிறகு யாரும் பேச முடியாது. உங்களைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை.



1987 ஏப்ரல் 7]

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெர்சனலாக என்னைப் பற்றி குற்றம் சொல்லியிருக்கிறார். ஆகவே சொல்லுகிறேன். இங்கே பேசுகின்றபோது எனக்கு வேண்டியவருக்கு பஸ் பெர்மிட் கிடைக்கவில்லை என்று நான் பேசியதாக அவர் கூறியிருக்கிறார். நான் ஆதிதிராவிட பழங்குடி இனத்தைச் சேர்ந்தவன். எனது பரம்பரையில் பஸ் உரிமையாளர் யாரும் கிடையாது. பஸ் பெர்மிட் வேண்டும் என்று கேட்கிற நிலையிலே என்னுடைய இனத்தைச் சேர்ந்தவர்கள், உறவினர்கள் யாரும் இல்லை. கோயம்புத்தூரிலிருந்து வந்து என்னிடம் சட்டமன்ற விடுதியில் ஒருவர் கோரிக்கையைக் கொடுத்தார். அதனுடைய அடிப்படையில் பேசியிருக்கிறேன். இங்கே சுப்ரீம் கோர்ட் உத்தரவெல்லாம் இருக்கிறது.

(மணி அடிக்கப்பெற்றது).

**திரு. கே. பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசிய கருத்து அப்படி இருக்கின்றது என்றுதான் சொன்னேனே தவிர, நான் குற்றம் சொல்லவில்லை. குற்றம் சொன்னதாக எடுத்துக் கொண்டு, அவர்கள் பதில் கூறுகிறார்கள். தயவு செய்து ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். பந்தைச் சுவற்றில் எறிந்தால் திரும்ப தம் கைக்குத்தான் வரும் என்பதை இந்த மன்றத்து உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மத்திய அரசாக இருந்தாலும், நம்முடைய மாநில அரசாக இருந்தாலும் ஆதிதிராவிட மக்களுக்கு நன்மை பயக்க வேண்டுமென்றுதான் பல்வேறு திட்டங்களைப் போடுகின்றன. அந்தத் திட்டங்கள் செயலுக்கு வருகின்றனவா என்பதை இங்கே நாம் எடுத்து வைத்தால்தான், அரசு அதிகாரிகளும், அமைச்சர் பெருமக்களும் அதிலுள்ள குறைகளைக் களைய ஏதுவாக இருக்கும். இன்றைக்கு பல்வேறு கிராமங்களிலே ஆதி திராவிட மக்களுக்கு இடுகாட்டுக்குச் செல்ல பாதை கிடையாது. என்னுடைய தொகுதியைச் சேர்ந்த நரப்பாக்கம் கிராமத்தில் ஆளவந்தார்மேடு என்ற பகுதி இருக்கிறது. அது ஆதிதிராவிட மக்கள் வாழும் பகுதி. அங்கே யாராவது இறந்துவிடுவார்களானால் வயப்பின்

[திரு. கே. பாலாஜி] [1987 ஏப்ரல் 7

மீது சவத்தை எடுத்துச் செல்ல வேண்டும். அப்படிப்பட்ட இடங்களில் என்னதான் தடை இருந்தாலும், சவத்தை எடுத்துச் செல்ல வழிவகைகளைக் காண வேண்டும்.

இன்றைக்கு பல்வேறு இடங்களில் வீட்டு மனைப் பட்டா வழங்குகிறோம் என்பதைப் புள்ளி விவரத்தோடு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பல இடங்களில், அரசு புறம்போக்கு இல்லாத இடங்களில் ஆதிதிராவிட மக்களும், பழங்குடி மக்களும் வீடுகளைக் கட்டிக் கொண்டிருப்பார்களானால், அம்மக்களுக்கு தனிப்பட்டவர்களின் நிலத்தைக் கையகப்படுத்தும்போது, அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்லுகிறார்கள். அப்படி வழக்கு மன்றத்திற்குச் செல்லும்போது, 10 ஆண்டுக் காலம், 12 ஆண்டுக்காலம் வழக்கு மன்றத்திலே வழக்கு நிலுவையில் இருப்பதால், ஆதிதிராவிட மக்களுக்கு வீடுகளைக் கட்ட முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே ஆதி திராவிட மக்களுக்காக தனிப்பட்டவர்களின் நிலங்களைக் கையகப்படுத்தும்போது, அதை எதிர்த்து அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்லக்கூடாது என்ற சட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே என்னுடைய வேண்டுகோளாக இங்கே வைக்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு பட்டா இருந்தால்தான் தாட்கோ மூலமாக, ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டங்களின் மூலமாக அல்லது பல்வேறு திட்டங்களின் மூலமாக வீடு கட்ட நாம் அனுமதி வழங்குகிறோம். ஆனால் ஆதி திராவிட மக்கள் பல்வேறு புறம்போக்குகளிலே வீடுகளைக் கட்டிக்கொள்கிறார்கள். கால்வாய்ப் புறம்போக்கு, ஏரிப் புறம்போக்கு, பாட்டைப் புறம்போக்கு ஆகிய இடங்களாக இருந்தால் பட்டா கொடுக்க முடியாது என்? சட்டம் கூறுகிறது. என்னைப் பொறுத்தவரையில் 12 ஆண்டுகளுக்கு மேலே அதற்குண்டான தண்டத் தீர்வை கட்டியதற்கான சான்றிதழ் இருக்குமானால் அவர்களுக்கு எந்த ஒரு சட்டத்தையும் பார்க்காமல், வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும்.

அடுத்து, கோவில்களுக்குச் சொந்தமான நிலங்களில் 25 சென்ட், 30 சென்ட் நிலங்களை ஆதி திராவிட மக்கள் கையகப்படுத்தி, அதிலே உழுது, தங்கள் பிழைப்பை நடத்தினால் அந்த நிலங்களையெல்லாம் அரசு விலை கொடுத்து வாங்கி, அந்த ஆதி திராவிட மக்களுக்கு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 7] [திரு. கே. பாலாஜி]

அடுத்து, என்னுடைய தொகுதியில் 44 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அந்த 44 பஞ்சாயத்துக்களில் கிட்டத்தட்ட 25 கிராமங்களில் தாட்கோ மூலமாக வீடுகள் கட்டப்படவில்லை. ஆகவே கிட்டத்தட்ட 1,050 வீடுகள் வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்களிடத்திலும், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரவர்களிடத்திலும் சொல்லி, அந்த ஊர்களின் பெயர்களை நான் எழுதிக் கொடுத்திருக்கிறேன். ஆகவே இந்த ஆண்டு அதைச் செய்து கொடுக்க வேண்டும். 5 ஆண்டுகளுக்குள்ளாக 30 இலட்சம் வீடுகள் கட்டும் திட்டம் இருக்கிறது. ஆகவே அந்தத் திட்டத்தின் வாயிலாக அந்த ஆதி திராவிட மக்களுக்கு தாட்கோ மூலமாக வீடுகளைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு ஆதி திராவிட மக்கள், பழங்குடியினருக்காக உழவு மாடுகள், கறவை மாடுகள், வியாபாரம் செய்ய 5,000 ரூபாய் மானியத்தோடு நாம் கொடுக்கிறோம். அப்படி கொடுக்கப்படுகிற மானியத்தை, கறவை மாடுகளுக்காகக் கொடுக்கப்படுகிற மானியத்தை மாவட்டத் துணை ஆய்வாளர் (பால் வளம்) அவர்கள் மூலமாகக் கொடுக்கிறோம். ஆனால் தாட்கோ மூலமாக அப்படிப்பட்ட நிதியை நாம் ஒதுக்குவதில்லை.

(இரவு 6-00)

இன்றைக்கு கிராமங்களிலே வறட்சியின் காரணமாக விவசாயம் பாதிக்கப்பட்ட காரணத்தாலே, அவர்களுக்கு கூலி வேலை கிடைக்காத காரணத்தாலே, மாற்று வேலையாக கறவை மாடுகள் வழங்க வேண்டும். அப்படி வழங்குகின்ற போது அவை முழுமையாக அவர்களுக்குப் போய்ச் சேருகின்ற நிலையில் சில சங்கடங்கள் இருக்கின்றன. அவர்கள் கூலி விவசாயி, சிறு விவசாயி என்ற அட்டை இருந்தால் மட்டும் போதும் என்ற எண்ணத்தோடு நாம் கடனை வழங்குவதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

நண்பர்கள் இங்கே பேசும்போது, இந்தப் பணங்கள் எல்லாம் எப்படிப்போ தவறாகப் போகின்றன என்று சொன்னார்கள். நான் பேசவேண்டுமென்பதற்காக குறிப்பிலே எழுதி வைத்திருக்கிறேன். இத்தகைய வேலைகளுக்கான பணப் பட்டுவாடாவை கண்காணிப்-

[திரு. கே. பாலாஜி] [1987 ஏப்ரல் 7

பதற்கு அந்தந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையிலே ஒரு கண்காணிப்புக் குழுவை அமைக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பல்வேறு காரியங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பொன்னேரி தாலூகா மீஞ்சூரில் சமூகக்கூடம் ஒன்றைக் கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்து அதற்கு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. சேகர் கூட நன்றி கூறினார்கள். மீஞ்சூரில் கட்டடம் கட்ட இட வசதி இல்லாத காரணத்தால் கட்டட வேலை துவக்கப்படவில்லை. பொன்னேரி தாலூகா தலைநகரமாகும். அங்கே எல்லா அலுவலகங்களும் இருக்கின்றன. அந்த இடத்திலே அந்த சமூகக் கூடத்தைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் நகரத்தைப் பொறுத்தவரையில் சேலம் 1-வது தெரு ஆதி திராவிட மக்கள் வசிக்கின்ற பகுதி. அந்தப் பகுதியில் இருக்கும் மயானத்தை இவர்கள் பிணங்களைப் புதைப்பதற்கும், எரிப்பதற்கும் இயலாத வகையில் அந்தப் பகுதியில் இருக்கிற உயர்ந்த ஜாதி மக்கள் அந்தப் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளார்கள். அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்குத் தேவையான சட்டத்தை உடனே போட்டோ அல்லது இருக்கின்ற அதிகாரங்களை வைத்தோ உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம், பச்சப்பட்டி பகுதியில் ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டித்தர வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி வீடு கட்டிக் கொடுக்கும்போது அப்பகுதியின் குடி தண்ணீர்ப் பிரச்சினையும் தீர்க்கப்பட வேண்டும். இதை அந்தத் தொகுதியினுடைய உறுப்பினர் திரு. கிருஷ்ணராஜ் அவர்கள் கூட பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

திருச்சி, திருச்சி, தென் ஆற்காடு மாவட்டங்களிலே வசிக்கும் மலைக் குறவர்கள் ஷெட்யூல்ட் டிரைப்' என்ற பட்டியலிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்? ஆனால், 'குறவர்களை' 'ஷெட்யூல்ட் கேஸ்ட்' எனப்படும் அந்தப் பிரிவிலே சேர்த்திருக்கிறார்கள். அவர்களையும் 'ஷெட்யூல்ட் டிரைப்' என்ற பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களும் மலை ஜாதியினர் என்று வழங்கப்படும் அந்தப் பட்டியலிலே சேர்க்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 7] [திரு. கே. பாலாஜி]

நமது மாண்புமிகு சபாநாயகர் அவர்களும், துணை சபாநாயகர் அவர்களும், உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்களும் பேசியதை நான் கேட்டுக்கொண்டு இருந்தேன். நான் விவரமாகப் பேசவில்லை, தகவலுக்காகச் சொல்கிறேன். தமிழகத்திலே 6 பேர் தலைமைச் செயலாளராக இருக்கத் தகுதி உடையவர்கள் இருக்கிறார்கள். இருந்தும், எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவருக்கு தலைமைச் செயலாளராகப் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார். இதை நான் கூறுவதற்குக் காரணம், ஆதி திராவிட மக்கள் மீது இன்றைக்கு தமிழகத்திலே புரட்சித் தலைவர் தான் முழுமையான நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும். 'சமபந்தி' என்று சொல்லிவிட்டு சாக்கடையிலே தூக்கிப் போடாமல், 'சமபந்தி போஜனம்' போட்டு சமமாக உட்கார வைப்பது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான். மாண்புமிகு புரட்சித் தலைவர் தான் தமிழகத்திலே ஜாதியை ஒழித்திருக்கிறார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் ஊரோடு ஒட்டி இருக்க வேண்டுமென்று, அந்த நல்ல எண்ணத்திலேதான் உயர்ந்த ஜாதி மக்கள் வாழ்கின்ற பகுதியிலேயே ஆதி திராவிட மக்கள் வாழ்வதற்கு வீடு கட்டிக் கொடுத்து; ஜாதி வித்தியாசத்தை அடிப்படையிலேயே ஒழித்து இருக்கிறார்கள்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தலைமைச் செயலாளராக இன்றைக்கு ஒரு அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவரை தமிழக முதல்வர் கொண்டு வந்திருப்பதை வரவேற்கின்றோம். பாராட்டுகின்றோம். ஆனால், சீனியாரிட்டி இல்லாமல், தகுதி குறைந்து இருந்து, அவ்விதம் சீனியாரிட்டி, தகுதி அடிப்படையில் முன்னே இருப்பவர்களை பின்னுக்குத் தள்ளிவிட்டு, இவர்களை முன்னுக்குக் கொண்டு வந்ததாக நீங்கள் குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா?

திரு. கே. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய வாதமே, 6 பேர்கள் இருக்கின்றார்கள். அதிலே யாரை வேண்டுமானாலும் போடலாம். ஆறு பேர்களுக்கும் தகுதி இருக்கிறது. ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் தான் ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் . . .

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் சொல்வது தவறு. 6 பேர்கள் இருக்கின்றார்கள் என்பதே தவறு. அவர்தான் சீனியர் மோஸ்ட்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒத்துக் கொள்கிறோம். சீனியர் மோஸ்ட் தான். இதுவரையில் அப்படி யாருக்கும் கொடுக்கவில்லை. அவருக்கு அரசாங்கம் கொடுத்து இருக்கிறது. அவருக்கு எக்ஸ்டென்சன் கொடுத்திருக்கிறது.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதை நான் பாராட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்களும் பாராட்டுகிறீர்கள், அவர்களும் பாராட்டுகிறார்கள். அத்துடன் முடிந்தது.

திரு. கே. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு வருத்தமாக இருக்குமேயானால் அந்தக் கருத்தை நான் வலியுறுத்தவில்லை.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே அவர்கள் தவறான தகவலை . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர்களும் பாராட்டுகிறார்கள். நீங்களும் பாராட்டுகிறீர்கள். அதிலே முரண் இல்லை. அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவைக்கு அவர்கள் தவறான தகவலைக் கொடுக்கிறார்கள். 6 பேர்களுக்குமேல் இருக்கக்கூடியவர்களுக்கு முந்தி, தலைமைச் செயலாளர் ஆக ஆக்கி, போட்டிருப்பதாக சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படி சொல்லவில்லை. 6 பேரில் யாரை வேண்டுமானாலும் போடலாம். அப்படி அவர்களையும் போட்டிருக்கின்றார்கள். ஆனால் கவர்ன்மெண்ட் பிரிஃபர் பண்ணியது அவர்களை.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த 6 பேரிலே அவருக்கு தகுதி, சீனியாரிட்டி இருக்கின்ற காரணத்தினாலேதான் அவர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, அவருக்கு எக்ஸ்டென்சன் கொடுத்ததை நான் பாராட்டுகிறேன். ஆனால் அவரை நியமனம் செய்ததே அவருக்கிருக்கின்ற அந்தத் தகுதியால்தான்.



திரு. கே. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நான் சொன்ன கருத்தைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆக * * ஆகவேதான் தயவுசெய்து அம்மையார் அவர்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் சொல்வதும் நீங்கள் சொல்வதும் ஒன்றுதான். அரசாங்கத்திற்கு உரிமையிருக்கிறது. அதிலே பிரச்சினையில்லை. வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறாக ஒரு தகவலை திருப்பித் திருப்பி சொல்லி அதைப் பதிவு செய்கிறார்கள். அதை நீக்குங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பாராட்டியதைத் தான் அவரும் பாராட்டுகிறார். (குறுக்கீடு). இப்போது பேசியதை வேண்டுமானால் நீக்கிவிடலாம். 6 பேர் பற்றி முதலில் பேசியது இருக்கும்.

திரு. கே. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மறைந்த மாண்புமிகு திரு. கக்கன் அவர்கள் குடும்பத்தைக்கூட எங்களுடைய இதய தெய்வம் கடைக்கண் பார்த்த பிறகு அந்தக் குடும்பம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதைக்கூட அருமை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் மறந்துவிடக் கூடாது. நான் அதை ஒரு குற்றச்சாட்டாக சொல்லவில்லை.

தயவுசெய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆதி திராவிடர்கள் சமுதாயத்திற்கு பல படங்களில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆதி திராவிட சமுதாய இளைஞனாக நடித்து கலப்புத் திருமணங்களை எல்லாம் அந்தப் படங்களிலே காட்டியதன் விளைவாக தமிழ்நாட்டில் இன்றைக்கு 75 சதவிகிதம் தீண்டாமை ஒழிந்திருக்கிறது என்று சொல்லலாம். நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கலைத் துறையின் வாயிலாக அதைச் செய்திருக்கிறார்கள்.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1987 ஏப்ரல் 7

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மிகவ நண்பனாக நம்முடைய தமிழக முதல்வர் அவர்களைப் பார்த்து இருக்கிறேன். தொழிலாளியாகப் பார்த்திருக்கிறேன், ராஜாவாகப் பார்த்திருக்கிறேன். ஆனால் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவராக அவர் எந்தப் படத்திலே நடித்திருக்கிறார் என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மதுரை வீரன் படத்தில். (குறுக்கீடு).

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை வீரன் என்றால் அது சாமி கதை. அது சமூகக் கதையில்லை.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நடித்த மதுரை வீரன் என்ற படத்திலே ஒரு அருந்ததியர் சமூகத்தைச் சார்ந்தவர் மகனாக அங்கே நடித்து அந்த சமூகத்தாருக்கும் மற்றவர்களுக்கும் எப்படி எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என்று காண்பித்து, ராஜபரம்பரையில் உள்ள ஒரு பெண்ணைத் திருமணம் செய்ததாக எடுத்துக் காட்டும் நிகழ்ச்சி அதிலே இருக்கிறது. இப்படி பல படங்கள். அவருடைய படங்களிலே எல்லாம் சமுதாயத்திற்கு ஒரு பாடமாக நிகழ்ச்சிகள் அமைந்திருக்கின்றன என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படியே பேசிக் கொண்டிருந்தால், டிபேட் முடியாது. (குறுக்கீடுகள்).

(இரவு 6-10)

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல சமுதாயப் பிரச்சினைகள் பற்றி, பல படங்களிலே நடித்திருப்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் மதுரை வீரன் கதை நாம் எழுதியதல்ல. அது ஒரு சாமி கதை. அது நடைமுறையில் இல்லாதது.



1987 ஏப்ரல் 7]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** படத்திலே ஜாதியைப் பற்றி சொன்னால் பெரும்பாலும் தப்பு என்று சொல்லுவார்கள். ஆகவே படத்திலே ஜாதியை சொல்ல முடியாது. ஜாதியை சொன்னால் சென்சார் போர்டில் அதை எடுத்து விடுவார்கள். (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை வீரன் கதை சாமி கதை என்று சொல்லி, புராணக் கதையோடு அதை இணைத்துச் சொல்ல வேண்டாம். திருமலை நாய்க்கர், தொட்டியப்பாளையக்காரர் அதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அது நடந்த கதை. நடக்காத கதையல்ல. (குறுக்கீடு).

**திரு. கே. பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை வீரனை விட்டு விடுங்கள். நாடோடி என்ற ஓர் படம் இருக்கிறது. 1955 ஆம் ஆண்டிலிருந்தே நாங்கள் எல்லாம் அவர்களுடைய ரசிகர்கள். இன்னும் கூட ஒன்றிரண்டு சான்றுகளை நான் கூற முடியும். இங்கே சட்டமன்றத்தில் அம்பேத்கார் அவர்களுடைய படம் இருக்கிறது. அதுபோல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தலைமை அலுவலகத்தில் எங்களுடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய திருவுருவப் படத்தைத் திறந்து வைத்திருக்கிறார்கள் என்பதோடு மட்டுமல்லாமல் இன்னும் பல நல்ல காரியங்களைச் செய்ய இருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து உலகநாத நாராயணசாமி நாயுடு கலைக் கல்லூரி இன்றைய தினம் பொன்னேரியிலே வாடகைக் கட்டிடத்திலே இயங்கிக்கொண்டிருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரிலே பார்த்துள்ளார்கள். அங்கேயுள்ள மாணவர்களுக்கு விடுதி கட்டுவதற்காக எல்லா ஆய்வுகளும் நடந்து முடிந்தும் இது வரை கட்டடம் கட்டப்படவில்லை. இப்போது கிட்டத்தட்ட 15 கட்டடங்கள் கட்ட இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். தயவுசெய்து அந்த 15 கட்டடங்களிலே ஒன்றை பொன்னேரியிலே கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லி, நான் முதலிலேயே எடுத்துச் சொல்லியதுபோல, நாமெல்லாம் தோழமை, கட்சிகள், எறிகின்ற பந்தை பார்த்து எறிய வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைக் கூறி விடைபெறுகிறேன், நன்றி. வணக்கம்.

[1987 ஏப்ரல் 7

* திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கை எண் 31 பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். நம்முடைய நாடு சுதந்திரம் பெற்ற பின்னால் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இயற்றிய அரசியல் சட்டத்தில் சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அரசியல் சட்ட நோக்கத்தை நிறைவேற்ற, அரசியல் சட்டத்திலே விசேஷ சலுகைகள், உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 1952 ஆம் ஆண்டிலேயிருந்து ஒவ்வொரு 10 ஆண்டாக இந்த சலுகைகள் நீட்டிக்கப்பட்டு இன்றைக்கு 1990 ஆம் ஆண்டோடு அந்த சலுகை முடிகின்ற நிலையில், இன்றைக்கு 3 ஆண்டுகளுக்கு முன்பாக நாம் அதுபற்றிய விவாதத்திலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

அரசியல் சட்ட நோக்கத்தை நிறைவேற்றுகின்ற அந்த முறையில் தான் மத்திய அரசும், மாநில அரசுகளும் பல்வேறு சமூக, பொருளாதார திட்டங்களை எல்லாம் போட்டு தாழ்த்தப்பட்ட மக்களுடைய முன்னேற்றத்திற்காக அவற்றை அமல் நடத்தி வருகின்றன என்பதை நாம் கண்கூடாகக் காணுகின்றோம். அதிலே எந்தவிதமான மாச்சர்யங்களுக்கும் மாறுபட்ட கருத்துக்களுக்கும் இடமில்லை என்பதை நான் முதலிலே இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். மத்திய அரசின் திட்டங்களானாலும் சரி, மாநில அரசுகளின் திட்டங்களானாலும் சரி இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களுடைய சமூக அந்தஸ்தை உயர்த்துவதற்கும், பொருளாதார மேம்பாட்டை அடைவதற்கும் இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் எங்களுக்கு இருக்கின்ற ஆதங்கம் எல்லாம், சுதந்திரமடைந்து 40 ஆண்டுகளுக்கு மேலாகியும், 1990 ஆம் ஆண்டை நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையிலும், இந்த விசேஷ சலுகையானது இன்னும் பல ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட வேண்டுமென்ற நிலையிலே தான் இந்த சமுதாய அமைப்பு நாட்டில் இருந்துகொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை நினைக்கின்றபொழுது அரிசனங்களுக்கான திட்டங்களை இன்னும் வேகமாக, விரைவாக, கூடுமானவரையில் ஒரு கால வரையறையோடு கூடிய திட்டமாக அமல் நடத்த வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தத்தான்





நான் உங்கள் முன் நிற்கிறேன். இதே நிலைமை நீடித்தால் இருபதாம் நூற்றாண்டு முடிந்து, 21 ஆம் நூற்றாண்டிலேயும்கூட இந்த விசேஷ சலுகை இருக்க வேண்டுமென்ற நிலையில் இந்தச் சமுதாயம் வைக்கப்பட்டு விடுமோ என்ற ஆதங்கத்தின் காரணமாகத் தான் இதைச் சொல்கிறேன்.

இன்றைக்கு நாம் போடுகின்ற, அமல் நடத்துகின்ற திட்டங்கள் அந்த மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும். இன்னும் சிறப்பான திட்டங்களைப் போட்டு அமல் நடத்த வேண்டுமென்ற எண்ணத்தை நான் வெளியுறுத்த விரும்புகிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் அரசியல் சட்டத்தின் 17வது பிரிவிலே உள்ள தீண்டாமை ஒழிப்பு என்பது—இன்றைக்கு ஓரளவுக்குத் தீண்டாமை ஒழிந்திருக்கிறது என்று சொல்வதில் பெருமைப்படுகிறேன். அதை நான் மறுக்க விரும்பவில்லை. ஆனால் தீண்டாமை இன்னும் பல்வேறு கோணங்களிலே தீவிரமாக இருக்கிறது என்பதையும் மறந்து விடக்கூடாது. ஆகவே, இப்படிப்பட்ட காலத்திலேதான் நாம் போடும் திட்டங்கள்—ஒவ்வொன்றாக, கல்வித் துறையானாலும் சரி, சமூக மேம்பாட்டுத் துறையானாலும் சரி, பொருளாதார மேம்பாடாக இருந்தாலும் சரி—நாம் பல்வேறு திட்டங்களைப் போட்டு அமல் நடத்துகிறோம். இவற்றைச் சிறப்பாகவும், முனைப்பாகவும் அமல் நடத்த வேண்டும். அரசியல் சட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்படும் வகையில், அந்த உள்ளுணர்வோடு இந்தத் திட்டங்கள் அமல் நடத்தப்பட வேண்டும்.

அந்த வகையிலே பல்வேறு திட்டங்களை நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்தக் கொள்கைக் குறிப்பிலே கூறியிருக்கிறார்கள். இப்பொழுது நான் எதற்காகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால், ஒன்றுமே நடக்கவில்லை என்று சொல்வதற்காக அல்ல; இருக்கின்ற காரியங்களை வேகமாக, செம்மையாகச் செயல்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நாம் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் இருப்பவர்களுக்கு இலவசக் கல்வியை அளித்திருக்கிறோம். அவர்கள் இலவசமாகக் கல்வி பயின்று வருகிறார்கள். ஆனால் இன்றைக்கு அவர்களுக்கு வேலை வாய்ப்பினைக் கொடுப்பதன் மூலமாகத்தான் நாம் எதிர்பார்க்கின்ற பலன்களை அடைய முடியும். அந்த வேலைவாய்ப்பு இன்றைக்கு எந்த அளவிற்கு இருந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்தின்

[திரு. க. பாரமலை] [1987 ஏப்ரல் 7

கவனத்திற்கு துணைத் தலைவர் அவர்களின் மூலமாக நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரிவிப்பது என்னுடைய கடமையென்றே கருதுகிறேன்.

முதலில் நான் குறிப்பிட விரும்புவது, கொள்கைக் குறிப்பிலே முதல் பக்கத்தில் சொல்லப்பட்டிருப்பது, 1981 ஆம் ஆண்டு எடுத்த சென்சஸ்படி ஏறத்தாழ 19.42 சதவீதம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோரின் மக்கள் தொகை உள்ளது என்று இருக்கிறது என்பதை நான் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அவர்களே கொடுத்திருக்கின்ற கொள்கைக் குறிப்பிலே கூறப்பட்டிருப்பதுதான் இது. ஆனால் 15 சதவீதம் என்று இருந்த இட ஒதுக்கீடு 18 சதவீதமாக ஆக்கப்பட்டிருப்பதற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன். ஆனால் ஜனத் தொகை விகிதாசாரப்படி கொடுக்க வேண்டுமென்று சொன்னால் 18 சதவீதம் என்று இருக்கும் இந்த ஒதுக்கீட்டை குறைந்தது 20 சதவீதமாவது வேலைவாய்ப்பிலே ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்ட ரீதியாக இந்தக் கோரிக்கை நியாயமானது தார்மீக ரீதியிலும் அவசியமானது என்று எடுத்துக்கொண்டு இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கின்ற 18 சதவீத ஒதுக்கீட்டை 20 சதவீதம் ஆக்க வேண்டும். அந்த ரிசர்வேஷனைப் பொறுத்தவரையில் இந்தக் கொள்கைக் குறிப்பிலே பல்வேறு இடங்களிலே சொல்லப்பட்டிருக்கிறது.

மானிட்டரிங் கமிட்டி என்று ஒரு கமிட்டி இருக்கிறது. அந்த மானிட்டரிங் கமிட்டி இரண்டாவது தலைமைச் செயலர்-செகண்ட் சொட்டரி தலைமையில் இருக்கிறது. ஆனால் இந்தக் கமிட்டி ஒதுக்கீடு 18 சதவீதம் ஒதுக்கீடு அமல்பாடு செய்வதைக் கண்காணிக்க இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் 1986-87 ஆம் ஆண்டிலே சொல்லப்பட்டிருக்கின்ற கொள்கைக் குறிப்பிலேயும், இப்பொழுது 1987-88 ஆம் ஆண்டு சொல்லப்பட்டிருக்கின்ற கொள்கைக் குறிப்பிலேயும் அந்த இட ஒதுக்கீடு 12.95 என்ற அளவில்தான் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆக, 1987 ஆம் ஆண்டிலே சொல்லப்பட்டிருக்கின்ற கொள்கைக் குறிப்பின்படி அந்த 12.95 ஐக் காட்டிலும் இந்த ஆண்டு எந்த வகையிலும் அது கூடவில்லை என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1987 ஏப்ரல் 7] [திரு. க. பாரமலை]

அதோடு ஒரு குறிப்பைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு தமிழ்நாடு அரசுத் துறைகளில் மிக முக்கியமாக இருப்பது இரண்டு துறைகள். ஒன்று ரெவின்யூ மற்றொன்று போலீஸ். போலீஸ் துறையிலே துணைக் கண்காணிப்பாளர்கள் மொத்தம் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்ற கேள்வியை அனுப்பியிருந்தேன். மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களிடமிருந்து பதில் வந்திருக்கிறது. அதைப் பார்க்கின்றபொழுது மெத்த வேதனையாக இருக்கிறது. மொத்தம் 237 முதல்வகை துணைக் கண்காணிப்பாளர்கள் இருக்கிறார்கள். அந்த முதல் வகை துணைக் கண்காணிப்பாளர்களிலே தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் 19 பேர்; இரண்டாம் வகை துணைக் கண்காணிப்பாளர்கள் 36 பேர், அதிலே தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் யாரும் இல்லை. ஆயுதப்படைப் பிரிவில் தளவாய் என்று சொல்லப்படக் கூடியவர்கள் 40 பேர் இருக்கிறார்கள். அதில் 6 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஆக மொத்தம் 313 பேர்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் 21 பேர்கள்தான் இருக்கிறார்கள். மொத்தத் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் 6 சதவீதம் கூட இல்லை. போலீஸ் துறையில் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

இதை எல்லாம் ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்டிருக்கிற மானிட்டரிங் கமிட்டி இதுபற்றி என்ன முடிவு எடுத்திருக்கிறது என்று நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 6-20)

அடுத்து, வருவாய்த் துறையை எடுத்துக்கொண்டால் 352 டெபுடி கலெக்டர்கள் இருக்கிறார்கள். அதில் 16 பேர்கள்தான் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, இந்தப் பதவியில் 4.5 சதவீதம் தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அரசுத் தரப்பிலே கொடுக்கப்பட்டிக்கிற அறிக்கையிலேயே இந்த விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டிலே இருக்கின்ற மிக முக்கியமான துறைகளான போலீஸ் துறை, வரு

[திரு. க. பாரமலை] [1987 ஏப்ரல் 7

வாய்த் துறைகளில் கூட இந்த 18 சதவீதம் அமல்படுத்தப்படவில்லையே, இது குறித்து மானிட்டரிங் கமிட்டி என்ன முடிவு செய்திருக்கிறது என்று அறிய நான் ஆவலாக இருக்கிறேன்.

அடுத்தபடியாக, பொறியியல் கல்லூரிகளிலே கிடைத்திருக்கிற நியமனங்களைப் பார்த்தால், அரசு உதவி பெறும் தனியார் பொறியியல் கல்லூரிகளில் பணியாற்றுகின்ற 102 இணை பேராசிரியர்களில் ஒருவர்தான் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராக இருக்கிறார். அதை போன்று அரசு பொறிறியல் கல்லூரிகளில் நியமனம் பெற்றிருக்கிற 178 பேர்களில் 13 பேர்கள்தான் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். 280 பேருக்கு மேல் பணி புரிகின்ற இந்த துறையில் 14 பேர்கள்தான்; அதாவது 5 சதவீதம்தான் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். இப்படி எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் 18 சதவீதம் நியமனம் செய்யப்படவில்லை. ஆகவே, இதுகுறித்து ஒரு விரிவான ஆய்வு நடத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஒரு கேள்விக்கு பதில் தரும்போது சொல்லியிருக்கிறார்கள். குற்றவியல் வழக்கறிஞர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று கேட்டதற்கு கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மொத்தமாக இருக்கிற 16 குற்றவியல் உதவி வழக்கறிஞர்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் யாரும் இல்லை என்று பதில் வந்திருக்கிறது. நான் இதை எல்லாம் சொல்வதற்குக் காரணம் இப்படிப்பட்ட நியமனங்களில் இந்த அரசு எதிர்பார்க்கின்ற, விரும்புகின்ற முன்னேற்றம் இருக்க வேண்டுமென்றால் அரசு உத்தரவை நிறைவேற்றுவதில் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அதோடு இன்றைக்கு சிறப்பு உள்ளடக்கத் திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின்கீழ் 6வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 363 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. 7வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 686 கோடி ரூபாய் செலவிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதில் 1987-88 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக 132 கோடி ரூபாய் பல்வேறு துறைகளின் மூலமாக செலவிட திட்ட-



1987 ஏப்ரல் 7] [திரு. க. பாரமலை]

மிட்டிருக்கிறோம். ஏற்கெனவே 1986-87 ஆம் ஆண்டில் 127 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பற்றி எனக்கு இருக்கிற ஆதங்கம் எல்லாம் ஏதோ மோசடி நடந்து விட்டது அல்லது எங்கோ பணம் போய்விட்டது என்பதல்ல. அப்படி நான் சொல்லவில்லை. 7வது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் இன்றைக்கு இருக்கிற கணக்குப்படி பார்த்தால் ஏறத்தாழ 1,000 கோடி ரூபாய் செலவழிக்கப்படவிருக்கிறது. அரசு நிர்ணயித்துள்ளபடி, திட்டமிட்டபடி இந்தப் பணம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நேரிடையாகப் போய்ச் சேருமானால் நிச்சயமாக தாழ்த்தப்பட்ட மக்கள் சமுதாய அந்தஸ்து, பொருளாதார அந்தஸ்து ஆகியவற்றில் மிகப்பெரும் முன்னேற்றம் அடைவார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு பல்வேறு குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் பல்வேறு துறைகள் மூலமாக 132 கோடி ரூபாய் செலவிடப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு துறைகள் எந்த அளவுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அவர்களுடைய முன்னேற்றத்திற்குச் செலவிடுகின்றன என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, இது குறித்து நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அடுத்த முறையாவது இப்படி ஒரு கொள்கை விளக்கக் குறிப்பு கொடுக்கும்போது ஒவ்வொரு துறையிலும் எவ்வளவு ரூபாய் தாழ்த்தப்பட்ட மக்களுடைய நன்மைக்காகச் செலவழிக்கப்பட்டது என்று கொடுத்தால் அது என்னைப் போன்றவர்களுக்குப் பயனுடையதாக இருக்கும். குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் இன்றைக்கு சில துறைகளில் அரிசனங்களுக்காக பல்வேறு திட்டங்கள் அமல்படுத்தப்படுகின்றன. குடிநீர்—வடிகால் வாரியத்தின் மூலமாக ஏறத்தாழ 140 இலட்சம் ரூபாய் செலவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

குடிநீர் வடிகால் வாரியத்திற்கு 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதை எப்படி செலவழித்திருக்கிறார்கள் என்பதைக் கண்காணிக்க வேண்டும். நேரடியாக அரிசனங்களுக்குப் போய்ச் சேருகிறதா அல்லது மொத்தச் செலவில் அரிசனங்கள் பெயரில் கணக்கு எழுதப்படுகிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்காணிக்க வேண்டும். ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகைகளைச் சரியாகச் செலவழித்தால் நிச்சயமாக நாம்

எதிர்பார்க்கிற நல்ல பலன் இந்த ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் கிடைக்கும் என்ற நோக்கத்தோடு தான் நான் இதைச் சொல்கிறேன்.

அடுத்து ஸ்பெஷல் சென்ட்ரல் அசிஸ்டென்ஸ் என்பதிலே ஏறக்குறைய 26 கோடி ரூபாய் செலவழித்து இருக்கிறோம். 1987-88-ல் 16 கோடி ரூபாய் செலவழிக்க இன்றைக்கு திட்டம் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். இத்துறையில் முன்னாள் அமைச்சர் திரு. விஜய சாரதி அவர்கள் இருந்தபோது தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களைக் கூட்டி ஸ்பெஷல் சென்ட்ரல் அசிஸ்டென்சை செலவழித்து எப்படி திட்டங்களை நிறைவேற்றலாம் என்று ஆய்வு நடத்தினார்கள். அப்படி எடுத்துக் கொண்ட அடிப்படையில் தான் இராமநாதபுரம், அச்சன்குளம் அருகே கூட்டுறவு நூற்பாலை அமைக்கப்பட்டு 300-க்கும் அதிகமான தொழிலாளர்கள் அங்கே நிரந்தரமாக வேலை பெற்று, அங்கே வீடுகளை அமைத்துக்கொண்டு வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் ஒன்று அல்லது இரண்டு என்று எடுத்துக்கொண்டு மாவட்டத்திற்கு ஒரு நூற்பாலை அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இது குறித்து ஏற்கெனவே நான் பேசியபோதுகூட அன்றைக்கு கைத்தறி, டெக்ஸ்டைல்ஸ் துறையின் பொறுப்பில் இருந்த அமைச்சரவர்கள் மத்திய அரசு இவ்வாறு நூற்பாலை அமைக்க அனுமதி கொடுக்க மறுக்கிறார்கள், அவர்கள் அனுமதி கொடுத்தால் அமைக்கத் தயார் என்று சொன்னார்கள். நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் இது ஸ்பெஷல் சென்ட்ரல் அசிஸ்டென்ஸ் ஆதாவது சிறப்பு மத்திய உதவி. ஆகவே சிறப்பான அனுமதியை மத்திய அரசிடமிருந்தே பெற்று மாவட்டத்திற்கு ஒரு நூற்பாலை அமைக்க முயற்சி எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரிசன நலத்துறை மொத்தத்தில் எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பொறுத்தவரையில் ஓரிரு வார்த்தைகளைச் சொன்னால் நிர்வாகத்தைச் சீர்படுத்துவதற்கு ஆதி உதவியாக இருக்கும் என்பதால் சொல்கிறேன். குறிப்பாக எனது பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் பல மாதங்களாக மாவட்ட அரிசன நல அலுவலர் இல்லை. ஒருவரை



அந்தப் பொறுப்பிற்கு நியமித்தார்கள். ஆனால் இரண்டே நாட்களில் அவர் ஓய்வு பெற்றுச் சென்றுவிட்டார். மற்றும் ஒருவரைப் போட்டார்கள். சென்னையிலிருந்து அவர் வந்து சேர வாய்ப்பில்லை. ஆக பின்தங்கிய நல அலுவலர்தான் இன்றைக்கு அந்தப் பொறுப்பிலே இருக்கிறார்கள். இப்படி ஒரு முக்கியமான இலாக்கா இன்னொருவர் பொறுப்பில் 6 மாதங்களுக்கும் மேலாக இருப்பதால் ஒரு வேலையும் நடக்க வாய்ப்பு இல்லை. மாவட்டத்தில் இருக்கிற அரிசன நலத்துறை அலுவலகத்தில் ஒரு உதவியாளரைக் கூட நியமிக்கிற அதிகாரம் மாவட்ட நல அலுவலருக்கு இல்லை. யாராவது பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்றால் அங்கே இருக்கிற பி.ஏ. (ஜி) அவர்களுடைய தயவு இருந்தால் தான் ஒரு உதவியாளரை நியமிக்க முடியும். இப்படி அந்தத் துறையைப் பொறுத்தவரையில் ஆதரவே இல்லாத துறை என்று நினைத்துக்கொண்டு, மற்ற துறையிலே வேலை செய்ய விரும்பாதவர்களை எல்லாம் இங்கே கொண்டு வந்து போடுகிறார்கள். மாவட்ட அரிசன நல அலுவலரின் அலுவலகத்தில் அரிசன நல அலுவலருக்குக் கீழே பணிபுரிகின்ற அதிகாரிகளை அவரே நியமிப்பதற்குரிய வகையில் ஏதாவது ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஹாஸ்டல்களைப் பொறுத்தவரையில் ஓரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அரசு மாணவர் இல்லங்களில் படிக்கின்ற மாணவர்களின் சாப்பாட்டுக் கட்டணத்தை 65 ரூபாயிலிருந்து 85 ரூபாயாக உயர்த்தி இருக்கிறார்கள். அதற்காக நான் பாராட்டுகிறேன். நான் ஏற்கெனவே ஒன்று சொல்லியிருக்கிறேன். தொண்டு ஸ்தாபனங்கள் அதாவது அரிசன நல சேவா சங்கங்கள் போன்றவை தமிழகத்தில் 44 இல்லங்களை நடத்தி வருகிறார்கள். அதில் மொத்தம் படிக்கிற மாணவர்களின் எண்ணிக்கை 2,283. அவர்களுக்கு இன்னும் 45 ரூபாய்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். சாதாரணமாக அரசு மாணவர் இல்லங்களில் படிக்கிறவர்களுக்கு சாப்பாட்டுக் கட்டணம் மட்டுமல்லாமல் சமையல்காரர்களுக்குப் பணம் கொடுக்கிறோம்; இடத்திற்கு வாடகை கொடுக்கிறோம்; எலக்ட்ரிசிட்டி சார்ஜ் கொடுக்கிறோம்; இப்படி பலவற்றைக் கொடுக்கிறோம். ஆனால் தொண்டு ஸ்தாபனங்கள் நடத்துகிற இல்லங்களுக்கு சாப்பாட்டுக் கட்டணத்தைத் தவிர வேறு எதையும் கொடுக்கவில்லை. எனவே இவ்வாறு சாப்பாட்டுக் கட்டணம் கொடுக்கிற அந்த வகையிலே

[திரு. க. பாரமலை] [1987 ஏப்ரல் 7

இரண்டு அளவுகோல்கள் இருக்க வேண்டாம் என்றும் தொண்டு ஸ்தாபனங்கள் நடத்துகிற இல்லங்களில் இருக்கின்ற மாணவர்களுக்கும் 85 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படிக் கொடுப்பதன் மூலமாக ஆண்டுக்கு 11 இலட்சம் ரூபாய் தான் அதிகமாக செலவாகும். ஆகவே தயவுசெய்து மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனுமதி பெற்று இந்தக் கூட்டத் தொடரிலேயே அறிவிக்க வேண்டும் அல்லது ஆணையாவது பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 6.30)

அடுத்து ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். படிக்கும் மாணவர்களைப் பொறுத்தவரையில் நான் 4, 5 தினங்களுக்கு முன்பாக கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதிலே அந்தக் கட்டிடம் மிகவும் மோசமாக இருக்கிறது என்று சொன்னேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை ஒரு வாரத்திற்குள்ளாக மாற்றுகிறேன் என்று சொன்னார்கள். அதற்கு நான் அவர்களுக்கு பாராட்டுத் தெரிவித்தேன். நேற்று எனக்குக் கிடைத்த தகவல்படி நேற்றே அந்தக் கட்டிடத்தை மாற்றிவிட்டார்கள் என்ற செய்தி கிடைத்திருக்கிறது. அதற்காக மறுபடியும் அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற மிகப் பெரிய நிர்வாகப் பொறுப்புள்ள பதவிகளுக்கு படிக்கும் அந்த இளைஞர்களுக்கு கோச்சிங் சென்டரிலே பல வசதிகள் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக 1967-68 ஆம் ஆண்டிலேயிருந்து 1979-80 ஆம் ஆண்டு வரை ஏறத்தாழ 40 பேர்கள் தேர்வு பெற்று பதவிகளுக்குச் சென்றிருக்கிறார்கள். 1979-80 லிருந்து 1987 வரை 6 பேர்கள் தான் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஆகவே தயவுசெய்து அதனுடைய தரத்தை மேம்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். திறமையான சிறப்பான விரிவுரையாளரை நியமித்து நல்ல முறையில் அவர்கள் கோச்சிங் பெற ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு.)

அடுத்து ரிமூவல் ஆப் அன்டச்சபிலிட்டி என்பதைப் பொறுத்தவரையில் பி.சி.ஆர். ஆக்டின் கீழே ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஸ்குவாடு இயங்கி வருகிறது. அதற்கு ஒரு ஜீப் கொடுத்திருப்பதாகக் கூடச் சொன்னார்கள். ஆனால் அதிலும் இரண்டாம்



1987 ஏப்ரல் 7] [திரு. க. பாரமலை]

தரம்தான் கடைபிடிக்கப்படுகிறது. அன்டச்சபிலிட்டி ஆக்டின் கீழ் 12 ஆயிரம் வழக்குகள் போடப்பட்டு அதிலே 4,500 வழக்குகளுக்குத் தான் முடிவு அறிவிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆகவே இன்னும் அதன் செயல்பாட்டை விரைவுபடுத்த வேண்டும். தீவிரமான முயற்சிகள் வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பெற்று வேறு உறுப்பினர் பேச அழைக்கப் பெற்றார்.)

திரு. த. பழனி: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட 1987-88 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்படி, மானியக் கோரிக்கை எண் 31 ன் கீழ் ஆதி திராவிட நலத்துறையின் சார்பாக இங்கே பேச அழைத்த மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதிதிராவிட நலத்துறையின் மானியக் கோரிக்கையின் கீழ் ஏறக்குறைய 51 கோடியே 10 லட்சத்து 98 ஆயிரத்துக்கு மேற்படாத தொகை வேண்டும் என்ற அனுமதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், அவர்களுக்கு பல்வேறு சமுதாய நலத் திட்டங்களைத் தீட்டி அமல்படுத்தியிருக்கிறார்கள். கடந்த 6 வது ஐந்தாண்டு திட்டத்தில் கோட்டதைப் போல இந்த 7 வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆதி திராவிட மக்களின் சமுதாய மேம்பாட்டிற்காக அந்தத் தொகையை இரட்டிப்பாக்கி அந்தத் துறையை பலப்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் கொண்டு வந்திருக்கிற பல்வேறு திட்டங்களை ஆதரித்து நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இங்கு ஏறக்குறைய கல்விக்காக பல்வேறு அமைப்புகளின் மூலமாக தமிழகத்தில் ஏறக்குறைய கல்வித் துறையின் மூலமாக இவர்களுக்கு ஆயிரம் கோடி ரூபாய்க்குத் திட்டங்களைத் தீட்டி அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக கல்வித் துறையில் 961 பள்ளிகளில் 19 லட்சத்து 56 ஆயிரம் மாணவர்கள் பயன்பெறுகிற அளவிற்கு பல்வேறு மானியத் திட்டங்களின் வாயிலாக 250 ரூபாய் முதல் 350 ரூபாய் வரையில் உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இப்படி ஆதி திராவிட

[திரு. த. பழனி] [1987 ஏப்ரல் 7

மாணவர்கள் பயன்பெறுகிற அளவிற்கு மிகச் சிறப்பான திட்டங்களைத் தீட்டி அவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கி உதவுகிற அரசாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு இருக்கிறது. இந்த அரசுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு 1987-88-ல் ஐந்து ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், 6 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 3 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்த இருக்கிறார்கள். இந்தப் பெருமை மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் அவர்களையே சாரும். அதற்கு அவருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல ஏற்கெனவே இருக்கிற பள்ளிகளுக்கு நிரந்தர கட்டடங்களைக் கட்டித் தருவதற்கான நிதியாதாரங்களை இந்தத் துறையின் வாயிலாக ஏற்படுத்தித் தரவேண்டும். அப்படி அந்த மாணவ, மாணவியர்களுக்கு உரிய வசதிகளைச் செய்து தருவது மிகச் சிறப்பான பணியாக அமையும். அந்தப் பள்ளிகளில் மேசைகள், நாற்காலிகள், பெஞ்ச்கள், போன்றவைகளை அதிகமாகத் தரவேண்டும். அதற்காக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருப்பதற்கு நான் என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1986-87 ஆம் கல்வியாண்டில் 548 மேல்நிலைப் பள்ளிகளில் வாழ்க்கைத் தொழில் ஆசிரியர் பயிற்சியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவியர் சேர்வதற்கான மதிப்பெண்கள் விதியினை அரசு தளர்த்தி சலுகை வழங்கி உள்ளது. இதனால் 759 ஆதி திராவிடர் பழங்குடியினர் மாணவியர் ஆசிரியர் பயிற்சியின் முதலாண்டில் கூடுதலாக சேர்ந்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இந்த ஆண்டில் 15 புதிய ஆதி திராவிடர் மாணவர் விடுதிகள் துவங்கவிருப்பதாக இந்தக் கொள்கைக் குறிப்பிலே தெரிவித்து இருக்கிறார்கள். அதற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராமப்புறங்களில் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர் விடுதிகளை உருவாக்கி மிகப் பெரிய சமுதாய சீர்திருத்தத்தை புரட்சித் தலைவர் அவர்களின் அரசு ஏற்படுத்தியுள்ளது. கிராமப்புறங்களில் இருக்கிற மாணவ



1987 ஏப்ரல் 7] [திரு. த. பழனி]

மாணவியர் பயன்பெறுகிற அளவிற்கு பிளஸ் 2 படிப்புகளை விரிவுபடுத்தி இருக்கிறார்கள். அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு உதவியாக பல ஹாஸ்டல்களை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அதையும் நான் வரவேற்கிறேன்.

மாணவர்கள் தங்கிப் படிக்க ஹாஸ்டல்கள் கட்டும்போது 15 ஹாஸ்டல்கள் என்பதை இலக்காக வைத்து செயல்பட வேண்டாம் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. இந்த இலக்கை நீட்டித்து 50 ஹாஸ்டல்களைக் கொடுக்கும் அளவிற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் இசைவைப் பெற்றுத் தரவேண்டும். இதனால் பல்வேறு கிராமங்களில் இருக்கிற ஆதி திராவிட மாணவர்கள் பயன்பெறுகிற வாய்ப்பு ஏற்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் கலவை பகுதியைச் சுற்றியிருக்கிற நகரங்கள் செய்யாறு 30 கி.மீ. தூரத்திலும், ஆற்காடு 25 கி.மீ. தூரத்திலும், ஆரணி 35 கி.மீ. தூரத்திலும் இருக்கின்றன. மாணவர்கள் இந்த இடங்களில் ஏதாவது ஒரு இடத்திற்கு சென்று படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. கலவை பகுதியில் மாணவர்கள் தங்கிப் படிக்க வசதி இல்லாமல் இருப்பதால் ஆதி திராவிட மாணவர்கள் படிக்கும் வாய்ப்பு குறைவாகும் சூழ்நிலை இருக்கிறது. அந்த மாணவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு வழங்கும் சத்துணவை நம்பி வாழ்ந்து கொண்டிருப்பவர்களாக இருக்கிறார்கள். அந்த மாணவர்கள் விடுதிகளில் தங்கிப்படிக்கும் வாய்ப்பினைக் கொடுத்தால் அவர்கள் கல்வி பெறுவதற்கு சிறப்பான வாய்ப்பாக அமையும். சென்ற ஆண்டிலேயே அந்தப் பகுதியில் விடுதியை அமைக்க அனுமதி அளிப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருந்தார்கள். அந்த விடுதியை இந்த ஆண்டில் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இந்த ஆண்டு மாணவர் விடுதிகளில் தங்கிப் படிக்கிற மாணவர்களுக்கு அளிக்கப்படும் உணவுத் தொகை 65 ரூபாயிலிருந்து 95 ரூபாயாக உயர்த்தி இருக்கிறார்கள்.

(இரவு 6-40)

அதேபோன்று 1985-லேயிருந்து தற்போது 140 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், தமிழ்நாடு முதல்வராக இருந்து கொண்டு,

ஏழை எளிய மக்களுக்காக, ஏழை எளியவர்களுடைய என்னைங் குளைப் புரிந்து கொண்டிருக்கிற தலைவராக இருக்கிற காரணத்தால்—ஆதி திராவிட மக்கள் மட்டும் தான் அதிகமான எண்ணிக்கையிலே மாணவர்கள் விடுதியிலே தங்கிப் படித்து வருகிறார்கள்—ஆதி திராவிட மாணவர்கள் 52 ஆயிரம் பேர்கள் பயன் அடைகிற விதத்திலே ஏறக்குறைய 1¾ கோடிக்கு அதிகமாக நிதி செலவு செய்து, மாணவர்களுக்கு அதிகமான சலுகைகளை உருவாக்கித் தருகிற அரசாக இந்த அரசை உருவாக்கி செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நான் பாராட்டவும், வாழ்த்தவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று கிராமங்களில் இருக்கிற ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனைகள் கேட்டு தினசரி கோரிக்கைகள் வைக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், அமைச்சர்களாக இருந்தாலும், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும், மாவட்டக் கலெக்டராக இருந்தாலும், ஊர்களுக்குச் சென்றால், எங்களுக்கு வீட்டு மனைப் பட்டா வேண்டும் என்ற கோரிக்கையை அங்கேயிருக்கிற ஆதி திராவிட மக்கள் வைக்கிறார்கள். அந்த மக்கள் எல்லாம் 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள் என்று அந்த இடங்களிலே வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். பல்வேறு புறம்போக்கு நிலங்களில் அவர்கள் வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள. உதாரணமாக ஏரிப் புறம்போக்கு, ஓடைப் புறம்போக்கு, சாலைப் புறம்போக்கு, கால்வாய்ப் புறம்போக்கு என்று உள்ள பல்வேறு புறம்போக்கு நிலங்களைக் கையகப்படுத்தி அவர்களுக்கு பட்டா வழங்குகிற நிலைமை இல்லாத காரணத்தால் அவர்கள் வீடற்றவர்களாக, குடிசைகளில் நிரந்தரமாக வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அப்படி வாழ்கிற அவர்களுக்கு நிரந்தரமான பரிகாரத்தை உருவாக்கித் தரவேண்டும் என்பதற்காக அரசு நிலத்தை கையகப்படுத்தி அவர்களுக்கு வீட்டு மனை வழங்குகிற திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட என்ன காரணத்தாலோ, இப்படிப்பட்ட பல்வேறு திட்டங்கள், முனைப்பான பணிகள் அவர்களைச் சென்றடைய தடங்கல் இருந்து கொண்டிருக்கிறது. பக்கத்திலே இருக்கிற நிலச்சுவான்தார்கள், அந்த நிலத்தைக் கையகப்படுத்துகிறபோது, அவர்கள் கோர்ட்டுகளுக்குச் செல்கிறார்கள். சென்று தடை வாங்குகிறார்கள். அப்படி தடை வாங்கியதற்குப் பிறகு கிராமத்திலே உள்ள அந்த ஏழை மக்களை வேலைக்கு அமர்த்த மறுக்கிறார்கள். வேலைக்கு அழைக்க மறுக்கிறார்கள். இப்படிப்பட்ட கொடுமைகள் இன்றும் நடந்து கொண்டு இருக்கின்றன. எனவே இதற்கு ஒரு நிரந்தரத் திட்டத்தை புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கித் தந்திடவேண்டும். கிராமப்புறத்திலே இருக்கிற நஞ்சை நிலங்களைக் கையகப்படுத்தி அங்குள்ள ஆதி திராவிட மக்களுக்குக் கொடுப்பதிலே பல சிக்கல்கள் இருப்பதாக, அரசு உத்தரவிலே இருப்பதாக அதிகாரிகள் சொல்கிறார்கள். பல்வேறு கிராமங்களைப் பார்க்கிறபோது, நஞ்சை நிலங்களைத் தவிர, புஞ்சை நிலங்கள் இல்லாத கிராமப்புறப் பகுதிகள் இருக்கின்றன. நஞ்சை நிலங்களைக் கையகப்படுத்துவதில் சிக்கல்கள் இருப்பதாக அரசு அதிகாரிகள் சொல்கிறார்கள். எனவே புஞ்சை நிலங்கள் இல்லாத பகுதிகளில், நஞ்சை நிலங்களை எடுத்து ஆதி திராவிட மக்களுக்குக் கொடுக்க, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படி நீங்கள் உருவாக்கித் தருவதன் வாயிலாக—நஞ்சை நிலங்களில் வீடுகளைக் கட்டிக்கொண்டு இருக்கிறவர்களுக்கு, சற்று விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிற ஆதி திராவிட மக்களுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு பயன் தருகிற வகையில் மாற்றி அமைத்தால், அது மிகப் பெரிய ஒரு பாதுகாவலாக அந்த ஏழை மக்களுக்கு அமையும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.





அதேபோன்று வீடு கட்டுவதற்கு என்று ஒதுக்கி இருக்கிற கடன் தொகை போதாது. இதை 10 ஆயிரமாக உயர்த்துகிற செயற்குறிப்பு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே சொன்னதாக எனக்கு ஞாபகம். எனவே இந்த ஆண்டு, அந்தத் தொகையை 10 ஆயிரமாக உயர்த்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று இந்த 10 ஆயிரம் ரூபாயிலே வீடுகளைக் கட்டிக் கொடுக்கும்போது, அந்த மக்களுக்குத் தேவையான குடிநீர் வசதி, சாலை வசதி போன்ற பல்வேறு வசதிகளையும் அந்த மக்கள் பெறுகிற வகையில், இந்தத் திட்டத்தோடு அதையும் சேர்த்து அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலே இன்றைக்கு ஆண்டு ஒன்றுக்கு 50 ஆயிரம் 60 ஆயிரம், 1 லட்சம் என்கிற அளவிற்கு வீடுகளைக் கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். மாவட்ட வாரியாக, மாநில வாரியாக நாம் கணக்கு எடுத்தால், பல்வேறு திட்டங்களின் அடிப்படையில், ஆதி திராவிட மக்களுக்கும், மற்றவர்களுக்கும் வீடு கட்டுகின்ற திட்டங்கள் மிகச் சிறப்பான திட்டமாக இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. எனவே அரசின் சார்பாக, என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற திட்டங்கள் வாயிலாக வீடுகளைக் கட்டிக்கொண்டு வருகிறபோது, வீட்டுக்கு ஒரு விளக்குத் திட்டத்தையும் சேர்த்து, அனைத்து வீடுகளையும் மின்மயமாக்க வேண்டும். அப்படிச் செய்கிறபோதுதான் அவர்கள் வாழ்விலே ஒளி விளக்கை ஏற்றி வைக்கிற பெருமையை நாம் அடைய முடியும். ஒரு வீட்டுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும்; மின் விளக்கு, இன்னும் பல்வேறு வசதிகளையும்—இந்தத் திட்டத்தோடு சேர்த்து, இந்த வீடு கட்டும் திட்டத்தை உருவாக்கித் தரவேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். எந்தவொரு திட்டத்திற்கும் முடிவான, ஒரு விரிவான விளக்கம் தேவை. இங்கே நாம் புதிய ஒரு காலனி திட்டத்தை அமைத்திருககிறோம். அந்தக் காலனிக்கு புதிய சாலை வசதியை உருவாக்கித் தருகிறோம். அதை முக்கியமான சாலையோடு இணைக்கிறோம். அந்தச் சாலைக்கு மின்விளக்கு போடுகிறோம். வீடுகளுக்கு மின் விளக்குகளைத் தருவது புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியினுடைய முக்கியமான திட்டமாக இருக்கிறது. குடிசைகளுக்கு அளிக்கும் மின் திட்டத்தை இந்த வீடுகளுக்கும், விஸ்தரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இதேபோன்று, ஏழை மாணவர்களுக்கு சீருடை, பாடப் புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும் வழங்குகின்ற பல்வேறு திட்டங்கள்; இன்றைக்கு அறிவித்திருக்கிற காலணித் திட்டம்—இந்தத் திட்டத்தின் வாயிலாக முழுமையாகப் பயன்பெறுகின்ற மாணவர்கள்—ஆதிதிராவிட, பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள். இந்தத் திட்டத்திலே விதிவிலக்கு இல்லாமல் அந்த மாணவர்கள் அனைவரையும் சேர்த்துக்கொள்ள உடனடியாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்களுக்கு வேண்டுகோளாக வைக்கிறேன்.





இந்தத் திட்டத்தை நிறைவேற்றி சிறப்பு செய்தல் இந்தத் துறை அமைச்சர் அவர்களைச் சாரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல, 'தாட்கோ' மூலமாக கட்டிக்கொடுக்கும் வீடுகளைப் பரவலாக்க வேண்டும். அதற்காக ஒதுக்கியிருக்கும் தொகை 200 லட்சம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு செலவிட்டிருப்பது ஏறக்குறைய இன்றுவரை 12 கோடியே 54 லட்சம் என்று புள்ளிவிவரம் தந்திருக்கிறார்கள். அதற்காக ஒரு தொகை இருக்கிறது. அந்த வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்திற்காக 200 லட்சத்தை இந்த ஆண்டு ஒதுக்கி இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் வாயிலாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மேலும் பல கோடிக்கணக்கான ரூபாயை அந்தத் துறையிலே ஒதுக்கி, அதற்காக ஒதுக்குகின்ற அந்தத் தொகையை சிறப்பாகச் செலவிடுவதற்கு உண்டான நடைமுறைகளை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். அந்தத் திட்டத்தின் வாயிலாக கட்டித் தரப்படக்கூடிய வீடுகளுக்கு 6 ஆயிரம் ரூபாய்தான் தந்திருக்கிறார்கள். அது போதாது. 6 ஆயிரம் ரூபாயிலே கட்டிக் கொடுக்கும் வீடுகள், இன்னும் அரைகுறையாகக் கட்டப்படாமல் இருக்கிற வீடுகள்கூட பல இடங்களில் மொட்டையாகக் காட்சியளிக்கின்றன. இப்படிப்பட்ட அந்த நிலைமைகளைப் போக்கி மிகச் சிறப்பான திட்டமாக இந்த வீடு கட்டும் திட்டத்தை உருவாக்கித் தருதல் வேண்டும். அதைப்போல இன்றைக்கு கிராமங்களுக்கு கன்னிறைவுத் திட்டத்தின் வாயிலாக குடிதண்ணீரைத் தந்து கொண்டிருக்கிற புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு, என்ன காரணத்தாலோ அரசு அதிகாரிகள் திட்டங்களை உருவாக்குகிறபோது, கிராமங்களுக்காக உருவாக்குகிறபோது அங்கே இருக்கிற காலனி வாழ் மக்களையும் சேர்த்து அந்தத் திட்டங்களை உருவாக்குவதில் தடையாக இருக்கிறார்கள் என்பது என்னுடைய கருத்து. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை நான் சொல்கிறேன். தாய் கிராமத்தோடு சேர்ந்திருக்கும் காலனிக்கும் குடிநீர்த் திட்டங்களை விரிவுபடுத்த முயலவிருக்கும் பல திட்டங்களில், காலனியையும் சேர்த்து திட்டங்களை உருவாக்க அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும். அப்படி அரசு ஆணை பிறப்பிக்கும்போதுதான் கிராமத்தின் பகுதியாக இருக்கிற, ஹெம்லெட்-ஆக இருக்கிற, கிராமங்களின் கிளைக் கிராமங்களாக இருக்கிற பகுதிகள் பயன் அடையும். 500-க்கும் குறைவாக ஜனத்தொகை இருக்கிற கிராமங்

[திரு. த. பழனி] [1987 ஏப்ரல் 7

களில் பவர் பம்ப் போட முடியாது. கைப் பம்ப்தான் போட முடியும் என்ற காரணத்தால் அந்தக் காலனி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அப்படி பாதிக்கப்படுகிறபோது அங்கே அவர்களை இரண்டாம்தர குடிமக்களாக எண்ணுகிற எண்ணம், கேள்வி கேட்கிற அளவுக்கு அங்கே சூழ்நிலைகள் மாறிக்கொண்டு இருக்கின்றன. ஏறக்குறைய 2 ஆயிரம் பேர் வசிக்கின்ற கிராமங்களில் மேல்நிலைத் தொட்டிகள் கட்டுகிறார்கள். பவர் பம்ப் வைக்கிறார்கள். தெருக்களுக்கெல்லாம் பைப் லைன் போடப்பட்டு, அங்கே ஸ்ட்ரீட் லைட்கள் எல்லாம் போடப்பட்டிருக்கின்றன. வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் கைப் பம்ப்பிலே அடிக்கும்போது மிகப் பெரிய கொடுமையை கிராமங்களிலுள்ள காலனிவாழ் மக்கள் இன்றைக்கு அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே திட்டங்கள் போடும்போது கிராமங்களில், துணைக் கிராமமாக இருக்கின்ற காலனிப் பகுதிகளுக்கும் சேர்த்து திட்டங்களைப் போடும் ஒரு முயற்சியை இந்தத் திட்டத்தின் வாயிலாக மரியாதைக்குரிய மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் செய்து ஒரு அறிவிப்பை அந்தத் துறைக்கு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கடைசியாக நான் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். கிராமத்தில் இருக்கிற காலனி வாழ்மக்கள் இன்னும் சுடுகாடு இல்லாமல் இருக்கிறார்கள். இவ்வாறு பல கிராமங்கள் இருக்கின்றன. என்ன காரணத்தாலோ கடந்த 5, 6 ஆண்டுகளுக்கு முன்னாலே மிக வேகமாக சுடுகாடுகளுக்கு சாலைகளை போடுவதாகச் சொன்னார்கள். என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டங்களின் மூலமாக சாலைகள் போடப்படும் என்று சொன்னார்கள். ஆனால் திட்டங்களை அமல் படுத்துகிறபோது அறிவிப்பு கொடுத்து சாலைகளை எடுக்கிறார்கள். சுடுகாடு, இடுகாடுகளுக்கு சாலைகளை ஏற்படுத்துவதற்குரிய சூழ்நிலையை இன்றைக்கு உருவாக்கி இருக்கிறார்கள். ஆனால் நான் ஒன்றைச் சொல்ல வேண்டும். சமுதாய நலன்களைக் கருதி, சமுதாய நலத்திற்கென போடப்படும் ஒவ்வொரு திட்டமும் நாட்டு மக்களின் நலனுக்காக போடப்படும் திட்டங்கள் என்று கருதப்பட வேண்டும். இன்றைக்கு இருக்கிற இந்த 20 ஆம் நூற்றாண்டில், இங்கே சுடுகாட்டிற்கு சாலைகள் இல்லை. இங்கே மனிதன் செத்தாலும் எடுத்துக்கொண்டுபோய் வைக்க சாலைகள் இல்லை என்று



1987 ஏப்ரல் 7] [திரு. த. பழனி]

சொல்கிற அளவுக்கு நிலைமைகள் கடுமையாக இருக்கின்றன என்று சொன்னால், அதைப் போக்க வேண்டாமா? அதைக் கண்டு கொள்ளாமல் இருப்பது நியாயம்தானா? இதை நான் கேட்க விரும்புகிறேன். இதை மனிதாபிமானமிக்க புரட்சித் தலைவர் அவர்களின் காதுக்குக் கொண்டு செல்ல வேண்டும். எந்த மக்கள் ஓட்டளித்து, வாக்களித்து, அந்த வாக்கின் மூலமாக இன்றைக்கு சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறோமோ அப்படிப்பட்ட என்னைப் போன்றவர்கள் அந்த மக்களுக்காக சொல்லுகின்ற கருத்துக்களை உடனடியாக செயல்படுத்துகின்ற விதத்திலே, ஆட்சியாளர்கள், அரசு அதிகாரிகளை முடுக்கிவிட்டு திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று மரியாதைக்குரிய அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல் மாடுகள் வாங்குவதற்கு கடன்கள். ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் மூலம் கடன் திட்டங்கள். அப்படி கடன் வழங்குகிறபோது விவசாயிகள், ஏழை விவசாயிகள், ஆதி திராவிடர்களாக இருப்பவர்கள் எத்தனை பேர் கடன் வேண்டும் என்று கேட்கிறார்களோ, அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் யார் யார் இருக்கிறார்கள் என்று கணக்கு எடுத்து அந்தத் தகுதி இருப்பவர்கள் அனைத்து நபர்களுக்கும் ஆதி திராவிட நலத் துறையின் வாயிலாக அல்லது பல்வேறு துறையின் வாயிலாக, ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி., ஐ.ஆர்.டி.பி. போன்ற பல்வேறு திட்டங்களின் வாயிலாக அது எந்த துறையாக இருந்தாலும் கடன் பெற இவர்கள் தகுதியானவர்கள் என்று சொல்லி முழுமையாகக் கேட்டு இருக்கிற அனைவருக்கும் கடன் கொடுக்கிற வகையில் தாரதம்மியம் இல்லாமல் அவர்களுக்கு உத்திரவாதம் கொடுத்து முன்னுரிமை கொடுக்க வேண்டும். அப்படி அளித்தால்தான் மிகப் பெரிய சிறந்த, சீரிய சமுதாயத்தை உயர்த்திக் காட்டி வருகின்ற ஒரு சக்தி பெற்ற அரசாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் எண்ணுகிற அரசாக இருக்கும் என்பதை நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

(இரவு 6-50)

அதேபோல் இங்கே நில மேம்பாட்டுத் திட்டத்துக்காக பல்வேறு கடன்களை ஆதி திராவிட மக்கள் கேட்கிறார்கள். கடன் கிடைக்கவில்லை. அந்தக் கடன் கிடைக்காத காரணத்

[திரு. த. பழனி] [1987 ஏப்ரல் 7

தால் பலயிடங்களில் அவர்கள் கிணறு வெட்ட முடியவில்லை. இங்கே ஒன்றைச் சொல்வேன், ஒரு கிராமத்தில் ஆதி திராவிடர்கள் 100 பேர் இருக்கிறார்கள் என்றால் அதில் 20 பேர் களுக்கு நிலம் இருக்காது. நிலம் இருக்கிற அந்த 20 பேர்களுக்கு கிணறு இல்லாமல் இருக்கும். புஞ்சை நிலங்களாக இருக்கும். மின்சார வசதி இல்லாமல் இருக்கும். இப்படி இருக்கிற அந்த ஆதி திராவிட மக்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். அதன் வாயிலாக கிணறு வெட்ட வேண்டுமா, கிணறு வெட்டுங்கள், அதற்காக கடன் தரப்படும், மானியம் என்று சொல்லி 50 சதவீதம் கொடுக்கிறோம். எல்லோரும் அதில் பயன் பெறவேண்டும். அந்த 50 சதவீதம் தந்தால் போதும். கிணறு வெட்டுவதற்கு மனுப் போட்டால் உங்களுக்கு அனைவருக்கும் கடன் தரப்படும் என்ற உத்திரவாதத்தை அரசு வழங்க வேண்டும். அனைவருக்கும் கடன் வழங்க வேண்டும் என்பதுதான் என் கோரிக்கை.

அதேபோல் மின்சார மோட்டார் ஒன்றுக்கு மின்சாரம் வேண்டும் என்று ஆதி திராவிட இனத்தை சேர்ந்து இருப்பவர்கள் மனுப் போட்டால் அதை நிராகரிக்கக் கூடாது. 10 ஆண்டுக் காலம் சீனியாரிட்டி பிக்ஸ் செய்யக்கூடாது. 1981-ல் மனுப் போட்டு இதுவரை மின்சாரம் கிடைக்கவில்லை என்றால் ஆதி திராவிட மக்கள் எப்படி முன்னுக்கு வருவார்கள்? சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். பல்வேறு நாட்டு நலத் திட்டங்களை நாம் போட்டுக்கொண்டு இருக்கிறோம். அந்தச் சமுதாய மக்கள் நல்ல மேம்பாடு அடையவேண்டும் என்ற வகையில் உழைத்துக்கொண்டு இருக்கிறோம். அந்தப் பகுதி மக்களுக்கு நன்மைகள் போய் சேருகிற வகையில் நாம் திட்டங்களை அறிவித்துக்கொண்டு இருக்கிறோம். அப்படிப்பட்ட அரசுகளாக இந்தியாவில் இருக்கிற பல்வேறு மாநில அரசுகள் இருக்கின்றன, மத்திய அரசும், மாநில அரசும் அவர்களைச் சார்ந்தே திட்டங்களைப் போட்டுக்கொண்டு இருக்கின்றன. அப்படி திட்டங்களைப் போடு கிறபோது அந்தச் சமுதாயத்தில் இருக்கிற நண்பர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய உரிமைக்கு போராடுவதைக் காட்டிலும், இருக்கிற உரிமையைத் தெளிவுபட அந்த மக்களுக்கு எடுத்துக் காட்டிச் சொல்லி, அந்தச் சமுதாய மக்கள் மேம்பாடு அடைய சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பி



1987 ஏப்ரல் 7] [திரு. த. பழனி]

னர்கள் மற்றும் படித்தவர்கள் அந்த மக்களுக்கு இருக்கிற திட்டங்களை எடுத்துச் சொன்னால் அந்தச் சமுதாயம் மிகச் சிறந்த சமுதாயமாக உருவாகும்.

இங்கே இருக்கிற பல்வேறு மானியக் கோரிக்கைகளில் இந்த மானியக் கோரிக்கை மிக சிறப்பான மானியக் கோரிக்கையாக இருக்கிறது. ஏன் என்றால் ஏழை எளிய மக்களை உயர்த்திக் காட்டுகின்ற உன்னதமான மானியக் கோரிக்கையாக இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், இந்தியத் திருநாட்டில் இருக்கிற பல்வேறு மாநிலங்களுக்கு இந்த மாநிலத்தினுடைய முதுகெலும்பாக இருக்கிற ஏழை எளிய மக்களை நிமிர்த்திக் காட்டுகிற தலைவர் என்பதை இந்த நாடு அறியும், நீங்களும் அறிவீர்கள் என்று வாழ்த்தி இடம் அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** சபையினுடைய தற்காலிகத் தலைவர் அவர்களே, இந்த அரிசன நலத்துறை மானியக் கோரிக் கையின் மீது ஒருசில கருத்துக்களை நான் சொல்ல விரும்பு கிறேன். கடந்த சில ஆண்டு காலமாகவே நாம் பேசும்போது, நாம் எவ்வளவோ பணம் ஒதுக்குகிறோம், எத்தனையோ காரியங் களைச் செய்கிறோம், அதை நாங்கள் வரவேற்கிறோம், பாராட்டு கிறோம். ஆனால் நாம் போடக்கூடிய திட்டங்கள், ஒதுக்கக் கூடிய பணங்கள், செய்யக்கூடிய காரியங்கள் நாம் எந்த இலக்கைக் அடையவேண்டும் என்று நினைக்கிறோமோ அந்த இலக்கை அடைய முடியாத சூழ்நிலையில் இருந்துகொண்டு இருக்கின்றன.

இப்போது உதாரணமாக நாம் அவர்களுக்கு வீட்டு மனைக்காக நிலங்களை ஆர்ஜிதம் செய்கிறோம். அப்படி நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கு பல ஆண்டு காலம் ஆகிறது. அப்படி பல ஆண்டு காலம் ஆவதைத் தடுப்பதற்கு ஒரு 3 ஆண்டு என்று ஒரு திட்டத் தைப் போட்டு எப்படி நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த பத்தரை மாற்றுத் தங்கம் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ஐந்தாண்டுத் திட்டம் என்று போட்டார்களோ அதேபோன்று இதற்காக 3 ஆண்டுத் திட்டம் என்று ஒன்றைப் போட்டு அந்த 3 ஆண்டுகளுக்குள் அதை முடிக்க வேண்டும். நமக்கு நல்ல

அதிகாரிகள் இருக்கிறார்கள். நன்கு பணி புரியக்கூடிய அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அதற்கென்று நல்ல துறை இருக்கிறது. ஆகையால் இந்த மூன்று ஆண்டு என்று இன்றைக்கு ஒரு குறிக்கோள் வைத்து, எந்தெந்த ஊரில், எந்தெந்த தாலுக்காவில், எந்தெந்த வட்டாரத்தில் ஹரிஜனங்கள் வீட்டடிமனை இல்லாமல் இருக்கிறார்களோ, அதை மூன்று ஆண்டுகளுக்குள் கொடுத்துத் தீரவேண்டும். அதற்கு இத்தனை கோடி ரூபாய் என்று ஒதுக்கினால்தான் நிச்சயமாக இந்த இலக்கினை அடைய முடியும். இல்லாவிட்டால் இப்படி நிலமே இல்லை என்று நாங்கள் பேச, அவர்கள் பேச, கடைசியில் போடக்கூடிய திட்டம் விரைவில் அமல்படுத்த முடியாத நிலையில் இருக்குமென்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே பல ஆண்டுக் காலமாக, சுதந்திரம் அடைந்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் அமைந்த காலத்திலிருந்தே, 'ஸ்டேட் ஹரிஜன் வெல்ஃபேர் கமிட்டி' என்ற ஒரு கமிட்டி இருந்தது. அதைப்போலவே ஜில்லாவிற்கு ஒரு கமிட்டி இருந்தது. பல விஷயங்களில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர், எம்.எல்.ஏ.க்கள், வெளியிலே இருக்கக்கூடிய, ஹரிஜன தொண்டு செய்யக்கூடியவர்கள் இருப்பார்கள். அப்படியிருந்து காரியங்களை ஆற்றிக் கொண்டிருந்தோம். 1967-லே உறுப்பினராக இருந்தேன். இடையிலே சும்மா இருந்தேன். 1980-லே திரும்ப வந்தேன். அதிலிருந்தே இங்கே சொல்லிக்கொண்டிருந்தாலும் கூட, ஏனோ தெரியவில்லை கமிட்டி போடப்படவில்லை. இது விஷயமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார்களானால், அவர்கள் அதைச் செய்து கொடுப்பார்கள். நிச்சயமாக நமக்கு இந்த வேலையைச் செய்து கொடுப்பார்கள். ஆகவே கமிட்டிகளை நியமிப்பதிலுள்ள காலதாமதத்தைச் செய்யாமல், ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய திட்டத்தில் 50 சதவீத ஹரிஜன மக்கள் மேம்பாடு அடையக்கூடிய அளவிற்கு திட்டம் போட்டுக்கொண்டிருக்



தைப் பார்க்கவேண்டும். ஒவ்வொரு ஊரிலும் குடிநீர் வசதி, ரோடு வசதி, சுகாதார வசதி, போன்றவற்றை செய்து கொடுக்க வேண்டும். அவர்களுடைய வீடுகளை கூரைகளினால் மூடப்பட்ட வீடுகளல்லாது கட்டிக் கொடுக்கவேண்டும். பள்ளிக்கூட வசதி செய்து கொடுப்பதற்காக திட்டம் போட்டு செய்து கொடுத்தாக வேண்டும். அதற்கு எல்லாம் திட்டம் போட்டு, ரூ. 132 கோடியை இப்போது ஒதுக்கியிருக்கிறோம். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இந்தக் காரியங்கள் முடியக்கூடிய அளவிற்கு திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டும். அப்படி நிறைவேற்றப்படும்போது தான் இந்த வேலைகளைச் செய்வதில், ஆர்.எல்.ஈ.ஜி.பி., என்.ஆர்.ஈ.பி., தாட்கோ திட்டம் மூலமாக இவர்களுக்காக வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறோம். அந்த வீடுகளைப் பார்க்கும்போது வருதப்படக்கூடிய அளவிற்கு, வேதனைப்படக்கூடிய அளவிற்கு இருக்கிறது. காரணம் என்னவென்றால், ஒரு சிறிய அளவில்தான் அந்த வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதற்கு ஓடு போட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மகனுக்குக் கல்யாணம் ஆனாலும் அந்த வீட்டில்தான் உட்காரவேண்டும். மகளுக்குக் கல்யாணம் ஆனாலும் அதே வீட்டில் தான் இருக்கவேண்டும். வெளியிலே சிறிய வராண்டா போட்டு, சமையல் அறை போட்டுக் கொடுத்தால், பணம் கூட அதற்கு ரூ. 10,000 போதும். ஆனால் தாட்கோ மூலமாக ரூ. 6,000 தான் கொடுக்கிறார்கள். ரூ. 10,000 கொடுக்கவேண்டும் என்று அத்தனை அங்கத்தினர்களும் சொல்லியிருக்கிறார்கள். 1,000 வீடுகள் கட்டுவதை வேண்டுமென்றாலும் குறைத்து, ரூ. 10,000 கொடுத்து வீடுகளை கட்டிக்கொடுக்க வேண்டும். இன்றைக்கு இருக்கின்ற விலைவாசி, கூலி உயர்வைப் பார்த்தால் எப்படி கட்டுப்படி ஆகும்? நான் என்னுடைய தொகுதியில், என்னுடைய ஊரிலே தாட்கோ திட்டத்தின் மூலமாக 45 வீடுகளை கட்டிக்கொடுத்திருக்கிறேன். நானே அளந்து கொடுத்தேன். முன்னாலே ஒரு வராண்டா, உள்ளே ஒரு சிறிய சமையல் அறை என்று ஸ்கெச் போட்டுக் கொடுத்து, வீட்டினுடைய அளவைப் பெரிதாகப் போட்டுக் கொடுத்திருக்கிறேன். அப்படிப் போட்டுக் கொடுத்து உதவினோமானால், அந்த மக்களுக்கு ஒரு நல்ல நிலைமை உருவாகும் என்ற வகையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1987 ஏப்ரல் 7

இன்றைக்கு இருக்கின்ற நிலைமையில் வீடுகள் கட்டுவதில் ஒவ்வொரு ஊருக்கும் மொத்தமாகக் கட்டவேண்டும். ஒரு ஆண்டில் 10 இலட்சம் வீடுகள் கட்டவேண்டுமென்றால், 5 இலட்சம் வீடுகள் ஹரிஜனங்களுக்கும், 5 இலட்சம் வீடுகள் ஜாதி இந்துக்களுக்கும் கட்டிக் கொடுக்கவேண்டும். ஏற்கனவே இருக்கின்ற 'எக்சிஸ்டிங் ஹட்சில்' தற்போது கட்டியிருக்கக் கூடிய அளவிற்கு போதுமான இடம் இருந்தால், அதை சம்பந்தப்பட்ட தாசில்தாரிடத்திலே சொல்லி, நேரடியாக அந்த இடத்திற்குச் சென்று, அவர்கள் கீழே இருக்கின்ற அதிகாரிகளை அழைத்துச் சென்று, ஒரே நாளில் அந்த இடத்தை அளந்து, பட்டா கொடுத்து விடலாம். ஆகவே புதிய இடத்திற்குப் போக வேண்டிய அவசியமில்லை. ஆகவே மூன்றாண்டுத் திட்டம் என ஒரு திட்டம் போட்டால் சரியாக இருக்கும் என்று இந்த நேரத்தில் மீண்டும் வலியுறுத்திக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து நஞ்சை நிலத்தைப் பற்றி சொல்லவிரும்புகிறேன். தஞ்சாவூர், திருச்சியிலே ஒரு பகுதி, திருநெல்வேலி, மதுரையில் ஒரு பகுதி, தென்னாற்காடு, இந்த ஜில்லாக்களில் முழுவதும் நஞ்சை நிலம் தான். தென்னாற்காடு, தஞ்சாவூரில் புஞ்சை என்பதே கிடையாது. புஞ்சை நிலமானாலும், புறம்போக்கு நிலமானாலும் அந்த இடத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று ஏற்கனவே ஒரு சட்டம் இருந்தது. வீடில்லாத மக்களுக்கு அவர்களிடத்திலே சொல்லி, நஞ்சை நிலமானாலும், அதை எடுத்து அவர்களுக்கு பட்டா போட்டு வழங்கினால் வீடு கட்டிக் கொள்ளக் கூடிய ஒரு நிலைமை உருவாகும் என்று இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(இரவு 7-00)

அடுத்தபடியாக எஸ்.சி., எஸ்.டி. எஸ்.டி., என்பது—நான் விரோதமாகச் சொல்லவில்லை. இருந்தாலும் 1971 ஆவது சென்சஸ் பிரகாரம் .071 எஸ்.டி. என்பது இப்போது 5. என்று ஏதோ இருக்கிறது. இது எப்படி வந்தது? தர்மபுரி, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி போன்ற ஜில்லாக்களில் எல்லாம் பல ஜாதிகள், உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள், வசதியானவர்கள், நன்கு படித்தவர்கள், உத்தியோகம் வாங்குபவர்கள்



1937 ஏப்ரல் 7] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

எஸ்.டி. என்று சொல்லிக்கொண்டு, கொண்டா ரெட்டியார், கௌடர் என்றெல்லாம் அவர்கள் சர்ட்டிபிகேட் வாங்கிக் கொடுத்து, இவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகளையெல்லாம் தட்டிப் பறிக்கின்ற நிலைமை நாட்டிலே உருவாகியிருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு—இதர ஜாதிகளிலே இருக்கக்கூடியவர்கள் நாங்கள் எஸ்.டி. என்று சொல்லி சர்ட்டிபிகேட்' வாங்கி வந்தால், அது நல்லதல்ல, இந்த ஏழை மகனை நாம் முன்னுக்கு கொண்டுவருவதற்கு அது தடையாக இருக்கும்—என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே அதிலே கவனம் செலுத்தி யார் யார் ஃபால்ஸ் சர்ட்டிபிகேட் ப்ரொட்யூஸ் பண்ணுகிறார்களோ அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கெல்லாம் 300 ஜனத்தொகை உள்ள ஹரிஜன மக்கள் இருக்கிறார்களோ, 30 குழந்தைகள் இருந்தாலும் கூட அங்கெல்லாம் பள்ளிகளை ஆரம்பிக்க வேண்டும். அங்கே பள்ளிகளை மாத்திரம் அல்லாமல் அந்தக் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டிய புத்தகம், சிலேட், துணிமணிகள் எல்லாம் கொடுக்கின்றோம். துணிமணிகள் கொடுக்கின்றபோது ஹாஸ்டலில் படிக்கின்றவர்களுக்கு, ஹரிஜன நல இலாக்காவினால் நடத்தப்படுகின்ற பள்ளிகளிலே படிக்கின்ற குழந்தைகளுக்குக் கொடுக்கின்றோம். நாம் இந்தத் துணிமணிகளை நல்ல விலைக்கு வாங்கிக் கொடுக்கின்றோம். ஆனால் ஜில்லாவிலே கொடுக்கும்போது அந்தக் குழந்தைகள் தைக்கக்கூடிய அந்தத் துணி—ஆண்பிள்ளை தைக்கின்ற அந்த டிரௌசர் ஒரு பிரயோசனமும் இல்லை. பெண்பிள்ளை தைக்கக்கூடிய அந்த பாவாடைச் சட்டை, அது ஏதோ சந்தையில் விற்கக்கூடிய மாதிரி சுருக்கம் இல்லாமல் இருக்கிறது. இதை பல தடவை நான் சொல்லியிருக்கிறேன். அப்படியில்லாமல் நல்ல சுருக்கம் வைத்து—நாம் நல்ல துணியாக வாங்கிக் கொடுக்கின்றோம்—அழகான முறையில் தைத்துக் கொடுப்பதற்கான ஒரு நிலைமையை உருவாக்கித்தர வேண்டும். இல்லாவிட்டால் பல லட்சக்கணக்கான ரூபாயை யாரோ எடுத்துப்போகின்ற ஒரு நிலைமை நமக்கு வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1987 ஏப்ரல் 7

அதற்கடுத்தபடியாக கிணறுகளை வெட்டுகின்றோம். ஹரி ஜனங்களுக்கு இரண்டு ஏக்கர் இருந்தால் போதும். பழைய காலத்தில் 1,500 ரூபாய் இனாம் கொடுத்தால் சரியாகப் போய் விடும். ஆனால் இன்றைக்கு 20,000 செலவு செய்தும் ஒரு கிணற்றை போதுமான அளவிற்கு வெட்டமுடியவில்லை. மேக்சிமம் 6,000 ரூபாய் இனாமாக ஒரு நபருக்கு கொடுக்கின்றோம். 6,000 ரூபாய் கொடுத்து இவர்களுக்கு நாம் கிணறு வெட்டிக் கொடுப்ப தோடு, அந்த இடத்திலே 10 ஏக்கர், 5 ஏக்கர் சேர்ந்திருந்தால் அவர்களுக்கு ஒரு பெரிய கிணறு வெட்டிக் கொடுப்பது—ஒரு நபருக்கு 6,000 ரூபாய் இனாமாக கொடுப்போமேயானால், அந்த இனாமாகக் கொடுத்த பணத்தை வைத்தே ஒரு கிணற்றை வெட்டிவிடலாம்—போன்ற திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் சாலச்சிறந்ததாக இருக்கும்.

அடுத்து நாம் மாடுகள் வாங்கிக் கொடுக்கின்றோம். பால் மாடுகள், உழவு மாடுகள் வாங்கிக்கொடுக்கின்றோம். கிட்டத் தட்ட 600 ரூபாய் மானியம் கொடுக்கின்றோம். பழைய காலத்திலே இந்தத் திட்டங்கள் எல்லாம் காங்கிரஸ் ஆட்சியின்போது— அன்றைக்கு நான் எம்.எல்.ஏ.-வாக இருந்தேன். 10 ஆண்டுக் காலம்—போடப்பட்ட திட்டங்கள். அன்றைக்கு இவ்வளவு தேவைகள் ஏற்படவில்லை. அன்றைக்கு ஒரு ஜில்லாவை ஒரு தாலுக்காவை எடுத்துக்கொள்வார்கள். கிட்டத்தட்ட 250 ஜோடி, 300 ஜோடி என்று மாடுகள் வாங்கிக்கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கும். அவர்கள் கொடுக்கக்கூடிய மனுக்களை வாங்கி எல்லோரும் உட்கார்ந்து குலுக்குச் சீட்டு போட்டு 250 ஜோடி மாடுகள் வாங்கிக்கொடுக்கக்கூடிய நிலைமையை உருவாக்கினோம். இப்போது யாருக்கு மாடுகள் வாங்கிக் கொடுக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதிகாரிகள் சொல்லாமல் இருக்கிறார்களா, அல்லது எங்களுக்குத் தெரியாமல் இருக்கிறதா என்பது புரியவில்லை. எனவே மாடுகள் கொடுப்பதிலே பட்சபாதகம் இல்லாமல், யாருக்கு வேண்டுமானாலும், சிறிய நிலம் வைத்திருப்பவர்களுக்கு கிடைக்கக்கூடிய அளவிற்கு அல்லது நிலமே இல்லாதவர்களுக்கு கிடைக்கக்கூடிய அளவிற்கு நீங்கள் செய்தாக வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 7] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

அடுத்து எம்.ஏ., பி.ஏ., ஹரிஜன பையன்களுக்கு சில சமயங்களில் இடம் கிடைப்பதில்லை. இந்த பையன்கள் அதர் ஸ்டேட்ஸ்—வெளிமாநிலத்திலே சென்று படிக்கிறார்கள். எப்படி, என்ஜினியர், மெடிக்கல் போன்றவற்றிற்கு வெளி மாநிலத்திற்கு அனுப்புகின்றோமோ அதுபோன்று எம்.ஏ., படித்தவர்கள் 3 பையன்களுக்கு நானே டெல்லியிலே வாங்கிக்கொடுத்தேன். அது மாதிரி வெளியிலே படிக்கக்கூடியவர்களுக்கு நாம் ஸ்காலர்ஷிப் கொடுக்கிறோம். அந்த ஸ்காலர்ஷிப் 1,575 ரூபாய் ஒரு பையனுக்குக் கொடுக்கின்றோம். அவன் படிக்க முடியாமல் பணம் போதவில்லை கடன் கொடுங்கள் என்றால் நம்முடைய இலாக்காவினர் சொல்கிறார்கள். நாங்கள் வெளி மாநிலங்களில் படிக்கக்கூடியவர்களுக்கு கடன் கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். நாம் கொடுக்கக் கூடிய ஸ்காலர்ஷிப் பணமே போதாது. அவர் மேற்கொண்டு கடன் வாங்கினால்தான் படிக்க முடியும். இந்தச் சூழ்நிலையில் நம்முடைய அமைச்சரவை இதை மறுபரிசீலனை செய்து வெளியிலே படிக்கக்கூடிய போஸ்ட் கிராஜுவேட் பையன்களுக்கு எல்லாம் நாம் கடன் கொடுப்பதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்தால் சாலச்சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, இன்ஜினியரிங் இதிலெல்லாம் புத்தகங்கள் கொடுக்கிறோம். உண்மையிலேயே அவைகள் எல்லாம் தொகுப்பு, தொகுதி; அதாவது 3 பையன்களுக்கு ஒரு தொகுதி என்ற அடிப்படையிலே 5,000 ரூபாய் செலவு செய்து புத்தகங்கள் வாங்கிக் கொடுக்கிறோம். பிறகு அவர்களுக்கு புத்தகங்களை ஒழுங்காக வைத்துக்கொள்ள அலமாரி 1,000 ரூபாய் செலவில் வாங்கிக் கொடுக்கிறோம். ஏக காலத்தில் மூன்று பையன்களுக்கு ஒரு செட் புத்தகம். அதை வாங்கிக் கொடுக்கும்போது, புத்தகம் வாங்க முடியாத பிள்ளைகளுக்கு எல்லாம் படித்து வாழ்க்கையிலே முன்னேற்ற வழிவகை செய்வதைப் பார்த்து நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

அது மாத்திரம் அல்லாமல், இன்றைக்கு அந்த ஆசிரியர் பயிற்சியிலேகூட, அரிஜன குழந்தைகளைச் சேர்க்கவேண்டும். ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளியிலேயும் ஆசிரியர் பயிற்சி ஆரம்பிக்க

வேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். அந்த ஆசிரியர் பயிற்சியிலேகூட சென்ற ஆண்டு கூட, 759 பெண்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் புத்தகம் வாங்கி, அவர்கள் எல்லாவிதமான செலவுகளும் செய்து படிக்க முடியவில்லை. அப்பேர்ப்பட்டவர்களுக்கு அந்த ஸ்காலர்ஷிப் சற்று அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஹாஸ்டல்—நானே ஹாஸ்டலிலே படித்தவள்தான். சுவாமி சகஜானந்தா ஹாஸ்டல், சிதம்பரத்திலே. சிறிய குழந்தையிலிருந்து எஸ்.எஸ்.எல்.சி. வரை ஹாஸ்டலிலே படித்தவள். அப்படிப் படித்து, அதிலேயே வார்டன் வேலைதான் பார்த்துக் கொண்டிருந்தேன். பிறகு எம்.எல்.ஏ. ஆகி வந்துவிட்டேன். அப்போது எனக்கு ஒரு ஆசை. ஒரு ஹாஸ்டல் உடனே ஆரம்பிக்கவேண்டும் என்று. வத்தலக்குண்டிலே பெண்களுக்காக அப்படி ஒரு ஹாஸ்டல் ஆரம்பித்து, இன்றைக்கு 100 குழந்தைகளுக்கு மேல் அங்கே இருக்கிறார்கள். இப்போது மாதிரி இருந்தால் 1,000 ரூபாய் கொடுங்கள், 2,000 ரூபாய் கொடுங்கள் என்று கேட்டு வாங்கி விடலாம். அன்றைக்கு யாரையுமே கேட்காமல் 8,000 ரூபாய் நானே கையிலே இருந்து செலவழித்து குழந்தைகளை வைத்து ஹாஸ்டலை நடத்திக் கொண்டிருக்கிறோம். 1957-லிருந்து, ஹாஸ்டலுக்குக் கட்டடமே கட்டவில்லை இன்னும். 100 குழந்தைகளுக்கு மேல் இருக்கிறார்கள். அந்தப் பெண்களுக்கு, அந்தக் குழந்தைகளுக்கு எல்லாம் இங்கே ஹாஸ்டலை தாராளமாக கட்டுவதற்கான வழிவகை செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அந்த 85 ரூபாய் கொடுக்கிறார்கள். உண்மையிலேயே அந்த 85 ரூபாய் எந்த மூலைக்குப் பத்தும்? அது 140 வரை என்று இருக்கிறது, ஒரு குழந்தை ஹாஸ்டலிலே சேர்ந்து படித்தால் அந்தப் பையனுக்கு—85-லிருந்து 140 ரூபாய்வரை என்று இருப்பதை மாற்றி—140 ரூபாய் கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையிலே ஒரு பையனுக்கு, ஒரு பெண்ணுக்கு, ஹாஸ்டல் ஸ்டைஃபண்டாக, போர்டிங் ரென்ட்-ஆக 140-லிருந்து 150 ரூபாய் வரை கொடுத்து உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் பாரமலை அவர்கள் சொன்னதைப்போல, அரிஜன சேவா சங்கம். ஹாஸ்டலிலேயிருந்து இங்கே நாங்கள் வெளியிலே வந்தோம். அவர்கள் நடத்தக்கூடிய 44 ஹாஸ்டல்களிலேயும் இன்றைக்கு அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அரசாங்க ஹாஸ்டலுக்கு என்ன சலுகை கொடுக்கிறோமோ, அதே சலுகையை இந்தத் தொண்டு நிறுவனங்களுக்கு, அரிஜன மக்களுக்கே தொண்டு செய்யக்கூடிய அரிஜன சேவா சங்கம் நடத்தக்கூடிய, ஹாஸ்டல் பிள்ளைகளுக்கு 140 ரூபாய் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமாத்திரம் அல்லாமல், இன்றைக்கு பழனி தொகுதி உண்மையிலேயே ரொம்பப் பின்தங்கிய தொகுதி. ஒருவிதமான முன்னேற்றமும் இல்லை. எந்த முன்னேற்றமும் அங்கே கிடையாது. அங்கே பாப்பம்பட்டி என்று ஒரு கிராமம். அந்தக் கிராமத்திலே—எங்கெங்கு எல்லாம் மாநிலம் முழுவதும் உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப்பள்ளி இருக்கிறதோ, அங்கே ஒரு ஹாஸ்டல், —ஹரிஜனங்களுக்கென்று தனியாக ஒரு ஹாஸ்டல் ஆரம்பிக்க நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதுமாத்திரம் அல்லாமல், இன்றைக்கு இருக்கின்ற நிலைமையில் அங்கே இரண்டு மைல், மூன்று மைல் என்று நடந்து வர முடியவில்லை. அங்கே பாப்பம்பட்டியிலே—சென்ற முறையே எழுதிக் கொடுத்திருக்கிறேன். அப்போது கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். ஏன் அதை விட்டுவிட்டார்கள்? இந்த முறை யாவது ஒரு ஹாஸ்டலை தயவுசெய்து பழனி தொகுதிக்கு கொடுக்கவேண்டும்.

பிறகு, பொருளாதார மேம்பாடு. அதிலே தாட்கோ திட்டத்தின் மூலமாக அவர்களுக்கு பலவிதமான காரியங்களைச் செய்வதற்கு மத்திய-மாநில அரசுகள் இரண்டும் ஒன்றுபட்டு ஒன்றை ஒன்று புரிந்துகொண்டு மக்களுக்குத் தொண்டாற்றி வருகின்றன. அப்படி இருக்கிற நிலையில், மத்திய அரசின் பேருதவியைப் பெற்று, கிளஸ்டர் என்ற முறையில் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு யூனியனை எடுத்து இருக்கிறோம், அந்தக் கிளஸ்டர் ப்ரோக்ராமில் அப்படி எடுத்ததில், சென்ற ஆண்டு

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1987 ஏப்ரல் 7

நிலக்கோட்டை தொகுதியிலே இருக்கும்போது நிலக்கோட்டை வந்தது. அப்படி 10 இடத்தில் மில்கள் கட்டி இருக்கிறோம். அதிலே 1,000 பேரை வேலைக்கு எடுக்கும் நிலை இருக்கிறது. இப்போது நான் பழனியிலே இருக்கிறேன். இப்போது அண்ணா ஜில்லாவிலே பழனி யூனியன் எடுக்கப்பட்டு இருக்கிறது. பழனி யூனியனை நாம் கிளஸ்டரிலே சேர்த்து இருக்கிறோம். அப்படி எங்கெங்கு எல்லாம் கிளஸ்டரை நாம் சேர்த்துக் கொண்டிருக்கிறோமோ, அப்படி கிளஸ்டரிலே வரக்கூடிய யூனியனிலே 1000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை டாட்கோ திட்டத்தின் மூலமாக இருக்கிறது.

அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு மானாமதுரை சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் சொன்னதைப்போல், அந்த மில்லுக்கு—டாட்கோ மூலமாக ஒரு கோடியோ, இரண்டு கோடியோ, மூன்று கோடியோ செலவு செய்து, ஒரு மில்லை அந்த கிளஸ்டர் இருக்கிற ஏரியாவிலே கொண்டு வந்தால், குறைந்தது 300 லிருந்து 500 குடும்பங்களை நிரந்தரமாக வாழ வைக்க முடியும் என்ற ஒரு நிலையை உருவாக்க முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனவே கிளஸ்டர் திட்டத்தின் மூலமாக நூற்பாலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று ரொம்பவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 7-10)

வேலைவாய்ப்பைப்பற்றி ஒரு கருத்தைக் குறிப்பிட விரும்பு[illegible] படித்தவர்களைப் பார்க்கிறபோது மிகவும் கன்றாவியாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக பெண்கள் வந்து அழுகிறார்கள். ஏதோ படித்துவிட்டு கல்யாணம் பண்ணிக்கொள்கிறார்கள். கொஞ்ச நாள் ஆனதும் கணவன் எங்காவது விட்டு[illegible] போய்விடுகிறான். அந்தப் பெண்கள் குழந்தையை[illegible]ண்டு மிகவும் சிரமப்படுகிறார்கள். பட்டதாரி[illegible]தான் நிலைமை. ஆகவே நாம் இதற்கு ஒரு வழி[illegible]வேண்டும். தனியார்கள் நடத்துகிற மில்களுக்கும் [illegible]களுக்கும் மத்திய அரசும் மாநில அரசுகளும்தான் [illegible] கொடுக்கிறார்கள். அப்படி லைசென்ஸ் கொடுக்கிற நாம் அவர்களிடத்தில் இன்சிஸ்ட் பண்ணி 25 சதவீதம் வேலை



1987 ஏப்ரல் 7] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

களை ஹரிஜனங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு நிலையை உருவாக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலைமையை உருவாக்கினால் ஹரிஜன மக்கள் சார்பில் நான் இந்த அரசாங்கத்திற்குப் பாராட்டு தெரிவித்து நன்றி சொல்லக் கடமைப்பட்டிருப்பேன் என்று சொல்லிக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் மூலமாக 3 கப்பல்களை வாங்கியிருக்கிறோம்—அதாவது தமிழ் அண்ணா, தமிழ் காமராஜர், தமிழ் பெரியார் என்று வாங்கியிருக்கிறோம். ஆனால் இதுவரையில் மெரைன் எஞ்சினியர் போன்ற பதவிகளுக்கு ஒருவரைக்கூட நாம் ஹரிஜன வகுப்பைச் சார்ந்தவர்களைப் போடவில்லை. அப்படிப்பட்ட இடங்களில்கூட 18 சதவிகிதம் ஹரிஜன மக்களை நியமிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதைப்போலவே சிப்காட், டிட்கோ, சிட்கோ போன்ற நிறுவனங்கள் பல இருக்கின்றன. அதில் 30 பேர்களை ஹரிஜனங்களில் இருந்து போட வேண்டும். ஆனால் அங்கே ஒன்றுகூட போடாமல், அப்படியே தப்பித் தவறி ஒருவர் இருந்தாலும் அவரை மாற்றி எங்காவது அனுப்பிவிடலாமா என்கிற நிலைமை இருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தென்காசியில் அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கான ஹாஸ்டல் ஒன்று இருக்கிறது. அதில் கீழே இருக்கிற அறைகளில் மேல்ஜாதிக்காரர்கள் இருக்கிறார்கள். ஹாஸ்டலின் மேலே 14 ரூம்கள் இருக்கின்றன. அந்த 14 ரூம்களும் ஹரிஜன மாணவர்களைச் சேர்க்காமல் அப்படியே பூட்டி வைத்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகையால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்குள்ள வெல்பேர் ஆபீசருக்கு உத்தரவு போட்டு பூட்டி வைத்துக் கொண்டிருக்கிற 14 அறைகளிலும் ஹரிஜன மாணவர்களைச் சேர்க்க வேண்டும் என்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் கந்தர்வக்கோட்டை யூனியனில் குளத்தூர் நடுப்பட்டியில் உள்ள பள்ளிக்குக் கட்டிடம் கட்ட அரசு ஆணை பிறப்பித்து 5 ஆண்டுகளாகியும்கூட இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே அதற்கும் நடவடிக்கை எடுத்து இந்த ஆண்டே கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டு

மென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து ஜெயங்கொண்டம் அருகில் மீன்சுருட்டியில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி ஒன்றுக்கு புதிய கட்டிடம் கட்ட பலமுறை மனுப் போட்டும் இதுவரை கவனிக்கவில்லை. அதையும் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களுக்கு நன்கு தெரியும். ஆயக்குடி மாதிரி உள்ள பகுதிகளில் சுமார் 20,000 அல்லது 25,000 பேர் இருக்கிற இடங்களில் வசிக்கிறவர்களுக்கு நாம் கண்டிப்பாகக் கல்யாண மண்டபம் கட்டித் தர வேண்டும். ரூ. 1½ லட்சம் அல்லது 2 லட்சம் போட்டு கல்யாண மண்டபம் கட்டித் தருகிறோம். ஆனால் எங்கெங்கே பாப்புலேஷன் அதிகமாக இருக்கிறதோ—எங்கெங்கே அரிஜன மக்கள் அதிகமாக இருக்கிறார்களோ அங்கெல்லாம் கல்யாண மண்டபங்களைக் கட்டிக் கொடுக்கும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் அதிகமாக அல்லல் படாமல் அவதிப்படாமல் நமக்கு என்று மண்டபம் இருக்கிறது ஒரு 25 ரூபாய் கொடுத்துவிட்டு அங்கே கல்யாணத்தை நடத்திவிடலாம் என்று எண்ணுகிற நிலைமை ஏற்படும். இறுதியாக ஹரிஜன மக்களுடைய பிரச்சினைகளை 3 ஆண்டுக் காலத்திற்குள் தீர்க்கக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு வேண்டுகோளை வைத்து நான் என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. அ. ஆறுமுகம்: பெருமதிப்பிற்குரிய பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, பெருமதிப்பிற்குரிய ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். முதலிலே நம்முடைய புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், கொடை வள்ளல் அவர்கள் முதல்வராக இருக்கிற நம்முடைய அரசில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுடைய நலனுக்காக குறைந்தது ரூ. 250 கோடி ஒதுக்கியிருந்தால் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொல்லிய பல கோரிக்கைகளை தாராளமாக அவர்கள் நிறைவேற்ற முடியும்.





நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அகில இந்தியாவிலேயே ஒரு புரட்சிகரமான முதலமைச்சர்—இது நாட்டுக்குத் தெரியும், உலகத்திற்குப் புரியும். அப்படிப்பட்ட அவர்களுடைய பதவிக் காலத்திலே இந்த நாட்டிலே வாழ்கிற 75 கோடி மக்களில் ஏறக்குறைய 20 கோடி மக்கள் தாழ்த்தப்பட்டவர்களாய், ஒதுக்கப்பட்டவர்களாய், தீண்டத் தகாதவர்களாய், இந்தக் காலத்திலேகூட இந்த நாட்டிலே வாழ்கிறோம் என்றால் இதைவிட வேறு நமக்கு அவமானம் என்ன இருக்க முடியும்?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நம்முடைய பாரதப் பிரதமர் மிஸ்டர் இராஜீவ் காந்தியாக இருந்தாலும் சரி, அதற்கு முன்பு இருந்த பிரதமராக இருந்தாலும் சரி, if they happened to go to London and New York, those people used to question them. "உங்கள் ஊரில், எங்கள் நாட்டில் இன்னும் 20 கோடி மக்களை ஒதுக்கப்பட்ட மக்களாக வைத்துக் கொண்டிருக்கிறீர்களாமே" என்று கேட்கிற நிலைமைதான் இந்த நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது.

நம்முடைய விழுப்புரத்திலே சாதியின் பெயரால், தாழ்த்தப்பட்ட 12 பேர் பகலில் மரத்தில் கட்டி வைக்கப்பட்டு சாகடிக்கப்பட்டார்கள். இந்தச் செய்தி பக்கத்திலே யாருக்கும் தெரியுமோ தெரியாதோ; ஆனால் லண்டனுக்குப் போன ஒரு டாக்டரிடத்திலே ஹ்யூமன் ரைட்ஸ் பிரசிடெண்ட் கேட்டாராம்: "In your Tamil Nadu in Villipuram".
12 பேர் சாதியின் கொடுமையினாலும், உயர்ந்தவர்கள்—தாழ்ந்தவர்கள், சிறியவர்கள்—பெரியவர்கள், ஏழைகள்—பணக்காரர்கள், தொழிலாளிகள்—முதலாளிகள் என்ற நிலையிலே அவர்கள் சாகடிக்கப்பட்டார்களாமே" என்று கேட்டாராம். அவர் என்ன சொன்னாராம் என்றால் 'உண்மைதான்' என்றாராம். இந்த நாட்டினுடைய சுதந்திரம் எல்லோருக்கும் பொதுவானது. எல்லோருக்கும் அதிலே அக்கறை உண்டு. சுதந்திரம் வாங்குவதற்கு மதத்தைப் பார்த்தோமா, சாதியைப் பார்த்தோமா, இனத்தைப் பார்த்தோமா, வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்று பார்த்

தோமா என்றால், இல்லை, இல்லை, இல்லை. எல்லோரும் ஒன்றாக இருந்து வெள்ளைக்காரனை வெளியேற்றினோம், இந்த நாடு சுதந்திரம் பெற்றது. அதற்குப் பிறகு டாக்டர் அம்பேத்கார்—தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப் பெரும் தலைவர், மகாத்மா காந்தி, ஈ.வெ.ரா. பெரியார், அண்ணா, பெருந்தலைவர் காமராஜ் அண்டு அதர் எமினென்ட் பிக் லீடர்ஸ் என்ன சொன்னார்கள்? அவர்கள் எல்லாம் இந்த நாட்டிலே 75 கோடி மக்களும் சர்வ சமமாக அண்ணன் தம்பிகளாக ஒரு வீட்டிலே பிறந்த குழந்தைகளாக வாழ்கிற நாள் என்றைக்கு வரப் போகிறதோ அன்றைக்குத்தான் காந்தியடிகளின் கனவு நனவாகும் என்று சொன்னார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, பழங்குடி மக்களுக்காக, ஒதுக்கப்பட்ட மக்களுக்காக, தீண்டப்படாத மக்களுக்காக தனியாக ஒரு அமைச்சர், தனியாக ஒரு இலாக்கா என்பதெல்லாம் எதைக் காட்டுகிறது?

நான் கூட இருபத்தைந்து, முப்பது ஆண்டுகளுக்கு முன்பு பெருமையாக நினைத்தேன். ஒரு ஏழைக்கு 5 ஏக்கர் நிலம், ஒரு சதை மாடு, படிக்க எல்லாம் பணம், நல்ல உயர்ந்த கலெக்டர் பதவி—இத்தனையும் கொடுக்கிறபோது ஆகா சமூகத்திலே எவ்வளவு இருக்கிறார்கள் என்று பார்த்து அந்தக் காலத்திலே பெருமை பட்டதுண்டு. முப்பது ஆண்டுகளுக்குப் பின்னாலே நாங்கள் என்ன எண்ணுகிறோம் என்றால் இப்போது இருக்கின்ற வீடு, எங்களுக்குக் கொடுக்கப்படுகிற மாடு, எங்களுக்குத் தரப்படுகிற ஐ.ஏ.எஸ். பதவி, இன்னும் பலவற்றை நாங்கள் பெறுவதைவிட இந்த நாட்டிலே மானம் உள்ளவனாக, சுயமரியாதை உள்ளவனாக, தன்மானம் உள்ளவனாக, இன்னொருவனுக்கு அடிமையாக இல்லாதவனாக, தாழ்ந்தவன் உயர்ந்தவன் என்ற நிலை மாறி, இந்த நாட்டிலே உண்மையான இந்தியனாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். Who is the Indian in Tamil Nadu—Can you say sir? The only true Indian in India is Mr. Pandit Jawaharlal Nehru என்று சொன்னார்கள். This was the Certificate given by the old people there ஆனால் நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நான் எண்ணியெண்ணிப் பார்த்தேன். சர்க்காரிலே கொடுக்கப்





படுகிற சலுகைகளும், அவர்களுக்காக செலவு செய்யப்படுகிற பணமும், அவர்களுக்குத் தரப்படுகிற உத்தியோகமும் அவர்கள் வாழ்கிற வீடும் இருந்தும் என்ன பிரயோஜனம்? ஒரே வார்த்தையிலே எங்களை மடக்கி, ஒடுக்கி, நடுங்கி ஓடிவிடச் செய்கிறார்கள்.

After all, you are a ' paraya " in this country. Is it not so, Sir? I am not accusing any hon. Member here. I am telling a point of fact, nothing but fact and the only fact. இன்றைக்கும் நான் பார்க்கிறேன். நான் மறைக்க விரும்பவில்லை. நாம் பயந்து கொண்டிருந்தால் நாட்டிலே வாழ முடியாது. இன்றைக்கும் கிராமப்புறங்களில் பார்ப்பீர்களானால் டீ கடைகளிலே தனியாக டம்ளர் தொங்குவதைப் பார்க்கலாம். நான் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற காரணத்தால் அந்த முதலாளியை, டீ கடைக்காரனைப் பார்த்து கேள்வி கேட்க முடியவில்லை. அதனால்தான் பெரியார் அவர்கள் சொன்னாரோ, என்னவோ தெரியவில்லை. பெரியார் சொன்னார்—எம்.எல்.ஏ. ஆகப் போனால் ஒழுங்காக, நியாயமாக நடக்க முடியாது என்றார். அந்த வார்த்தையை சொல்லக்கூடாது. If it is unparliamentary, if I say 'அயோக்கியன்'

Mr. DEPUTY SPEAKER : Yes.

(இரவு 7-20)

திரு. அ. ஆறுமுகம்: யோக்கியன் அல்ல. துணைத் தலைவர் அவர்களே, மணி அடித்து விடாதீர்கள் சார். நீங்கள் தவறாக எண்ண மாட்டீர்கள் என்று கருதுகிறேன். ஒரு முறை என்னுடைய உள்ளத்தில் யோசனை பண்ணிக் கொண்டிருந்தேன். தீண்டாமை இந்த நாட்டில் ஒழிய என்ன வழி என்று சிந்தித்துப் பார்த்தேன். தீண்டாமை ஒழிப்புக் கமிட்டிக்கு முதலமைச்சர் தான் தலைவர். If I were the Chief Minister, I will also become the Chairman of the Committee for removal of untouchability.

[திரு. அ. ஆறுமுகம்] [1987 ஏப்ரல் 7

முதலமைச்சர் தலைவராக இருக்கிறார்கள். அவர் கீழே Chief Secretary, Secretaries, Collectors, Deputy Secretaries, Tahsildars and all that இருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள்கூட ஒவ்வொரு வருஷமும் ஜனவரி 30 ஆம் தேதி இங்கே இருக்கிற அதிகாரிகளைக் கூட்டி, சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் அழைத்து, காந்திஜி அவர்களுடைய ஞாபகார்த்தமாக ஒன்றைப் படிக்கிறார். என்ன படிக்கிறார் என்றால், 'நாங்கள் எங்களுடைய சொல்லாலும், செயலாலும், நடைமுறையிலும் தீண்டாமையை அனுசரிக்க மாட்டோம்' என்று படிக்கிறார். அதை எல்லா அதிகாரிகளும் சொல்லுகிறார்கள். அதோடு முடிந்துவிடுகிறது. நல்லது. அரசாங்கத்தின் திட்டம் நல்ல திட்டம். கிராமப்புறங்களிலே, மக்கள் மத்தியிலே எந்த அளவுக்கு அந்தக் கொள்கையும், திட்டமும் எடுத்துச் சொல்லப்படுகிறது? எடுத்துச் சொல்லப்படுவது இல்லை. காங்கிரஸ்காரன் என்பதற்காகச் சொல்லவில்லை. காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்தபோது, 1967 வரையிலும் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தாலுக்காவிலும், அந்த தாலுக்கா தாசில்தார் அவர்கள் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து தீண்டாமை ஒழிப்பு தினமாக—ஹரிஜன் டே, ஆதி திராவிடர் டே—கொண்டாடினார்கள். அதன் மூலமாக பிரச்சாரம் செய்யப்பட்டு. மக்களுக்கு அந்தக் கொள்கை அறிவுறுத்தப்பட்டு வந்தது. என்ன காரணமோ தெரியவில்லை. ஒருவேளை தீண்டாமை ஒழிந்துவிட்டது, குறைந்துவிட்டது என்று நினைத்தோ என்னவோ ஆண்டுக்கு ஒரு முறை ஜனவரி 24 முதல் 30 வரை ஒரு வாரம் ஹரிஜன் வார விழா என்று இப்போது விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். நான் முதல் அமைச்சரவர்களை மிகவும் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். காங்கிரஸ் சர்க்கார் காலத்திலே தாலுக்கா அளவிலே இந்த விழா எடுத்தார்கள் என்று சொன்னால், உங்களுடைய பாட்சிகரமான ஆட்சியிலே ஒவ்வொரு ஒன்றியம், பிர்க்கா, கிராம அளவிலே ஒவ்வொரு மாதமும் இதை நடத்த வேண்டுமென்ற ஆணையை தயவுசெய்து தாங்கள் இட வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சரவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இதற்காக தீண்டாமை ஒழிப்பு இயக்கம், அகில இந்திய தீண்டாமை ஒழிப்பு இயக்கம், அகில உலக தீண்டாமை ஒழிப்பு இயக்கம் வேண்டுமென்று சொன்னேன்.



1987 ஏப்ரல் 7] [திரு. அ. ஆறுமுகம்]

என்னைக் கேட்டார்கள், அகில உலக தீண்டாமை ஒழிப்பு இயக்கம் என்று எப்படிச் சொல்லுகிறீர்கள், எங்கே அப்படி இருக்கிறது என்று. Wherever the caste Hindus live in the World—எங்கேயெல்லாம் ஜாதி இந்துக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களோ அங்கேயெல்லாம் தீண்டாமை இருந்து கொண்டிருக்கிறது என்று சொன்னேன். இன்னும் ஒன்று சொன்னேன். அமெரிக்காவிலே ஒரு பேரறிஞர், நல்ல மனிதர், இந்த இயக்கத்திற்காக, இந்த சமூகத் தொண்டுக்காக என்ன செய்ய வேண்டும், பணம் வேண்டுமா என்றெல்லாம் கேட்கிறார்கள். ரஷ்யாவிலே அங்கே ஒரு நண்பர் கேட்கிறார். அகில உலக தீண்டாமை இயக்கம் என்று சொல்லி பெயர் வைத்து, அதில் தீண்டாமை ஒழிப்புத் தலைவராக என்னை நானே போட்டுக்கொண்டேன். (சிரிப்பு) உறுப்பினர்கள் சிரிக்கிறீர்கள். வாஸ்தவம். You may think that I am not qualified to be the President of Untouchability Eradication Movement in this country.

ஏன் தீண்டாமை இங்கே இல்லையா? ஜாதிப் பாகுபாடு இங்கே இல்லையா? I have seen almost all the States in this country. I had been to Kerala during the last Elections, where our Hon. Chief Minister had also addressed a meeting.

பாலக்காட்டுக்குப் பக்கத்தில்—அந்த மலையாள வார்த்தையே ஞாபகத்திற்கு வரமாட்டேன் என்கிறது—கொழிஞ்சான் பாறையிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இப்படிக் காட்டியதை (உறுப்பினர் அவர்கள் அவருடைய உள்ளங்கையைப் பிரித்து காட்டினார்) படமாக தினத்தந்தியிலே போட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். அவர்கள் திரு. கே. எல். சந்திரனுக்காகப் பேசினார்கள். அவர் காண்பித்ததில் வித்தியாசம் தெரியவில்லை. தமிழகத்திலே காட்டியிருந்தால் ஒரு வோட்டு உதயசூரியனுக்கு, ஒரு வோட்டு 'கை'க்கு என்று ஆகிவிட்டிருக்கும். தினத்தந்தியில் பார்த்தேன். நான் இங்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. அ. ஆறுமுகம்] [1987 ஏப்ரல் 7

Sir, you must excuse me if I say this. I find in our Hon. Speaker of this House the real champion of the Scheduled Caste and Scheduled Tribe People in this State. I congratulate him. அவர்கள் ஒன்று சொன்னார்கள். சட்டத்தைப் படித்து சொன்னார்கள். சுப்ரீம் கோர்ட்டிலே எத்தனை பேர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கின்ற வகையிலே, நீதிபதிகள், வழக்கறிஞர்கள் எத்தனை பேர்கள் இருக்கின்றார்கள் என்று அவர்கள் ஏற்கெனவே கேட்டு இருக்கின்றார்கள். கேட்கவேண்டிய கேள்வி தான். ஹைக்கோர்ட்டைப் பார்த்தால் அங்கே 18 ஜட்ஜுகள் தான் இருக்கின்றார்கள். ஷெட்யூல்ட் கேஸ்ட் சமூகத்திற்கு எங்கே பிராப்பர் ரெப்ரசன்டேஷன் கொடுத்திருக்கின்றார்கள்?

I want to ask one thing. Is not the Government of Tamil Nadu responsible for that? Did the Hon. the Chief Minister and the Hon. the Law Minister recommend to the Government of India? If they had done, will not the Central Government appoint such Supreme Court Judge or High Court Judge here? நீதி ஸ்தலத்திலே எங்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை. எங்களுக்குரிய பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை. பல அங்கத்தினர்கள் பேசினார்கள். சந்தோஷம். ஷெட்யூல்ட் காஸ்ட்-அல்லாதவர்கள் கூட பேசும்போது அந்த சமூகத்தினருக்கு உரிய உரிமையைப் பற்றி சொன்னார்கள். நான் பாராட்டுகிறேன். இந்த சமுதாயத்தின் ஒரு கோடி மக்கள் சார்பில் சொல்கிறேன். எனக்குத் தெரியாது. அது சரியோ இல்லையோ. ஃபுல்லி குவாலிஃபைட் தானோ இல்லையோ! நானும் 25, 35 ஆண்டுகளாகப் பார்க்கிறேன். 1957-லே திருவண்ணாமலையிலே தோற்றுவிட்டேன். மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் அவர்களைத்தான் எதிர்த்து நின்றேன். அவரிடம் தோற்றுவிட்டேன் அப்போது. அது ஒரு பெருமையில்லையா? I have contested the General Elections in 1957 from Tiruvannamalai. It is really during the period of our Hon. Chief Minister, he had the privilege of appointing one Scheduled Caste man as Chief Secretary. அதிலேயிருந்து பார்த்துக்கொண்டிருக்கிறேன். இதுவரைக்கும் அப்படி நடந்திருக்கிறது. திருமதி பொன்னம்மாள் அவர்களுக்குத் தெரியுமா? I do not know.



1987 ஏப்ரல் 7]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுவரையில் யாருமே இல்லை.

**திரு. அ. ஆறுமுகம்:** முன்பு இருந்தவர். தலைமைச் செயலாளராக இருந்தவர். அவர் ஷெட்யூல்ட் காஸ்ட்-ஐச் சேர்ந்தவரா? I think he is not a Scheduled Caste man.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. திரவியம் அவர்கள் ஒரு பேக்வேர்ட் கிளாஸ்-ஐச் சேர்ந்தவர்தான்.

**திரு. அ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படியெல்லாம் நான் கேட்கிறதனாலேயே தலைமைச் செயலாளர் அவர்களுக்கு நம் முதல்வர் அவர்கள் மீண்டும் ஒரு எக்ஸ்டென்சன் கொடுக்கலாம். விட்டுவிடக்கூடாது.

Mr. Deputy Speaker, Sir, Kindly put in a word on behalf of the Scheduled Caste Members in this House about 42 in number and also on behalf of the other Members of this House in general and also on behalf of one crore Scheduled Caste and Scheduled Tribe people in this State and see that the Chief Secretary is given another extension. Will you kindly do that? Let me come now to the point, Sir.

(இரவு 7-30)

ஐயா, நான் முடித்து விடுகிறேன். ஐயா, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அகில இந்தியாவில் இருக்கிற 22 மாநிலங்களுக்கும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட அரிசன மக்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டு என்றால் எப்படி என்று சொல்கிறேன். தமிழகத்தில் எத்தனை கூரை வீடுகள் இருக்கின்றன என்று கணக்கெடுக்க வேண்டும். Please note, how many thatched houses are there in the entire Tamil Nadu? கூரை வீட்டில் வசிப்பவர்கள் யாராக இருந்தாலும் சரி, பிராமண

[திரு. அ. ஆறுமுகம்] [1987 ஏப்ரல் 7

ராக இருந்தாலும் சரி, நாயுடுவாக இருந்தாலும் சரி, கௌண்டராக இருந்தாலும் சரி, நானாக இருந்தாலும் சரி, இங்கே இருக்கின்ற வேறு யாராக இருந்தாலும் சரி அந்த வீடுகளை எல்லாம் அவசியம் மாற்றியமைக்க வேண்டும். இதுதான் புரட்சி. இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், நான் கேரளாவுக்கு எலெக்ஷனுக்குப் போயிருந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போயிருந்த இடத்திற்கு போயிருந்தேன்.

Mr. Deputy Speaker Sir, you will share my views.
அங்கே ஒரு கூரை வீட்டைக்கூட நான் பார்க்கவில்லை.

You take me to a big Harijan colony. எல்லா அங்கேயுள்ள ஆட்களைப் பார்த்துக் கேட்டபோது அந்தமாதிரி அங்கே எந்த ஒரு காலனியும் இல்லையென்று சொன்னார்கள். என்னால் அங்கே அதைக் கண்டுபிடிக்கவும் முடியவில்லை. அந்த அளவுக்கு அந்தப் பகுதியிலே நிலைமை இருக்கிறது.

I am speaking through this House, to the Hon. Chief Minister, our beloved and benign Chief Minister,

அந்த விஷயத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் புரட்சி செய்திருக்கிறார்கள். இங்குள்ள சத்துணவுத் திட்டத்தைப் போல வேறு யார் கொடுத்திருக்கிறார்கள்? நாங்களெல்லாம் 1945 ஆம் ஆண்டிலே கூழ் குடித்து படித்துக்கொண்டிருந்த நிலைமையிலும் மதிய சாப்பாடு இல்லாத நிலை இருந்தது. இன்றையதினம் அப்படிப்பட்ட நிலையை எல்லாம் மாற்றியமைத்து விட்டார்கள். இரண்டாவதாக செருப்பு சமாச்சாரம்—சாதாரண விஷயமா? எஸ்.எஸ்.எல்.சி. படிக்கிறபோது எனக்கு செருப்பு பற்றி தெரியாது. எனக்கும் செருப்பு கிடையாது, என் அப்பாவுக்கும் செருப்பு கிடையாது. பிறகு காலேஜுக்கு வந்த பிறகுதான் மற்ற மாணவர்கள் செருப்பு போடுவதைப் பார்த்து செருப்பு வாங்கினேன். இதிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்— He is a very great Psychologist. Sir, I used to consider the Minister for Harijan Welfare, the Hon. Minister for Harijan Welfare, the Hon. Minister for Mid-day Meals and the Hon. Minister for Commercial Taxes with great respect P.W.D. Minister is a very dynamic Minister, who is here. With great respects to you, Sir.



1937 ஏப்ரல் 7] [திரு. அ. ஆறுமுகம்]

எனக்குக் கொஞ்சம் பயம். ஏனென்றால் அவர் இங்கே வந்து விட்டார். இனிமேல் நான் அதிகமாகப் பேசினால் சரி வராது. He is a very great person. He is known to the entire World. I am telling truth and nothing but truth. Sir, he was only selected by the late great Madam Indira Gandhi to go to New York and plead for their emancipation.

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களைப் பற்றி அறியாதவர்களாகவா நாம் இருக்கிறோம்?

He is a popular Minister. He is the right hand of the Chief Minister. Along with the Chief Minister he goes to other countries in the World. He is taken by the Chief Minister wherever he goes. நாம் எல்லோரும் எம்.ஜி.ஆர். என்று மூன்று எழுத்தால் பேசுகிறோம். நான் ஒன்றைச் சொல்கிறேன்.

"P.S.R."—'P' stands for Panruti. 'S' stands for family initial. 'R' stands for Ramachandran. Whether it is Education, Harijan Welfare, you have got connection with all the portfolios. நான் ஷெட்யூல்ட் காஸ்ட். அமைச்சராகிய உங்களிடம் வருகிறேன். உணவுத்துறை அமைச்சரிடம் ஒருவேலைக்கு வருகிறேன்.

You speak to the Food Minister and other Ministers. Mr. Kakkan was doing like this when he was Minister.
எல்லா அமைச்சர்களிடமும் உங்களுக்குத் தொடர்பு இருக்கிறது. அவர்கள் எல்லாம் நீங்கள் சொல்வதைச் செய்தால் எங்கள் மாதிரி இருப்பவர்கள் கேட்பவை நிறைவேறும்.

The Hon. Food Minister is here. One important thing is, Sir, that you will speak to the Chief Minister about what I say. The University of Madras is a great University in the World. It is considered to be the Oxford University of India. There are about twenty Syndicate Members in the University.

Sir, I was the first Scheduled Caste man to be nominated by the Government of Tamil Nadu as a Member to the Syndicate from the year 1976 to 1979. After that, I was a Member of the Senate also.

Then finished. Now, after me, there is no Harijan either in the Syndicate or Senate. Sir, you are the great champion of the Scheduled Caste people. The Chief Minister has got a very good heart for this community. So, it is not very difficult for him to nominate atleast one from the Scheduled Caste people, as a member either to the Syndicate or Senate of the University of Madras. Lot of Doctors, Lawyers, Engineers and very great Educationists are there in Scheduled Caste and Scheduled Tribe in Tamil Nadu. Kindly do that Sir.

You have created so many Universities in the State. In Tiruchi, there is the Bharathi Dasan University. In Coimbatore, there is the Bharathiyar University. In Madurai, there is a University which has been named after my great leader, the great leader Kamaraj.

இந்தப் பல்கலைக் கழகத்திலே கூட ஆட்சிக் குழு அங்கத்தினராக—யாராவது தகுதி உள்ள தாழ்த்தப்பட்டவர்களை நியமனம் செய்ய வேண்டும் என்று முதலமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

என் தங்கை திருமதி பொன்னம்மாள், is the Seniormost Member because she was a Member of this Legislature from 1967. I was not a Member then. This is the second term. Girls from the surrounding villages of 2 to 3 kilometres, distance are coming to the School in Kizhkodungalur. Therefore Sir, I request you to kindly open a Girls' Hostel in Kizhkodungalur.

பழனியிலே கோவில் கல்யாண மண்டபம் ஒன்று கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதுபோல், வந்தவாசி தொகுதியிலும் ஒரு கல்யாண மண்டபம் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





திருமதி பொன்னம்மாள் அவர்கள் குறிப்பிட்டதைப்போல வந்தவாசி ஒன்றியத்திலே 'கிளஸ்டர் திட்டத்தின்" கீழே திட்டங்கள் போடப்பட்டு, சர்க்காருக்கு ரிப்போர்ட் வந்திருப்பதாகவும், அது இன்னமும் அரசினால் சாங்ஷன் செய்யப்படவில்லை என்றும் சொல்கிறார்கள். இங்கேயிருந்து இன்னும் சேங்ஷன் செய்யவில்லை என்றும் சொல்கிறார்கள். ஆகவே, அமைச்சரவர்கள் அதற்கு உடனடியாக உத்தரவு போட்டு எங்களுக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(இரவு 7-40)

அனக்காவூர் ஒன்றியத்திலே, அனக்காவூரிலே ஒரு ஹாஸ்டல் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆம்பூர் என்ற இடத்திலே ஒரு ஆஸ்பத்திரியைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Last year, I understand that the Government have constructed only 3,322 houses. I understand that the Government is proposing to construct 5,000 houses this year.

இதற்காகத்தான் சொன்னேன். 250 கோடி கேட்கச் சொன்னேனே, வேறெதற்கும் அல்ல. நான் பத்தாயிரம் வீடு கேட்கிறேன். ஆறுமுகம் கேட்கிறார் என்று கொடுத்துவிடலாம் என்று நீங்கள் ஆர்டர் போடுவீர்கள். ஆனால் பணம் வேண்டுமே, அந்தப் பணத்தை வாங்கி விடுங்கள், பத்தாயிரம் வீடுகள் கட்ட வேண்டும்; உங்கள் தொகுதிகளுக்கு எவ்வளவு வீடுகள் கொடுக்கிறீர்களோ அது எனக்குத் தெரியாது. I am not going to stand in you way. எங்கள் குலதெய்வம் அருணாசலேஸ்வரர்; அவருடைய பிள்ளை ஆறுமுகம். At least give me 500 houses. கோயிலிலே நான் 1957-லே தர்மகர்த்தாவாக இருந்தேன். நான் தான் ஹைட்புல்ட் கேஸ்டிலேயே

First Harijan to enter into the sanction Sanctorum at Tiruvannamalai, for the first time.

அதற்குப் பிறகுதான் வந்தார்கள். இப்பொழுது தக்கார், தக்கார் என்று சொல்கிறீர்கள், தமிழ்நாடு பூராவும் இருக்கிறார்கள், அவர்கள் தக்கார்களாக இருக்கிறார்களா அல்லது தகுதி இல்லாதவர்களாக இருக்கிறார்களா என்பது எனக்குத் தெரியாது. நான் முதலமைச்சரவர்களைத் தயவு கூர்ந்து கேட்டுக் கொள்கிறேன், எல்லாக் கோயில்களுக்கும், பெரிய கோயில்களாக இருந்தாலும், சிறிய கோயில்களாக இருந்தாலும், மூன்று பேர்களைப் போட்டுக் கொண்டால் அதில் ஒருவரைப் போடுங்கள், ஐந்து பேர்களைப் போட்டுக்கொண்டால் இரண்டு போடுங்கள், அதில் தப்பு ஒன்றும் இல்லை.

இதிலே எங்களுக்கு என்ன கஷ்டம் என்றால், நாங்கள் உங்களுடைய கூட்டணிக் கட்சியைச் சார்ந்தவர்கள். எங்களை மாதிரி, நாங்கள் 62 பேர்கள் வந்தால், நீங்கள் 72 பேர்கள் என்ற அளவில் வந்தால் நாங்கள் சொல்வதைக் கட்டாயம் கேட்க வேண்டிய நிலைமை உங்களுக்கு ஏற்படும். ஆனால் நீங்களோ தம்பிங் மெஜாரிட்டியிலே வந்து விட்ட காரணத்தால், you have formed the Ministry. You have done many things, good or bad. எங்களுக்கு அந்தப் பாவம் வந்துவிட்டது. ஆகவே, நாங்கள் எதிர்க்கட்சியாகவும் இருக்க முடியவில்லை; உண்மை அமைச்சரவர்கள் வந்தவாசியில் எப்படியாவது ஆறுமுகத்தைக் கொண்டு வர வேண்டும் என்று ஒன்றியச் செயலாளரிடத்தில் சொல்லி விட்டுப் போனார். ப.உ.ச. அவர்கள் சொல்லி அனுப்பினார்கள்; நாவலர் அவர்கள் வந்தார்கள், அப்பொழுது நான் அங்கு இல்லை, பேசிவிட்டுச் சென்றார். நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், பெரிய தலைவர்களெல்லாம் வந்து, கூட்டணியின் சார்பாக வந்து கைச் சின்னத்தில் வாக்களிக்க வேண்டுமென்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். அந்தத் தொகுதியிலுள்ள அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் அரும்பாடுபட்டு வெற்றிபெறச் செய்தார்கள். அதை மனதில் கொண்டிருக்கிறேன் ஆகவேதான் திருப்பிக் கேட்க முடியவில்லை . . . .





மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பார்லிமெண்டில் எங்களுக்கு எந்த நிலைமையோ அந்த நிலைமைதான் உங்களுக்கு.

திரு. அ. ஆறுமுகம்: Thank you very much.

அன்றைக்கு நீங்கள் என்ன செய்தீர்கள்? மற்றக் கட்சிகள் எல்லாம் வெளிநடப்பு செய்தன டெல்லியிலே; ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள், அதனுடைய தலைவர் Hon. Former Minister Thiru P. Kolandaivelu, அவர்கள் தலைமையிலே வெளியேறுவதே கிடையாது.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: நியாயமான காரணங்களுக்காகக்கூட அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெளியேறுவதற்கான வாய்ப்பு இல்லை.

Thiru A. ARUMUGHAM: Sir, I can speak to the Janata member. Let him come out and we can have a discussion.

சார், இன்னும் ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். அதாவது, உங்களுடைய பாஷையிலே சொல்ல வேண்டுமென்றால் மாநில ஆதி திராவிட நல ஆலோசனைக் குழு—எங்களுடைய பாஷையிலே சொல்ல வேண்டுமென்றால் ஸ்டேட் அரிஜன்ஸ் அட்வைசரி கமிட்டி. அந்தக் கமிட்டியில் நாங்கள் மாநில அடிப்படையிலும் இருந்திருக்கிறோம்; மாவட்ட அளவிலும் இருந்திருக்கிறோம். அந்தக் கமிட்டியில், ரூலிங் பார்ட்டியில் இருக்கும்போது—அப்போது அண்ணன் நம்முடைய கட்சியில்தான் இருந்தார். அப்போது திராவிட முன்னேற்றக் கழக எம்.எல்.ஏ.-க்கள் மற்ற எல்லாக் கட்சி எம்.எல்.ஏ.-க்களும் இருந்தார்கள். அவர்களும் அந்தக் குழுவில் உறுப்பினர்தான். அந்த வகையில் தமிழ்நாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநில கமிட்டியையும் மாவட்ட கமிட்டிகளையும் அமைப்பதற்கு உத்தரவிட வேண்டும். அந்தக் கமிட்டிகளில் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாமல் எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும். அந்த வகையில்

கமிட்டியை அமைத்துச் செயல்படுத்த வேண்டும். அதன் மூலமாக இந்த மக்களுக்கு கூடுமானவரையில் நாங்கள் எல்லாம் பாடுபட முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்டக் கமிட்டிக் கூட்டத்திற்கு அந்தந்த மாவட்டத்தில் இருக்கிற எல்லா மாவட்ட அதிகாரிகளையும் (டிஸ்டிரிக்ட் அஃபிஷியல்ஸ்) அழைக்க வேண்டும். மாநிலக் கமிட்டிக் கூட்டத்திற்கு எல்லா ஐ.ஏ.எஸ். அதிகாரிகளையும் (ஸ்டேட் அஃபிஷியல்ஸ்) அழைக்க வேண்டும். அப்போதுதான் அவர்களையும் நாங்கள் எல்லாம் பார்க்க முடியும்; விஷயங்களைச் சொல்ல முடியும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதுபற்றி நாங்களும் மாண்புமிகு முதலமைச்சரிடம் பேசுகிறோம். 62 எம்.எல்.ஏ.க்களும் எழுதி கையெழுத்துப் போட்டுக் கொடுக்கிறோம். அதுகூட தவறு சார், நான் பிரித்து பேசக்கூடாது. 234 எம்.எல்.ஏ.க்களிடமும் கையெழுத்து வாங்கிக் கொடுக்கிறோம்.

இன்னும் ஒன்றை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன் சார். எங்களுக்கு ஒதுக்கியிருக்கிற பணம் போதாது. பசி அதிகமாக இருக்கிறது. எங்களுக்கு சாப்பாடு வேண்டும். ஆனால் இந்த அரிசன மினிஸ்டர் ஒரு இட்லிதான் போடுகிறார்கள். இது போதாது. ஆகவே, தாராளமாக பணம் ஒதுக்க வேண்டும் என்றும் கேட்கிறோம். அதற்காக முதலமைச்சரைப் பார்க்கிறோம். வணக்கம்.

**திரு. க. பாலசுப்பிரமணியன்:** துணைத் தலைவரவர்களே, ஒரே ஒரு விளக்கம் மட்டும் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தகவலுக்காகச் சொல்கிறேன். சென்னைப் பல்கலைக் கழகத்தினுடைய ஆட்சிமன்றக் குழுவில் 1980 முதல் 1982 வரையில் என்னை செனட் உறுப்பினராக நியமித்திருந்தார்கள். இப்போது கண்டமங்கலம் சுப்பிரமணியம் அவர்களை நியமித்திருக்கிறார்கள். 1983 முதல் 1986 வரையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தேர்வுக் குழு உறுப்பினராக நான் நியமிக்கப்பட்டிருந்தேன். சென்ற டிசம்பரில்தான் அந்தப் பதவி முடிந்தது. தற்போது பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் செனட் உறுப்பினராக இருக்கிறேன். சென்றமுறை





பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் செனட் உறுப்பினராக திரு. துரைராஜ் அவர்கள் இருந்தார்கள். ஆகவே, இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் ஆதி திராவிட மக்களுக்கு இப்படிப்பட்ட இடங்களில் இடம் கொடுக்கவில்லை என்று சொல்வது தவறு.

அடுத்து, அறங்காவலர் 5 பேராக இருந்தாலும், 3 பேராக இருந்தாலும் அவர்களில் ஒருவர் ஆதி திராவிட சமூகத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டுமென்று சொல்லி, கடந்த 4, 5 ஆண்டுகளாக தமிழக அரசு அதைச் செயல்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ஆறுமுகம்:** சார், ரொம்ப நல்லது; இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் சகோதரர் அவர்கள் சொல்வது பல்கலைக் கழகத்தினுடைய பேரவைக்கா அல்லது ஆட்சிக் குழுவிற்கா (செனட் ஆர் சிண்டிகேட்) என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

(இரவு 7-50)

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர், பழங்குடியினர் நலத் துறையின் மானியக் கோரிக்கை எண் 31ன் கீழ் நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் கலந்துகொள்கிற வாய்ப்பினைப் பெற்றமைக்காக தங்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத் திட்டத்தின் கீழ் 1987-88 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை எண் 31-ல் 51 கோடியே 11 இலட்சம் ரூபாய் ஒதுக்க ஒப்புதல் அளிக்குமாறு நம்முடைய மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே மானியக் கோரிக்கையை சமர்ப்பித்து இருக்கிறார்கள். அதிலே பல திட்டங்களைப் பற்றி எடுத்து வைக்கிற நேரத்தில் பள்ளிகளைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். 961 பள்ளிகள் நலத்துறையின் மூலமாக நடத்தப்படுகின்றன. இந்த 961 பள்ளிகளைச் சீர்திருத்துவதற்கும் அங்கே படிக்கிற குழந்தை

களுக்கு இலவசமாகப் புத்தகங்கள், சீருடைகள் போன்றவற்றை எல்லாம் கொடுப்பதற்கும் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன்.

ஆனால் புதிதாக பள்ளிக்கூடம் இந்த ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு எதுவும் உருவாக்கப்படுவதற்குரிய குறிப்பு இதிலே இல்லை என்பது வேதனைக்குரியது. அந்த வேதனைக்கு மத்தியிலே பழங்குடியின மக்களுக்காவது ஏதோ 12 இலட்சம் ரூபாய் செலவில் 70 புதிய பள்ளிகளைக் கட்ட இருப்பது, வேதனையான நெஞ்சுக்கு சற்று இதமான ஒரு செய்தியாக இருக்கிறது. ஆனால் நல்ல திட்டங்களை நீங்கள் போடவில்லை என்று நான் குறை கூறுவதற்குத் தயாராக இல்லை. ஆனால் இந்தத் திட்டங்கள் போதுமானதாக இல்லை என்பதையும் என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. அதுமட்டுமல்ல. இங்கே நீங்களே குறிப்பிடுகிறபோது இடைத்தரகர்களின் சுரண்டலிலிருந்து பாதுகாப்பது மிக முக்கியம் என்று இந்தக் கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆகவே இடைத் தரகர்கள் சுரண்டுகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், இந்த அரசும் ஒப்புக் கொள்கிறது. ஆகவே நீங்கள் போடுகிற திட்டங்கள், நீங்கள் ஒதுக்குகிற தொகை அத்தனையும் இடைத்தரகர்களின் மூலமாகச் சுரண்டப்படுவதன் காரணத்தால் அரிசனங்கள் இன்றைக்கும் பொருளாதார ரீதியில் முன்னுக்கு வர முடியவில்லை என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

பல் விவரங்களை என்னால் சொல்ல முடியும். அரிசன நல மாணவர்கள் விடுதிகளை உருவாக்கி இருக்கிறீர்கள். என்னுடைய தொகுதியில்கூட அப்படி ஒரு மாணவர் விடுதி இருக்கிறது; ஸ்ரீபெரும்புதூரில் இருக்கிறது. அங்கே ஒருவர் இருக்கிறார் வார்டன் என்று. அவருடைய பெயர் மணி. அவர் ஸ்ரீபெரும்புதூரில் இருப்பார், அவருக்கு பணம் பூந்தமல்லிக்கு வரும். பூந்தமல்லியில் ஒரு வார்டன் இருக்கிறார், அவர் பெயர் மோகன். அவர் ஸ்ரீபெரும்புதூரில் இருப்பார். பூந்தமல்லிக்கு இவரும் போவதில்லை; ஸ்ரீபெரும்புதூருக்கு அவரும் வருவதில்லை. அட்டென்டென்ஸ் ரிஜிஸ்டரில் மட்டும் கையெழுத்துப் போடுவார். அவர்



ரிஜிஸ்டரில் இவர் கையெழுத்துப் போடுவார்; இவர் ரிஜிஸ்டரில் அவர் கையெழுத்துப் போடுவார். நான் திடீரென்று அங்கே போய் அந்தக் குழந்தைகளைப் பார்க்கிறபோது உங்களுக்கு யார் வார்டன் என்று கேட்டபோது பூந்தமல்லி வார்டன் என்கிறார்கள். சரி, இங்கே உங்களை யார் நடத்துகிறார்கள் என்று சொன்னால் ஸ்ரீபெரும்புதூரில் இருக்கிற வார்டன்தான் நடத்துகிறார் என்று சொல்கிறார்கள். அதாவது அரசாங்கம் ஒரு மாறுதலைச் செய்கிறது. ஆனாலும் கூட இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. நானே அங்கேயுள்ள பார்வையாளர் புத்தகத்தை எடுத்து இது போன்ற நிலைமை இருக்கிறது என்று குறிப்பிட்டு எழுதிவிட்டுத் தான் வந்தேன். ஆனால் நீங்கள் என்ன நடவடிக்கை துறையின் சார்பில் எடுத்து இருக்கிறீர்கள்?

மாணவர்கள் விடுதிகளில் இருக்கின்ற குழந்தைகளுக்காக நீங்கள் ஒரு தனி மானியக் கோரிக்கையைக்கூட வைத்தீர்கள். நாவலர் அவர்களால் வைக்கப்பட்டது. அதிலே உபரித் தொகையாக 100 கோடிக்கு அதிகமான பணம் கேட்கிறபோது அதிலே ஒன்று சொல்லியிருக்கிறார்கள். பண்டிகைக் காலங்களிலும், விசேஷ காலங்களிலும் மாணவர்கள் விடுதிகளில் இருக்கின்ற குழந்தைகளுக்கு நல்ல உணவு கொடுக்க அதாவது விசேஷமான உணவு கொடுக்க நாங்கள் ஒதுக்கீடு செய்வோம் என்று சொல்கிறீர்கள். நான் அந்தக் குழந்தைகளைக் கேட்டேன். உங்களுக்கு விசேஷமான நாட்களிலே ஏதேனும் விசேஷமான சாப்பாடு கிடைக்கிறதா என்று கேட்டால் அவர்களால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. கறி, முட்டை என்று ஏதாவது போடுகிறார்களா என்று கேட்டால் நாங்கள் முட்டையே சாப்பிடுவதில்லை இங்கே வந்ததில் இருந்து என்று சொல்லுகிறார்கள். பரிதாபமான குரல், ஹீனமான குரல். நீங்கள் திட்டம் போடுகிறீர்கள். நிதியை ஒதுக்குகிறீர்கள், இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் இந்த இடைத்தரகர்களாக இருக்கின்றவர்கள்—அவர்கள் அதிகாரிகளாகவும் இருக்கிறார்கள், அரசியல்வாதிகளாகவும் இருக்கிறார்கள். அவர்கள்தான் சுரண்டல் என்ற ஆயுதத்தை

[திருமதி டி. யசோதா] [1987 ஏப்ரல் 7

வைத்துக்கொண்டு இருக்கிற காரணத்தினாலே அவர்கள் மீது நாம் மிகவும் எச்சரிக்கையாக செயல்பட வேண்டும் என்பதைத் தான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல அடுத்து தீண்டாமை ஒழிப்புபற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத் தீண்டாமை ஒழிப்பிலே கிட்டத்தட்ட 12,148 வழக்குகள் இருக்கின்றன. அதிலே 4000 வழக்குகள்தான் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் தீண்டாமை ஒழிப்பு வழக்குகள் எவ்வளவு மிதமாகவும், எவ்வளவு மெதுவாக எவ்வளவு கம்பீரமாக ராஜநடை போட்டுக்கொண்டு வருகிற சூழ்நிலையிலே—4 ஆயிரம் வழக்குகள்தான் பரிசீலிக்கப்பட்டு முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இன்னும் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன என்பதைப் பார்க்கும்போது அதற்கு என்ன காரணம்? ஏன் முடிவிற்குக் கொண்டு வர முடியவில்லை? சமீபத்தில் கூட 4 நீதிமன்றங்கள் தனியாக போடப்பட்டதாகச் சொன்னார்கள். ஒரு நீதிமன்றத்திற்கு 3000 வழக்குகள் என்று பிரித்துக் கொடுத்திருந்தாலும்கூட இன்றைய தினத்தில் அதை முடிவுக்குக் கொண்டு வந்திருக்க முடியும். அது மட்டுமல்ல—12,000 தீண்டாமை ஒழிப்பு வழக்குகள் இருக்கின்றன என்று சொல்வதே இன்னும் குறைக்கப்பட வேண்டும். அந்த நல்ல மனப்பான்மை வளர வேண்டும் என்றுதான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல் இன்றைக்கு தீண்டாமை என்று சொல்லக்கூடிய ஒரு ஆயுதம் பயங்கரமானதுதான். அதை எடுப்பவர்கள் மிகவும் ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும். உண்மையிலேயே தீண்டாமை என்ற அடிப்படையில் வழக்குகள் வருமானால், ஆதி திராவிட மக்கள் அதனால் பாதிக்கப்படுகிறபோது, உண்மையிலேயே அவ்வழக்குகளுக்கு முன் உரிமை கொடுத்து வழக்குகளை நடத்துவதை நான் வரவேற்கிறேன். ஆனால் சிலர் அதையேகூட ஒரு கை வந்த கலையாக வைத்துக்கொண்டு மற்றவர்களை மிரட்டுவதற்கு அதைப் பயன்படுத்துகிறார்கள். அதைப்போல என்னுடைய தொகுதியிலே ஒருவர் இருக்கிறார். அவர் யாரிடத்தில் வேண்டுமானாலும் போய்ப் பேசுவார். பி.டபிள்யூ.டி. காண்டிராக்டர் இடத்திலே போவார், மற்ற அதிகாரிகளிடத்திலே போவார். போய் தனக்கு வேண்டிய காரியங்களை நிறைவேற்றச் சொல்லிக் கேட்பார். நியாயத்தின் அடிப்படையில் யாராவது கொடுக்க முடியவில்லை என்று சொன்னால், அதிகாரிகள் மறுத்தால், உடனே நீ என்னை ஜாதியைச் சொல்லி திட்டினாய், ஜாதியைச் சொல்லி கேவலப்படுத்தினாய் என்று உன் மீது வழக்கு போடுவேன் என்று சொல்லி அப்படி போட்டும் இருக்கிறார். அப்படி பல வழக்குகளை அவரே போட்டு இருக்கிறார். இதைப் பற்றி நான் முதல்வர் அவர்களிடத்திலே கூட சொல்லியிருக்கிறேன். உண்மையிலேயே ஜாதி இந்துக்கள், அரிசனங்களை குறைத்து மதிப்பிட்டு அவர்களைக் கேவலப்படுத்தியிருந்தால் அந்த வழக்குகளுக்கு முன் உரிமை கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிற நான்தான், அதே தீண்டாமை ஒழிப்பை பயன்படுத்திக் கொண்டு மற்றவர்கள்மீது தவறாக அதை உபயோகப்படுத்தினால், அதையும் நீங்கள் ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும் என்று இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.



1987 ஏப்ரல் 7] [திருமதி டி. யசோதா]

அடுத்தாற்போல் சொல்லவேண்டும் என்று சொன்னால் இதிலே மத்திய சிறப்பு நிதி உதவி நமக்குக் கிடைக்கிறது. இந்த மத்திய சிறப்பு நிதி உதவி 14 கோடிக்கு கிட்டத்தட்ட வருகிறது. அந்த 14 கோடி ரூபாயிலே நிச்சயமாக நல்ல திட்டங்களை உருவாக்கி அந்தச் சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு, வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு உரிய வழி முறைகளை நீங்கள் உடனடியாக காண வேண்டும் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(இரவு 8-00)

இருபது அம்சத் திட்டத்தின் மூலமாக ஆதிதிராவிட மக்களுக்கு நீங்கள் நிறைய உதவிகளைச் செய்திருப்பதாக இங்கே குறிப்பிட்டு இருக்கிறீர்கள். ஆனால் அவை இன்னும் அவர்களுக்கு நிறைவு தரக்கூடியதாக இல்லை. மத்திய அரசினுடைய உதவி மூலமாக எத்தனையோ திட்டங்கள் மூலமாக பணம் வருகிறது. கோழி கொடுக்கிறோம், கோழிக் குஞ்சு கொடுக்கிறோம், ஆடு கொடுக்கி

றோம், மாடு கொடுக்கிறோம். ஆனால் இவை அத்தனையையும் அந்த மக்களுக்குத் தேர்வு செய்து கொடுக்கிற நேரத்தில் உண்மையில் சமுதாய சேவை செய்கிறவர்களை, சட்டமன்ற உறுப்பினர்களை, குறிப்பாக அவர்கள் அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால், அவர்களை வைத்துக்கொண்டு நீங்கள் இது போன்ற திட்டங்களை நிறைவேற்றுகிறபோது அதிலே இருக்கிற நிறை குறைகளை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்குமென்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து துப்புரவுத் தொழிலாளர்கள். இன்றையதினம் இவர்கள் சமுதாயத்தின் ஒரு அங்கமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் கொடுக்கிற சலுகைகள் நிச்சயமாக போதாது. உண்மையில் ஒரு அதிகாரி என்னிடத்தில் சொன்னார். அமெரிக்காவில் லாஸ் ஏன்ஜல்ஸ் நகரத்தில் ஒரு துப்புரவுத் தொழிலாளி 3000 அமெரிக்க டாலர்களை சம்பளமாகப் பெறுகிறார் என்றார். 3000 அமெரிக்க டாலர்கள் என்றால் நம்முடைய ரூபாய் மதிப்பு எவ்வளவு என்று கேட்டேன். அதற்கு 32 ஆயிரம் ரூபாய் என்று சொன்னார். அவ்வளவு தொகையா என்று நான் ஆச்சரியப்பட்டேன். ஆமாம், அவ்வளவு தொகை கொடுக்கிறார்கள் என்று அவர் சொன்னார். நாம் அந்த அளவிற்கு கொடுக்கவில்லையென்றாலும் அவர்களுக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து, அவர்களின் குழந்தைகளின் படிப்பில் அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு 'ரெசிடென்ஷியல் ஸ்கூல்ஸ்' என்பதைப் போலவும், அதையொட்டி ஹாஸ்டலும் சென்னையில் நாம் நடத்தவில்லையென்றாலும், நம்முடைய உதவியின் மூலமாக கார்ப்பரேஷனாவது இதைத் தொடங்குவதற்கு நீங்கள் நல்லதொரு திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் இவர்கள் இன்றையதினம் வேலையில்லாத காரணத்தால் பல குடும்பங்களில் இருக்கிற குழந்தைகள், இளைஞர்கள் எல்லாம் பல அரசியல் கட்சிகளில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். மற்ற நேரங்களில் தங்களுடைய நேரத்தை வீணாக்கக்கூடிய சூழ்நிலை அவர்களுக்கு இருப்பதால், நாம் நிச்சயமாக அவர்களுக்கு நல்ல சூழ்நிலையை உருவாக்குவதற்கு திட்டங்களைத் தீட்ட வேண்டு





மென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் ஒரு நாளைக்கு நமக்கு பணியாற்றவில்லையென்றால் நம்மால் தாங்க முடியுமா என்பதை யோசித்துப் பார்த்து அவர்களுக்காக திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதற்கு நல்ல ஒரு செயல்முறையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒன்றை நான் சென்ற பட்ஜெட் கூட்டத்தில் பேசினேன். மாண்புமிகு அண்ணன் பாரமலை அவர்கள் கூட 31-ம் தேதி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள் என்று நினைக்கிறேன். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ட்ரெயினிங் சென்டர்ஸ் சென்னையில் இருக்கிறதே அந்த இடம் சிறப்பாக இல்லையென்றும், அதை பேய் வீடு என்றும் சொன்னார்கள். நான் அதை 'டஞ்சன்' என்று சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது நிச்சயமாக ஒரு வாரத்திற்குள் அதனை மாற்றி விடுகிறேன் என்று குறிப்பிட்டார். ஒரு வாரம் ஆகிவிட்டதே, அதனை மாற்றி விட்டார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல தாட்கோ நிறுவனத்தின் அலுவலகம் விழுப்புரத்தில் இருந்து கொண்டிருக்கிறது. அதனை சென்னைக்கு மாற்ற வேண்டும். அரிசன மக்களுடைய பொருளாதார வசதியை முன்னிட்டாவது இதைச் செய்ய வேண்டும். அவர்கள் சென்னைக்கு வந்து உங்களைப் பார்க்கிறபோது, சென்னைக்கு வந்து அதிகாரிகளைப் பார்க்கிறபோது, சென்னைக்கு வந்து டைரக்டரைப் பார்க்கிறபோது, மற்ற அத்தனை பேரையும் பார்க்கிறபோது, அப்படிப் பார்த்துவிட்டு திரும்ப அவர்கள் வீட்டிற்கு விழுப்புரத்திற்குச் செல்ல வேண்டும். இதை மாற்றி வீட்டை சென்னையிலேயே கொடுக்கிற அளவிற்கு அந்த அலுவலகத்தை இங்கே கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தனியார் கல்லூரிகளில் 18 சதவீதம் கொடுப்பது இன்றைக்கு இல்லாத ஒன்றாக இருக்கிறது. 100 இடங்களில் 40 இடங்கள் அரசாங்கத்திற்கும், 60 இடங்கள் தனியார் கல்லூரிகளில் அவர்கள் விருப்பத்திற்கிணங்க, அவர்கள் வருமானத்திற்கு ஏற்றாற்போல கொடுக்கிறார்கள். அந்த 60 சத

வீதத்திலே 18 சதவீதத்தை முறைப்படி அரிசன மக்களுக்கு கொடுப்பதற்குரிய, ஆதிதிராவிட மக்களுக்கு கொடுப்பதற்குரிய ஒரு வழிமுறையை நீங்கள் கைக்கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நம்முடைய அமைச்சரவையிலே ஆதி திராவிட அமைச்சர் ஒருவர்தான் இருக்கிறார். காங்கிரஸ் ஆட்சியிலிருந்து இன்றைக்கு வரை—கடந்த 6 மாத காலம் வரை—தமிழகத்திலே ஆதி திராவிட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இரண்டு பேர்கள் அமைச்சர்களாக இருந்தார்கள். காங்கிரஸ் ஆட்சி இருக்கிறபோது மதிப்பிற்குரிய தலைவர் கக்கன்ஜீ அவர்களும், அருமைச் சகோதரி ஜோதி வெங்கடாசலம் அவர்களும் அமைச்சராக இருந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு திராவிட முன்னேற்ற கழக அரசாங்கம் இருக்கிற நேரத்திலே கூட 2 பேர்கள் இருந்து இருக்கிறார்கள். அதேபோன்று அண்ணா தி.மு. கழக அரசு வந்தபோது தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த 2 பேர்கள் அமைச்சர்களாக இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு துரதிருஷ்டவசமாக ஒரே ஒரு அமைச்சரைத்தான் தமிழகம் பெற்றிருக்கிறது என்று சொன்னால், நிச்சயமாக அரிசன மக்களுக்காக இத்தனை சலுகைகளைச் செய்கின்ற தமிழக முதல்வர் என்று நம்மால் பாராட்டப்படுகிறவர், இந்த நிலையைப் போக்குவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு ரெவின்யூ துறையிலே உள்ள அதிகாரிகளைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். நான் கூட உங்களுக்கு வருத்தத்தோடு குறிப்பிட விரும்புவது எல்லாம், தாசில்தார்கள் டெபுடி கலெக்டர்களாக மாறுவதிலே—நான் உங்களைப் பார்த்துக் கேட்க ஆசைப்படுகிறேன்—இந்த 18 சதவீதம் உண்மையிலேயே உங்களது அரசால் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்பதை நீங்கள் இந்த மானியத்திலே பதில் சொல்கிறபோது சொன்னால் போதும். 24 டெபுடி கலெக்டர்கள் என்று சொன்னால், அதிலே எத்தனை





ஆதி திராவிடர்களுக்கு நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள்? ஆதி திராவிடர்களுக்கு கிட்டத்தட்ட 3 பேர்களுக்குக் கொடுத்திருக்கிறீர்கள். மூன்று பேர்களுக்குக் கொடுத்திருக்கிறீர்கள் என்று சொன்னால், ரெவின்யூ போர்டால் பரிந்துரை செய்யப்பட்டு அனுப்பப்பட்டவர்கள் 7 பேர்கள். அந்த 7 பேர்களில் 4 பேர்களை ஏதோ தகுதியின்மை என்ற காரணத்தைக் காட்டி, 3 பேர்களை தேர்வு செய்திருக்கிறீர்கள். இன்னும் 21 இடங்கள் வெற்றிடங்களாக இருக்கின்றன. 4 பேர்களை என்ன காரணத்தாலோ தள்ளுபடி செய்திருக்கிறீர்கள். ஒரு தாசில்தார் டெபுட்டி கலெக்டராக வருவதற்கு என்ன வரைமுறையை நீங்கள் கடைப்பிடித்து இருக்கிறீர்கள். 12 மாதங்கள்—1 வருடம்—அவர்கள் தாசில்தாராக பணியாற்ற வேண்டும். ஒரு வருடம் ஸ்பெஷல் தாசில்தாராக பணியாற்றினால் கூட அந்தப் பணி 6 மாதங்களாக கணக்கு எடுக்கப்படுகிறது. அதற்குப் பிறகு தாசில்தாராக 6 மாதம் முழுக்க அவர் பணியாற்ற வேண்டும். அப்படி ஒரு ஆண்டுக்காலம் பணியாற்றவில்லை என்றால்—11 மாதங்கள் பணியாற்றினாலும் கூட—அவர்கள் டெபுடி கலெக்டராக வருவதற்கான வாய்ப்பை இழக்கிறார்கள். மற்ற சமூகத்தைச் சேர்ந்தவர்கள் 12 மாதங்கள் பணியாற்றினால் எப்படி டெபுடி கலெக்டர் உத்தியோகம் கிடைக்கிறதோ, அதைப்போல் இவர்களும் 12 மாதங்கள் முடித்தால்தான் டெபுடி கலெக்டர் பதவி கிடைக்கும் என்று சொன்னால் இதிலே இந்த சமுதாயத்திற்கு இந்த அரசாங்கத்தினுடைய சலுகை என்ன என்பதை நான் கேட்க விரும்புகிறேன். ஒரு மாதம் குறைந்தால்கூட—11 மாதங்கள் இருந்தாலும் கூட—நீங்கள் பெருந்தன்மையோடு, இவர்கள் அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், இவர்களுக்கு 11 மாதங்கள் இருந்தால் போதும், இவர்கள் தகுதி எப்படி இருக்கிறது, இவர்கள் திறமை எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்து, இந்தச் சமுதாயத்தினருக்கு அவர்களை உற்சாகப்படுத்தி, ஊக்கத்தைக் கொடுப்பதற்கு நீங்கள் இதைத் தளர்த்தி, அந்த வெற்றிடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ரெவின்யூ போர்டால் பரிந்துரை செய்யப்பட்டவர்களை நீங்கள் ஏற்றுக்கொண்டிருந்தால் குறைந்தபட்சம் 7 பேர்களாவது டெபுடி கலெக்டர்களாக எங்களுக்குக் கிடைத்திருப்பார்கள்.

[திருமதி டி. யசோதா] [1987 ஏப்ரல் 7

அதைக்கூட இந்த அரசாங்கம் செய்வதற்குத் தயாராக இல்லை என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன், யாரும் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம். ஒருவருக்கு ஏற்படுகின்ற அநீதி மற்றவர்களுக்கு ஏற்படக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன், உடனே அவர்களுக்கு பரிந்துரை செய்வதாக தப்புக் கணக்கு போடக்கூடாது. செல்வராஜ் என்கிற ஒரு தாசில்தார். அவருடைய ரெக்கார்டு அத்தனையும் மிக அருமையாக இருக்கிறது. அதே நேரத்தில் அரசாங்கம் கூட அவருக்கு பரிந்துரை செய்திருக்கிறது. ரெவின்யூ போர்டு நிர்வாகம் சிபாரிசு செய்திருக்கிறது. ஆனால் 12 மாதங்கள் அவர் தாசில்தாராக முழுமையாகப் பணி செய்யவில்லை. 11 மாதங்கள் செய்திருக்கிறார், அவருடைய ரெக்கார்டுகளெல்லாம் பாராட்டுக்

(இரவு 8-10)

குரியதாக இருக்கின்றன. அரசாங்கம் சிபாரிசு செய்தும், ரெவின்யூ போர்டு சிபாரிசு செய்தும் இன்னும் அவருக்கு டெபுடி கலெக்டர் உத்தியோகம் கிடைக்கவில்லை. இதுதான் நீங்கள் அரிஜனங்களுக்கு செய்யக்கூடிய நலனா? முன்னேற்றமா? சலுகையா? என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். டெபுடி கலெக்டராக இன்றைக்கு 300, 350 பேர் இருக்கிறார்கள். அதிலே குறைந்தபட்சம் 18 சதவீதம் என்று எடுத்துக் கொள்வீர்களானால் 55 பேர் இந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருக்க வேண்டும். ஆனால் இருப்பதோ 15 பேர்தான். கிட்டத்தட்ட 40 வெற்றிடங்கள் இருக்கின்றன. அந்த 40 இடங்களுக்கு நீங்கள் ஓப்பன் மார்க்கெட்டிலே இருக்கும் படித்த இளைஞர்களை, இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த அதிகமாகப் படித்து பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்களே அவர்களை ஏன் எடுக்கக்கூடாது என்பதைக் கேட்க ஆசைப்படுகிறேன். அவ்வாறு எடுப்பதற்கு ஏதாவது சிரமங்கள் இருக்கின்றனவா, கஷ்டங்கள் இருக்கின்றனவா என்றுதான் நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். தாசில்தார்களில் டெபுடி கலெக்டர்களாக ஆவதற்கு போதிய நபர்கள் இல்லை என்கிற காரணத்தால், அந்த காலி இடங்களை நிரப்ப, ஸ்பெஷல் ரெக்ரூட்மெண்ட் செய்வதற்கு



1987 ஏப்ரல் 7] [திருமதி டி. யசோதா]

நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு முறைக்கு இரண்டு முறை கையெழுத்துப் போட்டு அனுப்பி இருக்கிறார்கள். அப்படி இருந்தும் அதை இன்றைக்கும் ரெவின்யூ செயலாளராக இருப்பவர் செய்யவில்லை. அவருக்கு மனம் இல்லை என்ற வேதனையை நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. தமிழகத்தின் முதல்வர் அவர்கள் நினைக்கின்றார்கள்; செய்ய வேண்டும், இந்தச் சமுதாயத்து மக்களுக்குச் செய்ய வேண்டும், உதவ வேண்டும், அவர்கள் டெபுடி கலெக்டர்களாக வரவேண்டுமென்று. நாற்பது இடங்கள் காலியாக இருக்கின்றன. அதன் மூலம் அவர்களுக்கு உதவவேண்டுமென்று நினைத்து இன்றும்கூட அது நிறைவேற்றப்படவில்லை என்று நினைக்கின்றபோது வேதனையாக இருக்கிறது. அட்வகேட் ஜெனரல் அவர்கள் கூட இதுபற்றி கருத்து தெரிவித்து இருக்கிறார்கள், பழைய இடங்களைப்பற்றி விட்டுவிடுங்கள். இனி புதிதாக இருக்கின்ற இடங்களில்கூட அவர்களை பூர்த்தி செய்யவில்லை என்று சொன்னால், இதைப்போக்க நீங்கள் விசேஷமாக தேர்வு செய்து கொண்டு அந்த இடங்களை நிரப்பலாம் என்று அவர்கள் ஆலோசனை நல்கியதற்குப் பிறகுங்கூட, அது எடுபடாத ஒன்றாகத்தான் இருக்கிறது. அதை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் என்ன முயற்சி எடுத்து இருக்கிறது என்பதைக்கூட நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தாசில்தார்கள் இன்றைக்கு 600 பேர்களுக்குமேல் இருக்கிறார்கள். 18 சதவீதம் என்று சொன்னால் கிட்டத்தட்ட 125 பேராவது இருக்கவேண்டும். ஆனால் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று சொன்னால் 10-லிருந்து 15 பேர்கள்தான் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தாசில்தார்களாக இருக்கிறார்கள். ஆகவே இதை நீங்கள் நிச்சயமாக கண்காணிக்க வேண்டுமென்று நான் உங்களை கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாலையிலேகூட என்னுடைய சகோதரர் நல்லமுத்து அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். மத்திய அரசாங்கம் 49 (எ) ஆக்ட்-ன் மூலமாக பஸ் ரூட் 18 சதவீதம் அரிசனங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது இப்போது நாங்கள் அதை நடை

முறைப்படுத்திக்கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். இதைச் செய்யவேண்டிய நேரத்திலேயே, 1979-லேயிருந்தே, நீங்கள் செய்திருந்தீர்களேயானால் இன்றைக்கு இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த பலர் பஸ் முதலாளிகளாக உருவாகி இருப்பார்கள் என்கின்ற வேதனையை நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. புதுவை மாநிலத்திலே இன்றைக்கு ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பஸ் முதலாளிகளாக, பஸ்களுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கிற அந்த நிலைமைக்குக் காரணம் அவர்கள் மத்திய அரசாங்கத்தினுடைய அந்தச் சட்டத்தை ஏற்றுக்கொண்டதாலேதான், அதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்ற காரணத்தாலேதான், என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அந்த நிலைமை இங்கும் கொண்டுவரப்படும் என்று இன்றைக்கு நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் உறுதி கூறி இருக்கின்ற காரணத்தினாலே, இதை இனிமேலாவது இங்கே மிக வேகமாகச் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப் படுகிறேன்.

செருப்புக்கு நம்முடைய அரசாங்கம் 20 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறது. நான் அன்றைக்கும் அதை பாராட்டினேன். இன்றைக்கும் சொல்கிறேன். அந்தச் செருப்புகளைத் தைப்பதற்கு பாட்டா கம்பெனிக்கும், பரோர்டா கம்பெனிக்கும் ஆர்டர் கொடுத்து விடாதீர்கள். இங்கே சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள், காதித் துறையை கையிலே வைத்திருக்கும் அமைச்சர் அவர்கள் இல்லையென்றாலும்கூட, நான் அவரிடத்திலே கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். அரிசன மக்களை, கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி வைத்து, செருப்பு தைப்பதில் அவர்களில் மிகவும் திறமைப்பெற்றவர்கள் இருக்கிறார்கள்; அவர்களைப் பயன்படுத்தி, அவர்களுக்கு முன் பணம் கொடுத்து, அவர்களுக்கு அந்தச் செருப்புகளைத் தைப்பதற்கு தேவையான பொருள்களை, தோல் மற்றும் உபகரணங்களைக் கொடுத்து, அவர்களிடத்திலே இருக்கும் உழைப்பை நீங்கள் பெற்று, செருப்புகளை உருவாக்குவதிலே முழுக்க முழுக்க அந்த மக்களைப் பயன்





படுத்தி, அவர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு, இந்த நல்ல சூழ்நிலையை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

செருப்பு கொடுக்கிறார்கள். அதிலே குழந்தைகளுக்கு மட்டும் அல்ல, பெண்களுக்கு கூட கொடுக்க இருக்கிறார்கள். இங்கே பேசுகின்றபோது ஒருவர் சொன்னார் நாடோடி மன்னன் படத்திலே நாடோடி வீராங்கனாக வருகின்ற நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் அரண்மனைக்குள் வருகின்ற போது அந்த ராணியைப் பார்த்து அந்த வீராங்கனன் சொல்கிறானாம், ராணி நீ பட்டு மெத்தையில், பஞ்சனையில் புரண்டவள், உனக்கு காடு மேடுகளில் இருக்கின்ற பெண்களின் நிலை தெரியாது. காலிலே முள் குத்திய காரணத்தால் பாதி முள்ளை எடுத்து பாதி முள் அந்த காலுக்குள்ளே தங்கி இருக்கிற ஏழை பெண்ணைப் பற்றி உனக்கு தெரியுமா என்று கேட்டதாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சேடப்பட்டி முத்தையா அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள்.

**திரு. கே. பாலாஜி** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாடோடி மன்னனில் இரட்டை வேடத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் வருகிறார்கள். மன்னனாக இருக்கின்ற அந்த புரட்சித் தலைவர் இடத்திலே நாடோடியாக இருக்கின்ற புரட்சித் தலைவர் "நீங்கள் வந்து மாளிகையில் இருந்துகொண்டு மக்களை பார்க்கிறீர்கள், நான் மக்களோடு இருந்து கொண்டு மாளிகையை பார்க்கிறேன். ஆயிரம் உடைகளில் எந்த உடையை அணிவது என்று உங்களுக்கு புரியாமல் ஒன்றை அணிகிறீர்கள். ஆனால் ஒரு உடைக்கு மாற்று உடை இல்லாமல் அங்கே கந்தல் ஆடையை கசக்கிக் கொண்டு இருக்கிறார்கள். மாளிகையில் நடக்கின்ற உங்களுக்கு ரத்தின கம்பளத்தை விரிக்கிறார்கள். ஆனால் இங்கே வீதியிலே இருக்கின்ற நாங்கள் வழியிலே இருக்கின்ற முள்ளை அகற்றிவிட்டு நடந்து செல்கிறோம்" என்று அந்த வசனம் வருகிறது. ஆகவே தாய்மார்கள் இடத்திலே சொல்லவில்லை என்பதை தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தாய்மார்கள் இடத்திலே சொன்னதாக சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் பேசியதை நான் கேட்டேன். பாதி முள் அவர்கள் காலில் இருக்கிறது என்று அசெம்பிளி புரசீடிங்சில் இருக்கிறது. தாங்கள் பார்த்துக்கொள்ளலாம். அவர் சொன்னார் அதை நான் சொல்கிறேன். வசனம் என்னவோ, படம் என்னவோ, அதுவல்ல பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் சொன்னார்கள் பாதி முள் உள்ளே தங்கி இருக்கிறது என்று. இதுபோன்ற பெண்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள், அவர்கள் பாதம் நோகக்கூடாது என்பதற்காக இந்த செருப்பை நாங்கள் கொடுப்பதாகக் கூட அவர்கள் சொன்னார்கள். நான் கூட சொல்கிறேன், பெண்கள், தாழ்த்தப் பட்ட பெண்கள், பொருளாதாரத்தில் சிக்குண்டு, சிதறுண்டு இருக்கின்ற ஏழை எளிய மக்கள் செருப்பு போடவேண்டும் என்று நான் விரும்புகிறேன். கிராமங்களில் செருப்பு போட்டுக்கொண்டு ஆதி திராவிட பெண்கள் நடந்துவருகின்றபோது அதனால் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டால் அதை சமாளிப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கவேண்டும் என்பதைத்தான் இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். காரணம் அதனால் ஒரு பிரச்சினை வளர்ந்து அது மற்றவர்களுக்கு வேதனை அளித்து விடக்கூடாது என்பதற்காகத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எதிர் கட்சி துணைத் தலைவர் அவர்கள் இங்கே பேசுகின்ற போது செருப்பு வழங்குவதால் தாய்மார்கள் அங்கே வீதியிலே நடந்து செல்கிறபோது அதனால் வருகின்ற விளைவுகளுக்கு இந்த அரசு பொறுப்பு ஏற்று சமாளிப்பதற்கு தயாராக இருந்து கொள்ள வேண்டும் என்பதை மட்டும் சொல்வதோடு மட்டும் அல்லாமல் இதனால்தான் நான் அதை இங்கே கோடிட்டுக் காட்டுகிறேன் என்று சொன்னார்கள். இந்தத் திட்டத்தை தீண்டாமை ஒழிப்பு என்ற திட்டத்தின் அடிப்படையில் மிக புரட்சிகரமாக குழந்தைகள் பள்ளி பருவத்திலே போட்டுக்கொண்டு வர





வேண்டும். அதுவும் தெருக்களிலே உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பேதம் இல்லாமல் செருப்பு போட்டுக்கொண்டு பள்ளிக்கு வீதியிலே செல்ல வேண்டும், என்று புரட்சித் தலைவர் அவர்கள் இந்த புரட்சிகரமான திட்டத்தை கொண்டு வந்து இருக்கிறார்கள் என்பதை உங்கள் ஞாபகத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது தான் பாயிண்ட் ஆப் ஆர்டரா?

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்கள் மானியத்தில் எதிர்க்கட்சி துணைத்தலைவர் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் மாண்புமிகு திருமதி யசோதா அவர்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் பிரஸ் ரிப்போர்ட்டர்கள் யாரும் அவர்கள் இடத்தில் இல்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சருடைய பதிலை நாளைக்கு வைத்துக் கொள்வீர்களா? பிரஸ் ரிப்போர்ட்டர்கள் எல்லாம் வந்து அவர்கள் இடத்தில் உட்கார நடவடிக்கை எடுப்பீர்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எல்லோரும் இருக்கிறார்கள். வெளியே போய் இருக்கிறார்கள். காப்பி சாப்பிட போய் இருப்பார்கள். முன்வரிசையில் இருக்கிற நீங்களே சமயத்தில் எழுந்து போய்விடுகிறீர்கள். இதை யெல்லாம் பிரச்சினையாக சொல்லாதீர்கள்.

(இரவு 8-20)

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திட்டத்தைக் குறை சொல்ல நான் இங்கே இதைக் குறிப்பிடவில்லை. நான் சொல்வது எல்லாம், பிரச்சினைகள் வருகின்றபோதும், அதை நாம் சமாளிப்பதற்குத் தயாராக இருக்கவேண்டுமென்பதைத்தான், சுடர் விடுகின்ற விளக்காக இருந்தாலும், தூண்டுகோல் அவசியம் தேவை என்ற நிலையில்தான் சொன்னேன். எடுத்துக்கொண்டால் எடுத்துக் கொள்ளுங்கள். வேண்டாமென்றால் வற்புறுத்தவில்லை.

அடுத்தாற்போல் நேற்றைய முன்தினம் எங்களுடைய பாரதப் பிரதமர், தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் பாபு ஜகஜீவன்ராம் நினைவு நாள் விழாவில் கலந்துகொள்ளும்போது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று ஒரு அறிவுரை நல்கி இருக்கிறார்கள். ஹரிஜன மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அவர்கள் ஒற்றுமையைக் குலைப்பதற்கு என்று பலர் முன்வருவார்கள். அந்த நேரத்திலே அவர்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருந்து, அதற்குரிய வாய்ப்பினை தரக்கூடாது என்பதை மிக வேதனையோடும், மிக அழுத்தந்திருத்தமாகவும் எடுத்துச்சொன்னதை நான்கூட இந்த நேரத்திலே நினைவு கூர்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே ஹரிஜன மக்களுக்கு நன்மை தருகின்ற பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். அதிலே ஒரு குறிப்பான விவரத்தை உங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். செம்பரம்பாக்கம் என்று காஞ்சிபுரத்திலே ஒரு காலனி இருக்கிறது. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் பாலாஜி அவர்களுக்குக் கூடத் தெரியும். அந்தக் காலனியிலே 1964-ஆம் ஆண்டில் ஹரிஜன பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், 23 வருடங்களுக்கு முன்னதாக அந்தக் கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்பட்டது. 23 வருடங்களாக அந்தச் சங்கம் தன்னுடைய பணிகளைச் செய்துகொண்டுதான் வருகிறது. ஆனால் அதற்கு ஹரிஜனத் துறை மூலமாகவோ, ஐ.ஆர்.டி.பி. மூலமாகவோ அல்லது பால் வளத் துறை அமைச்சர் வகிக்கின்ற துறை மூலமாகவோ இதுவரையிலே ஒரு கறவை மாடு கூட கொடுக்கப்படவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

திரு. கே. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் 1977-லிருந்து 1980 வரை சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற போது நான் கிட்டத்தட்ட 32 ஆதி திராவிட மக்களுக்கு அரசு மான்யத்தோடு அன்றைக்குக் கடன் வாங்கிக் கொடுத்தேன். அதற்குப் பிறகு 1982-லிருந்து 1984 வரை சென்னை--செங்கற்பட்டு மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியப் பெருந்தலைவராக இருந்தபோதும் அதே 32 பேர் களுக்கு கடனோடு நான் மானியம் வாங்கிக் கொடுத்தேன். இருந்தாலும் அம்மையார் அவர்கள் சொன்னதைப்போல், அது





தொடர்ந்து கிடைக்கவில்லை. அதற்கு இந்த ஆண்டாவது செய்யவேண்டுமென்பது தான் என்னுடைய கருத்து என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திருமதி டி. யசோதா: தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரை குறை சொல்வதற்குத் தயாராக இல்லை. 1977-லே இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் 20 அம்சத் திட்டத்தின் மூலமாக பல கிராமங்களை தத்து எடுத்துக் கொண்டது உண்டு. ஹரிஜன மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு என்று 20 அம்சத் திட்டத்தின் கீழ் கடன் கொடுக்க வேண்டுமென்ற கட்டளையைப் பிறப்பித்த நேரத்திலே, வங்கி அதிகாரிகள் ஓடோடிச் சென்று பலருக்குக் கடன் கொடுத்துள் ளார்கள். அன்றைக்கு ஆடு வாங்கக் கொடுத்தார்கள், மாடு வாங்கக் கொடுத்தார்கள், கோழி வாங்கக் கொடுத்தார்கள். கொக்கு வாங்கக் கொடுத்தார்கள். அப்படிக் கொடுத்த நேரத்தில் கூட, செம்பரம்பாக்கம் ஹரிஜன கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் சங்கத்திற்கு ஒரு மாடுகூட கொடுக்கவில்லை. ஸ்டேட் வங்கியி னுடைய அந்த நிர்வாகி, அவர்கள் மீது பரிதாபப்பட்டு 30 மாடு களுக்கு, சப்சிடி இல்லாமல், பணம் கொடுத்து இருக்கிறார்கள். அந்த 30 மாடுகளுக்காக வாங்கிய கடனை அவர்கள் திரும்பக் கொடுத்துவிட்டார்கள். அதற்குப் பிறகு கொடுக்கவேயில்லை. 3 தலைமுறை பார்த்து விட்டார்கள். காங்கிரஸ் ஆட்சி வந்தார்கள், தி.மு.க. ஆட்சி வந்தார்கள், அண்ணா தி.மு.க. ஆட்சி வந்திருக்கிறார்கள். மூன்று அரசாங்கத்திலும் அந்த ஆதி திராவிட மக்களுக்கு கிடைக்கவில்லை. அவர்கள் என்னை வந்து பார்த்தார்கள். நான் கேட்டேன், 23 வருடங்களாக நீங்கள் அரசாங்கத்தினுடைய உதவி பெறவில்லையென்றால்—300 பேர்கள் இருக்கிறார்கள்—ஏன் நீங்கள் போய் பல தலைவர்களை பார்க்கவில்லையா என்று கேட்டபோது அவர்கள் சொன்னார் கள், நாங்கள் எங்கே போனாலும் எங்களை கிண்டல் பேசுகிறார் கள், எங்களை கேலி பேசுகிறார்கள், நையாண்டி செய்கிறார்கள், எங்களுக்கு அவமானமாக இருக்கிறது. நாங்கள் தற்கொலை செய்து கொள்ளலாம் என்று சில நேரங்களில் நினைக்கின்றோம் என்று சொன்னார்கள். அப்போது இதைப் பற்றி நான் விசாரிக் கின்றேன், சம்பந்தப்பட்ட அதிகாரியிடத்தில் கலந்து பேசு கின்றேன் என்று சொன்னேன். அதுபோல அதிகாரியிடத்தில் கலந்து பேசுகின்றபோது மிகப் பெரிய அதிகாரிகள் இப்படியா நடந்தது என்று வருத்தத்தோடு சொல்லி அதற்கு பிறகு கீழே

இருக்கின்ற அதிகாரிகள் டி.ஆர். அளவிலே இருக்கின்ற அதிகாரிகள் என்னை வந்து பார்த்தார்கள். செம்பரம்பாக்கம் என்ற போது பூந்தமல்லியிலே இருக்கின்ற செம்பரம்பாக்கம் என்ற இடத்தை தேடிக்கொண்டு போனார்கள். நான் டி. ஆர்.-க்குச் சொன்னேன். காஞ்சிபுரத்திலே ஒரு செம்பரம்பாக்கம் இருக்கிறது, அது தெரியாமல் இருக்கிறீர்களே, அங்கே போங்கள் என்று சொன்னேன். அவர் போய் பார்த்தார். 50 மாடுகள் அவர்களுக்கு கொடுக்கின்றேன் என்று சொன்னார். கொடுங்கள் நல்ல திட்டம். எம்.எல்.ஏ.-வை வைத்துக் கொண்டு கொடுங்கள் என்று சொல்லி விட்டு வந்துவிட்டேன். எம்.எல்.ஏ. கடிதம் கொடுத்திருக்கிறார். எம்.எல்.ஏ. கடிதம் கொடுத்தும் கூட, அவர்களுக்கு மாடு கொடுக்க வேண்டும் என்று கேட்டதற்கு பிறகும் கூட கொடுக்கவில்லை. பிறகு அதே டி.ஆர். 20 தான் கொடுக்க முடியும், 50 முடியாது என்றார். நான் சொன்னேன். ஏதோ ஒன்று 20-ஆவது கொடு பரவாயில்லை என்று சொன்னேன். அதற்கு பிறகு பத்து நாளிலே அந்த ஆட்கள் வந்து சொன்னார்கள், 20 இல்லை 10 தான் கொடுக்கின்றேன் என்று சொன்னார் என்றார்கள். அதைக் கூட விட்டுவிடாதீர்கள். 10-ஆவது வாங்கிக்கொள்ளுங்கள் பரவாயில்லை என்று சொன்னேன். கடைசியிலே அந்த 10ம் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகு தான் எனக்கு வருத்தமாக போய்விட்டது. 50, 20 ஆகி, 20, 10 ஆகி, 10-ம் இல்லை என்று சொல்லும்போது அதைக் கண்டித்து உங்கள் அலுவலகத்திற்கு முன்னால் உண்ணாவிரதம் இருப்பேன் என்று ஒரு கடிதம் எழுதினேன். அப்போது அவர் எனக்கு பதில் எழுதுகிறார். என்ன எழுதுகிறார் என்றால், அந்த சொஸைட்டிக்குத் தலைவராக இருக்கக்கூடியவருடைய அண்ணன் கோபர் கேஸ் போடுகிறேன் என்று சொல்லி கடன் வாங்கினார். அவர் அதை கொடுக்கவில்லை. அதனால் அது ஒரு டீஃபால்ட். கோபர்கேஸ் போட்டார்களே ஏன் ஐயா பணம் கட்டவில்லை என்று நான் கேட்டேன். இன்னும் போட்டே முடிக்கவில்லை போட்டு முடித்து அது வேலை செய்த பிறகு தான் கடனை கட்ட வேண்டும். இன்னும் அதை போட்டே முடிக்கவில்லை. வங்கியிலே இருக்கின்றவர்கள் கடன் கொடுக்க மறுக்கிறார்கள். டி.ஆர். எழுதுகிறார். வங்கியிலே லெட்டர் கொடுத்துவிட்டேன். மானியத்தை ஒதுக்கினால் கடன் கொடுக்கத் தயாராக இருக்கிறேன் என்று லெட்டர் கொடுத்துவிட்டேன், என்று, அதற்குப் பிறகு ஒரு குற்றச்சாட்டு. அவருடைய தம்பி அந்த சொஸைட்டிக்குத் தலைவராக இருக்கிறார். உங்களிடம் யார் வந்து சொன்னார்களோ, அவருடைய தம்பி அந்த சொஸைட்டிக்குத் தலைவராக இருக்கிறார். ரிசைன் பண்ணிவிட்டு போய்யா. அந்த ஜனங்களுக்கு நல்லது செய்வதற்காகத்தான் நீ தலைவராக இருப்பது. இல்லையென்றால் நீ தலைவராக இருந்து பிரயோசனம் இல்லை என்று சொன்னேன். அதற்குப் பிறகு தொகுதி எம்.எல்.ஏ. துணைத் தலைவரை வைத்து கேட்டேன்: இதுமாதிரி இவர்கள் கொடுக்கவில்லை என்று கேட்டேன். திட்டங்களை நீங்கள் போடுகிறீர்கள். நாம் கூட சொல்லுகிறோம். கட்சி வேற்றுமை இல்லாமல் சொல்கிறோம். ஆனாலும் கூட அது கொடுக்கப்படவில்லை. இது போன்று எத்தனையோ சம்பவங்கள் இருக்கின்றன. திட்டங்கள் தீட்டினாலும் மன மாற்றம் இல்லாத சூழ்நிலையில் அதிகாரிகள் எடுத்து நடத்துகின்ற காரியங்கள் நிச்சயமாக அந்த மக்களுக்குப் போய்ச் சேராது, இடைத்தரகர்கள் சுரண்டலிலிருந்து நீங்கள் குறிப்பிட்டது போல அந்த மக்களை பாதுகாத்தே தீரவேண்டும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.





உயிரோடு இருக்கின்ற நேரத்திலே தான் இப்படி கேலி பேசுகிறார்கள், கிண்டல் செய்கிறார்கள், ஒதுக்கி விடுகிறார்கள், ஏளனம் செய்கிறார்கள் என்றால், செத்ததற்கு பிறகாவது கொஞ்சம் மரியாதை கொடுக்க வேண்டும். எந்த சமுதாயத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும், யார் செத்துவிட்டாலும் நாம் என்ன பண்ணுகிறோம் தலையை குனிந்து அவர்களுக்கு கடைசி வணக்கம் செலுத்துகின்றோம். மரியாதை செலுத்துகின்றோம். ஆனால் எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் செத்துவிட்டால்--மெட்ராசிலே ஒரு சுடுகாடு, கிருஷ்ணாம்பேட்டை சுடுகாடு இருக்கிறது. அங்கே கொண்டுபோய் பிணத்தை வைத்து காத்திருக்க வேண்டும். அங்கே அவர்களுக்கு சம்பளம் கொடுப்பதில்லை. வாச்மேன்கள் 15 ரூபாய்க்கு கார்ப்பரேஷனுக்கு பில் போடுகிறார்கள். அவர்கள் 250 ரூபாய் கொடுத்தால்தான் அந்த பாடியை புதைப்பேன். 500 ரூபாய் கொடுத்தால்தான் எரிப்பேன் என்கிறார்கள். நீங்கள் அனாதை பிணத்திற்கு கொடுப்பதோ ரூ. 50. மேற்கொண்டு அவர்கள் 200 ரூபாய் சுடுகாட்டிற்கே அதிகமாக கொடுக்க வேண்டும். அதற்குப்

(இரவு 8-30)

பிறகு அவர்கள் எடுத்துக் கொண்டு போகிற செலவு வேறு இருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே, அந்தச் சுடுகாட்டிலே பணி

யாற்றுகிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கென்று ஒரு நிரந்தரச் சம்பளத்தைப் போட்டு விட்டு, அதற்குப் பிறகு அது மாதிரி கடைசி காலத்திலே அந்த பூதவுடலை, மரியாதைக்குரிய அந்த உடலை . . . (குறுக்கிடு)

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈமக் கிரியை காரியத்திற்கு அதிகமாகச செலவாகிறது என்று வேண்டுமானால் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்லலாம். அதற்காக கொண்டு போய் சுடுகாட்டிலே இருப்பவர்கள் பணம் கொடுத்தால்தான் எரிக்கிறார்கள் பணம் கொடுத்தால்தான் புதைக்கிறார்கள் என்று சொல்கிற நிலை இருக்கிற அந்தக் குற்றச்சாட்டு வேண்டியதில்லை. அவைக் குறிப்பில் அது இருக்கவேண்டுமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ராமலிங்கம் அவர்கள் சேலத்திலே இருக்கிறார். அவர் வேண்டுமானால் என் கூட வரட்டும்; நான் நிறைய சாவுகளுக்குப் போகிறேன், மெட்ராஸிலே ஒரு இடத்திற்கு வரட்டும். எம்.எல்.ஏ. வாக வரவேண்டாம். பார்டர் கட்டிய வேஷ்டியிலே வர வேண்டாம். இரண்டு பேரும் போவோம். தூரத்திலிருந்து பார்ப்போம். கிருஷ்ணாம்பேட்டை. சுடுகாடு தூரத்திலே இல்லை. பக்கத்திலேதான் இருக்கிறது. அங்கே போய் பார்க்கலாம். பாடியை வைத்துக்கொண்டு ரேட் பேசவில்லை என்று சொன்னால், என்ன தண்டனை சொன்னாலும் ஏற்றுக்கொள்ளத் தயார். இதை நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. அவனுக்கு நீங்கள் கொடுக்கிற சம்பளம் போதவில்லை.

அவன் டெம்பரவரி மாதிரி இருக்கிறான். அவனுக்கு செத்தால் தான்—அவன் வேண்டிக்கொண்டே இருப்பான்; நிறையச் சாவு வரவேண்டும், அதிலே எனக்கு வருமானம் வரட்டும் என்ற நிலை தான் அவனுக்கு. நாம் எல்லாம் வாழவேண்டும் என்று நினைப்போம். உடம்பு சரியாக இல்லாதவர்கள் சரியாகவேண்டும் என்று நினைப்போம். அவன் என்ன நினைப்பான் என்றால் இன்றைக்கு பாடி வந்தால்தான் நமக்கு பணம் வரும் என்று அவன் நினைப்பு. ஆகவே, எதற்காகச் சொல்கிறேன் என்றால், குற்றச்சாட்டு அல்ல. அவனுடைய வேலை அந்த மாதிரி. அவனுக்குரிய ஊதியம் கிடைத்து விட்டால் அவனை விழிப்புணர்வோடு, கண்





காணிப்போடு கவனிக்கலாம். இதுமாதிரி செய்யக்கூடாது என்று சொல்லலாம். ஆனால் 15 ரூபாய்க்குத்தான் பில் இருக்கிறது. இப்போது ஒரு மாதத்திற்கு முன்னாலே என் அண்ணனே செத்து விட்டார், அந்த நிலைமை தான்.

ஆகவே இது குற்றச்சாட்டாக அல்ல; இதை நடந்த உண்மையாகத் தான் சொல்கிறேன். இது தவிர்க்கப்பட வேண்டும். கிருஷ்ணாம்பேட்டை சுடுகாட்டைச் சுற்றியிருக்கிற ஸ்லம் ஏரியா, பாடிகள் அங்கே தான் போகின்றன. அதைத் தவிர்ப்பதற்குத் தான் நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக, மாவட்ட வாரியாக கடந்த மூன்றாண்டுகளில் எத்தனை ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு, இருபது அம்சத் திட்டத்தின் கீழ், சுய வேலைவாய்ப்பினை உருவாக்கியிருக்கிறீர்கள் என்று சொன்னால், 264 பேர். 264 பேர், அது எந்தெந்த மாவட்டங்களில் என்று குறிப்பு இல்லை. இது போதுமா? 264 பேருக்குத் தான் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், 20-அம்சத் திட்டத்தின் கீழ் நீங்கள் உதவி செய்து இருக்கிறீர்கள் என்று சொன்னால், மனுக்கள் வரவில்லையா? சொல்லுங்கள். மனுக்கள் வரவில்லை, ஆதி திராவிட மக்கள் மனுக்கள் செய்யவில்லை என்று சொல்லுங்கள்; அதனாலே அவர்களுக்குக் கொடுக்கவில்லை என்று சொல்லுங்கள்.

264 பேர் என்று சொல்வது ஒரு சாதாரண—மிகச் சாதாரண ஒரு கணக்கு என்பதை இந்தப் புத்தகத்திலே குறிப்பிடுகின்ற போது நிச்சயமாக நீங்களே வருத்தப்பட்டிருக்கவேண்டும் என்பதை இங்கே குறிப்பிடாமல் இருக்கமுடியாது. இன்றைக்கு பல சமூகத்தை சேர்ந்தவர்கள், பொய் ஜாதிச் சான்றிதழ்களை வாங்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதை எனக்கு முன்னாலே பேசிய சகோதரி மாண்புமிகு உறுப்பினர் பொன்னம்மாள் அவர்கள் கூட சுட்டிக்காட்டினார்கள். இது மிகவும் ஜாக்கிரதையாக நாம் கவனிக்கவேண்டிய ஒன்று.

உயர்நிலைக் குழு ஒன்று இந்த சமுதாயத்திற்கென்று நீங்கள் அமைத்திருப்பதாக இந்தக் கொள்கைக் குறிப்பிலே சொல்லி இருக்கிறீர்கள். முதல்வர் அவர்களுடைய தலைமையில்

[திருமதி டி. யசோதா] [1987 ஏப்ரல் 7

அமைக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்கிறீர்கள். அமைக்கப்பட்டிருக்கும் என்று நான் நினைக்கிறேன், ஏனென்றால், இதிலே குறித்து இருப்பதனாலே. அப்படியானால், நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். இந்தக் குழு எத்தனை முறை கூடியிருக்கிறது? அது எடுத்த நடவடிக்கைகள் என்ன? அதனுடைய தீர்மானங்கள் எதையும் நீங்கள் இதுகாறும் எங்களுக்குத் தெரிவிக்கவில்லையே. நாங்கள் ஆவலோடு காத்திருக்கிற அந்த உயர்மட்டக் குழுவைப் பற்றி நீங்கள் சட்டமன்றத்திலே இதுகாறும் அறிவிக்கவில்லையே—நாங்கள் இன்னும் அது அமைக்கப்படவில்லையோ என்று நினைத்துக்கொண்டிருக்கிறோம்.

நான் டெல்லியிலே கூட ஒரு கமிட்டி மீட்டிங்கிற்கு போய் இருந்தேன். எஸ்.ஸி., எஸ்.டி., ஆல்-இந்தியா கமிட்டிக்கு சென்றபோது அங்கே கூட நம்முடைய டைரக்டர் அவர்கள் வந்திருந்தார்கள். நான் அவரைக் கேட்டேன். கேட்டபோது அவர்கள் சொன்னார்கள்—இதுபோல் கமிட்டி, உயர் மட்டக் குழுவும், மாவட்ட நலக் குழுவும் போடப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால் நலக் குழுவை நீங்கள் போட்டு இருக்கிறீர்கள் என்று சொன்னால் அதை அறிவித்து இருக்கலாம். அதை அறிவிக்கவில்லை. அதைப்போல, உயர் மட்டக் கண்காணிப்புக் குழு கூட நீங்கள் இட ஒதுக்கீடு சம்பந்தமாக கவனிப்பதாகச் சொல்கிறீர்கள். அந்த கவனிப்பு எந்த அளவுக்கு இருந்திருக்கிறது என்பதைப் பற்றிக் கூட இன்றைய வரையிலும் தெரியவில்லை.

கலப்புத் திருமணத்தின் மூலமாகப் பெறுகிற குழந்தைகளுக்கு எம்.பி.பி.எஸ். படிப்பில் 12 சீட்டுகள், சித்த மருத்துவ படிப்பில் 2 சீட்டுகள், இந்திய மருத்துவப் படிப்பிலும், பார்மசியிலும் ஒவ்வொரு இடங்கள், எஞ்சினீயரிங் கல்லூரிகளில் 5 இடங்கள் என்று கொடுக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இது கூட ஒரு நிறைவான சூழ்நிலையை உருவாக்குவதாக இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் அரசு மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படுகிற தாழ்த்தப்பட்ட மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில் கூட அவர்களிடம்



1987 ஏப்ரல் 7] [திருமதி டி. யசோதா]

நிர்வாகங்கள் ரூ. 4,000 அல்லது ரூ. 5,000 நன்கொடை என்று கட்டாயப்படுத்தி வாங்குவதாகக் கேள்விப்படுகிறேன். இதை அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் மூலமாகக் கேட்டுக் கொண்டு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைக்காக நிலம் கொடுக்கப்படுகிறது. கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில் ஹரிஜனங்களுக்கு 3½ சென்ட் நிலம் ஒதுக்கீடு செய்கிறார்கள். சென்னையைப் பொறுத்தவரையில் சுமார் 750 சதுர அடி ஒதுக்கி அதற்கு மட்டும்தான் பட்டா கொடுக்கிறார்கள். ஆனால் இதில் உள்ள சங்கடம் என்னவென்றால் சென்னையில் உள்ள எம்.எம்.டி.ஏ., மற்றும் மாநகராட்சி ஒரு பிளானை அனுமதிக்க வேண்டுமென்றால் அது ½ கிரவுண்டுக்கு அதிகமாக இருந்தால் தான் பிளானை அப்ரூவ் பண்ணுகிறார்கள். இந்த நிலையில் அரசாங்கத்திலிருந்து 750 சதுர அடி மட்டும் கொடுத்தால் ஏழை எளிய ஹரிஜன மக்கள் எப்படி வீடு கட்டுவதற்கு பிளான் போட முடியும் என்று கேட்க விரும்புகிறேன். எனவே, அரசாங்கம் இந்த வகையில் ஒரு திருத்தத்தையாவது கொண்டு வர வேண்டும். இல்லையென்றால் 750 சதுர அடி கொடுக்காமல் சென்னையிலும் அரை கிரவுண்டுக்கு மேற்பட்ட இடத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு கொடுப்பது 750 சதுர அடி எம்.எம்.டி.ஏ., மற்றும் கார்ப்பரேஷன் இதற்குள் பிளான் போட்டால் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். இப்படி இரண்டுக்கும் ஒரு முரண்பாடு இருக்கிறது. ஆகவே 750 சதுர அடியில் கூட வீடு கட்டிக் கொள்ளலாம் என்ற திருத்தத்தையாவது கொண்டு வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மற்றும் ஐ.எப்.எஸ்., போன்ற உயர்ந்த கல்வித் தேர்வின் வெற்றி வாய்ப்பைப் பெறுவதற்காக அரசு தேர்வுக்கு முன் பயிற்சி அளித்து வருகிறது. அதுகூட 1966 ஆம் ஆண்டு காங்கிரஸ் அரசாங்கம் ஆட்சியில் இங்கே இருந்தபோது துவக்கப்பட்ட ஒன்றாகும். அப்படி இருந்தாலும் அதுகூட இன்றைக்குச் சரியாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அட்வகேட் விஷயத்தில் தான் சிறப்பாக இருக்கிறது என்று எண்ணுகிறேன். அப்படி

[திருமதி டி. யசோதா] [1987 ஏப்ரல் 7

இல்லாமல் ஹரிஜன மக்கள் எல்லாத் துறைகளிலும் சிறப்பாக விளங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நேரம் அதிகமில்லாத காரணத்தால் இரண்டு மூன்று விவரங்களை மட்டும் சொல்லி விடை பெற விரும்புகிறேன். திருவல்லிக்கேணி பகுதியில் 99-வது வட்டத்தில் துலுக்காணம் தோட்டத்தில ஒரு 60 ஆதி திராவிடர்களின் குடும்பங்கள் குடிசைகள் போட்டு வாழ்ந்து வருகிறார்கள். மின்வசதி போன்ற எதுவுமில்லை. வீட்டில் தீ பிடித்தால் கூட ஒருவர் கூட வெளியே வர முடியாத அளவுக்கு நெருக்கடியான இடத்தில் அவர்கள் வசித்து வருகிறார்கள். ஆகவே அவர்களுக்கு—துலுக்காணம் தோட்டத்தில் அவர்கள் ஏற்கெனவே பட்டா வைத்துக் கொண்டிருக்கிறார்கள்—ஹரிஜன வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சுடுகாடு ஒன்று என்னுடைய தொகுதியில் இருந்தது. அதைத் தனியார் அபகரித்துக் கொண்டிருக்கிறார்கள். உங்களுக்கே தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன். ஸ்ரீ ராமச்சந்திரா மெடிகல் ரிசர்ச் நிறுவனம் என்று சொல்லப் படும் ஒரு நிறுவனம் என்னுடைய தொகுதியான ஸ்ரீபெரும்புதூர் தொகுதிக்குள் இருக்கிறது. அய்யப்பன்தாங்கல் என்ற ஊருக்குப் பக்கத்தில் பள்ளி அக்ரகாரம் என்ற இடத்தில் இருக்கும் ஹரிஜன மக்களுக்குச் சொந்தமான சுடுகாடு ஒன்று அங்கே இருந்தது. ஆனால் இன்றைய தினம் அந்த நிறுவனம் அதைச் சுற்றி காம்பவுண்டு சுவர் போட்டுவிட்டது. ஹரிஜன மக்கள் சுடுகாட்டுக்குப் போவதென்றால் ஒரு இடத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அது முட்டிக்கு மேல் தண்ணீர் தேங்குகிற இடமாக இருக்கிறது. ஹரிஜன சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் இறந்தால் அவர்கள் அங்கே தண்ணீரை இறைத்துவிட்டுதான் அடக்கம் பண்ண வேண்டியிருக்கிறது. ஏற்கெனவே 3 அடி தண்ணீர் தேங்கியிருக்கிறது. அதன் காரணமாக இப்போது மேலும் 3 அடிக்கு ஆழமாகத் தோண்டித் தான் பாடியை புதைக்க வேண்டியிருக்கிறது. ஏற்கெனவே தண்ணீர் முட்டிக்கு மேல் இருப்பதால் தோண்டத் தோண்ட



1987 ஏப்ரல் 7] [திருமதி டி. யசோதா]

தண்ணீர்தான் வந்து கொண்டிருக்கிறது. எனவே செத்த பிறகாவது ஒரு கௌரவமான முறையில் பிணத்தைப் புதைப்பதற்கு ஏதுவாக ஒரு நல்ல இடத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒன்று அந்த இடத்தை மாற்றி ஹரிஜனங்களுக்கு நல்லதொரு இடத்தைக் கொடுங்கள். இல்லையென்றால் அந்த மெடிகல் காலேஜின் சொந்தக்காரர் மிகவும் வசதியானவர். எனவே அந்த இடத்தையாவது மேடாக ஆக்கிக் கொடுக்கச் சொல்லுங்கள். தண்ணீரை அப்புறப்படுத்திவிட்டு அந்த இடத்தையாவது மேடாக ஆக்கிக் கொடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். பெட்ராலிலிருந்து போரூருக்குப் பக்கத்தில் அந்த இடம் இருக்கிறது.

அடுத்து ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் 42 சத்திரங்கள் ஜாதியின் பேரால் இருக்கின்றன. 1980 ஆம் ஆண்டு நான் தேர்தலில் நின்ற காலத்திலிருந்து இதைப் பேசி வருகிறேன். என்ன மரியாதை கொடுக்கிறீர்கள் என்று எனக்கு புரியவில்லை. இதுவரை அங்கே ஒரு சமுதாய கூடம் ஹரிஜன மக்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படவில்லை. கட்டிக் கொடுக்க எவ்வளவோ முயற்சி செய்தும் இதுவரை முடியவில்லை. திரு. சீனிவாசன் என்ற கலெக்டர் ஒருவர் ரூ. 5 லட்சம் என்.ஆர்.இ.பி. திட்டத்தில் செலவு செய்து கட்டித் தருகிறேன் என்றார்கள். பிறகு நடராஜ் என்ற டைரக்டர் வந்தார். அவர் ஹரிஜன் நலத் துறை மூலம் கட்டிக் கொடுக்கிறேன் என்றார். அதுவும் முடியவில்லை. அதன் பிறகு கட்டிடம் கட்ட 60 ஆயிரம் செலவழித்தும் முடியவில்லை. அங்கே சீயக்காய் பாறை கீழே இருப்பதால் நல்ல கட்டிடம் கட்ட முடியாத நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இரவு 8.40)

ஆகவே, அரிசன மக்கள் திருமணங்கள், பொது காரியங்கள், வீடுகளில் உள்ள சந்தோஷ காரியங்கள் ஆகியவற்றை நடத்துவதற்கென்று அரசாங்கத்தின் மூலமாக, தாலுக்கா தலைநகரமாக உள்ள காரணத்தால், நீங்கள் இந்த முறையாவது உருவாக்குவதற்கு வழி காண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் பட்ஜெட்டில் பேசிய மாதிரி, பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தலில் எஸ்.சி., எஸ்.டி.க்கு ஒரு ஒதுக்கீடு செய்வதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு இந்த ஆதி திராவிடர் நலத் துறை முன்வர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாக 1986-87-லே 'தாட்கோ' திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்காக சனவரி மாதம் 31 ஆம் தேதி வரைக்கும் ஒதுக்கவில்லை. 1986-87-ல் சனவரி மாதம் வரையில் நிதி ஒதுக்கவில்லை என்ற தகவல் உண்மையாக இருக்குமானால் எப்படி சுறுசுறுப்பாக வீடுகளைக் கட்டியிருக்க முடியும் என்பதை இங்கே நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல டெபுடி டைரக்டர்கள் இரண்டு பேர், டெபுடி டைரக்டர் (மானிட்டரிங்), டெபுடி டைரக்டர் (எவ்வால்யூவேஷன்) என்று மதிப்பீடு செய்வதற்கு என்றும், திட்டம் இடுவதற்கு என்றும், மேற்பார்வை பார்ப்பதற்கு என்றும் இரண்டு டெபுடி டைரக்டர்கள் இருக்கிறார்கள். அந்த இரண்டு பேரும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? அவர்களுடைய பணியைப் பற்றி குறைந்தபட்சம் ஒரு அறிக்கையாவது இங்கே சமர்ப்பிக்க இந்த அரசு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், அவர்களுடைய பணி சிறப்பாக இருக்குமானால் ஓரளவிற்கு இந்த நலத் துறையின் பணிகள் சிறப்பாக இருக்கக் கூடிய வாய்ப்பு இருக்கும் என்பதைக் கூறி இறுதியாக ஒன்றை மட்டும் சொல்லி விடை பெறுகிறேன்.

"Monitoring without evaluation or evaluation without Monitoring is like one eye. In the absence of both it is totally blind" என்பதை மட்டும் கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எவ்வளவு நேரம் ஆகும்? அதிக நேரம் வேண்டும் என்றால் நாளைக்கு வினாக்கள்-விடைகள நேரத்தை கைவிட்டு விட்டு அமைச்சருடைய பதிலை வைத்துக் கொள்ளலாம்.





***மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே முடித்துவிடலாம். இன்று ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலன் குறித்த மானியக் கோரிக்கையின் மீது கிட்டத்தட்ட 18 உறுப்பினர்கள் கலந்து கொண்டு தங்கள் மேலான கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சா. ஜெயச்சந்திரன் அவர்களும் தமிழ்மணி அவர்கள், திரு. மா. மணிமாறன் அவர்களும், திரு. ம. நா. இராமஜெயம் அவர்களும், திரு. கு. தமிழரசன் அவர்களும், திரு. கோ. வீரய்யன் அவர்களும், திரு. சோ. கவிதீர்த்தன் அவர்களும், திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் அவர்களும், திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்களும், திரு. வி. ஆர். திருஞானம் அவர்களும், திரு. தா. சாமிக்கண்ணு அவர்களும், திரு. எம். செல்லமுத்து அவர்களும், திரு. கே. பாலாஜி அவர்களும், திரு. க. பாரமலை அவர்களும், திரு. த. பழனி அவர்களும், திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்களும், திரு. செங்கம் அ. ஆறுமுகம் அவர்களும் காங்கிரஸ் துணைத் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா அவர்களும் சேர்ந்து கிட்டத்தட்ட 18 பேர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இன்று காலை 11-38 மணியளவில் ஆரம்பித்து இப்போது கிட்டத்தட்ட இரவு 8-43 மணியளவில் இங்கே முடிக்கும் சூழ்நிலையில் கிட்டத்தட்ட ஏழரை எட்டு மணி நேரம் இந்த மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல முறையிலே பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் இந்த நாளை சிறப்பான நாளாக இந்தியா முழுவதும் கொண்டாடிக் கொண்டிருக்கிற நாளாக இருக்கிறது. இன்று இராம நவமி என்று இராமபிரான் பிறந்த நாளாக இன்று இந்தியாவிலே கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி கொண்டாடிக் கொண்டிருக்கும் நேரத்தில்தான் பெரும்பாலும் ஆதி திராவிடர் நலத்துறையில் சிறப்பாக பேசிய அத்தனை உறுப்பினர்களும் சிறப்பாக கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

மரியாதைக்குரிய மகாத்மா காந்தியடிகள் தன்னுடைய வாழ்நாளில் ஒன்றை நினைத்தார்கள். அவர் நினைத்ததைச் சொல்லுகிறபோது, "இந்தியாவிலே எப்போது இராம ராஜ்யம் அமையுமோ அப்போதுதான் இந்தியாவிற்கு உண்மையான சுதந்திரம் கிடைத்ததாக ஆகும், கிராமங்கள் முன்னேறும்" என்றார்கள். அதைப் போலவேதான் இராமபிரான் பிறந்த நாளில் மரியாதைக்குரிய

மாண்புமிகு இராமச்சந்திரன் ஆட்சியில் இன்று ஆதிதிராவிடர் மக்களுக்காக நல்ல பல திட்டங்களை நீட்டுவதற்கு இந்த நாளில் ஒரு எடுத்துக்காட்டாக மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். இங்கே பேசுகின்றபோது அத்தனை கருத்துக்களுக்கும் பதில் சொல்ல வேண்டுமானால் நேரம் போதாது என்ற சூழ்நிலை. இருந்தாலும் அதிகமான மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது ஆதி திராவிட மக்களுக்கு நிலம் வேண்டும் என்பது. அவர்களுக்கு 3 செண்ட் நிலமாவது கொடுக்க வேண்டுமென்று நிறைய உறுப்பினர்கள் பேசினார்கள். அது சம்பந்தமாக நீதி மன்றத்திலே வழக்கு இருப்பதாகவும் சொன்னார்கள். இது குறித்து 540 வழக்குகள் நிலுவையில் இருந்து கொண்டு இருக்கின்றன என்பதை உறுப்பினர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி 25,000 ஆதி திராவிட மக்களுக்கு 3 செண்ட் நிலம் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

அடுத்து, அதிகமான உறுப்பினர்கள் பி.சி.ஆர். கோர்ட் பற்றி குறிப்பிட்டு, குடி உரிமைச் சட்டத்தின் கீழ் ஆதி திராவிட மக்களுக்கு போதிய பாதுகாப்பு அளிக்கப்படவில்லை என்று ஆளும் கட்சியிலே கூட சில பேர் சொன்னார்கள். குறைவாகத்தான் வழக்குகள் போட்டோம், கொஞ்ச வழக்குகள் தான் நிலுவையிலே இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். நிறைய வழக்குகளில் இரு சாராரும் சேர்ந்து பேசி தீர்த்துக் கொள்கிற அளவில் வழக்குகள் முடிகின்ற சூழ்நிலை இருக்கின்றது. இது சம்பந்தமாக 984 வழக்குகள் நிலுவையிலே இருந்துகொண்டு இருக்கின்றன. நான்கு மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்து இதற்கான விசேட நீதிமன்றம் அமைத்து இருக்கின்றோம். தஞ்சாவூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய நான்கு மாவட்டங்களில் இந்த நீதிமன்றங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தீண்டாமையைப் பொறுத்தவரை இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் தீண்டாமையே இல்லையென்ற அளவில் செய்ய பல திட்டங்கள் வாயிலாக, குறிப்பாக ஜனவரி 24 முதல் 30 வரை தீண்டாமை ஒழிப்பு வாரமாக கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் செங்கம் ஆறுமுகம் சிரித்துக்கொண்டே வேடிக்கையாக சொன்னார்கள். தாலுகா அளவிலே இருக்கின்ற திட்டங்களை ஒன்றிய அளவிலே



வைக்கவேண்டுமென்று. இன்றைக்கு தாலுகா அளவிலே இருப்பவற்றை ஒன்றிய அளவிலே வைத்துக் கொள்ளுங்கள் என்று ஆதி திராவிட தனி வட்டாட்சியருக்கு உத்தரவு போடப்பட்டு இருக்கிறது. அப்படி இந்தத் திட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஒட்டுமொத்தமாக சொன்ன ஒரே ஒரு குற்றச்சாட்டு—அதை குற்றச்சாட்டாக நான் எடுத்துக் கொள்ளவில்லை—ஒரு கருத்தாகச் சொன்னார்கள், எடுத்துக் காட்டினார்கள். 'ஸ்டேட் வெல்பேர் கமிட்டி' என்ற மாநில குழுவும், 'டிஸ்டிரிக்ட் வெல்பேர் கமிட்டி' என்ற மாவட்ட ஆதி திராவிட நலக் குழுவும் இங்கே போடவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு நான் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த அரசு ஸ்டேட் வெல்பேர் கமிட்டியை போடுவதற்குத் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. போன ஆண்டு கூட நான் அந்த மாவட்ட ஆதி திராவிட நல குழுக்கள் போடப்படும் என்று சொன்னதாகச் சொன்னார்கள். போன ஆண்டு, கட்டாயம் இந்தக் குழுக்களை போடுவோம் என்று சொன்னோம். அதே போல 9 மாவட்டங்களில் 1986 ஆம் ஆண்டு இந்தக் குழு போடப்பட்டு இருக்கிறது. செங்கல்பட்டு, தஞ்சாவூர், மதுரை, திருச்சி, தென் ஆற்காடு, திருநெல்வேலி கட்டபொம்மன், கோயமுத்தூர், தர்மபுரி மற்றும் நீலகிரி ஆகிய ஒன்பது மாவட்டங்களில் இந்தக் கமிட்டி செயலாற்றிக் கொண்டிருக்கின்றது.

மாண்புமிகு உறுப்பினர் தமிழ்மணி, மாண்புமிகு உறுப்பினர்—தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. மணிமாறன் ஆகியவர்கள் இந்தக் கமிட்டியைப் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் பகுதிக்கும் இந்தக் கமிட்டி போடப்பட்டிருக்கிறது. தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் அவர்கள் கூடக் கேட்டார்கள். அவர்கள் மாவட்டத்திலும் அந்தக் கமிட்டி போடப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே பர்ட்டிகுலர்ஸ் கேட்டிருக்கிறோம், வந்த பிறகு படிப்படியாக போடப்படும்.

அதேபோல, 'ஸ்டேட் கமிட்டி' என்கின்ற அந்த மாநிலக் குழுவும் உடனே செயல்பட அரசு நடவடிக்கை எடுக்கும்.

[திரு. எ. அருணாசலம்] [1987 ஏப்ரல் 7

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் சமுதாயக் கூடங்கள் ஆதி திராவிட மக்களுக்கு வேண்டுமென்று சொன்னார்கள். ஒரு ஆண்டுக்கு ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கி திருமண கூடம் கட்டுவதற்கும், ஆதி திராவிட மக்கள் சமுதாயத்திற்குப் பயன்படுவதற்கு கூடங்கள் கட்டுவதற்கும், 3 இடங்களில் கட்டுவதற்கு போன ஆண்டு உத்தரவு போடப்பட்டது. இந்த வருடமும் இதற்காக ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பாகுபடுத்தி 3, 4 இடங்களில் இத்தகைய சமுதாயக் கூடங்கள் கட்டப்படும்.

(இரவு 8-50)

அவருடைய மாவட்டத்தைப் பற்றிச் சொல்கிறபோது, அங்கே ஆதி திராவிட நலத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் சரியாகச் செயல்படவில்லை என்றும், அங்கே இருக்கிற விடுதிகள் ஒழுங்காக நிர்வகிக்கப்படவில்லை என்றும் சொன்னார்கள். அங்கே நான் சுற்றுப்பயணம் செய்தபோது, அந்த அதிகாரிகள் ஒழுங்காகச் செயல்படவில்லை என்று எழுதி, செங்கற்பட்டு ஆதி திராவிட நல அதிகாரியை மாற்ற உத்தரவு போட்டிருக்கிறோம். அங்கே அந்த சமுதாயத்திற்குப் பயன்படுகிறவர்களை அதிகாரியாகப் போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரமலை அவர்கள் சொல்கிறபோது அந்த சமுதாயத்திலே இருக்கிறவர்களுக்கு உதவும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். சென்டருக்கு இடத்தை ஒதுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதுவும் 4—4—1987 அன்று ஹவுசிங் போர்ட் மூலமாக உத்தரவு போடப்பட்டு ஒரு நல்ல கட்டிடம் அந்த சென்டருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒட்டுமொத்தமாக எல்லா உறுப்பினர்களும் சொன்ன கருத்து என்னவென்றால், அவர்களுக்கு ஒதுக்கப்படுகிற 18 சதவிகிதம் ஒழுங்காகச் செயல்படுகிறதா என்பதைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில் அதற்கு துணைத் தலைவராக ஆதி திராவிட நலத் துறை அமைச்சரும், உறுப்பினர் செயலராக மாநில ஆதி திராவிடர் நல இயக்குநரும், சமூக நலத்துறை செயலர் முதலியோர் உறுப்பினராகவும் இருந்து, அதைக் கண்காணித்து, எங்கெங்கெல்லாம் அந்த சதவிகிதம் ஒதுக்கப்படவில்லையோ



1987 ஏப்ரல் 7] [திரு. எ. அருணாசலம்]

அதை உன்னிப்பாக கவனித்து, அரசு செயலாற்றி வருகிறது. அப்படி எந்த நிறுவனத்திலாவது இல்லை என்றால் உடனடியாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பல கோரிக்கைகளைச் சொல்லுகிறபோது இங்கே ஒன்றைச் சொன்னார்கள் டாக்டர் அம்பேத்கார் படத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே தான் சட்டமன்றத்திலே வைத்தார்கள் என்று சொல்லி, பாராட்டி பேசினார்கள். அதைப்போல இன்னும் ஒன்று, மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகின்ற நேரத்தில், டாக்டர் அம்பேத்கார் அவர்களின் பிறந்த நாள் வருகிற ஏப்ரல் 14 ஆம் தேதி வருகிறது என்றும், அன்று அவர் சிலைக்கு மாலை அரசுத் துறை மூலமாக அணிவிக்க வேண்டும் என்றும், அதற்கு உத்தரவு வழங்க வேண்டுமென்றும் சில உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மாண்புமிகு முதல்வரவர்கள் செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஓர் உத்தரவை அறிவிக்கச் சொல்லி என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். வருகிற 14 ஆம் தேதி டாக்டர் அம்பேத்கார் சிலைக்கு அரசு சார்பில் மாலை அணிவிக்கப்படும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைப் போல பல கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் இந்த மானியத்தைப் பொறுத்தவரையில், நிதி மிகவும் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று எடுத்துச் சொன்னார்கள். அதிலே குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இந்த அரசு இவ்வளவு குறைவாக நிதி ஒதுக்கியிருக்கிறதே, என்ன செயலாற்றப் போகிறது என்று சொன்னார்கள். நான் இங்கே ஒரு புள்ளி விவரத்தை அவருக்கு எடுத்துக் காட்டிச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காலத்தில், அதாவது அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், 1975-76-ல் 8 கோடியே 48 இலட்சம்தான் ஒதுக்கப்பட்டது. அது கிட்டத்தட்ட 10 கோடியே 90 இலட்சமாக 1977-78-ல் இருந்தது. புரட்சித் தலைவரவர்கள் பொறுப்பு ஏற்ற பின்னாலே அது படிப்படியாக 13 கோடியே 67 இலட்சம் ரூபாயிலிருந்து இப்போது 51 கோடியே 10 இலட்சத்து 99 ஆயிரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் ஆதி

[திரு. எ. அருணாசலம்] [1987 ஏப்ரல் 7

திராவிட மக்களுக்காக பல துறைகள் மூலமாக, இந்த மானியக் கோரிக்கை மட்டுமல்லாமல், ஸ்பெஷல் காம்பனன்ட் பிளான் என்ற திட்டத்தின் வாயிலாக இந்த ஆண்டு 132 கோடியே 69 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய் செலவிலே திட்டங்கள் தீட்டப் பட்டு, எல்லாத் துறைகளின் மூலமாக இந்த நிதி ஒதுக்கப்பட்டு, சிறப்பாக செயலாற்ற இருக்கிறது என்பதை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைய கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்ல வேண்டுமென்றால் நேரம் அதிகமாகும். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இங்கே அந்த மக்களுக்கு பல சலுகைகளை என் வாயிலாக அறிவிக்கச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இவ்வாண்டு 15 ஆதி திராவிடர் ஹாஸ்டல்கள் தொடங்குவதற்கு 11.06 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது தொடங்கப்பட்ட இருக்கிறது. அதிலே 750 பேர்கள் பயன் அடைகின்றார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல, 200-க்கு மேற்பட்ட மாணவர்கள் விடுதியிலே தங்கிப் படிக்கின்ற அந்த மாணவர்கள் 16 விடுதிகளுக்கு ஓர் ஆண்டுக்கு 2.21 லட்சம் ரூபாய் செலவில் எரி வாயு அடுப்புகள் காஸ் டைப் அடுப்பு என்று சொல்லப்படும் அடுப்புகள், சமைப்பதற்கு வழங்கப்படும் என்பதை சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்லாமல் அந்த மாணவர் விடுதிகளிலே படிக்கின்றவர்களுக்கு அங்கே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உணவுக்கு நிதி ஒதுக்கிய போது அதிகமாக உயர்த்தியதன் காரணமாக அங்கே காலையிலே டிபன் போடுகின்ற சூழ்நிலையில் அரைக்கின்றதற்கு அந்த மெசின் வேண்டுமென்று அதற்காக புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்டு 48 ஆயிரம் ரூபாய் செலவிலே, மாவரைக்கும் இயந்திரம், 9 மாணவர்கள் விடுதிகளுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. படிப்படியாக எல்லா விடுதிகளுக்கும் வழங்கப்படும் என்பதை இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், 26 கல்லூரி மாணவர்-மாணவியர் விடுதிகளில் தங்கி படிக்கும் 1,852 மாணவர்களுக்கு அறைக் கலன்கள் அல்லது டேபிள், ஸ்டூல்கள் போன்றவை படிப்பதற்கு வசதியாக அவர்களுக்கு 8.93 இலட்சம் ரூபாய் செலவிலே வழங்கப்படும்.



1987 ஏப்ரல் 7] [திரு. எ. அருணாசலம்]

அது மட்டுமல்லாமல் அங்கே துப்புரவு தொழிலாளர்களைப் பற்றி இங்கே மாண்புமிகு திருமதி யசோதா அவர்கள் சொன்னார்கள். இந்த அரசு அவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்பதற்காகத்தான் புரட்சித் தலைவர் அவர்கள் முன்னுரிமை வழங்குகிற திட்டத்தின் வாயிலாக, அவர் பொறுப்பேற்ற பின்னாலேதான், துப்புரவு பணியிலே ஈடுபட்டிருக்கிற ஆதிதிராவிடர்களுக்கும் ஏனையோருக்கும் அவர்களுடைய குழந்தைகள் படிப்பிலே நாட்டம் செலுத்த 650 பிள்ளைகளுக்கு, இவ்வாண்டு 7.37 லட்சம் ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்படும் என்று இங்கே அறிவித்து இருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்லாமல், போன ஆண்டு எந்த அரசும் செய்யாத ஒன்றை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் செய்திருக்கிறார்கள். ஆதி திராவிடர் பள்ளிக்கூடங்களினை அப்கிரேட் என்கின்ற அளவில் அந்த பள்ளிக்கூடங்களை உயர்த்தியிருக்கிறார்கள். அந்த பள்ளிக்கூடங்களை உயர்த்துவதற்கு 27 பள்ளிக்கூடங்களை போன ஆண்டு 1986-87ல் கிட்டத்தட்ட 40 இலட்சம் ரூபாயிலே உயர்த்திய பெருமை புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்குத்தான் உண்டு. அதையே பின்பற்றி இந்த ஆண்டு 5 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக ஆக்கவும், 6 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்கவும், 3 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கவும் உயர்த்த கிட்டத்தட்ட 30.66 லட்ச ரூபாயை இங்கே ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் பள்ளிகளுக்கு மாச் சாமான்கள், விஞ்ஞான கருவிகள் போன்றவற்றை வழங்க அவரைப் பார்த்து மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் சொன்னார்கள். ஆதி திராவிடர் பள்ளிக்கூடத்தைப் பொறுத்தவரையில் அங்கே அவர்களுக்கு உட்காருவதற்கு பெஞ்சு இல்லை. ஸ்டூல்ஸ் இல்லை என்றுகூட பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதன் வாயிலாக போன ஆண்டு 50 லட்சம் ரூபாய் ஒதுக்கி இந்த அரசு செயலாற்றியது. அதேபோல் இந்த ஆண்டும் 50 லட்சம் ரூபாய் செலவிடும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எத்தனை பேர்களும், பள்ளிக் கட்டடங்கள் இருக்கின்றன. ஆனால் அத்தனை கட்டடங்களும் வாடகை கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே அந்த தனியார் கட்டடங்

[திரு. எ. அருணாசலம்] [1987 ஏப்ரல் 7

கள் அத்தனையையும் மாற்றம் செய்ய, சொந்த கட்டடங்களாக கட்ட வேண்டும் என்று சொன்னார்கள். அதன் வாயிலாக கிட்டத்தட்ட ஒரு கோடியே 41 லட்சம் ரூபாயில் கட்டடங்கள் கட்டுவதற்கும் தற்போதுள்ள பள்ளிக் கட்டடங்களைப் பழுது பார்க்கவும் இந்த அரசு நிதி ஒதுக்கியிருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோலவே விவசாய பெருங்குடி மக்களைப் பொறுத்த வரையில், இந்த அரசு அந்த மக்களுக்கு என்ன செய்து கொண்டிருக்கிறது என்பது பற்றியும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அதிலே அவர்களுக்கு கறவை மாடுகளை வழங்குகிறது என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கறவை மாடுகள் இவ்வாண்டு ரூ. 35.22 லட்சம் மானிய ஒதுக்கீடு செய்து மக்களுக்கு வழங்கப்படும் என்பதை இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்தப்போலவே காலனி பகுதிகளில் இருக்கின்ற ஆதி திராவிடர் மக்களுக்கு குடிநீர் முக்கியமாக வேண்டுமென்கின்ற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு எல்லா மக்களுக்கும் குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்க இவ்வாண்டு 26.16 லட்சம் ரூபாய் செலவிடப்படும் என்பதை இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், ஆதி திராவிடர்கள் குடியிருப்புக்கு மயானப் பாதை அமைப்பதற்கும், இடுகாட்டு சாலை அமைப்பதற்கும், பாதைகள் அமைப்பதற்கும், ரூ. 25.96 இலட்சம் செலவிடப்படும் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆதி திராவிடர்களுக்கு விவசாய பாசன கிணறுகள், அந்த மக்கள் விவசாயம் செய்வதற்கு உழவு மாடுகள் வழங்குவதற்கான வகையில் மானிய தொகையாக இவ்வாண்டு 10.3 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(இரவு 9.00)

அதைப்போல வீட்டு மனைப் பட்டாக்கள் பற்றி இங்கே பல மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். போன ஆண்டும் அதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சிறப்பான முறையில் இத்திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டும் 1.4



1987 ஏப்ரல் 7] [திரு. எ. அருணாசலம்]

கோடி ரூபாய் செலவில் 18 ஆயிரம் ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்படும். அதேபோல 160 ஆதி திராவிடர் குடியிருப்புகளைப் பொறுத்தவரையில் ஓலைக் குடிசையில் வாழ்பவர்களுக்கும் மின்சார இணைப்பை ஏற்படுத்தித் தர ஆவன செய்ய வேண்டுமென்று இங்கே பல மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதன்படி இந்த ஆண்டு 160 குடியிருப்புகளிலுள்ள 10 ஆயிரம் குடிசைகளுக்கும் மின் விளக்கு வசதி செய்து தரப்படும்.

அடுத்து, இந்த அரசு பல திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகிறது. குறிப்பாக இந்த ஆண்டைப் பொறுத்த வரையில் சிறப்பு மத்திய நிதியின் கீழ் கிட்டத்தட்ட 14 கோடி ரூபாய் செலவிலே பல திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இங்கே பேசிய அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களும் தெளிவாக சொன்னார்கள். போன ஆண்டு ஆர்.எல்.இ.ஜி.பி. மற்றும் என்.ஆர்.இ.பி போன்ற திட்டங்களின் மூலம் இந்த அரசு நிறைய வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறது. இந்த ஆண்டு 50,300 வீடுகள் கட்டப்படும். அதுபோல இந்த ஆண்டு தாட்கோ மூலமாக 5,000 வீடுகள் 3.01 கோடி ரூபாய் செலவிலே கட்டப்படும்.

அடுத்து, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது பழங்குடி மக்களின் நன்மைக்காக அக்கறையோடு பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். ஒட்டுமொத்தமாக அந்தக் கருத்துக்களை எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தானாகவே அக்கறையோடு ஏற்றுக்கொண்டு செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் இரண்டு பழங்குடியினர் ஆரம்பப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படும்.

அடுத்து, உண்டு உறைவிட பள்ளிக்கூடங்களைப் பொறுத்த வரையில் 500 மாணவர்கள் பயன்படும் வகையில் 10 G.T.R. பள்ளி ரூபாய் 12 இலட்சம் செலவில் அமைக்கப்படும். அதுபோல 56,32,000 ரூபாய் செலவில் தென்னாற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள கோமுகியில் உண்டு உறைவிட பள்ளிக்கூட கட்டிடம் கட்ட வசதியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

[திரு. எ. அருணாசலம்] [1987 ஏப்ரல் 7

அடுத்தபடியாக, பழங்குடியினர் மேம்பாட்டு துணைத் திட்டத்தின் மூலம் ரூ. 9,73,05,000 ரூபாய் செலவிலே அந்த மக்களுக்கு பயன்படும் வகையில் பல திட்டங்களை இந்த அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோல இந்த ஆண்டு பழங்குடியினருக்காக 94 வீடுகள் 6.58 லட்சம் ரூபாய் செலவிலே கட்டப்படும் என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே எடுத்துத் தெரிவித்திருக்கின்ற அத்தனை உறுப்பினர்களின் கருத்துக்களும் இந்தத் துறையின் நலத்தை கருதி தெரிவிக்கப்பட்ட கருத்துக்களாக ஏற்றுக் கொள்ளப்படும். இதற்காக அதிக நேரம் ஒதுக்கப்பட்டது. அத்தனை உறுப்பினர்களும் இந்த பழங்குடியினர் மற்றும் ஆதி திராவிடர் முதலியோர் நலன் குறித்த மானியக் கோரிக்கையின் மீது தங்கள் அனுபவங்களை எல்லாம் அன்போடும், பாசத்தோடும் எடுத்துக் காட்டினார்கள். அந்த வகையில் இங்கே பேசிய அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் இந்த துறையின் சார்பாக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்லாமல் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இந்த மானியக் கோரிக்கைக்காக ஒரு நாள் முழுவதையும் ஒதுக்கித் தந்தார்கள். அந்த வகையில் அவர்களும் இந்த மக்களுடைய நலத்திற்கு சிறப்பு செய்தார்கள். அவர்களுக்கும் இந்தத் துறையின் சார்பாக என்னுடைய நன்றியைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன அத்தனை கருத்துக்களையும் அரசு ஏற்றுக் கொள்கிறது. என்னென்ன குறைகள் இருந்தாலும் அந்தக் குறைகள் எல்லாம் சிறப்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் தீர்வு காணப்படும். என்னென்ன குறைகள், எங்கெங்கு என்கிற விவரத்தை எல்லாம் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்ட நேரத்தில் நான் குறித்து வைத்திருக்கிறேன். அந்த வகையில் அவை பற்றி நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டு, அமர்கிறேன்.



1987 ஏப்ரல் 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் எ. எஸ். எ. ஆறுமுகம், ஆ. சந்திரசேகரன், எஸ். என். இராமசாமி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

திரு. கோ. வீரய்யன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி: "மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 51,10,98,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (8—4—1987) காலை 10-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 9.04 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

133. கோரிக்கை எண் 31—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88 (தமிழ், ஆங்கிலம்).

134. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பற்றி சாதனைத் திட்டம், 1987-88. (ஆங்கிலம்).

135. 1981-82 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டிற்கான (சிவில்) அறிக்கையில் சமூக நலத் துறை தொடர்பான பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தெட்டாவது அறிக்கை.

136. 1974-75 மற்றும் 1975-76 ஆம் ஆண்டுகளுக்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டுகளுக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) துறைகள் பற்றிய அறிக்கைகளில் சில துறைகள் தொடர்பான குறிப்புகள் மீதான பொது கணக்குக் குழுவின் (1980-81) ஆறாவது அறிக்கை (ஏழாவது பேரவை)யில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தொன்பதாவது அறிக்கை.

137. 1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வருவாய் வரவினங்கள்) அறிக்கையில் சில துறைகள் தொடர்பான குறிப்புகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் (1982-83) இருபத்தி இரண்டாம் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் அறுபதாவது அறிக்கை.





## இணைப்பு-I

(495 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை.

ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்தின்கீழ் 1987-88 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை எண் 31ல், 51·11 கோடி ரூபாய் ஒதுக்க ஒப்புதல் அளிக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

2. ஆதி திராவிடர் பழங்குடியினர் நல மானியக் கோரிக்கை அரசின் கொள்கை விளக்கத்தை அவை முன் நான் எடுத்துக்கூறு முன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார நலன்களை மேம்படுத்த இந்த அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

3. சமுதாயத்தில், நலிந்த பிரிவினரின் நலனை, அதிலும் குறிப்பாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் நலனை மேம்படுத்த வேண்டுமென்பதே அரசின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் போது இம்மாநிலத்தில் மொத்த மக்கள் தொகையாகிய 484 இலட்சத்தில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோரின் மக்கள் தொகை முறையே 88.81 இலட்சமாகவும், 5.20 இலட்சமாகவும் உள்ளது. மொத்த மக்கள் தொகையில் இவர்கள், முறையே 18.35 சதவீதம், 1.07 சதவீதம் உள்ளனர். இக் கணக்கெடுப்பு 1981 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டதால், தற்போது அவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்திருக்கக் கூடும். இந்த நலிவடைந்த பிரிவினர் வரலாற்று ரீதியான காரணங்களினால் சமுதாய மற்றும் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ளனர். எனவே, அவர்களின் சமூக பொருளாதார நிலையை உயர்த்தும் பொருட்டு இவ்வரசு ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. புறக்கணிக்கப்பட்ட இச்சமுதாயத்தினருக்கு நியாயம் கிடைப்பதற்கான ஒரே வழி, அவர்களை பல்வேறு சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம் சமுதாயத்தில் ஏனையவருடன் சம நிலைக்குக் கொண்டு வர முயலுவதே ஆகும். ஆதி திராவிடர்களுக்காக வகுக்கப்பட்ட சிறப்பு உள்ளடக்கத் திட்டம், பழங்குடியினருக்காக வகுக்கப்பட்ட பழங்குடியினர் நலத் துணை திட்டம் ஆகியவற்றின் மூலம் அதிக அளவுத் தொகை அவர்களுக்கென செலவிடப்படுவதை உறுதி செய்யும் வகையில் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்குப் பொருத்தமான பல திட்டங்

கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆதி திராவிடர் நலனுக்கான சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் (1) வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள 50 விழுக்காடு ஆதி திராவிடர் குடும்பங்களை வறுமை நிலையிலிருந்து விடுவித்து நல்ல நிலைமைக்குக் கொண்டு வருதல் மற்றும் (2) ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படைத் தேவைகளையும், இதர வசதிகளையும் செய்து கொடுக்க வகை செய்தல் ஆகிய இரு குறிக்கோள்களை எய்துவதற்கு ஒவ்வொரு வளர்ச்சி துறையிலும் குறிப்பிட்ட பணியில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அப்பணி அதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆறாம் ஐந்தாண்டு திட்டக் காலத்தின் குறியீடான 9 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களில், 8.90 இலட்சம் குடும்பங்கள் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களினால் பயனடைந்துள்ளன. இது போலவே, ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் கால முதலாம் ஆண்டான 1985-86-லும் 1986-87 ஆம் ஆண்டிலும், குறியீடு 4 இலட்சம் என்றாலும், 4.02 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் பயனடைந்துள்ளன. 1987-88 ஆம் ஆண்டிற்கும் 2 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இணைப்பு II ல் விவரித்துள்ளதுபோல் 1987-88 ஆம் ஆண்டில் பல்வேறு வளர்ச்சித் துறைகளில் சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ், ரூ. 132.69 கோடி செலவிடப்படும்.

4. ஆதி திராவிடர் மக்கள் தொகையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இம்மாநிலத்தில் பழங்குடியினரின் மக்கள் தொகை மிகவும் குறைவாக உள்ளது. ஆனால், அவர்களுடைய பண்பாடு, பழக்கவழக்கங்கள், அவர்கள் வாழும் இடங்களின் புவியியல் பின்னணி, கல்வி நிலை ஆகியவையும் அவர்களுடைய பிரச்சினைகளும் தனித்தன்மை வாய்ந்ததாகவும், சிக்கலானதாகவும் உள்ளன. எனவே, மேற்சொன்னவற்றைக் கருத்தில் கொண்டு, சேலம், தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, தருமபுரி, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட பழங்குடியினர் குடியிருப்புப் பகுதிகள் ஒன்பதில் செயல்படுத்துவதற்காகப் பழங்குடியினர் துணைத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. பழங்குடியினர் துணைத் திட்ட அணுகுமுறையின் படி அரசின் பல்வேறு துறைகளின் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் பழங்குடியினர் பகுதிகளும் மக்களும் பயனடையும்



வகையில், தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. பழங்குடியினருக்கான துணைத் திட்டம் குறிப்பிட்ட ஒரு இடத்தில் வாழும் பழங்குடியினர் குடும்பங்களின் நலனுக்காகவே, செயல்படுத்தப்படும் ஒரு திட்டமாகும். தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியினரில், சுமார் 40.4 சதவீதம் அதாவது 2.10 இலட்சம் பழங்குடியினர் இத்துணைத்திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளில் வாழ்கின்றனர். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், பழங்குடியினரின் பொருளாதார மேம்பாடு மற்றும் அவர்கள் வாழ்ந்து வரும் பகுதிகளின் மேம்பாடு ஆகும். குடிநீர் வசதி, இணைப்பு சாலைகள் அமைத்தல், பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வசதி, பள்ளி வசதி, சுகாதார வசதி போன்றவை பகுதி மேம்பாட்டுப் பணிகளில் அடங்கும். 1987-88 ஆம் ஆண்டில் அரசின் பல்வேறு துறைகளின் மூலம் பழங்குடியினர் நலனுக்காக ரூ. 973.65 இலட்சம் நிதி செலவு செய்யப்படும் (விவரங்கள் இணைப்பு -ல் கொடுக்கப்பட்டுள்ளன). ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டப் பணிகளின் மூலம் 28,884 பழங்குடியினர் குடும்பங்கள் பயனடைந்தன. இந்த எண்ணிக்கை 19,000 பழங்குடியினர் குடும்பங்கள் என்ற இலக்கை மிஞ்சி விட்டது. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 69,869 பழங்குடியினர் குடும்பங்களுக்கு உதவ வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் உள்ள 46,979 பழங்குடியினர் குடும்பங்களுக்கும், இத்திட்டத்தில் சேராத பகுதிகளில் உள்ள 22,890 பழங்குடியினர் குடும்பங்களுக்கும் உதவி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில், ஆதிதிராவிடர் மக்களில் கற்றவர்களின் எண்ணிக்கை 1971 ஆம் ஆண்டைவிட 7.85 சதவீதம் உயர்ந்துள்ளது. பழங்குடியினர் மக்களில் கற்றவர்களின் எண்ணிக்கை 1971 ஆம் ஆண்டைவிட 11.43 சதவீதம் உயர்ந்துள்ளது. ஆனால், இதே கால கட்டத்தில் மாநிலத்தில் கற்றவர்களின் எண்ணிக்கை உயர்வு 7.30 சதவீதமே. 1987-88-ல் ஆதி திராவிடர்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக ரூ. 195.92 கோடியும், பழங்குடியினரின் சமூக-பொருளாதார மேம்பாட்டிற்காக ரூ. 12.31 கோடியும் அரசு செலவிடும்.

5. இதுவரை, ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலனுக்காக அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் அனைத்தும் குறித்து நான் பொதுவாகக் குறிப்பிட்டுள்ளேன். ஆதி திராவிடர் பழங்குடியினர்

நலனுக்கென செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் முக்கிய கூறுகள் குறித்து நான் தற்போது தெரிவிக்க விரும்புகிறேன்.

கல்வி :

6. எந்த ஒரு மேம்பாட்டு முயற்சிக்கும் கல்வியே அடிப்படையாகும். எந்த ஒரு சமுதாயத்தின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தையும் விரைவுபடுத்த நல்ல வலிவான கல்வி அடிப்படை இன்றியமையாததாகும். இணைந்த, திட்டமிட்ட முயற்சியின் மூலம் சமுதாயத்திற்குக் கல்வி அறிவு அளிக்காமல், எந்த வித நற்பயனும் கிடைக்காது. இதைக் கருத்தில் கொண்டு ஆதி திராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த குழந்தைகளுக்குக் கல்வியறிவை ஊட்டுவதற்கு இவ்வரசு முதல் முன்னுரிமை அளித்து வருகிறது. ஆதி திராவிடர் மற்றும பழங் குடியினர் ஆண்-பெண் குழந்தைகளின் நலனுக்காக பட்ட மேற் படிப்பு வரை இலவசக் கல்வியை தமிழ்நாடு அரசு வழங்குகிறது. ஏனையோருக்கு 12-ம் வகுப்பு வரை மட்டுமே இலவசக் கல்வி வசதி வழங்கப்படுகின்றது. ஆதி திராவிடர், பழங்குடியினர் கிறித்துவராக மதம் மாறிய வகுப்பைச் சார்ந்த அனைத்து மாணவ, மாணவியர்க்கும் பெற்றோர்களின் வருமானத்தைக் கணக்கில் கொள்ளாமல் படிப்புக் கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது. கிட்டத்தட்ட ஒவ்வொரு ஆதி திராவிடர் குடியிருப்பின் அண்மையிலும் தொடக்கப் பள்ளி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. பள்ளி செல்லும் வயதுடைய ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த 25 இலட்சம் குழந்தைகளில், கிட்டத்தட்ட 19.56 இலட்சம் குழந்தைகள் அதாவது 78.3 சதவீதம் பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், கூடுதலாக 4 இலட்சம் ஆதி திராவிடர் குழந்தைகள் பள்ளியில் சேர்க்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளின் விளைவாக ஆதி திராவிடர்களில் கல்வி அறிவு பெற்றோர் எண்ணிக்கை குறிப்பிடத் தக்க அளவுக்கு உயர்ந்துள்ளது. ஆதி திராவிடர், பழங்குடியினர் ஆகியோர், பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ளதைக் கருத்தில் கொண்டு ஆதி திராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த குழந்தைகள் தொடர்ந்து படிப்பதற்கு ஊக்குவிக்கும் வகையில் படிப்புதவித் தொகைகள், முக்கியமாக மெட்ரிக் படிப்பு வரையிலும் உதவி, மெட்ரிக் படிப்பிற்கு பிந்திய படிப்புக்கு உதவி முதலியன அளிக்கப்படுகின்றன.





மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பு :

7. கல்வித்துறை மூலமாக ஆதி திராவிடர், பழங்குடியினர் கிறித்துவராக மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்கள் உட்பட அனைத்து மாணவர்கட்கும் முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஒன்பது, பத்தாம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர், கிறித்துவராக மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவ-மாணவியருக்கு ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலத்துறை பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்குகிறது. இதைத் தவிர ஆறு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு, சிறப்புக் கட்டணம் மற்றும் பத்தாம் வகுப்பு தேர்வுக் கட்டணம் கட்டுவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. சிறப்புக் கட்டணத்திலிருந்து விலக்கு அளித்ததால் ஏற்படும் இழப்பினை அந்தந்த கல்வி நிலையங்களுக்கும், தேர்வுக் கட்டணத்திலிருந்து விலக்கு அளித்ததால் ஏற்படும் இழப்பினை அரசு தேர்வு இயக்குநருக்கும், அரசு ஈடு செய்கிறது.

8. ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் 4 முதல் 10 ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ—மாணவியருக்கு நோட்டுப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

9. மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்பு பயில்கின்ற ஆதி திராவிடர், பழங்குடியினர் மாணவர்கட்கு, அவர்களது பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 6,000 த்திற்குள் இருந்தால் உறைவிட உதவித் தொகையும் வழங்கப்படுகின்றது. தற்போது இவ்வுதவித் தொகை, பெறுபவர் படிக்கின்ற படிப்பின் தன்மையைப் பொறுத்து உணவு மற்றும் உறைவிடச் செலவுக்கு மாணவர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 250-லிருந்து ரூ. 350 வரை வழங்கப்படுகிறது.

மெட்ரிக் படிப்புக்கு மேற்பட்ட படிப்பு :

10. முதுநிலை பட்டப் படிப்பு வரை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு படிப்புக் கட்டணம் ஏதுமில்லை. இப்படிப்புதவித் தொகையில், உணவு, உறைவிடச் செலவும், புத்தகத்திற்காகும் செலவும், ஏனைய தனிக் கட்டணங்களும் அடங்கும். இந்தப் படிப்புதவித் தொகை இரண்டு வகைகளில்

வழங்கப்படுகின்றது. ஒன்று மாநில அரசு படிப்புதவித் தொகை: மற்றொன்று மத்திய அரசு படிப்புதவித் தொகை. மத்திய மாநில அரசு படிப்பு உதவித் தொகை பெறும் மாணவரின் பெற்றோர் ஆண்டு வருமானம் முறையே ரூ. 12,000, ரூ. 6,000 என வரையறுக்கப்பட்டுள்ளது. இத்துடன், பராமரிப்பு உதவித் தொகையும் வீட்டிலிருந்து வந்து போகும் மாணவர்களுக்கு மாதத்திற்கு ரூ. 50-லிருந்து ரூ. 120-ம், விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு ரூ. 75-லிருந்து ரூ. 200 வரை தற்போது வழங்கப்படுகின்றது. உதவித் தொகையின் அளவு மாணவர் எந்தப் படிப்பு படிக்கிறார் என்பதைப் பொறுத்து அமையும். இம்மாணவர்களுக்கு உணவு, உறைவிடச் செலவுக்காக உதவித் தொகையையும் மாநில அரசு வழங்குகின்றது. இந்த உதவித் தொகை விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர் ஒருவருக்கு மாதத்திற்கு ரூ. 50 லிருந்து ரூ. 75-வரை கொடுக்கப்படுகிறது. இவ்விரு திட்டங்களின்மூலம், ஆண்டுதோறும் ஏறத்தாழ 62,000 ஆதி திராவிடர் மாணவர்களும் 300 பழங்குடி மாணவர்களும் பயனடைகிறார்கள். இவை தவிர ஆதி திராவிடர் பழங்குடியினரில் சிறப்பாகப் படிக்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், காந்தியடிகள் நினைவு பரிசு, தகுதிக்கான பரிசு, தகுதிக்கென்று தனி மானியம் போன்றவையும் வழங்கப்படுகின்றன. பொறியியல், மருத்துவம், வேளாண்மை போன்ற தொழிற் கல்வி மற்றும் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு படிப்புதவித் தொகைக்கு மேல் செலவாகும் விடுதிக் கட்டணம் போன்ற செலவைச் சரிக்கட்ட கடன் உதவித் தொகையும் அளிக்கப்படுகிறது. கூடுதலாக மற்றும் தனிக் கடனுதவித் தொகையும் தேவைப்படும் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

11. துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஆதி திராவிடரும், ஏனையோரும் தங்களுடைய பிள்ளைகளின் கல்வியில் போதிய நாட்டம் செலுத்த இயலவில்லை. இவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், ஆண்டொன்றுக்கு சுமார் 650 மாணவர்களுக்கு மைய அரசு உதவியுடன் அரசு சிறப்பு படிப்பு உதவித் தொகை வழங்குகிறது. இப்படிப்பு உதவித் தொகை பெறுவதற்கு வரையறுக்கப்பட்டுள்ள ஆண்டு வருமானம் ரூ. 12,000 ஆகும். ஆறாம் வகுப்பிலிருந்து 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 200-லிருந்து ரூ. 250



வரை, பத்து மாதங்களுக்கு இப்படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இவ்வுதவித் தொகை ஒரு குடும்பத்தில் இரு குழந்தைகளுக்கு மட்டுமே அளிக்கப்படும்.

**மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு புத்தக வங்கித் திட்டம் :**

12. கல்லூரிப் பாடப்புத்தகங்கள், குறிப்பாக மருத்துவம், பொறியியல் முதலிய படிப்பு தொடர்பான புத்தகங்களின் விலை உயர்ந்ததாக இருப்பதால், இன்றியமையாத மிக முக்கிய பாடப் புத்தகங்களைக்கூட வாங்குவதற்கு ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த ஏழை மாணவர்களுக்கு இடர்பாடாக உள்ளது. அதனைக் கருத்தில் கொண்டு, 1979 ஆம் ஆண்டிலிருந்து புத்தக வங்கித் திட்டம் என்ற புதிய திட்டம் ஒன்றை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஏற்படும் செலவை மத்திய அரசும் மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டத்தின் கீழ், மைய அரசின் மெட்ரிக் படிப்புக்கு மேற்பட்ட படிப்பான உதவித் தொகை பெறும் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த மாணவர்களில் 7 மாணவர்களுக்கு ஒரு தொகுதி புத்தகங்கள் என்ற விதத்தில் ரூ. 2,300 பெறுமான புத்தகங்கள் வழங்கப்பட்டன. இதைத் தவிர, அலமாரி ஒன்று வாங்குவதற்கு ரூ. 1,000-மும் போக்குவரத்துக் கட்டணங்கள் போன்ற எதிர்பாராச் செலவிற்காக ரூ. 100-ம் வழங்கப்படுகிறது. இக்கோட்பாடுகள் 1982-83-ம் ஆண்டிலும் 1985--86 ஆம் ஆண்டிலும் ஆக இரண்டு முறை மாற்றியமைக்கப்பட்டன. 1982-83 ஆம் ஆண்டில் நான்கு மாணவர்களுக்கு ஒரு தொகுதி புத்தகங்கள் என்றும் ஒரு தொகுதி புத்தகங்களுக்கான செலவு ரூ. 5,000 என்றும், பின்னர் 1985-86 ஆம் ஆண்டில் மூன்று மாணவர்களுக்கு ஒரு தொகுதி புத்தகங்கள் என்றும் மாற்றியமைக்கப்பட்டது.

**பள்ளிகள் :**

13. ஆதிதிராவிடர்/பழங்குடியினர் வகுப்பு மாணவர்களுக்கும் ஏனைய இன குழந்தைகளுக்குச் சமமாக கல்வி பயிலும் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்குடன், அரசு 961 பள்ளிகளை நடத்தி வருகிறது. சமுதாய ஒருமைப்பாடு உருவாகும்

வகையிலும் ஆதி திராவிடர் மாணவர்கள் ஆதி திராவிடர் அல்லாத பிற மாணவர்களுடன் கலந்து பழக வாய்ப்பு அளிக்கும் பொருட்டும் மாணவர்களின் தனிமைப்படுத்தப்பட்ட உணர்வினைப் போக்கும் நோக்கத்துடனும், இப்பள்ளிகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுடன் பிற்பட்ட வகுப்பு மற்றும் ஏனைய இன மாணவர்களும் ஒரு குறிப்பிட்ட சதவிதத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் ஆண்டுக்கு இரண்டு சீருடைகள் முதலியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. பழங்குடியினரிடையே உள்ள பிரச்சினைகள் தனித்தன்மை வாய்ந்ததாகவும் சிக்கலானதாகவும் உள்ளதைக் கருத்தில் கொண்டு அதனைச் சீர்செய்யும் முறையில் 11,445 பழங்குடி மாணவர்கள் நலனுக்கென 183 உண்டி உறைவிடப் பள்ளிகளை அரசு நடத்தி வருகின்றது. இப்பள்ளிகளில் இம்மாணவர்களுக்கு இலவச உணவும் இலவச இருப்பிடமும் அத்துடன் ஏனைய வசதிகளும் வழங்கப்படுகின்றன. இங்கு முதலமைச்சரின் சத்துணவுத் திட்டமும் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

14. கல்வி பெறுவதில் பழங்குடியினர் காட்டிவரும் ஆர்வத்தைக் கருத்தில் கொண்டு 1987-88 ஆம் ஆண்டில் ரூ. 12 இலட்சம் செலவில் 10 புதிய அரசு பழங்குடியினர் உண்டி, உறைவிடத் துவக்கப்பள்ளிகள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் கூடுதலாக 500 பழங்குடி மாணவர்கள் பயன் பெறுவார்கள்.

15. 1987-88 ஆம் ஆண்டில், ரூ. 30.66 இலட்சம் செலவில் 5 ஆதி திராவிடர் ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், 6 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 3 உயர் நிலைப் பள்ளிகளை மேல் நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகளுக்கு ரூ. 3.16 இலட்சம் செலவில் வினாத் தாள்கள் முதலியவற்றை அச்சிடுவதற்குத்தேவையான எழுது பொருள்கள் வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.



16. 1987-88 ஆம் ஆண்டில் தென்னாற்காடு மாவட்டத்தில் கோமுகி அணையில், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிக்கான விடுதி மற்றும் பள்ளிக் கட்டிடங்கள் கட்டும் பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக ரூ. 56.32 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

17. 1986-87 ஆம் கல்வியாண்டில் இம்மாநிலத்தில் உள்ள 548 மேல்நிலைப் பள்ளிகளில் புகுத்தப்பட்ட வாழ்க்கைத் தொழில் ஆசிரியர் பயிற்சியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவியர் சேர்வதற்கென மதிப்பெண்கள் விதியினை அரசு தளர்த்தியுள்ளது. இவ்வாறு அரசால் அளிக்கப்பட்ட சலுகை ஆணையினால் 1986-87 ஆம் ஆண்டில் ஆசிரியர் பயிற்சியின் முதலாண்டில் கூடுதலாக 759 ஆதி திராவிடர்/பழங்குடியினர் மாணவியர் சேர முடிந்தது.

**மாணவர் இல்லங்கள் :**

18. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குழந்தைகளும், ஏனைய ஏழைக் குழந்தைகளும் பயனடைவதற்காக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, அரசு மாணவர் இல்லங்கள் பலவற்றை நடத்தி வருகிறது. இலவச உணவு, உறையுள் வசதிகளுடன், சோப்பு, சிகைக்காய், எண்ணெய் முதலிய பொருள்களும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. ஆதிதிராவிடர்/பழங்குடியினர் அல்லாத மாணவர்களும் மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களும், இவ்விடுதியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஆதி திராவிடர் மாணவர்கள் பிற மாணவர்களுடன் ஒன்றி பழக வாய்ப்பளிப்பது, அவர்களிடையே ஒருமைப்பாட்டு உணர்வை வளர்ப்பதும் இதன் முக்கிய நோக்கமாகும். இம்மாணவர்களுக்கான உணவுத் தொகை ஒரு மாணவர்க்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 60-லிருந்து ரூ. 95 என்று நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. இதனை 1—12—1986-லிருந்து, 85 ரூபாயிலிருந்து 140 ரூபாய் வரை அரசு உயர்த்தியுள்ளது. இவ்வுயர்வினால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 1.73 கோடி கூடுதல் செலவாகும். இதனால் 52,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன் பெறுகின்றனர்.

19. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையினால் நடத்தப்படும் மாணவர் விடுதிகளில் அதிக அளவில் மாணவர்கள்

சேருவதற்கு முன்வரும் நிலையினை கருத்திற் கொண்டு, புதிய மாணவர் இல்லங்களைத் துவக்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1987-88 ஆம் ஆண்டில் விடுதி ஒன்றிற்கு 50 மாணவர்களைக் கொண்டு 15 புதிய ஆதி திராவிடர் மாணவர் விடுதிகள் (மாணவர்களுக்கு பத்தும், மாணவியர்களுக்கு ஐந்தும்) துவக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கென ரூ. 11.06 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கூடுதலாக 614 மாணவர்களைச் சேர்க்கும் பொருட்டு 20 ஆதிதிராவிடர் விடுதிகளில் மாணவர்களின் எண்ணிக்கையினை உயர்த்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 4.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ் விடுதிகளுக்கு சமையல் எரிவாயு படிப்படியாக வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1987-88 ஆம் ஆண்டில் 16 விடுதிகளுக்கு ரூ. 2.21 இலட்சம் செலவில் எரிவாயு வசதி செய்துதரப்படும். 1987-88 ஆம் ஆண்டில் 9 மாணவர் விடுதிகளுக்கு ரூ. 0.48 இலட்சம் செலவில் மாவரைக்கும் இயந்திரங்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் 26 மாணவர் கல்லூரி விடுதிகளில் உள்ள 1,852 மாணவர் ஒவ்வொருவருக்கும் ஒரு டீபாயும் ஒரு ஸ்டூலும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 8.93 இலட்சம் செலவிடப்படும்.

அரசு நடத்தும் விடுதிகள் தவிர தொண்டு நிறுவனங்களால் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்கள் பயனடையும் பொருட்டு, அரசு நிதி உதவியுடன் விடுதிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இம்மாநிலத்தில், இத்தகைய விடுதிகள் 44 உள்ளன.

**விடுதிகளுக்கான கட்டடங்கள் கட்டுதல்:**

20. இத்துறையால் நடத்தப்படும் விடுதிகள் பல வாடகை கட்டிடங்களில் உள்ளன. எனவே, விடுதிக் கட்டிடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகளை அரசு படிப்படியாக மேற்கொண்டு வருகிறது. இக்கட்டிடங்களைக் கட்டும் பணி, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரிடையே கல்வியைப் பரப்புவதற்கு இத்தகைய வசதிகள் அதிகம் தேவைப்படுவதால், அம்மாணவர்களுக்குத் தேவையான வசதிகளுடன் கூடிய விடுதிகளை அமைப்பதற்கான அனைத்து முயற்சியையும் அரசு மேற்கொண்டு வருகிறது. 1986-87 மற்றும் 1987-88-ம் ஆண்டுகளில் 8 மாணவர் விடுதிகளும், 1985-87-ம் ஆண்டுகளில் 21 மாணவியர் விடுதிகளும் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மாணவியர் விடுதிகள் கட்டுவதற்கென 1987-88-ம் ஆண்டிற்கு ரூ. 150 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



**பொருளாதார மேம்பாடு:**

21. ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த பெரும்பான்மையான விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களாகவோ அல்லது ஓரளவு நிலம் வைத்துள்ளவர்களாகவோ, குத்தகைக்காரர்களாகவோ இருக்கின்றனர். அவர்களின் வருமானத்திற்கான வழி வகைகளை அதிகரிப்பது ஒன்றே அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான வழியாகும். நவீன விவசாய முறைகள் மற்றும் சீரான பாசன வசதிகள் மூலமே உற்பத்தித் திறனை உயர்த்தி, அதன் மூலம் அவர்களின் வருமானத்தை உயர்த்த முடியும்.

22. விவசாயிகளுக்கு உதவுவதற்காக, பாசனக் கிணறுகள் தோண்டுவதற்கு உதவித் தொகையாக அதிக பட்சம் 6,000 ரூபாயும், இரண்டு உழவு மாடுகள் வாங்குவதற்காக அதிகபட்சம் 600 ரூபாயும் அரசு வழங்கி வருகிறது. உழவு மாடுகள் வாங்குவதற்கான உதவித் தொகை ரூ. 600-லிருந்து ரூ. 800 ஆக அண்மையில் உயர்த்தப்பட்டுள்ளது. நிதி நிறுவனங்களும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையும் மொத்தச் செலவில், முறையே 2/3 மற்றும் 1/3 என்ற அளவில் கடனாகவும் மானியமாகவும் வழங்குகின்றன. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இவர்களில் கிறித்துவர்களாக மதம் மாறியவர்களின் நலனுக்காக 1987-88 ஆம் ஆண்டில் ரூ. 10.37 இலட்சம் செலவிடப்படும். சுய வேலை வாய்ப்பு பெற்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக அவர்களுக்குத் தேவையான சாதனங்களும், கருவிகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. சிறு தொழில் புரியும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரை ஊக்குவிக்கும் பொருட்டு, மேலே குறிப்பிட்டுள்ளவாறு தொழில் தொடங்குவதற்காக நிதியுதவி அளிக்கப்படுகிறது.

23. நிதியுதவி பின்வரும் 3 வழிகளில் பெறப்படுகிறது:

(1) அரசு மானியம் 25 விழுக்காடு;
(2) குறியீட்டுத் தொகை 25 விழுக்காடு; மற்றும்
(3) வங்கி மூலம் கடனாக 50 விழுக்காடு.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானியத் தொகை பங்கை வழங்குகிறது. பாலுக்கான பெருகி வரும் தேவையைக் கருத்தில் கொண்டு கறவை மாடுகள் வளர்ப்பதில் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். எனவே கறவை மாடுகள் வாங்குவதற்கு ரூ. 2,500 நிதியுதவி பெறுவதற்குத் தகுதியுடைய ஆதி திராவிடர் வகுப்பினர்களுக்காக பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. இத் தொகையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 833 அரசு மானியமாகவும், எஞ்சிய ரூ. 1,667 தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளால் கடனாகவும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு உறுப்பினரும் இரு கறவை மாடுகள் வாங்குவதற்கு நிதியுதவி பெறத் தகுதி உடையவர் ஆவர். இதற்காக, 1987-88 ஆம் ஆண்டில் ரூ. 35.22 இலட்சம் செலவிடப்படும். இத் தொகையில் பணியாளர் செலவுக்காக ரூ. 1.44 இலட்சம் ரூபாயும் அடங்கும்.

பயிற்சியும் வேலை வாய்ப்பும்:

24. சமுதாயத்தின் திட்டமிட்ட வளர்ச்சியின் முக்கிய நோக்கம், வேலை வாய்ப்புகள் அளிப்பதன் மூலம் மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் அவர்களின் நிலையினை உயர்த்துவதே. பல்வேறு துறைகளில் இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பது, வேலை வாய்ப்புகளை உருவாக்க ஒரு வழியாகும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு நடத்தும் தொகுதி பணிகுரிய போட்டித் தேர்வினை எழுதுவதற்காக இரு திங்கள் கால அளவிற்கான சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி போன்ற அனைத்திந்தியப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுத விழையும் உயர் கல்வி உடைய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் வெற்றி வாய்ப்புகளை மேம்படச் செய்யும் நோக்கு முன் பயிற்சி 1966 ஆம் ஆண்டிலிருந்து அளிக்கப்பட்டு வருகிறது. வழக்கறிஞர் தொழில் செய்ய விரும்பும் ஆதி திராவிடர் மற்றும் பழங் குடியைச் சேர்ந்த சட்டப் பட்டதாரிகளுக்கு தொழில் செய்ய உதவும் நோக்கத்தோடு, ஆண்டுதோறும் அத்தகைய 15 சட்டப் பட்டதாரிகளுக்கு ஒவ்வொருவருக்கும் அவர்கள் தங்கள் பெயரை வழக்குரைஞர் குழுவில் பதிவு செய்து கொள்ளவும், அறை வாடகை போன்ற செலவினத்திற்காகவும், கடனாக ரூ. 750 அளிக்கப்படுகிறது. சட்டப் புத்தகங்கள், மேஜை, நாற்காலி முதலியவை வாங்குவதற்கு மானியம் ரூ. 750-ம் வழங்கப்பட்டு வருகிறது.



மேலும் ஆண்டுதோறும் இவ்வினத்தைச் சார்ந்த 20 சட்டப் பட்டதாரிகளுக்கு அனுபவம் பெற்ற, சிறப்பு வாய்ந்த வழக்குரைஞர்களிடம் பல துறைகளிலும் நான்கு ஆண்டுகள் பயிற்சி பெற ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இந்த பயிற்சியின் போது பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ. 500 உதவித் தொகையாகவும், பயிற்சியளிக்கும் வழக்குரைஞர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 5,000 ஊக்கத் தொகையாகவும் வழங்கப்படும்.

**வீட்டு வசதித் திட்டங்கள்.**

**நிலம் கையகப்படுத்தி வீட்டு மனைகள் ஒப்படை செய்தல்:**

25. பெரும்பான்மையான ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீடுகளோ, வீட்டு மனைகளோ அவர்களுக்கென சொந்தமாக இல்லையென்பது அனைவரும் அறிந்த ஓர் உண்மை. அடி மட்டத்தில் இருக்கும் இம் மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் துயரமானது. இவர்களுக்கு முறையான வாழ்க்கைச் சூழலை அமைத்துக் கொடுக்கும் நோக்கத்துடன் அரசு இதற்கான பணிகளில் பல ஆண்டுகளுக்கு முன்னரே ஈடுபட்டு, அவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கும் திட்டத்தின் கீழ் அவர்கள் தங்களுக்கென்று வீடுகளைக் கட்டிக்கொள்ள வகை செய்துள்ளது. புறம்போக்கு நிலங்கள் எங்கெல்லாம் கிடைக்கின்றனவோ, அவற்றை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆதி திராவிடர், பழங்குடியினருக்கு ஒப்படை செய்கின்றனர். இதைத் தவிர, குடியிருப்புச் சட்டத்தின் கீழ் நிலங்களை ஒப்படை செய்வதன் மூலமும், தனியார் நிலங்களை கையகப்படுத்துவதன் மூலமும் இக் குடும்பங்கள் பலவற்றிற்கு வீட்டு மனைகள் வழங்கப்படுகின்றன. பொதுவாக, வீட்டு மனைகளாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் 3 சென்ட் நிலம் ஒப்படை செய்யப்படுகிறது. இவ்விதம் இதுவரையில் 4,68,091 மனைகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன 10,00,000க்கும் அதிகமான ஆதி திராவிடர் குடும்பங்கள் பல்வேறு வீட்டு மனைகள் வழங்கும் திட்டங்களின் கீழ் பயனடைந்துள்ளன.

**தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ).**

26. நல்ல பழக்கங்கள் பெரும்பாலும் வீடுகளில்தான் உருவாகின்றன என்பது அனைவரும் அறிந்த உண்மை. வசிப்பதற்கு, தங்களுக்கென்று ஓரிடமின்றி இருக்கும் மக்களின்

அவல நிலை பரிதாபத்திற்குரியதாகும். வீடற்ற சூழ்நிலை பல்வேறு சமூகப் பிரச்சினைகளை உருவாக்கும். எனவே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்குப் போதுமான வீட்டுவசதி அளிப்பதை தனது அடிப்படைப் பொறுப்பாக இந்த அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இவர்களில் பெரும்பான்மையோர் பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் தமக்கென சொந்தமாக வீடுகளைக் கட்டிக் கொள்ள இயலாதிருப்பதால், அவர்களுக்கு உதவும் வகையில் அரசு திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது. இதன் விளைவாக தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் 1974-ல் தொடங்கப்பட்டது. தொடக்கத்தில் இக்கழகம் ஆதி திராவிடர் மக்களுக்கு வீடுகளைக் கட்டித் தரும் பணியை மேற்கொண்டது. ஆனால், 1979-லிருந்து, இம்மக்கள் தம் சொந்த வீட்டைக் கட்டுவதற்கான நிதியுதவியை மட்டுமே அளித்து வருகிறது. 1974-ல் வீடுகளைக் கட்டுவதற்கான தொகை வீடு ஒன்றிற்கு 2,400 ரூபாயாக இருந்தது: அத்தொகை படிப்படியாக உயர்த்தப்பட்டு, தற்போது சமவெளிப் பகுதிகளில் 6,000 ரூபாயாகவும், மலைப் பகுதிகளில், 9,000 ரூபாயாகவும் உள்ளது.

### இன்றியமையா அடிப்படை வசதிகள் மேம்பாடு:

27. நலிவடைந்த பிரிவினரின் வாழ்க்கை நிலையையும், வாழ்க்கைத் தரத்தையும் மேம்பாடடையச் செய்வதற்கு உரிய அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க வேண்டியதன் தேவையை அரசு உணர்ந்துள்ளது. எனவே, இதற்குத் தேவையான இணைப்பமைப்புகளை பலப்படுத்தி, மேம்பாடடையச் செய்வதற்கு உதவி புரியும் சில துணைத் திட்டங்களை அரசு உருவாக்கியுள்ளது. ஆதி திராவிடர் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது இத்தகைய முக்கியமான திட்டங்களில் ஒன்றாகும். பொதுவாக, எல்லாக் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. "ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்" என்ற பிரிவின் கீழ் கிணறு ஒன்றுக்கு ரூ. 7,500 செலவில், குடிநீர் கிணறுகள் தோண்டப்படுகின்றன: ரூ. 13,000 செலவில் "சென்ட்ரிபியூகல் பம்பு செட்" பொருந்தப்பட்ட நில மட்ட நீர்த் தேக்கமும், ரூ. 15,000 செலவில் ஆழ்கிணறு பம்பு செட்டுகள் பொருத்தப்பட்ட நில மட்ட நீர்த் தேக்கமும் அமைக்கப்படுகின்றன. 1987—88 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் பழங்குடியினர் கிறித்துவர்களாக மாறிய



ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதிகள் செய்து கொடுப்பதற்கு ரூ. 24.16 இலட்சம் செலவிடப்படும். தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு, ஊரக வளர்ச்சித் துறை, தமிழ் நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியம் முதலிய முகவரமைப்புகளின் வள ஆதாரங்கள் ஒன்று திரட்டப்படுகின்றன. 1987-88 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு பாதைகள் அமைப்பதற்கும், இடுகாடுகளுக்குச் செல்லும் பாதை அமைப்பதற்கும் ரூ. 25.96 இலட்சம் செலவிடப்படும். சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி, இணைப்புச் சாலைகள் சுமார் 2,850 குடியிருப்புகளுக்குத் தேவைப்பட்டன. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு மற்றும் காப்புறுதித் திட்டம் போன்ற திட்டங்கள் மூலமாக, இணைப்புச் சாலைகள் போடப்பட்டு வருகின்றன. ஆதி திராவிடர் குடியிருப்புகளில் சமூகக்கூடங்கள் கட்டும் திட்டமும் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

### தீண்டாமை ஒழிப்பு:

28. நம் நாட்டில் பன்னெடுங்காலமாக நிலவிவரும் கொடிய சாதி முறைதான், தீண்டாமை போன்ற எண்ணற்ற சமூக பிரச்சினைகள் உருவாவதற்கு முதற் காரணமாக உள்ளது. சமூகத்தில், உயர் நிலையிலுள்ள மக்களுக்கும், தாழ்ந்த நிலையிலுள்ள மக்களுக்குமிடையேயுள்ள சமூக இடைவெளியைக் குறைக்க பல சமூக பொருளாதார நலத் திட்டங்களைச் செயற்படுத்துவதன் மூலம், சமூகத்தில் தாழ்ந்த நிலையிலுள்ள மக்களை மேம்படுத்தி அவர்களை உயர் நிலைக்குக் கொண்டு வர அரசு எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறது. இந்நல நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதால் மட்டுமே சமுதாய சமத்துவத்தைக் கொண்டு வர முடியாது என்பதையும் அரசு உணர்ந்துள்ளது. தீண்டாமை என்னும் இத்தீய பழக்கத்தை ஒழிக்கவும், ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு இழைக்கப்படும் வேறுவகையான கொடுமைகளை நீக்கவும் அரசு இம்மாநிலத்தில் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. தற்போது இம்மாநிலத்தில் 23 நடமாடும் காவல்படைப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இப்பிரிவுகள் 1986 வரை 12,148 வழக்குகளைப் பதிவு செய்துள்ளன. இதில் 4,161 வழக்குகள் நீதி மன்றங்களால் தண்டனை வழங்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின்

கீழ் வரும் குற்றங்களை விசாரிப்பதற்காக 4 தனி நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நீதிமன்றப் பணிகளைக் கவனிப்பதற்காக ஏழு வழக்குத் தொடரும் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

29. ஆதிதிராவிடர் மக்கள் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வதற்கு ஊக்கமளிக்கும் வகையில், தூய்மையாகப் பராமரிக்கப்படும் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு வானொலிப் பெட்டி வழங்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் தீண்டாமையை ஒழிப்பதற்குப் பாடுபடும் கிராமங்களில் சிறந்த இரு கிராமங்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. தீண்டாமையால் வரும் சமூகக் கேடுகள் குறித்து பொதுமக்களின் கவனத்தைக் கவரும் வகையில், ஒவ்வோராண்டும் சனவரி 24 முதல் 30 வரையிலான நாட்கள் "தீண்டாமை ஒழிப்பு வாரமாக"க் கொண்டாடப்படுகிறது. 'தீண்டாமை" ஒரு சமூகப் பிரச்சினையாக இருப்பதால் இதை ஒழிப்பதில் நிர்வாகம் மற்றும் சட்டத்தை வலியுறுத்தும் அமைப்புகளின் மூலம் ஓரளவே வெற்றி காண இயலும். சமூக நலப் பணிகளில் ஈடுபாடு கொண்டுள்ள நாணயமிக்க தொண்டு நிறுவனங்கள் இத்துறையில் அரசின் முயற்சிக்கு கணிசமான அளவு உதவ இயலும். இந்நோக்கத்தைக் கருத்திற் கொண்டு, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், திருநெல்வேலி-கட்டபொம்மன், திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் ஆதி திராவிடர்களுக்கு கொடுமை இழைக்கப்படும் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நிலவக்கூடிய 104 கிராமங்களில் தீண்டாமை ஒழிப்புப் பற்றி பிரச்சாரம் செய்வதற்கு, அரசு பல தொண்டு நிறுவனங்களுக்கு அனுமதி அளித்துள்ளது. இந்த 104 கிராமங்களில் ஆதி திராவிடர் நலன் தொடர்பாக பிரச்சினைகளைக் கவனிக்கவும், சாதிகளுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்தவும் மாவட்ட மற்றும் கிராம அளவில் குழுக்கள் அமைக்க ஆணையிடப் பட்டுள்ளது. தீண்டாமையின் கேடுகள் குறித்து மக்களுக்கு எடுத்துரைப்பதற்காக "தீர்த்த யாத்திரை" என்னும் செய்திப் படம் தயாரிக்கப்பட்டு கிராமங்களில் திரையிட்டுக் காட்டப்படுகிறது. இதற்காக இயக்ககத்தில் பிரச்சார வண்டி ஒன்று உள்ளது. தீண்டாமையை ஒழிக்கவும், சாதி வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்கும் பொருட்டும், கலப்புத் திருமணங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. கலப்புத் திருமணம்



புரிந்த தம்பதியருக்கு தங்கப் பதக்கங்களும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. இவை தவிர, இத்தகைய தம்பதிகளின் பெயரில் ரூ. 4,000 தேசிய சேமிப்பு சான்றிதழில் முதலீடு செய்யப்படுகிறது. அவர்களுடைய திருமணச் செலவிற்கென ரூ. 300ம் வழங்கப்படுகிறது. கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளின் குழந்தைகளுக்கென்று ஒருங்கிணைந்த எம்.பி.பி.எஸ்., முதலாம் ஆண்டுப் பட்டப் படிப்பில் 12 இடங்களும், சித்த மருத்துவப் படிப்பில் 2 இடங்களும், இந்திய முறை மருத்துவத்தில் பார்மஸி பட்டப் படிப்பில் 1 இடமும், முதலாண்டு பொறியியல் பட்டப் படிப்பில் 5 இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. இச்சலுகைகளை வழங்க மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்களுக்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ளது.

**இட ஒதுக்கீடு பற்றிய விதிமுறை:**

30. (அ) கல்வி நிறுவனங்களில் சேர்தல்:

ஆதி திராவிடர், பழங்குடி மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு விதி கண்டிப்பாக எல்லாக் கல்வி நிறுவனங்களிலும் பின்பற்றப் பட வேண்டும் என கடுமையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மருத்துவம், பொறியியல், ஏனைய தொழில் கல்வி நிறுவனங்கள் உட்பட, கல்வி நிறுவனங்களில் ஆதி திராவிடர், பழங்குடியினருக்கு உரிய இடம் அளிக்கும் பொருட்டு, ஒவ்வொரு கல்விப் பிரிவிலும் அவர்களுக்காக 18 விழுக்காடு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

(ஆ) அரசுப் பணிகளில் நியமனம்:

ஆதி திராவிடர், பழங்குடியினருக்கு பணி இட ஒதுக்கீடு செய்வதை உறுதி செய்யும் பொருட்டு, மாநில அரசுப் பணிகளிலும், பொதுத்துறை நிறுவனங்களிலும் 18 விழுக்காடு பதவிகள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளன. இட ஒதுக்கீட்டு விதியை பணி நியமன அதிகாரிகள் கண்டிப்பாக பின்பற்றுகின்றனரா என்பதைக் கண்காணிக்க ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. அரசுப் பணிகளில் ஆதி திராவிடர், பழங்குடியினர் இடம் பெறுவதை ஆய்வு செய்வதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சரைத் துணைத் தலைவராகவும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்...

நல இயக்குநரை உறுப்பினர்-செயலாளராகவும் கொண்டு, உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளரின் தலைமையின் கீழ் உயர் மட்டக் கண்காணிப்புக் குழு ஒன்றும் இட ஒதுக்கீடு விதிமுறைகளைச் செயல்படுத்துவதை மறு ஆய்வு செய்கிறது.

பழங்குடியினர்:

31. இம்மாநிலத்தில் பழங்குடியினர் மக்கட் தொகை 5.20 இலட்சம் ஆகும். இது மொத்த மக்கட் தொகையில் 1.07 சதவீதம் என்று ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளது. பழங்குடியினர் அதிகமாக வாழும் பகுதிகளில் விரிவான ஒருங்கிணைந்த மேம்பாட்டுப்பணிகளைச் செயல்படுத்தும் வகையில் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பழங்குடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்டம் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு 5 மாவட்டங்களில் அதாவது சேலம், தருமபுரி, வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி மற்றும் தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் பழங்குடியினர் அதிகமாக வாழும் 9 பகுதிகள் தெரிந்தெடுக்கப்பட்டன. தமிழ்நாட்டில் உள்ள மொத்தப் பழங்குடியினரில் சுமார் 2.10 இலட்சம் அதாவது 40.4 சதவீதம் பழங்குடியினர் தெரிந்தெடுக்கப்பட்ட இப்பகுதிகளில் வாழ்கின்றனர். தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு, மண் வளப் பாதுகாப்பு, சிறுபாசனம், பட்டுப் புழு வளர்ச்சி, சிறு தொழில்கள், தேனி வளர்ப்பு முதலியவை போன்ற மேம்பாட்டுத் திட்டங்கள் பழங்குடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்டத்தின் கீழ் இப்பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களில் சிலவாகும். தென் ஆற்காடு மாவட்டம், கல்ராயன் மலைப் பகுதி நீங்கலாக (இப்பகுதிகளில் உள்ள பழங்குடியினர்களுக்கு 75 சதவீத மானியத்தில் இடு பொருள்கள் வழங்கப்படுகின்றன) மற்ற எல்லாப் பகுதிகளிலும் உள்ள பழங்குடியினருக்கு 50 சதவீத மான்யத்தில் இடு பொருள்கள் வழங்கப்படுகின்றன.

32. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் மூலம் 28,884 பழங்குடியினர் குடும்பங்கள் உதவி பெற்றன. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கான இலக்கு 69,869 குடும்பங்கள் ஆகும். 1986—87 ஆம் ஆண்டிற்கு



திருத்தி நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 9,015 பழங்குடியினர் குடும்பங்கள் ஆகும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தும்போது இத்திட்டங்கள் பழங்குடியினர் பண்பாடு மற்றும் கலாச்சாரம் இவைகளுக்குப் பங்கம் ஏற்படுத்ாதவாறு இருக்க கவனம் செலுத்தப்படுகிறது.

33. 1987-88 ஆம் ஆண்டிற்கு, 20 அம்சத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் இவைகளின் மூலம் பயன் பெற 10,200 குடும்பங்கள் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

34. இடைத் தரகர்களின் சுரண்டலிலிருந்து பழங்குடியினரைப் பாதுகாக்கும் வகையில் இவர்களுக்கு உதவும் பொருட்டு இப்பகுதிகளில் 13 பெரிய அளவிலான பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் (லேம்ப்ஸ்) ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் பழங்குடியினருக்கு, உற்பத்தி தொழிலில் ஈடுபடுவதற்கும், நுகர் பொருள்கள் வாங்கிடவும், குறுகியகால மற்றும் நடுத்தரக் கால கடன்கள் வழங்கவும், அவர்களுடைய வேளாண்மை விளை பொருள்கள் மற்றும் காடுபடு சிறு பொருள்களை விற்பனை செய்வதற்கான வசதிகளை அளிக்கவும், பழங்குடியினர் பகுதிகளில் இன்றியமையா நுகர் பொருள்களை நியாய விலையில் கிடைக்கச் செய்யவும், இவை அனைத்தும் ஒரே அமைப்பின் கீழ் எல்லா வசதிகளும் கிடைக்கும் வகையில் செயல்படுகின்றன. நடைமுறையில் இப்பகுதிகளில் வாழும் பழங்குடியினர் அனைவரும் இச்சங்கங்களில் (லேம்ப்ஸ்) உறுப்பினராக உள்ளனர். இந்த 13 சங்கங்கள் தவிர, வேறு இரு சங்கங்கள் அமைப்பதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. இச்சங்கங்கள் விரைவில் செயல்படத் தொடங்கும்.

35. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட பகுதிகளில் உள்ள இந்த 13 சங்கங்களைத் தவிர, பழங்குடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்டம் செயல்படாத பகுதியான நீலகிரி மாவட்டத்திலுள்ள மசனக்குடியில் ஒரு பெரிய அளவிலான பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் 300 குடும்பங்கள் பயன் அடையும் வகையில் செயல்பட்டு வருகின்றது. பெரியார் மாவட்டம் சத்தியமங்கலத்திலுள்ள விற்பனைக் கூட்டுறவு சங்கம், இப்பகுதியில் வாழும் சோளகா எனப்படும் பழங்குடியினர் பயனடைவதற்காக 1986-87 முதல் பெரிய அளவிலான பலநோக்கு கூட்டுறவு சங்கமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

36. மேலே குறிப்பிடப்பட்டுள்ள, குடும்பத்தை அடிப்படையாகக் கொண்ட வறுமை ஒழிப்புத் திட்டங்களைத் தவிர சாலை அமைத்தல், சுகாதார வசதிகள் அளித்தல், பள்ளி வசதி, தெரு காலனி மின் விளக்கு வசதி, குடிநீர் வசதி, போன்ற பகுதி முன்னேற்ற திட்டங்களும பழங்குடியினர் பகுதிகளில் பழங்குடியினர் மேம்பாட்டு துணைத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

37. தமிழ் நாட்டிலுள்ள பழங்குடியினர் பட்டியலில் 36 வகைப் பழங்குடியினர் உள்ளனர். இவர்களில் 16 வகையைச் சார்ந்த பழங்குடியினர்கள் பண்டைய பழங்குடியினர் என்று இந்த அரசு கீழ்க்கண்ட விதிமுறைகளின்படி தெரிந்தெடுத்துள்ளது.—

(1) பண்டைய விவசாய முறைகளை பின்பற்றுதல்.

(2) மிகக் குறைந்த கல்வி அறிவு.

(3) தேங்கிய நிலை அல்லது எண்ணிக்கை குறைந்து கொண்டு வரும் பழங் குடியினர்.

இங்ஙனம் கண்டறியப்பட்ட பண்டைய பழங்குடியினரின் பயன் கருதி சிறப்புத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. 1987—88 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பழங்குடியினர், மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் வாழும் பழங்குடியினர், பண்டைய பழங் குடியினர் மற்றும் சிதறி வாழும் பழங்குடியினர்களில் 10,200 பழங்குடியினர் குடும்பங்களின் மேம்பாட்டிற்காக ரூ. 973.65 இலட்சம் செலவிடப்படும்.

**சிறப்பு உள்ளடக்கத் திட்டம்:**

38. ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள் எல்லா வகையிலும் முன்னேற்றம் அடைய கீழ்க்கண்ட நோக்கங்களை எய்த, சிறப்பு உள்ளடக்கத் திட்டமொன்று 1980-81 ஆம் ஆண்டு முதல் அரசு செயற்படுத்தி வருகிறது.

(1) ஆதி திராவிடர் குடும்பங்களில் 50 சதவீதத்தினர் வறுமைக் கோட்டினைக் கடக்க உதவுதல்;

(2) ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படைத் தேவைகள் மற்றும் இதர வசதிகள் செய்து கொடுத்தல்.



39. மேற்கண்ட இரு குறிக்கோள்களையும் அடைய அரசு மேற்கொள்ளும் முழு முயற்சியின் வடிவம்தான் இந்த சிறப்பு உள்ளடக்கத் திட்டம். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இவர்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்காக ரூ. 363.52 கோடி செலவிடப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் இலக்கு ரூ. 686.25 கோடியாகும். 10 இலட்சம் குடும்பங்கள் பொருளாதார மேம்பாட்டினை அடைய உதவி புரியும். 1985—86 ஆம் ஆண்டு ரூ. 113.73 கோடி செலவில் 2.08 இலட்சம் குடும்பங்கள் பொருளாதார மேம்பாடு அடைய உதவி செய்யப்பட்டது. 1986-87 ஆம் ஆண்டு ரூ. 128.05 கோடி செலவிடவும், 2 இலட்சம் குடும்பங்கள் பயன் பெறவும் வகை செய்யப்பட்டது.

40. நிதி மற்றும் பொருள் பயனீட்டை அளவிடுவதுடன், பல்வேறு திட்டங்களின் மூலம் பயனீட்டின் அளவை உயர்த்தும் வகையில் அதிக அளவில் குறியீட்டை வரையறுக்க சிறப்பு உள்ளடக்கத் திட்டம் வழி கோலுகிறது. அதிக அளவில், இந் நலிவுற்ற பிரிவினர் பெற பல்வேறு திட்டங்களில் அதிகப் பயன் கிடைக்க வழிகோல, பல்வேறு துறைகளின் கணக்குத் தலைப்பில் சிறப்பு உள்ளடக்கத் திட்டச் செலவுக்கென்று 1987—88-ல் சிறு தலைப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் கீழ் கிடைக்கும் பயனை அளவிடவும், கண்காணிக்கவும் இது உதவும். மாநில திட்ட நிதியிலிருந்து ரூ. 132.69 கோடி செலவில் 2.00 இலட்சம் குடும்பங்கள் பொருளாதார மேம்பாட்டை அடையவும், அவர்கள் வசிக்கும் குடியிருப்புகளுக்கும் தேவைப்படும் குறைந்த அளவு வசதிகளைச் செய்துதரவும் 1987-88 ஆம் ஆண்டிற்கான சிறப்பு உள்ளடக்கத் திட்டம் வழி கோலவிருக்கிறது என்பதை இவ்வகையில் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொருளாதார மேம்பாடு:

41. பொருளாதார மேம்பாட்டிற்கான நடவடிக்கையைப் பொறுத்த வரையில் அதன் பகுதியான வேளாண்மை, கால் நடை பராமரிப்பு மற்றும் இவை தொடர்புடைய தொழில் களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதேயாகும். நவீன விவசாய முறைகளைக் கையாண்டு அதிக விளைச்சல் மூலம் அதிக வருவாய் பெறுவதற்கு வகை செய்யாவிடில், ஆதி திராவிட

விவசாயிகள் மற்றும் பயிரிடுவோர் நிலை தாழ்ந்தே இருக்கும். இதை கருத்திற்கொண்டு அதிக விளைச்சல் கொடுக்கும் விதைகள், நாற்று வகைகள், மற்றும் பூச்சி கொல்லி மருந்துகள் 25 சதவீத மானிய விலையில் ஆதி திராவிட விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இதனால் ஆண்டு தோறும் 2.00 இலட்சம் ஆதி திராவிட விவசாயிகள் பயனடைகின்றனர். உபரி நிலச் சட்டத்தின் கீழ் கையகப்படுத்திய நிலங்களை ஒப்படையப் பெற்ற ஆதி திராவிடர்களுக்கு மேற்படி நிலங்களை பயிரிட வழிகோல ஹெக்டேர் ஒன்றிற்கு ரூ. 2,500 வீதம் நிதியுதவி அளிக்கப்படுகிறது. இவர்கள் அனைவருக்கும் விவசாய இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. பயிற்சி மற்றும் பார்வையிடல் முறை என்ற விரிவாக்கத் திட்டம் மூலம் மேற்கண்ட திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. தேவைப்படும் இடங்களில் ஆதி திராவிடர் நிலங்களின் மண் வளப் பாதுகாப்புப் பணி மேற்கொள்ளப்படுகிறது. இதற்காகும் செலவில் இதர வகுப்பினருக்கு 25 சதவீத தொகை மட்டுமே மானியமாக வழங்கப்படுகையில், ஆதி திராவிடர்களுக்கு 50 சதவீதத் தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

42. ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்களின் நிலங்கள் சேர்ந்தாற் போல் இருக்கக் கூடிய பகுதிகளில், தமிழ்நாடு குழாய் கிணறு வாரியம் மூலமாக குழாய் கிணறுகள் அமைக்கும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படுகிறது. இதற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3,000 மானியமாகவும், குறியீட்டுத் தொகையாக ரூ. 1,500-ம் வழங்கப்படுகிறது. மீதி ரூ. 1,500 வங்கி மூலம் கடனாகக் கொடுக்கப்படுகிறது. இதுவரை, 1,730 ஆதி திராவிட குடும்பங்களுக்கு சொந்தமான 1,640.35 ஏக்கர் நிலங்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இது தவிர, ஆங்காங்கே தனித்து இருக்கும் நிலமுடைய ஆதி திராவிட விவசாயிகளுக்கு கிணறு ஒன்றுக்கு ரூ. 6,000 ம் அதாவது 1/3 பங்கு தொகை மானியமாகவும், மீதி 2/3 பங்கு தொகை நிலவள வங்கி மூலம் கடனாகவும் வழங்கப்படுகின்றன. ஆதி திராவிட விவசாயிகளுக்கு உழவு மாடுகள் வாங்கவும், வேளாண்மை துணைக் கருவிகள் வாங்கவும் நிதியுதவி அளிக்கப்படுகின்றது. "பட்டுப் புழு வளர்ப்பு" நிறைய வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய லாபகரமான தொழிலாதலால் ஆதி திராவிட விவசாயிகள்



மத்தியில் அது செயல்படுத்தப்பட்டு இருக்கிறது. அதற்காக தேவையான பயிற்சியும் நிதியுதவியும் அவர்களுக்கு அளிக்கப் படுகின்றன. 1986-87 ஆம் ஆண்டு 900 ஆதி திராவிடர் இத்திட்டத்தால் பயனடைந்துள்ளனர்.

43. ஆதி திராவிடர் குடும்பத்தில் பெரும்பான்மையோர் விவசாய கூலி வேலை மூலம் தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். 1981 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின் படி 25.65 இலட்சம் ஆதி திராவிடர் விவசாய கூலிகள் ஆவர். ஆதி திராவிடருக்கு உதவி செய்ய செயல்படுத்தப்படும் எந்த ஒரு செயல்முறையோ, திட்டமோ இந்த வகை ஆதி திராவிடர் முன்னேற்றத்திற்கு வகை செய்யுமாறு செயல்படுத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால் அவை ஆரம்பிக்கப்பட்ட நோக்கத்தை அடையவிடாது செய்துவிடும். இதை கருத்திற் கொண்டுதான் விவசாய கூலிகள் பொருளாதார மேம்பாட்டையச் செய்யவும் அவர்களின் வருவாயைப் பெருக்கவும் ஆடு வளர்த்தல், கோழிப் பண்ணை வைத்தல், பால் பண்ணை வைத்தல், பன்றி வளர்த்தல் போன்ற துணை வாழ்க்கைத் தொழில்களை மேற்கொள்ள சிறப்பு உள்ளடக்கத் திட்டம் வகை செய்கிறது. தேநீர் கடை கள், வாடகை மிதிவண்டி கடைகள், பலசரக்கு கடைகள் போன்ற சிறு தொழில்கள் நடத்தவும் நிதியுதவி அளிக்கப்படுகிறது. கிராமப்புற ஆதி திராவிடர் கைவினைஞர்கள் சுயமாக தொழில் செய்யத் தேவையான கருவிகள் மற்றும் துணைக் கருவிகள் வழங்கப்படுகின்றன. சவரத் தொழிலுக்கு வேண்டிய கருவிகள், சலவைத் தொழிலாளர்களுக்கு துணி தேய்ப்புப் பெட்டிகள், கல்லுடைப்போர்களுக்கு உபகரணங்கள் ஆகியவைகளும், தையல் இயந்திரங்களும், காலணி செய்வோருக்கு உபகரணங்களும் வழங்கப்படுகின்றன.

44. நகர்ப் புறங்களில் வாழும் ஆதி திராவிடர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவி அளிக்கப்படுகின்றது. அவர்களின் குடும்பத்தை வறுமைக் கோட்டிற்கு மேல் உயர்த்த வருவாய் அளிக்கும் வகையில் நகர்ப்புறத்திற்கேதுவான எந்த ஒரு தொழிலையும் மேற்கொள்ள குடும்பம் ஒன்றிற்கு உயர்ந்த பட்சமாக ரூ. 3,000 நிதியுதவி மானியமாக அளிக்கப்படுகிறது.

45. ஆதி திராவிடர்கள் அவர்கள் மேம்பாட்டை உயர்த்தும் வகையில் போதிய வருவாய் ஈட்டாத மரபு வழியாக மேற்கொள்ளும் தொழிலை விட்டொழியச் செய்வதின் தேவையை

உணர்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதன் விளைவாக ஆதி திராவிட தொழில் முனைவர்களுக்கு மாவட்ட தொழில் மையங்களின் மூலம் சிறு தொழிற்சாலைகள் உருவாக்க உதவி அளிக்கப்படுகின்றது. 1986-87 ஆம் ஆண்டு 264 ஆதி திராவிட தொழில் முனைவர்களுக்குத் தங்களுடைய சொந்த தொழிற்சாலைகள் நிறுவ உதவி அளிக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் குடும்பங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவ ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் தேசிய வறுமை ஒழிப்புத் திட்டங்களும் தக்க வகையில் பயன்படுத்தப் படுகின்றன. இத் திட்டத்தின் மூலம் 1985—86 ஆம் ஆண்டு 0.91 இலட்சம் ஆதி திராவிட குடும்பங்கள் பயனடைந்தன. 1986—87 மற்றும் 1987—88 ஆம் ஆண்டுகளில் இதே அளவில் அவர்கள் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

*சிறப்பு மத்திய நிதியுதவி:*

46. சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக மைய அரசு சிறப்பு மத்திய நிதியினை வழங்குகின்றது. ஆதி திராவிட மக்களின் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களுக்கான மாநில அரசின் முயற்சிக்கு இந்நிதியுதவி கூடுதலாகும். இந்த நிதியினை மாநில அரசின் நிதியுடன் இணைத்து ஆதி திராவிடர்களின் பொருளாதார திட்டங்களுக்குச் செலவிட வேண்டும். சென்ற ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 49 கோடியும், 1985—86 மற்றும் 1986—87 ஆம் ஆண்டுகளுக்கு ரூ. 26.83 கோடியும் சிறப்பு மத்திய நிதியுதவியாக வழங்கப்பட்டது. இத்தொகை (1980—81-ல் பெறப்பட்ட ரூ. 9.56 கோடியை தவிர்த்து) தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. இந்த நிதியிலிருந்து அரசின் பல்வேறு துறைகளின் மூலம் ஆதி திராவிடர்களின் வருவாயை அதிகரிக்கக் கூடிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இத் திட்டங்களில் கூட்டுறவு நூற்பாலைகள், நெசவாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், செங்கல் உற்பத்தி தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், கல் உடைக்கும் மையங்கள், தோல் பதனிடுதல், காலணிகள் தொழிற் கூடங்கள், பனைநார் பொருள்கள் செய்யும் மையங்கள், கயிறு திரிக்கும் மையங்கள் முதலியன அடங்கும். சொந்த தொழில் செய்து தனது வாழ்வினை வளப்படுத்திக்கொள்ள



விரும்புபவர்களுக்கு தேவையான நிதி மற்றும் வழி முறைகள் வழங்கப்படுகின்றன. புதிய தொழில்கள் தொடங்குவதற்கும், வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவதற்கும் தேவையான பயிற்சி அளிக்கப்படுகிறது. மாவட்ட தொழில் மையங்கள் ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த தொழில் முனைவர்களை தெரிந்தெடுத்து தேவையான நிதி மற்றும் தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்குகின்றன. எனவே, மத்திய அரசு வழங்கும் சிறப்பு மத்திய நிதி, விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு போன்ற பாரம்பரையாக செய்து வரும் தொழில்களிலும், மற்றும் இதர தொழில், வியாபாரம் மற்றும் சேவை போன்ற இனங்களிலும் ஆதி திராவிடர் பொருளாதார மேம்பாட்டுக்காக செலவிடப்படுகிறது. 1987-88 ஆம் ஆண்டிலும் சிறப்பு மத்திய நிதியுதவியாக ரூ. 14 கோடி கிடைக்கலாம் என எதிர்பாக்கப்படுகிறது. இத் தொகையும் மேலே விவரிக்கப்பட்ட வகையில் ஆதி திராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக செலவிடப்படும்.

**குறியீட்டுத் தொகை:**

47. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் நாட்டின் பொருளாதார உயர்வுக்கு, அதிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்டோரின் பொருளாதார மேம்பாட்டிலும் பங்கேற்கின்றன. வங்கிகளிடமிருந்து கிடைக்கும் நிதியுதவியினை முழுமையாக ஆதி திராவிட பொருளாதார மேம்பாட்டிற்கு உபயோகப்படுத்தும் பொருட்டு, மைய அரசு ஆதி திராவிடர்களுக்குச் சொந்தமாக தொழில் தொடங்க குறியீட்டுத் தொகை (கடன்) வழங்கும் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மொத்த தொகையில் 25 சதவீதம் குறியீட்டுக் கடனாக இந்த தொகையிலிருந்து வழங்கப்படும். மீதமுள்ள தொகை முழுவதும் வங்கியிலிருந்து கடனாகவோ அல்லது அரசு மான்யம் மற்றும் வங்கிக் கடனாகவோ கிடைக்க வகை செய்யப்படும். இத் திட்டம் தாட்கோவினால் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் செலவிடப்படும் தொகையை மைய அரசு 49 சதவீதமும், மாநில அரசு 51 சதவீதமும் வழங்குகின்றன. இத் திட்டத்தினை நிறைவேற்றுவதில் வங்கிகளுக்கு அதிக வேலைப் பளு ஏற்பட்டதாக வங்கிகள் கருதியதால், இத்திட்டத்தின் முன்னேற்றம் அவ்வளவு மன நிறைவு தரத்தக்கதாக இல்லை. எனவே, இத்திட்டத்திற்கான புதிய வழிமுறைகளை வகுக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது. மாற்றியமைக்கப்பட

உள்ள திட்டத்தின்படி மொத்த தொகையில் 25 சதவீதம் வங்கிகளில் வைப்புத் தொகையாக வைக்கப்படும். ஆதி திராவிடர்களுக்கு தொழில் தொடங்கத் தேவையான முழுத் தொகையையும் வங்கிகளே கொடுத்து வசூல் செய்து கொள்ளும். வைப்புத் தொகையாக வைக்கப்பட்டுள்ள தொகைக்கு வட்டியும் கிடைக்கும். இந்த வட்டியை, ஒழுங்காகப் பணத்தைத் திரும்பச் செலுத்தும் ஆதி திராவிடர்களும், தாட்கோவும் பகிர்ந்து கொள்வர். எனவே, இத்திருத்திய திட்டத்தினை செயலாக்கினால், இத்திட்டத்தினை செயல்படுத்துவதில் எந்த தடையும் இராது. மேலும் வங்கிகளும் மகிழ்ச்சியுடன் பங்கேற்கும். எனவே, வரும் ஆண்டுகளில் நல்ல முன்னேற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.

48. ஆதி திராவிடர் பயன் பெற, இதுவரை 12.04 கோடி ரூபாய் தாட்கோ நிறுவனத்திற்கு குறியிட்டுத் தொகை அளிக்க வழங்கப்பட்டுள்ளது. இதில், 1,55,353 பேர் பயனடையும் பொருட்டு 7.27 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. 1987-88-ல் இத் திட்டம் அதிக முனைப்புடன செயல்படுத்தப்பட, ரூபாய் 200.00 இலட்சம் தாட்கோ நிறுவனத்திற்கு வழங்கப்படும்.

**சமூக நலத் திட்டங்கள்:**

49. ஆதி திராவிடர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு, பொருளாதார திட்டங்களை ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரும் திட்டத்துடன் இணைக்க வேண்டியுள்ளது. அடிப்படை வசதிகளை செய்து தரும் திட்டத்தின் கீழ் இதுவரை மிகவும் நல்ல முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. இவ்வசதிகள் அனைத்தும் தொடர்ந்து, 1987-88 ஆம் ஆண்டிலும் ஊரக வளர்ச்சி, நகராட்சிகள் நிர்வாகத்துறை, குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியம் போன்ற துறைகளின் துணை கொண்டு செய்து தரப்படும். 1987-88 ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு காப்புறுதித் திட்டம் இவைகளின்கீழ் 50,300 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீட்டு வசதியும், 20,000 குடும்பங்களுக்கு வீட்டு மனையும், 770 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதியும், 160 குடியிருப்புகளுக்கு தெரு விளக்கும், 10,000 வீடுகளுக்கு மின் விளக்கும் அமைத்துத் தரப்படும்.



50. சமூக நலத் திட்டங்களிலேயே முதன்மை அளிக்கப்படும் திட்டம் 'கல்வி' ஆகும். பட்ட மேற்படிப்பு வரை இலவச கல்வி, கல்வி உதவித் தொகை. இலவச புத்தகங்கள், சீருடைகள், உணவு, உறைவிடம் போன்ற இன்ன பிற ஊக்கத் திட்டங்கள் இவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு பெரிதும் உதவியுள்ளன. சுமார் 18 லட்சம் ஆதி திராவிடர் குழந்தைகள், மாணவர்கள் இலவச புத்தகங்களும், சீருடைகளும் பெறுகின்றனர். சென்ற பத்து ஆண்டுகளில் (1971—81) ஆதி திராவிடர்களின் கல்வி வளர்ச்சி 7.85 சதவீதம். ஆனால், தமிழக மக்கட் தொகையின் கல்வி வளர்ச்சி 7.30 சதவீதம் ஆகும். இந்த புள்ளிவிவரம் இவர்களின் கல்வி முன்னேற்றத்தினை எடுத்துக்காட்டும். சில நாட்களுக்கு முன் அறிவிக்கப்பட்ட காலணி வழங்கும் திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர் குழந்தைகள் கணிசமான அளவில் பயன்பெறுவர்.

51. சுருங்கக் கூறின் 1987-88 ம் ஆண்டில் ஆதி திராவிடர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக ரூ. 26.71 கோடியும், சமூக நலத்திட்டங்களுக்காக ரூ. 136.39 கோடியும் செலவிடப்படும்.

**இருபது அம்சத் திட்டம்:**

52. பாரதப் பிரதமரின் இருபதுஅம்ச திட்டம் இம் மாநிலத்தில் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் அம்சம் 7(அ)-ன் கீழ் 1985—86-ம் ஆண்டின் இலக்கு 2 இலட்சம் குடும்பம். எனினும் அந்த ஆண்டில் 2.03 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் பொருளாதார முன்னேற்றம் கண்டன. 1986-87 ஆம் ஆண்டிற்கும் இதே இலக்கு (2 இலட்சம்) நிர்ணயிக்கப்பட்டது. இதில 28—2—1987 வரை 1.94 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் பயனடைந்துள்ளன. அம்சம் 7 (ஆ)-ன் கீழ் 1985—86-ம் ஆண்டில் 10,059 பழங்குடியினர் குடும்பங்கள் பயனடைந்தன. 1986—87-ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 9,015 பழங்குடியினர் குடும்பங்களாகும். இதில் 28—2—1987 வரை 8,239 பழங்குடியினர் குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

53. இப்போது மைய அரசு "புதிய இருபது அம்ச திட்டம் 1986-ஐ" அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த புதிய திட்டத்தின் கீழ் 11-வது அம்சம் 'ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு

நீதி வழங்குவது பற்றியதாகும். இந்த 11-வது அம்சத்தின் கீழ் 1987-88 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கு 2 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களும், 10,200 பழங்குடியினர் குடும்பங்களும் ஆகும்.

54. கோரிக்கை எண் 21-ன் கீழ் ரூ. 5,110.98 இலட்சமும், கோரிக்கை எண் (பல்வகை)-லிருந்து ரூ. 0.37 இலட்சமும், கோரிக்கை எண் 58 (பல்வகை மூலதனம்)-லிருந்து ரூ. 530.22 இலட்சமும், கோரிக்கை எண் 59 (கடன் மற்றும் முன்பணம்) லிருந்து ரூ. 57.95 இலட்சமும் ஆதி திராவிடர் முன்னேற்றத்திற்காக 1987-88 ஆம் ஆண்டில் செலவு செய்யப்படும். இவ்வாறாக இம்மாநிலத்தில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங் குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டை உயர்த்த அரசு அயாராது பாடுபட்டு வருகிறது.



ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை—1987-88 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடு.

இணைப்பு—I.

| தொடர் எண்ணும், திட்டத்தின் விவரங்களும். | மத்திய அரசு பொறுப்பு ஏற்கும் திட்டங்கள்—மத்திய அரசும், மாநில அரசும் சமமாகப் பங்கிட்டுக் கொண்ட மாநிலத் திட்டங்கள். | | மாநிலத் திட்டங்கள். | | திட்டத்தில் சேராதவை. | | மொத்தம். | | பெரு மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதிதிரா விடர். 75,761 | பழங் குடியினர். 643 | ஆதிதிரா விடர். 1,81,166 | பழங் குடியினர். 30,664 | ஆதிதிரா விடர். 2,18,065 | பழங் குடியினர். 13,597 | ஆதிதிரா விடர். 4,74,992 | பழங் குடியினர். 44,904 | 5,19,896 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| | | | | (ரூபாய் ஆயிரத்தில்.) | | | | | |
| 1. கல்வி— | | | | | | | | | |
| 1. படிப்புதவித் தொகை .. | 38,260 | 162 | 2,208 | .. | 11,638 | 230 | 75,481 | 392 | 75,873 |
| | 757 | | 5,000(க) | | 17,283 | | | | |
| | | | 235(க) | | 100 (க) | | | | |
| 2. மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்பு படிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு புத்தக வங்கி. | 200 | .. | .. | .. | .. | .. | 200 | .. | 200 |
| 3. பள்ளிகள் .. .. | .. | .. | 1,488 | .. | 75,141 | 6,226 | 81,921 | 6,226 | 88,147 |
| | | | 1,265 | .. | 2,071 | .. | .. | .. | .. |
| | | | 1,722 | .. | .. | .. | .. | .. | .. |
| | | | 234 | .. | .. | .. | .. | .. | .. |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4. முதலமைச்சரின் நண்பகல் சத்துணவுத் திட்டம். | .. | .. | 1,942 | .. | 9,624 | .. | 11,566 | .. | 11,566 |
| 5. பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல் பழுது பார்த்தல். .. | .. | .. | 1,489<br>5,000<br>(மூ) | 180<br>5,632<br>(மூ) | 1,457<br>.. | 383<br>.. | 7,946 | 6,195<br>.. | 14,141<br>.. |
| 6. சீருடைகள் .. .. | .. | .. | 2,463 | 33 | 10,663 | 548 | 13,126 | 581 | 13,707 |
| 7. சாரணப் பயிற்றுனர், சாரண சாரணியருக்குச் சீருடை வழங்கல். | .. | .. | 75 | 10 | | | 75 | 10 | 85 |
| 8. பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், எழுது பலகைகள் வழங்குதல், பள்ளிகளுக்கு சாதனங்கள் வழங்குதல். | .. | .. | 4,287 | 3 | 4,299 | 484 | 8,586 | 487 | 9,073 |
| 9. ஆசிரியர்களுக்கு இல்லங்கள் | .. | .. | 189 | 206 | 43 | 30 | 232 | 236 | 468 |
| 10. பள்ளிச் சுற்றுலா .. | .. | .. | 59 | .. | .. | 10 | 59 | 10 | 69 |
| 11. பரிசுப் பொருட்கள் .. | .. | .. | .. | .. | 64 | .. | 64 | .. | 64 |
| 12. மாணவர் இல்லங்கள் பராமரிப்புச் செலவு. | .. | .. | 6,262<br>205 | 667<br>137 | 48,770<br>.. | 3,913<br>1,173 | 55,237<br>.. | 5,890<br>.. | 61,127<br>.. |
| 13. மாணவர் இல்லங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுதலும், பராமரித்தலும். | 15,000<br>(மூ) | .. | 7,500<br>(மூ) | 500<br>(மூ) | 747 | 24 | 23,247 | 524 | 23,771 |
| 14. பகுதி நேர சிற்றாசிரியர்கள் | .. | .. | .. | .. | 143 | 15 | 143 | 15 | 158 |
| 15. உணவு மானியம் | .. | .. | .. | .. | 1,077<br>5 | 98 | 1,082 | 98 | 1,180<br>.. |



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16. ஆதி திராவிடர்—பழங்குடியினர் மாணவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் வழங்கபடும் மானியம். | .. | .. | 1,490 | .. | .. | .. | 1,490 | .. | 1,46 |
| 17. தேர்வு முன் பயிற்சி நிலையங்கள். | 881** | .. | 60 | .. | .. | .. | 941 | .. | 941 |
| 18. கல்வி நிலையங்களில் பல் கலைக் கழகங்கள் இழப்பீட்டுத் தொகை. | .. | .. | .. | 275 | 275 | .. | 275 | .. | 275 |
| 19. கல்லூரி மாணவர்களுக்கு தனிப்பயிற்சி அளித்தல். | .. | .. | 100 | .. | .. | .. | 100 | .. | 100 |
| 20. திறமையான மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை. | ..<br>.. | ..<br>.. | 10<br>103க | ..<br>.. | 313<br>.. | 40<br>38 | 426<br>.. | 78<br>.. | 504<br>.. |
| 21. பட்டயக் கணக்கர் தேர்வுகள் | .. | .. | .. | .. | 5 | .. | 5 | .. | 5 |
| 22. தட்டச்சு?சுருக்கெழுத்துப் பயிற்சி. | ..<br>.. | ..<br>.. | 482<br>130* | ..<br>.. | ..<br>.. | ..<br>.. | 612<br>.. | ..<br>.. | 612<br>.. |
| 23. திறமையான மாணவ, மாணவிகளுக்கு தனிப்பயிற்சி. | .. | .. | .. | .. | 32 | .. | 32 | .. | 32 |
| 24. ஆதி திராவிடர்—பழங்குடியினா் நலத் துறையைச் சேர்ந்த கல்விப் பிரிவில் கூடுதல் பணியாளர்கள் நியமித்தல் | .. | .. | 45 | .. | 977 | .. | 1,022 | .. | 1,022 |
| 25. தொழிற்பயிற்சி நிறுவனங்களில் தொழிற் பயிற்சி பெறும் ஆதி திராவிடர் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி உதவித் தொகை. | .. | .. | 255 | .. | 955 | .. | 1,210 | .. | 1,210 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 26. ஆதி திராவிடர் மற்றும் பழங் குடியினர் மாணவியர்க்கு தேர்வு ஊக்கத் தொகை வழங்குதல். | 112 | .. | .. | .. | — | — | 112 | — | 112 |
| 27. ஆதி திராவிடர் மற்றும் பழங் குடியினர் மாணவர்களுக்கு இந்திய தொழில் நுட்பக் கல்லூரியில் சேர பயிற்சி அளித்தல். | 6** | .. | .. | .. | .. | .. | 6 | .. | 6 |
| 28. மலைப்பகுதி வளர்ச்சித் திட் டத்தின் கீழ் பழங்குடியினர் பள்ளிகளில் பயிற்றுவிப்பு உபகரணங்களும் விளை யாட்டுப் பொருள்களும் வழங்கல். | .. | .. | .. | 165 | .. | .. | .. | 165 | 165 |
| மொத்தம் I—கல்வி .. | 55,104 | 162 | 44,410 | 7,533 | 1,85,682 | 13,212 | 2,85,196 | 20,907 | 3,06,103 |



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| II. வேலை வாய்ப்பு பொருளாதார முன்னேற்றம்— | | | | | | | | | |
| 29 வேளாண்மை .. .. | ..<br>.. | ..<br>.. | 699<br>157* | 181<br>.. | ..<br>.. | ..<br>.. | 856<br>.. | 181<br>.. | 1,037<br>.. |
| 30 கூட்டுறவு .. .. | .. | 22** | .. | .. | .. | .. | .. | 42 | 42 |
| 31 பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் | ..<br>.. | ..<br>.. | 3,278<br>100* | ..<br>.. | 144<br>.. | ..<br>.. | 3,522<br>.. | ..<br>.. | 3,522<br>.. |
| 32 குடிசைத் தொழில்கள் .. | .. | .. | 13 | .. | 273 | 31 | 286 | 31 | 317 |
| 33 பயிற்சி உற்பத்தி நிலையங்கள் | .. | .. | .. | 35 | .. | .. | .. | 35 | 35 |
| 34 தொழில் நுட்பப் பயிற்சி பெற் றோருக்கு உதவித் தொகை. | ..<br>.. | ..<br>.. | 800<br>100* | 100<br>.. | ..<br>.. | ..<br>.. | 900<br>.. | 100<br>.. | 1,000<br>.. |
| 35 பயிற்சி வேலைவாய்ப்புப் பிரிவு-4 | ..<br>.. | ..<br>.. | 1<br>1* | ..<br>.. | ..<br>.. | ..<br>.. | 2<br>.. | ..<br>.. | 2<br>.. |
| 36 சிறு வணிகக் கடன் .. | ..<br>.. | ..<br>.. | 300(க)<br>100(க)* | 50(க)<br>.. | ..<br>.. | ..<br>.. | 400<br>.. | 50<br>.. | 450<br>.. |
| 37 அலுவலகத் தேர்வுகளில் வெற்றி பெற சிறப்புப் பயிற்சி அளித்தல். | ..<br>.. | ..<br>.. | 1<br>1* | ..<br>.. | ..<br>.. | ..<br>.. | 2<br>.. | ..<br>.. | 2<br>.. |
| 38 ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் மகளிர்க்கு வானொலி/தொலைக்காட்சிப் பெட்டிகளை பழுதுபார்ப் பதில் பயிற்சி அளிக்கும் திட்டம். | .. | .. | 1 | .. | .. | .. | 1 | .. | 1 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (1) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 39 தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்திற்கு பங்கு மூலதன முதலீடு. | 20,000 (மூ)** | .. | .. | .. | .. | .. | 20,000 | .. | 20,000 |
| 40 ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி வட்டாரங்களில் ஆதி திராவிடர்களுக்கு நலம் பயக்கும் பணித் திட்டங்கள். (ஆதி திராவிடர்களுக்கான தனித் துணைத் திட்டத்திற்கு சிறப்பு மத்திய உதவி) | .. | .. | 1,10,000 | .. | .. | .. | 1,10,00 | .. | 1,10,000 |
| 41 வங்கிப் பணித் தேர்வுக்கு குறுகிய காலப் பயிற்சி அளித்தல். | .. | .. | 25 | .. | .. | .. | 25 | .. | 25 |
| மாத்தம்I—வேலை வாய்ப்பும் பொருளாதார முன்னேற்றமும் | 20,000 | 42 | 1,15,577 | 366 | 417 | 31 | 1,35,994 | 439 | 1,36,433 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (1) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| III. சுகாதாரம், வீட்டு வசதி ஏனைய திட்டங்கள்— | | | | | | | | | |
| 42 வீட்டு வசதிகள் .. .. | .. | .. | 1 | 200 | .. | .. | 1 | 200 | 201 |
| 43 வீட்டு மனைகள் .. .. | .. | .. | 1,000(சா) | .. | .. | .. | 14,247 | .. | 14,247 |
| | .. | .. | 119 | .. | .. | .. | .. | .. | .. |
| | .. | .. | 3,128 | .. | .. | .. | .. | .. | .. |
| | .. | .. | 10,000 | .. | .. | .. | .. | .. | .. |
| 44 இடுகாட்டிற்குச் செல்லப் பாதை அமைத்தல், குடிதண்ணீர் மற்றும் சாலை அமைக்க (ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்படும் பங்கீடும் அடங்கும்). | .. | .. | 2,974 | .. | .. | .. | 2,974 | .. | 2,974 |
| 45 குடிநீர் கிணறுகள் .. | .. | .. | 1,899 | 335 | .. | .. | 2,081 | 335 | 2,416 |
| 46 மருத்துவம் .. .. | .. | .. | 182* | 117 | 102 | 354 | 102 | 471 | 573 |
| 47 மின் வசதி .. .. | .. | .. | 1 | 1 | 1 | .. | 2 | 1 | 3 |
| 48 சாலைகள் .. .. | .. | .. | .. | 310 | .. | .. | .. | 310 | 310 |
| 49 விளம்பரச் செலவுகள் .. | 201** | .. | .. | .. | .. | .. | 201 | .. | 201 |
| 50 தெரிந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்கு பரிசுகள். | .. | .. | .. | .. | 26 | .. | 26 | .. | 26 |
| 51 துப்புரவாக வைத்திருக்கும் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு பரிசு. | .. | .. | .. | .. | 87 | .. | 87 | .. | 87 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 52 ஆதி திராவிடர் குடிசைவாழ் மக்கள் மற்றும் குடியிருப்புகளுக்கு தொலைக் காட்சி பெட்டிகளை வழங்குதல். | 1** | .. | .. | .. | .. | .. | 1 | .. | 1 |
| 53 சமுதாய நிலையங்கள் .. | .. | .. | .. | .. | 683 | .. | 683 | .. | 683 |
| 54 சமுதாயக் கூடங்கள் .. | .. | .. | 500 | .. | .. | .. | 500 | .. | 500 |
| 55 கலப்புத் திருமணங்கள் .. | . | .. | 1,279 | .. | .. | . | 1,279 | .. | 1,279 |
| 56 தமிழ்நாடு பழங்குடியினர் மேம்பாட்டு அதிகாரமன்றம். | .. | .. | .. | 10 | .. | .. | . | 10 | 10 |
| 57 நீர்ப்புறச் சலவைக் கூடங்கள் கட்டுதல். | .. | .. | 10 | . | . | . | .. | .. | .. |
| | . | .. | 10(க) | .. | . | .. | 20 | .. | 20 |
| 58 துப்புரவுப் பணியில் ஈடுபட்டுள்ள ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டுதல். | .. | .. | 1 | .. | .. | . | 1 | . | 1 |
| 59 துப்புரவாளர்கள் மற்றும் சுத்தி தொழிலாளர்கள் பணியை மேம்படுத்துதல். | .. | .. | 75 | .. | .. | .. | 75 | .. | 75 |
| 60 பழங்குடியினர் ஆராய்ச்சி நிலையம் நிறுவுதல். | . | 439** | .. | .. | .. | . | .. | 439 | 439 |
| 61 ஈமக் கடன்கள் செய்வதற்கான தொகை அளித்தல். | .. | .. | .. | .. | 6,738 | .. | 6,738 | . | 6,738 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 62 ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத் திட்டங்களை மதிப்பாய்வு செய்வதற்காக புலனாய்வு ஆராய்ச்சிப் பிரிவு. | [illegible] | .. | .. | .. | .. | .. | 155 | .. | 155 |
| 63 1955 ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை செயல்படுத்தும் நிர்வாகம். | 300** | .. | .. | . | . | . | 300 | . | 300 |
| மொத்தம் III—சுகாதாரம், வீட்டு வசதி, ஏனைய திட்டங்கள் .. | 637 | 439 | 21,179 | 973 | 7,637 | 354 | 29,473 | 1,766 | 31,239 |
| IV. பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம்.— | | | | | | | | | |
| 64 பழங்குடியினர் மேம்பாட்டுக்கான துணைத்திட்டம் குறித்த முன்னோடி நடவடிக்கைக்காக ஒருங்கிணைப்பு மேம்பாட்டுத் திட்ட பணிகளுக்காக வல்லுநர் குழு. | . | . | . | 80 | . | . | . | 80 | 80 |
| 65 பழங்குடியினர் தங்கிப் பயிலும் வசதியுடன் கூடிய பள்ளிகளைத் திறத்தலும் பராமரித்தலும். | . | . | . | 9,000 | . | . | . | 9,000 | 9,000 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 66 பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் நீர் வழங்கும் திட்டம். | . | . | . | 5,000 | . | . | . | 5,000 | 5,000 |
| 67 பழங்குடியினர் கிராமங்களுக்கு மின்வசதித் திட்டம். | . | . | . | 3,025 | . | . | . | 3,025 | 3,025 |
| 68 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டத்தின் கீழ் சிறுபாசனத் திட்டம். | . | . | . | 2,100 | . | . | . | 2,100 | 2,100 |
| 69 கல்ராயன் மலைக்கான நிர்வாக அமைப்பை ஏற்படுத்துதல். | . | . | . | 260 | . | . | . | 260 | 260 |
| 70 பழங்குடியினர் ஆராய்ச்சி-வளர்ச்சி. | . | . | . | 137 | . | . | . | 137 | 137 |
| 71 தொன்மைப் பழங்குடியினர் தொகுதிகள். | . | . | . | 162 | . | . | . | 162 | 162 |
| 72 பரவலாக வாழும் பழங்குடியினர் தொகுதிகள். | . | . | . | 1,500 | . | . | . | 1,500 | 1,500 |
| 73 ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டத்தின் பகுதிகளில் பழங்குடியினருக்கு இல்லம் கட்டுதல். | . | . | . | 491 | . | . | . | 491 | 491 |
| மொத்தம்—பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம். | . | . | . | 21,755 | . | .. | .. | 21,755 | 21,755 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| V. கொத்தடிமைகள் புது வாழ்வுத் திட்டம்— | | | | | | | | | |
| 74 கொத்தடிமைகள் புதுவாழ்வு. | .. | .. | .. | 1 | ஷை | .. | .. | 1 | |
| 75. விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு வீட்டு வசதிக்கான உதவி .. .. .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 1 |
| 76 கொத்தடிமைகளுக்கான புது வாழ்வுத் திட்டம் .. | .. | .. | .. | 35 | .. | .. | .. | 5 | 3 5 |
| மொத்தம்—கொத்தடிமைகள் புது வாழ்வுத் திட்டம் .. | .. | .. | .. | 37 | .. | .. | .. | 37 | 37 |
| VI. நெறிப்படுத்தலும் நிர்வாகமும் :— | | | | | | | | | |
| 77 தலைமையிடம் மற்றும் மாவட்ட பணியாளர்கள் .. | .. | .. | .. | .. | 2(சா) 24,327 | .. | 24,329 | .. | 24,329 |
| மொத்தம்—VI. நெறிப்படுத்தலும் நிர்வாகமும் .. .. | .. | .. | .. | .. | 24,329 | .. | 24,329 | .. | 24,329 |

சுருக்கம். (ரூபாய் ஆயிரத்தில்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| I. கல்வி .. .. .. | 55,104 | 162 | 44,410 | 7,533 | 1,85,682 | 13,212 | 2,85,196 | 20,907 | 3,06,103 |
| II. வேலை வாய்ப்பு—பொருளாதார மேம்பாடு. | 20,000 | 42 | 1,15,577 | 366 | 417 | 31 | 1,35,994 | 439 | 1,86,433 |
| III. சுகாதாரம், வீட்டுவசதி, ஏனைய திட்டங்கள். | 657 | 439 | 21,179 | 973 | 7,637 | 354 | 29,403 | 1,766 | 31,239 |
| IV. பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டங்கள். | .. | .. | .. | 21,755 | .. | .. | .. | 21,755 | 21,755 |
| V. கொத்தடிமைகள் புதுவாழ்வுத் திட்டங்கள். | .. | .. | .. | 37 | .. | .. | .. | 37 | 37 |
| VI. நெறிப்படுத்தலும் நிர்வாகமும்—தலைமையிடம் மற்றும் மாவட்டப் பணியாளர்கள். | .. | .. | .. | .. | 24,329 | .. | 24,329 | .. | 24,329 |
| மொத்தம் .. | 75,761 | 643 | 1,81,166 | 30,664 | 2,18,065 | 13,597 | 4,74,992 | 44,904 | 5,19,896 |



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த வருவாய்—சாட்டியது | .. | .. | 1,000 | .. | 2 | .. | 1,002 | .. | 1,002 |
| அனுமதித்தது .. .. | 40,761 | 643 | 1,62,021 | 24,482 | 2,17,963 | 13,597 | 4,20,745 | 38,722 | 4,59,467 |
| மூலதனம் .. .. .. | 35,000 | .. | 12,500 | 6,132 | .. | .. | 47,500 | 6,132 | 53,632 |
| கடன்களும் முன் பணங்களும் | .. | .. | 5,645 | 50 | 100 | .. | 5,745 | 50 | 5,795 |
| பெரு மொத்தம் .. | 75,761 | 643 | 1,81,166 | 30,664 | 2,18,065 | 13,597 | 4,74,992 | 44,904 | 5,19,896 |

*கிறிஸ்துவ மதம் மாறிய ஆதி திராவிடர்கள்.

** மத்திய, மாநில அரசுகள் சம அளவில் பொறுப்பேற்கும் திட்டங்கள்.

சா.—சாட்டியது.

மூ.—மூலதனம்.

க.—கடன்களும் முன்பணங்களும்.

## இணைப்பு—II.

### சிறப்பு உள்ளடக்கத் திட்டம் 1987–88

| (1) | (ரூபாய் இலட்சத்தில்) (2) |
|---|---|
| 1. வேளாண்மை பயிர் பராமரிப்பு .. .. | 705.29 |
| 2 நிலச் சீர்திருத்தம் .. .. .. | 2.00 |
| 3. ஊரக வளர்ச்சிக்கான சிறப்பு பகுதித் திட்டம் | 880.00 |
| 4. நில மற்றும் நீர்வள பாதுகாப்பு .. .. | 24.00 |
| 5. கால்நடை பராமரிப்பு .. .. .. | 21.42 |
| 6. பால் பண்ணை .. .. .. .. | 0.05 |
| 7. வனவளம் (சமுதாயக்காடு) .. .. | 528.37 |
| 8. சமுதாய மேம்பாடு .. .. .. | 813.32 |
| 9. கூட்டுறவு .. .. .. .. .. | 1.30 |
| 10. மின் அபிவிருத்தி .. .. .. .. | 310.00 |
| 11. கிராம மற்றும் சிறு தொழில்கள் .. .. | 17.76 |
| 12. சாலைகள் மற்றும் பாலங்கள் .. .. | 75.73 |
| 13. கல்வி .. .. .. .. .. | 73.17 |
| 14. மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம் .. | 220.36 |
| 15. கழிவு நீர் அகற்றுதல் மற்றும் குடிநீர் வழங்கல் | 2,089.90 |
| 16. வீட்டு வசதி .. .. .. .. | 753.50 |
| 17. நகர்ப்புற வசதி .. .. .. | 53.00 |
| 18. வேலை வாய்ப்பு .. .. .. .. | 59.00 |
| 19. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் | 1,267.11 |
| 20. சமூக நலம் .. .. .. .. | 2,035.23 |
| 21. ஊட்டச்சத்து .. .. .. .. | 2,438.78 |
| மொத்தம் .. | 13,269.29 |



## இணைப்பு—III.

### பழங்குடியினர் துணைத் திட்டம் 1987–88.

| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். (1) | மாநிலத் திட்டம். (2) | மைய நிதியுதவி. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. தோட்டக்கலை .. | 21.53 | 40.00 |
| 2. மண்வளப் பாதுகாப்பு .. | 25.61 | .. |
| 3. கால்நடை பராமரிப்பு .. | 22.54 | 20.00 |
| 4. கிராமத் தொழில்கள் .. | 23.75 | 10.00 |
| 5. பட்டு உற்பத்தி .. .. | 45.52 | 20.00 |
| 6. சிறு பாசனம் .. .. | 11.00 | 10.00 |
| 7. வனம் .. .. .. | 120.00 | 10.00 |
| 8. கூட்டுறவு .. .. .. | 81.28 | 30.00 |
| 9. மின்வசதி .. .. .. | 30.25 | .. |
| 10. சாலை வசதி .. .. | 157.14 | .. |
| 11. வீட்டு வசதி .. .. | 4.91 | .. |
| 12. மானிடத் திறன் மற்றும் தொழில் வாய்ப்பு. | 3.35 | .. |
| 13. கல்வி வசதி .. .. | 88.77 | 10.00 |
| 14. மகளிர் மற்றும் மேம்பாடு | 20.53 | .. |
| 15. குடிநீர் வசதி .. .. | 42.00 | .. |
| 16. சமுதாய வளர்ச்சி .. | 5.06 | .. |
| 17. மருத்துவப் பணி மற்றும் குடும்ப நலன். | 12.61 | 6.00 |

| | | | |
|---|---|---|---|
| 18. | பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துகள். | 11.37 | 8.00 |
| 19. | ஆரம்ப சுகாதார மையங்கள் | 8.98 | .. |
| 20. | இந்திய மருத்துவம் .. | 33.54 | 12.00 |
| 21. | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககம் (கல்வி நீங்கலாக). | 10.10 | .. |
| 22. | நெறிப்படுத்துதல் மற்றும் மதிப்பாய்தல். | 0.91 | .. |
| 23. | சிதறி வாழும் பழங்குடியினர் | 15.00 | .. |
| 24. | பண்டைய பழங்குடியினர் | .. | 1.00 |
| | மொத்தம் .. | 796.65 | 177.00 |
| | பெரு மொத்தம் | | 973.65 |

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் சென்னை-600 008
136515
D
V211,51 N87
N87-37-3